2815

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXIX NO: 2

October 13th 1984

D
V211,31 N84
N84.69.2;1
136271

வெளியீடு 23-3-85] [Issued 23-3-85

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, அக்டோபர் 13, 1984 - தொகுதி LXIX எண் 2
Saturday the 13th October 1984 - Volume LXIX No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
V211,31 N84
N84.69.2;1
136276

உள்ளடக்கம்.

13—10—1984.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.. | .. | 201—236 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | .. | 237 —343 |
| 2. அறிக்கை அளித்தல் : | | |
| தமிழக முதல்வர் உடல்நலம் குறித்து | .. | 343 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம் : | | |
| நெற் பயிரை நோய் தாக்கியிருப்பது குறித்து | | 343—357 |
| 4. அறிவிப்புகள் : | | |
| அரசினர் சட்ட முன் வடிவுகள் (மே. செ.).. | | 357 |
| 5. கவன ஈர்ப்பு : | | |
| திருவில்லிப்புத்தூர் நகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக அளிக்கப்படும் மின்சாரம் | .. | 357—359 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் : | | |
| (அ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1984 .. .. | .. | 360—376 |
| (ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1984 | .. | 360—376 |
| (இ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1984 | .. | 360—376 |
| (ஈ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு, 1984 | .. | 379 |
| (உ) பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன் வடிவு, 1984 | .. | 379 —426 |
| 7. தகவல் கோரல் : | | |
| தமிழக முதல்வர் உடல் நலம் குறித்து | .. | 376—378 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் : | .. | 426 |

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

1984, அக்டோபர் 13, சனிக்கிழமை.

புரட்டாசி 28, ரக்தாக்ஷி திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

நாம் இவ்வினையைச் செய்து முடிப்பது மிகவும் கடுமையான செயல் என எண்ணி மனச் சோர்வு அடைதல் கூடாது. கடுமையாக உழைத்து, அச்செயலைச் செய்து முடிக்க முயலுவோமானால் அம் முயற்சியின் பயனாகப் பெருமை தானே வந்து அடையும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**அம்பாசமுத்திரம், கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையங்களில் கள ஆய்வுக்கூடங்களும், விதை சேமிப்புக் கிடங்குகளும் கட்டும் திட்டம்.**

81—(*வினா எண் 21863) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் மற்றும் கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையங்களில் கள ஆய்வுக் கூடங்களும், விதை சேமிப்புக் கிடங்குகளும் கட்டுவது பற்றி அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விபரம் என்ன ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) எப்பொழுது வேலை முடிவடையும் ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ, ஆ, இ மற்றும் ஈ) : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தில் கள ஆய்வுக் கூடமும், விதை சேமிப்பு கிடங்குகளும் ரூபாய் ஆறு இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான செயற்

[1984 அக்டோபர் 13

குறிப்பு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இக் கட்டிடங்கள் கட்டும் பணி 1984–85 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு, இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும். அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் கட்டிடங்கள் கட்டுவது பற்றி செயற் குறிப்பு ஏதுமில்லை.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்துவதற்கான உலக வங்கியின் உதவி.

82—*(வினா எண் 22136) **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்துவதற்காக உலக வங்கியிடம் உதவி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) உலக வங்கி உதவியுடன் தற்போதுள்ள விற்பனைக் கூடங்களை மேம்படுத்தவும், புதிய விற்பனைக் கூடங்கள் மற்றும் 40 துணை விற்பனைக் கூடங்கள் மேலும், பழங்கள் மற்றும் காய் கறிகள் விற்பனைக் கூடங்கள் திறப்பதற்கென ரூ. 102.44 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மத்திய அரசுக்கு விவரங்களை அனுப்பியதாகக் கூறுகிறார்கள். மேற்கொண்டு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஜனவரித் திங்களில் உலக வங்கியைச் சேர்ந்த குழுவினர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மேலும் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கங்கள் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, அழுகும் பொருட்கள், வெங்காயம், காய்கறிகள், பழங்கள் போன்றவைகளைச் சேமித்து வைப்பதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அனுப்பப்பட விருக்கிற அந்தத் திட்ட அறிக்கையில் அவைகளுக்கான கூடங்களைக் கட்டுதல், அவைக்களுக்கான செலவுத் தொகைகள் ஆகியவையும் அடங்கும்.



1984 அக்டோபர் 13]

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றனவா? எத்தனை இடங்களில் தற்போது இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தற்போது விற்பனைக் குழுக்கள் 13 இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் விற்பனைக் கூடங்கள் திறக்கப்படவிருக்கின்றன. இன்னும் பல மாவட்டங்களில் அவை கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தனியாகக் கேள்வி போட்டால் இந்தக் கேள்விக்கான முழு விபரங்களையும் தரலாம்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அல்லது வேறு விதமான விவசாய இலாகாவிற்கு தேவைப்படும் மற்றும் பல தேவைகளுக்கு உலக வங்கியிலிருந்து கடன்களை வாங்குகிற போது அதுவும் 100 கோடி ரூபாய்க்கு மேலே கடன்களை நாம் வாங்குகிறபோது தமிழக அரசே தானே விரும்பிக் கேட்டு அதன் பிறகு மத்திய சர்க்கார் மூலமாக வருகிறதா அல்லது மத்திய அரசு ஒட்டு மொத்தமாக வாங்கி நீங்கள் கடன்களைக் கேட்கலாம் என்று மாநில அரசிடம் சொல்லியதன் மூலமாக தமிழக அரசு பெறுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** எல்லாமே மத்திய அரசின் மூலமாகத்தான் நடக்கிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்துவதற்காக உலக வங்கியிலே உள்ள குழு வந்து பார்வையிட்டுச் சென்றதாகச் சொன்னார்கள். எனக்கு இருக்கிற தகவலின்படி நம்முடைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களிலே கட்டடப் பணிகள், பல்வேறு இடங்களிலே ஆரம்பிக்கப்படுகிற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குக் கட்டடங்கள் ஆகியவை அரசினுடைய அனுமதி கிடைக்காமல் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்கிறார்கள், அது உண்மையா, அப்படியானால் விரைவிலே அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி தாமதம் இருந்தால் அது நீக்கப்படும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை அனைவரும் சிறப்பாகப் பயன்படுத்துகின்ற அளவுக்கு விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் சிறப்புச் சலுகைகள் அளிப்பதற்கு அரசு ஏதாவது தனித் திட்டம் வைத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் எதுவும் இல்லை.

[1984 அக்டோபர் 13

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நமக்கு கடன் வழங்கும்போது பல நிபந்தனைகள் விதிப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நிபந்தனைகள் என்ன என்ன ? அவைகளை எல்லாம் ஏற்றுத்தான் நாம் கடன் வாங்குகிறோமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இங்கு வந்து பார்த்து விட்டு சென்று இருக்கிறார்கள். அவர்கள் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களை நாம் அனுப்ப இருக்கிறோம். அவைகளை நிபந்தனைகள் என்று கருதுவதற்கு இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள ஒழுங்கு முறை கூடங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் இல்லாததால் பலயிடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இயங்குகின்றன. அங்கே போதிய வசதிகள் இல்லை. அங்கு வருகின்ற பொருட்களை ஒரு நாள் இரண்டு நாள் வைத்து உலர வைப்பதற்கு போதிய வசதி இல்லை. குறிப்பாக என்னுடைய காட்பாடியில் அப்படி இருக்கிறது. அத்தகைய பெரிய நகரங்களில் இருப்பதை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கோ அல்லது புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கோ அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை புதிய கட்டிடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்ய முடியாமல் தடைபடுகிறது. அதற்குக் காரணம் அதற்கு ரெவின்யூ வெல்யூ போடுகிறபோது நிலத்திற்கு உரிய தொகை கிடைப்பதில்லை. ஆகவே நிலத்திற்கு மார்க்கெட் மதிப்பைக் கொடுத்து நிலத்தை கையகப் படுத்தினால் மேலும் இந்தக் குறைபாட்டை போக்க முடியும். ஆகவே துறை அதை பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு காய் கறிகள், பழங்கள் வாங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கிருந்து வாங்கப்படுகிறது ? கொண்டு



1984 அக்டோபர் 13]

வருவதற்கு லாரிகள் வாங்கப்பட்டிருக்கிறதா ? காய் கறி பழங்கள் அழுகும் தன்மை உடையதால் அவைகளைப் பாதுகாக்க குளிர்சாதன வசதி கொண்ட கட்டிடங்கள் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே விவசாயிகளிடமிருந்து தான் வாங்கப்படுகின்றன. அவைகளுக்கு உரிய போக்குவரத்து, அவைகளைச் சேமித்து வைத்து இருப்பதற்கு கூடங்கள் போன்ற வசதிகளைச் செய்வதற்காக நாம் உலக வங்கியின் தொகையை எதிர்பார்க்கிறோம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கட்டும்போது பெரியார் மாவட்டத்திற்கு என்று பிரித்து தனியாக விற்பனைக் கூடங்கள் அமைக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா ? ஆம் எனில் அதனுடைய நடவடிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளது. விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கட்டிடங்கள் புதிதாக கட்டிக்கொண்டு இருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது முடிவடையும் நாள் கணக்கிலா மாதக் கணக்கிலா வருடக் கணக்கிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உலக வங்கியின் தொகை வந்துவிட்டால் உடனே கட்டி முடிக்கப்படும்.

காவேரிப்பட்டணம் தொகுதி காவேஹள்ளிப் பகுதிக்கான ஆற்று நீரேற்றுத் திட்டம்.

83—(* வினா எண். 22954)—டாக்டர் கே. சமரசம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் — காவேரிப்பட்டணம் தொகுதி— கால்வேஹள்ளிப் பகுதிக்கு (ரிவர் பம்பிங் ஸ்டேஷன்) 'ஆற்று நீரேற்றுப் பாசன மின் திட்டம்' செயல்படுத்த முனைந்து இரண்டு ஆண்டுகளாகியும், ஆரம்ப செயல்முறைத் திட்டமே உருவாகாத காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அவை முன் ஒரு விவர அறிக்கை *வைக்கப்பட்டுள்ளது.

* 427ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மயிலம் ஒன்றியத்திலுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

84—(* வினா எண். 14030)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகுதொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் மயிலம் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் முடிவுற்றும் கூட பெரும்பாலான கிராமங்களில் குடிநீர்ப் பிரச்னை தீர்வு காணப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய தன்னிறைவுத் திட்டப் பணிகள் 1982-83 ஆம் ஆண்டில் முடிந்துவிட்டன. எனினும் எல்லா பிரச்சனைக்குரிய கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள் 1982-83-க்குப் பின்பும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஐயன்பேட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

85—(* வினா எண். 18033)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஐயன்பேட்டை கிராமத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அக்கோரிக்கை மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1984-85-ல் செயல்படுத்தப்படும்.

வெளிநாடுகளிலிருந்து வாங்கிய ஆழ்குழாய் கருவிகள்.

86—(* வினா எண். 18921)—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளில் இருந்து வாங்கிய ஆழ்குழாய் இயந்திரங்கள் எந்த மாவட்டத்தில் வேலை செய்கின்றன ?



(ஆ) எத்தனை இயந்திரங்கள் வாங்கப்பட்டன ?

(இ) அந்த இயந்திரங்களின் விலை என்ன ?

(ஈ) இதனால் பலனடைந்த கிராமங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : யூனிசெப் நிறுவனம் 20 துளைக் கருவிகளையும், டானிடா 4 துளைக் கருவிகளையும் நன்கொடையாகத் தந்துள்ளன. யூனிசெப் நிறுவனம் தந்த துளைக் கருவிகள் மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. டானிடா தந்த கருவிகள் தென்னாற்காடு, சேலம், புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

(இ) டானிடா நிறுவனம் இலவசமாக அளித்த கருவிகளுக்கும் அதனைச் சார்ந்த துணைக் கருவிகளுக்கும் குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 168.50 லட்சம் சுங்கவரியாகக் தந்துள்ளது.

(ஈ) யூனிசெப் நிறுவனம் தந்த கருவிகளைப் பயன்படுத்தி 7,002 துளைக் கிணறுகள் போடப்பட்டன. டானிடா நிறுவனம் தந்த கருவிகளைக் கொண்டு 31-12-1983 வரை 194 துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-10).

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்ந்து குடிநீர் வழங்குகிற பணியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால் ஆழ் துளை இயந்திரங்கள் இல்லாமல் பல இடங்களில் தனியார்களிடம் இயந்திரங்களை வாங்க வேண்டியிருக்கிறது. தனியார்கள் இவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற ஆழ்துளை இயந்திரங்கள் வைத்திராவிட்டால் வேளாண்மைத் துறையினரும் காத்திருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் போக்குவதற்கு வடிகால் வாரியமே ஆழ்துளை இயந்திரங்களைச் சொந்தப் பணத்தில் சொந்தமாக வாங்க முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடிகால் வாரியமும் சொந்தமாக டிரில்கள் வைத்திருக்கின்றன. அவை போதுமானவையல்ல என்று கருதப்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை வைத்து வாங்குவதைப் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டம் நான்கு மாவட்டங்களில் அமுலில் இருந்து அதன் மூலமாக துளைக் கிணறுகள் போடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் கடும் வறட்சி மாவட்டமாக இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் அந்தத் திட்டத்தை

விஸ்தரிக்க அரசு முயற்சிக்குமா ? வெளிநாட்டு உதவிகளை
அதிகமாக வாங்கி, ஆழ்துளை கிணறுகள் அதிகமாகப் போட
நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1,500 அடி ஆழம் போனால்தான்
குடிதண்ணீர் கிடைக்கும் என்ற நிலை இருக்கும் இடங்களில்தான்
இந்த ரிக்குகளை உபயோகிக்கிறோம். அப்படித் தகவல் வந்தால்
அந்த இடங்களுக்கு இதை அனுப்புவதைப் பற்றி, இது போவதற்
குரிய சாலை வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதை
யெல்லாம் பரிசீலனை செய்து ஆவன செய்யப்படும்.

விசைத்தறித் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி
விகிதங்கள்.

87—(*வினா எண். 21191—திரு. கு. ரமணி: மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) 1983 மே மாதத்தில் அமுலுக்கு வந்துள்ள பவர்லூம்
தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி விகிதங்கள்
நடைமுறைப்படுத்தப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நடைமுறையாக்காதவர்கள் மீது என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ)
விசைத்தறித் தொழிலாளர்களுக்கு அரசு திருத்தியமைத்துள்ள
குறைந்த அளவு ஊதிய வீதங்கள் 1—5—1983 (மேதின நாள்)
முதல் நிறுவனங்கள் வழங்க வேண்டும். இந்த ஊதிய வீதங்கள்
கொடுக்காததற்காக எவ்வித தொழில் தாவாவோ அல்லது
எந்த நிறுவனத்தில் இந்த ஊதியவீதங்கள் கொடுக்கப்படவில்லை
என்று கூறி விண்ணப்பங்களோ தொழிலாளர் துறையில் பெறப்
படவில்லை. சில நிறுவனங்கள் உயர்நீதி மன்றத்தில் அரசு
அறிவிக்கையை எதிர்த்து ரிட் மனுக்கள் தாக்கல் செய்து இடைக்
கால தடை உத்தரவு பெற்றுள்ளன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பவர் லூம்
தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி வீதங்களை அமு
லாக்காமல் இருக்கும்படியான நிறுவனங்கள் பல இருக்கின்றன.
அவற்றை முழுவதும் கண்காணித்து அப்படி நடக்கிறதா
இல்லையா என்பதைப் பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்க
அரசு முன் வந்துள்ளதா ? பல போராட்டங்கள் நடந்து அதன்
பிறகு ரிப்போர்ட்டுக்கள், கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
நானே கோவை மாவட்டத்திலிருந்து ஒரு ரிப்போர்ட் அனுப்பி





அதில் எந்தவிதமான ஏற்பாடும் நடக்கவில்லை. காரணம் பவர்
லூம் வைத்திருப்பவர்கள் விசாரணைக்கே வரவில்லை. இப்படிப்
பட்ட நிலையில் குறைந்தபட்சக் கூலியை அமுலாக்காமல் இருப்ப
வர்கள்மீது என்ன தீவிர நடவடிக்கை எடுக்கப் போகிறது அரசு
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் போராட்டம்
என்ற தத்துவத்தைக் கைவிட்டு பிரச்சினைகளையும் சட்டத்தை
யும் பார்த்து, சட்டத்தால் சாதிக்கக்கூடிய பிரச்சினைகளைச்
சட்டம் சாதிக்கக்கூடிய வழிமுறைகளை நாம் பின்பற்றுவோமா
னால் இந்தப் பிரச்சினைகள் தீருவதற்கு வழிவகை ஏற்படும்.
நான் இந்த 6, 7 ஆண்டுகாலமாகவே இந்தச் சட்டப் பேரவையில்
சொல்லி வருவது, தொழிற் சங்கங்கள் ஒத்துழைக்காமல்
தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அதை
ஒட்டித்தான் குறைந்தஅளவு ஊதியச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்
பட்ட ஊதியம் அளிக்கப்படாவிட்டாலும் அல்லது அதைவிடக்
குறைத்து கொடுத்தாலும் சட்டப் பிரிவு 20 (1)-ன் கீழ் நிய
மிக்கப்பட்டுள்ள அதிகாரியிடம் சம்பந்தப்பட்ட தொழிலாளி—
அதற்காக நாம் அத்தாரிட்டியை நியமித்திருக்கிறோம்—
செல்லலாம். அல்லது வழக்கறிஞர் அல்லது தொழிற்சங்கத்
தலைவர் அல்லது சட்டத்தின் கீழ் அரசு நியமித்துள்ள ஆய்வாளர்
உரிமை மனுவைத் தாக்கல் செய்யலாம். மேற்கொண்டு மனுவை
விசாரிக்க அந்தந்த மாவட்டத்தில் தொழில் கோர்ட்டுகள்
(லேபர் கோர்ட்ஸ்) நியமிக்கப்பட்டுள்ளன. தொழில் கோர்ட்டு
கள் உரிமை மனுக்களை விசாரித்து தொழிலாளர்களுக்குச் சேர
வேண்டிய ஊதியத்தையும் ஈட்டுத் தொகையையும் நிர்ணயிக்கு
மாறு கேட்டுக் கொள்ளப்படும். எனவே, இந்தப் பிரச்சினையில்
அணுகு முறையில், தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த அரசோடு
ஒத்துழைப்பார்களானால் அரசு நிர்ணயிக்கின்ற குறைந்தபட்ச
ஊதியம் செயல்பட வழிவகை செய்தவர்களாக இருப்பார்கள்.
அதைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த
குறைந்தபட்சக் கூலியை அமலாக்குகிற விஷயத்தில் கேள்வி
கேட்டால் அமைச்சர் அவர்கள் எங்களுக்கு நீண்ட ஒரு உபதேசத்
தையே பண்ணிவிட்டார். தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம்
செய்யாமல் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று. தொழிலாளர்
வர்க்கத்தினுடைய அடிப்படை உரிமையை கையாளக்கூடாது
என்று மறுத்து, வேலை நிறுத்தத்திற்கு விரோதி என்றால் அவர்
கொள்கை அளவிலே பேசட்டும். தயவு செய்து சட்டமன்றத்
திலே இப்படிப்பட்ட பதில்கள் தேவையில்லை என்று உங்கள்
மூலமாகச் சமர்ப்பிக்கிறேன். எனக்கு வேண்டியதெல்லாம் இந்த
பவர்லூம்ஸ் ஆர்கனைஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் மாதிரி இருக்கிற
யூனிட்டுகள் ஒருசில இடங்களில் தான் இருக்கின்றன. பெரும்
பாலான இடங்களில் தோட்டங்களில் இரண்டு, மூன்று தறிகளை

வைத்து விவசாயிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட தொழிலாளர்களுக்கு இதை அமலாக்கவேண்டும். இந்தக் குறைந்தபட்ச கூலி அடிமட்டத்தில் இருக்கிற தொழிலாளர்களுக்கு கிடைக்க சர்க்கார் வழிவகைசெய்து முன் வைத்திருப்பதை நிறைவேற்றுவதற்கு என்ன முறையிலே உத்தியோகஸ்தர்களை வைத்து அவர்கள் நிறைவேற்றுகிறார்கள் ? கொடுக்கிற ரிப்போர்ட் கொடுக்கவில்லையென்று அமைச்சர் சொன்னால் நான் நிருபிக்கத் தயார். அதற்கு ஒரு விசாரணையை கோவை மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் வைப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன். கோவை மாவட்டம் பல்லடம் தாலுகாவில் 5 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்தக் குறைந்தபட்ச கூலியை அவர்களுக்கு கொடுப்பதற்கு அரசு என்ன கட்டுப்பாடுகளை விதித்து அதை நிறைவேற்றுவார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. எதற்கு போராட்டம் நடத்துவது, எதற்கு சட்ட ரீதியாக தீர்த்துக் கொள்வது என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். மினிமம் வேஜஸ் சட்டத்தை இம்பிளிமெண்ட் செய்வதற்கு நிறைய வாய்ப்புக்களைச் செய்திருக்கிறோம். நான் ஏற்கெனவே யார் வேண்டுமானாலும் லேபர் கோர்ட்டுக்குப் போகலாம் ; அதற்கான ஆய்வாளரிடம் கோரிக்கையைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னேன். யார் யாரை அதற்காக நியமித்து இருக்கிறோம் என்று சொன்னேன். (குறுக்கீடு) வம்பை விலைக்கு வாங்குவது என்பதில்லை. நீங்கள் எடுக்கவேண்டிய முறையை எடுக்காமல் எதற்கெடுத்தாலும் கொடி பிடித்துக் கொண்டிருந்தால் காரியம் போதுமென்று நினைக்கிறதாலே காரியம் நடக்கவில்லை. ஆகவே வம்பை விலைக்கு வாங்குவது என்பதில்லை. நாம் எல்லோரும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதில் ஈக்குவல் பார்ட்னர்ஸ். யார், யாரை நாம் இதற்காக நியமித்து இருக்கிறோம் என்று சொல்கிறேன். தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், தொழிலாளர் துறை துணை ஆய்வாளர், தொழிலாளர் துறை ஆய்வாளர், தொழிற்சாலை ஆய்வாளர்கள் மற்றும் தொழிலாளர் துறையின் பிற அதிகாரிகளும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இவர்களைப் பார்ப்பது நமக்கிருக்கிற மிகப்பெரிய பொறுப்பு : இதில் தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தான் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அதைத்தான் பன்னிப்பன்னி சொல்லிக் கொண்டு வருகிறேன். அவர்கள் தொழிலாளர்கள், அல்லது ட்ரேட் யூனியன்கள் இந்த ஆய்வாளர்களிடத்தில் முறையீடு செய்யலாம். அவர்கள் நேரடியாக லேபர் கோர்ட்டுக்குப் போகலாம். அதற்கேற்ற வழிவகையை நாம் செய்திருக்கிறோம். அதைச் செய்து தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற குறைந்த பட்ச ஊதியம் கிடைப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று தான் நான் பன்னிப்பன்னி பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.



திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பவர்லூம்ஸ் சம்பந்தப் பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அட்வைஸ் பண்ணுகிற முறையிலே பதில் கூறினார்கள். நான் கேட்டுக் கொள்வது இன்றைக்கு வால்பாறையில் கிட்டத்தட்ட 4,000 தொழிலாளர்களை வெளியே தள்ளி லாக்-அவுட் பண்ணி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வால்பாறையிலே பவர்லூம்ஸ் எங்கே இருக்கிறது ?

திரு. ஏ. டி. கருப்பையா ; தலைவர் அவர்களே, தொழிற் சங்கத் தலைவர்கள் போராட வேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தொழிற் சங்கத் தலைவராக இருந்தவர். அந்த அனுபவத்தில் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன். மூலக் கேள்விக்கும் தாங்கள் கேட்கும் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

(முற் :கல் 9-20)

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, பவர்லூம் தொழிலாளர்களுக்கு 1—5—1983லிருந்து குறைந்தபட்சக் கூலி அமலுக்கு வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுவரையில் இந்தச் சட்டத்தின் பயனாக எவ்வளவு தொழிலாளர்கள் பயன் அடைந்துள்ளனர் ? மேலும் இந்தச் சட்டம் சம்பந்தமாக அரசுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட இலாகாவிற்கோ இந்தக் குறைந்தபட்சக் கூலி அமல் நடத்தப்பட வில்லையென்று விண்ணப்பம் வருகிறபோது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, புகார் வரவில்லை என்று என் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். புகார் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். நான், யார், யார் ஆய்வாளர்கள் என்ற பட்டியலைப் படித்தேன். பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் அந்தப் பட்டியலை இன்னொரு முறையும் படிக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் அது தேவையில்லை என்று கருதுகிறேன். நிரம்ப அதிகாரிகளை நாம் ஆய்வாளர்களாக நியமித்திருக்கிறோம். எந்த ஆய்வாளர்களிடமும் புகார் கொடுக்கலாம். சாதாரண தொழிலாளர்கள் கூடக் கொடுக்கலாம். ட்ரேட் யூனியன்ஸ் கொடுக்கலாம். எந்த அதிகாரியாவது அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று புகார் செய்தால் அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுத்து என்ன உச்சகட்ட தண்டனை கொடுக்க முடியுமோ அது கொடுக்கப்படும் என்ற உறுதியை நான் இந்த சட்டமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக உறுதியாகச் சொல்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இப்போது
அரசாங்கத்தால் நிர்ணயித்திருக்கக்கூடிய குறைந்தபட்சக்
கூலியை அமல் நடத்துகிறபோது மாவட்ட கலெக்டர்கள் அதில்
நிர்ணயித்துள்ள கூலியைவிடக் குறைவாக ஒப்பந்தம் செய்ய
ஏற்பாடு செய்கிறார்களே அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் தமிழ்
நாட்டில் நடைபெற்றிருக்கின்றன. அதை மாற்றியமைப்ப
தற்கு அரசு முயற்சி செய்யுமா? அப்படி அரசாங்கம் நிர்ணயித்தி
ருக்கக்கூடிய கூலியைவிடக் குறைவாக மாவட்ட ஆட்சித் தலை
வரவர்கள் ஒப்பந்தம் செய்வதால் அது தொழிலாளர்களுக்குப்
பாதகமாக முடிவதை தவிர்ப்பதற்காக அரசு நடவடிக்கைகள்
எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, மினிமம் வேஜஸ் பொறுத்தவரையில், That industry
which is not paying minimum wages has no right to exist.
அதாவது, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதி
யத்தைக் கொடுக்காத நிறுவனங்கள் இயங்குவதற்குத் தகுதி
யில்லை. They have no right to exist. இயங்க வேண்டிய தேவை
இல்லை என்பது வழக்குமன்றத் தீர்ப்பு. குறைந்தபட்ச ஊதி
யத்திற்குக் குறைவாகக் கொடுக்கக்கூடாது. இதுவே குறைந்த
பட்ச ஊதியம். இதற்கும் குறைவாகக் கொடுத்தால் தொழிலாளி
எப்படி வாழமுடியும் ? ஒரு போராட்டம் நடக்கிறது. போராட்
டம் நடக்கும்போது கலெக்டர் சமரசத்திற்கு ஏற்பாடு செய்கி
றார். அங்கு சென்றுள்ள தொழிற்சங்கத் தலைவர்களும் தொழி
லாளர்களும் நிறுவனமும் அல்லது நிர்வாகத்தினரும் சேர்ந்து
ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டால் நாங்கள் என்ன செய்ய
முடியும் ? அதையும் நீங்கள் ஆலோசிக்க வேண்டும். அரசாங்
கத்தைப் பொறுத்தவரையில் என்னிடம் வருமானால்
I will take a view that the industry has no right to exist unless
it pays the minimum wages prescribed by the Government
என்று சொல்லிவிடுவோம். அதை நான் உறுதியாகச் சொல்கி
றேன். அதில் இந்த அரசாங்கம் மிக உறுதியாக இருக்கிறது
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் குறைந்த பட்சக்
கூலியை அமல்நடத்தாத நிறுவனங்கள் அதை நடத்த வேண்டிய
அவசியமில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். தோழர்
கே. ஆர். எஸ். அவர்கள் சொல்லக்கூடிய நேரத்தில் கோவை
மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்லடம் பவர்லூம் தொழிலாளர்
களுக்கு குறைந்தபட்சக் கூலி அமல் படுத்தப்படவில்லை என்ப
தற்காகப் போராட்டங்கள் நடத்தி மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் முன்னால் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசாங்
கம் அறிவித்திருக்கக்கூடிய குறைந்தபட்சக் கூலியை முதலாளி
களிடம் கேட்காத ஒரு சூழ்நிலை, அரசாங்க அதிகாரிகளே அதற்
குக் குறைவாகக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலையை எடுக்
கக் கூடிய சூழ்நிலையில் தொழிற்சாலை அதிகாரிகளும் இந்தச்



சட்டத்தை அமல்படுத்துவதற்காக நியமித்திருக்கக்கூடிய அதிகாரி
களும் பவர்லூம் தொழிற்சாலைகளுக்குச் சென்று குறைந்தபட்சக்
கூலிச் சட்டத்தை அமல்படுத்தாத தொழிற்சாலைகள் மீது நட
வடிக்கை எடுத்து குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை அமல்
படுத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, சொன்னால் வருத்தப்படுகிறீர்கள். திரு. ஆறுமுகம்
என்னுடைய இனிய நண்பர். அவர் பேசும்போது சொன்னார்,
போராட்டம் நடந்தது என்று. அதைத்தான் சொல்கிறேன்.
இதற்காக போராட்டம் தேவை இல்லை. செக்ஷன் 20 (1) யை
தயவுசெய்து படியுங்கள். இதற்குப் போராட்டம் தேவை இல்லை.
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள்
அவர்களுக்குள்ள உணர்வுகளைச் சொல்கிறார்கள். போராட்
டம் நடத்துவது தொழிலாளர்களுக்குள்ள உரிமை. அதற்கு
தேவை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி இது
வரையில் சொல்லவில்லை. எதற்கு நடக்க வேண்டும், எதற்கு
கூடாது என்றிருக்கிறது. செக்ஷன் 20 (1) க்ளியராக இருக்கி
றது. மினிமம் வேஜஸ் கொடுக்கவில்லையென்றால் நியமிக்கப்
பட்டுள்ள அதிகாரியிடம் சம்பந்தப்பட்ட தொழிலாளர் அல்லது
வழக்கறிஞர் அல்லது தொழிற்சங்கத் தலைவர் சட்டத்தின்கீழ்
நியமித்துள்ள ஆய்வாளரிடம் உரிமை மனுவைத் தாக்கல் செய்ய
லாம்.

மேற்கொண்டு மனுக்களை விசாரிப்பதற்காக, மாநிலத்தில்
தொழில் கோர்ட்டு, லேபர் கோர்ட்டு நியமிக்கப்பட்டிருக்கிறது.
'Let us take advantage of it' அதைத் தான்
நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள்
தயவுசெய்து என் பதிலைக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.
எந்த அதிகாரியாவது நீங்கள் சொல்லி, அவர்கள் நடவடிக்கை
எடுக்கவில்லை என்று சொன்னால் அவர் பெயரை எழுதிக்
கொடுங்கள். அந்த அதிகாரியின் மீது இந்த அரசு நடவடிக்கை
எடுக்கும் என்பதை உறுதியாக, சொல்லிக் கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கரூரிலுள்ள சில பவர்லூம்கள் லாபகரமாக இல்லை
என்பதால், மூடப்பட்டு விட்டதால், நூற்றுக்கணக்கான தொழி
லாளர்கள் பாதிக்கப்பட்டு, அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்களே ?
அவர்களுக்கு ஏதாவது நன்மையை இந்த அரசு செய்ய முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால்
விவரமான அறிக்கை தரப்படும்.

திரு, ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் கேட்ட கேள்வி குறைந்தபட்ச கூலியை இந்த அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அதற்குக் குறைவான கூலியை அளிக்கக்கூடிய ஒப்பந்தத்தை மாவட்ட ஆட்சியாளர்கள் செய்கிறார்களே, அது எப்படி நியாயமானது ? என்று கேட்டதற்கு, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து, மாவட்ட ஆட்சியாளர்களும், தொழிற் சங்கங்களும் அப்படி ஒப்பந்தம் செய்துகொண்டால், என்ன செய்வது என்று சொன்னார்கள். அது சரியான அணுகுமுறையல்ல. அரசாங்கம் நிர்ணயித்த குறைந்தபட்ச கூலிக்கும் குறைந்த ஒரு ஒப்பந்தத்தை மாவட்ட ஆட்சியாளர் செய்தால், அது தவறு என்பதை அறிவித்து, அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் செய்யக் கூடாது என்று அறிவிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திருக்கிறோம். அதற்குக் குறைவாக தொழிலாளர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டாலும், அந்த ஒப்பந்தத்தை கலெக்டர் பதிவு செய்யக்கூடாது என்று சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு ** நெடுமாறன் அவர்கள் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதுபற்றி பரிசீலனை செய்யப்படும். ஏனென்றால், குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறைவாக Nobody is allow d to con ac outside h sta ure சட்டத்தால் கொடுக்கப்பட்ட ஒரு ஊதியத்திற்குக் குறைவாக ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்ற ஒரு நியதி இருக்கிறது. எனவே, மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் சொன்னதை அரசு பரிசீலனை செய்யும்.

செயற்கை மழை பெய்விக்க நிரந்தர ஏற்பாடு செய்யும் திட்டம்.

88—(*வினா எண். 21272) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை மழை பெய்விக்க நிரந்தர எற்பாடு செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) செயற்கை மழை திட்டத்தை நிரந்தரமாக தமிழ் நாட்டில் செயல்படுத்தவும், அதற்கான விமானம், ரேடார், உபகருவிகள், எரிவத்திகள் வாங்கவும் இத்திட்டத்தை நாமே நடத்தும் பொருட்டு நம் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு முழு பயிற்சி அளிக்கவும், இத்துறையின் வல்லுநர்களான அட் மோஸ்பெரிக்ஸ் இன் கார்ப்பரேட் என்ற அமெரிக்க நிறுவனத் துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இவ்வொப் பந்தத்தின்படி, இந்த நிறுவனத்தின் நிபுணர்கள் 1984 மற்றும் 1985 ஆகிய இரு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் முறையே, 5 மாத காலத்திற்கு இத்திட்டத்தைச் செயல்படுத்தவும், இந்திய செயற்கை மழைத்திட்ட பணிக்குழுவிற்கு முழுப்பயிற்சி அளிக்க வும் வகை செய்யப்பட்டுள்ளது. விமானம் முதலியன மொத் தம் ரூ. 37.30 இலட்சம் விலைக்கு வாங்கப்பட்டது. தற் சமயம் செயற்கை மழைத் திட்டம் 14–7–84 முதல் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த செயற்கை மழைத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நிரந்தரமாக தொடர்ந்து நடத்துகின்ற இந்தப் பணியை ஏற்று, அதற்கான அக்ரிமெண்ட் போட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பயிற்சிக்கு எவ்வளவு பேர்களை நம் முடைய தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துள்ளது ? அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று பயிற்சி பெறுவார்களா ? அல்லது அங்குள்ள அதிகாரிகள் இங்கே வந்து பயிற்சி அளிப்பார்களா ? இப்போது ஏழாவது மாதத்தில் செயற்கை மழைத் திட்டத்தை செயல்படுத்தியதாகச் சொன்னார்கள். எந்தெந்த மாவட்டத் தில் செயல்படுத்தப்பட்டது ? அதனாலே பலன் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, செயற்கை மழைத் திட்டம் சென் னையிலே தான் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தக் குழு விலே, அமெரிக்க நிபுணர்களிடமிருந்து பயிற்சி பெறுவதற்காக ஒரு இந்தியக் குழுவும் அமைக்கபட்டுள்ளது. இந்த இந்தியக் குழுவிலே இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஸ்க்வாட்ரன் லீடர் திரு. எஸ். அகமது, அயர் பணியில் விமானப் பயணியாக வும், மத்திய வானிலை ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த திரு. ஆர். ஜி. சுப்பிரமணியம் என்பவர் அயர் பணியில் ரேடார் கருவி இயக்குநர் மற்றும் வானிலை ஆய்வாளராகவும், சென்னை விமா னப் பயிற்சி கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஜெயப்பிரகாஷ் என்பவர் துணை விமானியாகவும் அமர்த்தப்பட்டு இவர்கள் பொறுப்பேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அரசுப் பணியாளர்கள் அதிலே பயிற்சி பெறுகிறார்களா என்று கேட்டேன். அதற்கு விளக்கமான பதில் கிடைக்கவில்லை. இது ஒன்று. இரண்டாவதாக இப்போதெல்லாம் மழைக்காலம் தவறி மழை பெய்கின்றது. விவசாயிகளுக்குத் தேவையான அந்த மாதங்களில் மழை பெய்வது இல்லை. அப்படிப்பட்ட அந்தக் காலத்திலே மழையைப் பெய்வித்து விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற அந்த வகையிலே இந்தத் துறை ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவிலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் படித்துவிட்டேன். அப்படிப் படிக்கப்படாதவர்கள் இந்தக் குழுவிலே இடம் பெறவில்லை என்றுதான் அர்த்தம், அது நேச்சுரல் கரோலரி. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். பூண்டி, சோழவரம், ரெட்ஹில்ஸ் ஆகிய இந்த மூன்று பகுதிகளையும் ஒரு ஏரியா என்ற அளவிலே வைத்து அங்கே மேகமூட்டம் வரும்போது சென்று மழை பெய்ய வைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் தான் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. 14—7—84 முதல் 10—10—84 வரை மொத்தமாக செங்குன்றம் பகுதியிலே 78.8 மில்லி மீட்டர் மழையும், சோழவரம் பகுதியிலே 46 மில்லி மீட்டர் மழையும், பூண்டி பகுதியிலே 165.85 மில்லி மீட்டர் மழையும் பெய்யப்பட்டுள்ளது.

1984 ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மழைக்கான மேகங்கள் மிகக் குறைவாக சூழ்ந்திருந்தன என்பதையும் தெரிவித்து இதற்கு அப்பால், இங்கே மழை பெய்ய வைப்பதைப் பொறுத்தவரையில் பெறக்கூடிய பாடம், கிடைக்கின்ற அனுபவம் இவைகளை எல்லாம் வைத்து அதன் பின்னர் இதை விரிவாக்குவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது 14—7—1984 லிருந்து சென்னையைச் சுற்றி இந்த முயற்சி தொடருவதாகச் சொன்னார்கள். ஏனைய மாவட்டங்களில் விரிவாக்கம் செய்வதைப் பொறுத்தவரையில் இங்கே கிடைக்கக்கூடிய படிப்பினை முதலியவற்றைக் கொண்டு பிறகு தொடரலாம் என்று சொன்னார்கள். பிற மாவட்டங்களில் குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இது எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? இந்தப் படிப்பு எப்போது நிறைவு பெறும்? ஒரு முறை இந்த செயற்கை மழையைப் பெய்விப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாகின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் என்னிடத்தில் வந்திருக்கக்கூடிய தகவல்களைத் தருகிறேன். இவ்வாண்டில் எரி பொருள் மற்றும்





இதர செலவினங்களுக்காக இதுவரை 4.85 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. பயிற்சி பெறுவதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோம். அதிலே எக்ஸ்பெர்ட்டைஸ் பெற்று அவர்கள் நாங்களே எல்லாம் செய்ய முடியும் என்று சொல்லியபின் அதனைப் பார்த்து முடிந்ததற்குப் பிறகு அமைச்சரவை அளவிலேதான் இதுபற்றிய முடிவினை எடுப்பது வழக்கம். அவ்வாறு எடுத்து விரிவாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செயற்கை மழைத் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவி அளித்துள்ளதா? இல்லையெனில் நிதியுதவி அளிக்கவேண்டும் என்று தமிழக அரசு கேட்டிருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இதுவரை கிடைத்த தகவலின்படி செலவு பூராவையும் மாநில அரசுதான் ஏற்றிருப்பதாகக் கருதுகிறேன். மொத்தம் 37.30 இலட்சம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்விக்க நிரந்தர ஏற்பாடு செய்த உடனே பொய்த்துப் போன வானம் மனம் நொந்து இயற்கை மழையைப் பெய்துவிட்டது. எனவே இயற்கை மழை பெய்கின்ற காலத்திலே செயற்கை மழை பெய்விக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வப்போது நீர் தேவை என்று கருதுகிறோமோ, எவ்வப்போது செயற்கை மழை பெய்ய வைக்க முடியும் என்று கருதுகிறோமோ அவ்வப்போதெல்லாம் செயற்கை மழை பெய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருவாடனைத் தொகுதியிலுள்ள 'ஏந்தல்' எனும் சிறு கண்மாய்கள்.**

89—(*வினா எண். 7738)—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனைத் தொகுதியில் உள்ள 'ஏந்தல்' என்ற சிறு கண்மாய்கள் P.W.D.-யிலும் சேராமல், பஞ்சாயத்து யூனியன்களிலும் சேராமல் இருப்பது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

[1984 அக்டோபர் 13

(ஆ) தற்போது திருவாடனை தொகுதியில் எட்டு ஏந்தல்கள் ஊராட்சி ஒன்றியத்திலோ அல்லது பொதுப்பணித் துறையிலோ சேராமல் உள்ளன. இந்தச் சிறிய கண்மாய்கள் யாவும் முன்னாள் ஜமீன் கண்மாய்கள் ஆகும். இவைகளை தரப்படுத்தும் வேலைகளில் சில வேலைகள் முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் தலைப்பின் கீழும் செயல் படுத்தப்படுகின்றன; சில வறட்சிப் பணியின் கீழும் செயல் படுத்தப்பட்டன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருவாடனை தாலுக்காவில் 'ஏந்தல்' என்ற எட்டு கண்மாய்களை இன்றைக்கு வேலைக்கு எடுத்துக் கொள்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். திருவாடனை தாலுக்காவிலே கிட்டத்தட்ட 200 கண்மாய்களுக்கு மேல் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இவைகள் அனாதைக் கண்மாய்களாக இருக்கின்றன. இதுபற்றி டி.டி.சி. கூட்டத்திலேயும், இதே சட்ட மன்றத்திலேயும் பல தடவை எடுத்துச் சொல்லியுங்கூட இன்று வரையில் வேலைகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஆகவே, புதிய திட்டத்திலே பல கண்மாய்களின் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுவதைப்போல, இந்தக் கண்மாய்களையும் பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, சிறிய கண்மாய்கள் என்று அழைக்கப்படுகின்ற அந்த எட்டு ஏந்தல்கள் இன்றைக்கு இரண்டு வெவ்வேறு தலைப்புகளின் கீழ் பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை இன்றைக்குப் படிப்படியாகச் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களின் பதிலிலே எட்டு ஏந்தல்கள் என்று சொன்னார்கள். ஏந்தல் என்றால் சிறு கண்மாய் என்ற அளவிற்கு இருக்கின்றது. அதைப்போல பல ஏந்தல்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன. இம்மாதிரி விடுபட்டதையெல்லாம் ஜமீன் டேங்க்ஸ் என்ற திட்டத்தின் கீழ் மராமத்து செய்யத் திட்டம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இதுவரையில் எந்த கிளாசிபிகேஷனிலுமே வராத அத்தனை கண்மாய்களையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு—60 ஆண்டுக் காலமாகக் கூட மராமத்து செய்யப்படாமல் இருக்கின்ற அவைகளை உடனடியாக மராமத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய நல்ல கருத்தை இந்த அரசு பரிசீலிக்கும்.



1984 அக்டோபர் 13]

## புழுதிப்பட்டியிலுள்ள இரும்புத் தொழிற்சாலை.

90—(*வினா எண். 14258) திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரி பஞ்சாயத்து யூனியன் புழுதிப்பட்டியிலுள்ள இரும்புத் தொழிற்சாலை, கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தொழிற்சாலை இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) புழுதிப்பட்டியில் செயல்பட்டு வந்தது ஒரு கொல்லுபட்டரையே தவிர இரும்புத் தொழிற்சாலை அல்ல. மூன்று ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டதால் 1982—83 முதல் அந்தக் கொல்லுப்பட்டறை செயல்படவில்லை.

(ஆ) இது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

திரு. இரா. அருணகிரி : பேரவைத் தலைவரவர்களே, ஒரு தொழிற்சாலை நஷ்டம் அடைவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, நிர்வாகச் சீர்கேடு இருக்க வேண்டும் அல்லது தொழிலாளர்களின் நலக்குறை அல்லது மூலப் பொருட்கள் கிடைக்காமை ஆகியவைகளாக இருக்க வேண்டும். இதில் எந்தக் காரணத்தினால் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கொல்லுப்பட்டரை—அது தொழிற்சாலை அல்ல—அதில் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் அந்தப் பகுதியிலே பெரும்பான்மையாகப் பயன்படாத காரணத்தால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் அது மூடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைத் தனியாருக்குக் கொடுத்ததால், அதனால் ஏற்பட்ட நஷ்டத்தால் தான் அந்தக் கொல்லுப்பட்டரை மூடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும், அதிலே வேலையிழந்த தொழிலாளர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு தயாரிக்கப்பட்ட பொருட்கள் முறையாகச் செலவிடப்பட முடியாத நிலை ஏற்பட்ட

காரணத்தினால்தான் அந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அத னாலேதான் அது மூடப்பட்டது. அதிலே பணியாற்றிக்கொண்டி ருந்த ஒருவர் தானாகவே அதிலேயிருந்து விலகிக்கொண்டார். அதிலே வேலையிழந்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இப்பொழுது புழுதிப் பட்டியில் உள்ள இந்தக் கொல்லுப்பட்டரையை சிங்கம்புண ரிக்கு மாற்றி செயல்பட வைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார் கள். அது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 91 மற்றும் 92 ஆகிய இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### 1982-83 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக (I. R. D. P.) ஒதுக்கப்பட்ட நிதி.

**91—(*வினா எண். 17389)** திரு. செ. செம்மலை மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982—83 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக (I.R.D.P.) ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய மாநில அரசின் பங்கு வீதம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 1982-83 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத் திற்காக (I.R.D.P.) ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் முப்பது கோடியே எட்டு இலட்சமாகும்.

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய மாநில அரசின் பங்கு 50:50 என்ற விகிதமாகும்.

### வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.

92—(*வினா எண். 20063) திரு. எம். சின்னசாமி: மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர் களின் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1978—79-ல் 161 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. 1979—80ல் இத்திட்டம் 181 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. 2—10—1980 ஆம் தேதி முதல் தமிழ் நாட்டில் உள்ள எல்லா வட்டாரங் களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டிலும் (1984—85)-ல் எல்லா வட்டாரங்களிலும் ரூ. 3022 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல் படும்.

(முற்பகல் 9-40)

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எல்லா ஒன்றியத்திற்கும் ஒரே மாதிரியாக தொகை ஒதுக்கப்பட்டு இருக் கிறது. ஒன்றியத்தின் மக்கள் தொகையையும், அதில் உள்ள டங்கிய பஞ்சாயத்துகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தத் தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஒன்றிய நிலபரப்புக்கும், மக்கள் தொகைக்கும் ஏற்ப ஒதுக்கித்தர அரசு முன் வருமா? இத்தொகை குறைவாக இருப்பதால் கூடுதலாக இந்தத் திட்டத்தில் பயன் அளிக்கும் வகையில் மத்திய அரசிடத் தில் இருந்து கூடுதல் நிதி பெற மாநில அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற திட்டத்தின் மூல மாக ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வட்டாரத்திலும் 600 குடும் பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று, அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளத் தக்கவகையில் வழிவகைகள் செய்யப்படுகின்றன. அந்த வகை யில் இது நடத்தப்படுகிறது. மேலும் பண உதவி வேண்டும் என்று கேட்டு மத்திய அரசை இந்த மாநில அரசு வற்புறுத் தும்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் 'டிரைசம்' என்ற வேலைக் கான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியைத்தரும் நிறுவனங்களுக்கு ஏதேனும் தகுதி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா? அப்படி இல்லையெனில் எந்த மாதிரியான தகுதி பெற்ற நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை அளிக்க வேண்டும் என்று விதி முறைகள் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த துறையில் பயிற்சி அளிக்க வேண்டும் என்று அந்தத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த அடிப்படையில் அந்தத் திட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் தொழிற்கூடங்களில் இந்தப் பயிற்சி அளிக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

[1984 அக்டோபர் 13

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டில் இருந்து இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்கு எவ்வளவு லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? எத்தனை வட்டார வளர்ச்சி அலுவலங்களில் உள்ளவர்கள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டில் மானிய ஒதுக்கீடு ரூபாய் 5 லட்சம். ரூ. 1,980 லட்சம் செலவு செய்யப்பட்டு 376 வட்டாரங்கள் பயன்பெற்றுள்ளன. 1981-82-ல் மானிய ஒதுக்கீடு ரூ. 6 லட்சம். ரூ. 2,256 லட்சம் செலவு செய்யப்பட்டு, 376 வட்டாரங்கள் பயன்பெற்றுள்ளன. 1982–83-ல் மானிய ஒதுக்கீடு ரூ. 8 லட்சம். ரூ. 3,008 லட்சம் செலவு செய்யப்பட்டு, 376 வட்டாரங்கள் பயன்பெற்றுள்ளன. 1983–84–ல் மானிய ஒதுக்கீடு ரூ. 8 லட்சம். ரூ. 3,022 லட்சம் செலவு செய்யப்பட்டு 377 வட்டாரங்கள் பயன்பெற்றுள்ளன. 1984–85–ல் மானிய ஒதுக்கீடு ரூ. 8 லட்சம். ரூ. 3,022 லட்சம் செலவில் 377 வட்டாரங்கள் பயன்பெறும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு யூனியனிலும் 600 பேர்களுக்கு லோன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். யூனியன் கமிஷனர் சிபாரிசு செய்தாலும் பாங்கில் லோன் கொடுக்க முன் வராமல் இருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி என்றால் யூனியன் கமிஷனர் சிபாரிசு செய்யப்பட்ட அத்தனை பேர்களுக்கும் பாங்கில் லோன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, 376 பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்தத் திட்டத்தின் கீழ் ரோடுகள் போட்டிருக்கிறோம் ; பள்ளிக்கூடங்கள் கட்டியிருக்கிறோம். அவற்றை ரிப்பேர் செய்யாமல் இருப்பதால் ரோடுகள் எல்லாம் பழுது அடைந்து காணப்படுகின்றன. ரிப்பேர் செய்வதற்கு பணம் ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. இரண்டையும் கலந்து அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஐ.ஆர்.டி.பி.-யைப் பொறுத்த வரையில் கடன் வழங்கப்படுவது பற்றி இங்கே கேட்டிருக்கிறார்கள். வங்கிகளில், சில இடங்களில், கடன் கொடுக்கவில்லை என்ற தாக்கீது பரவலாக வந்தது. அதைக் கருத்திற் கொண்டு, இந்தத் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தபட்டு இருக்கிறது.



1984 அக்டோபர் 13]

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் எத்தனை பேர்களுக்கு கடன் தரப்படுகிறது ? அதே நேரத்தில் ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் தருவது சம்பந்தமாக சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கறவை மாடுகளுக்குப் பதிலாக ஆடுகள் வாங்கி வளர்க்க அதிக நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தற்போது ஆடு வளர்க்கவும் இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் 600 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க 2,500 ரூபாய் வீதம் தரப்படுகிறது. அதில் 1,250 ரூபாய் மானியமாகவும் மீதி கடனாகவும் தரப்படுகிறது. ஆனால் அந்த ஆதி திராவிட மக்களுக்குச் சேர வேண்டிய தொகை பல்வேறு வகைகளில்—தேசீய வங்கியின் பீல்டு ஆபீசர், கிராமங்களில் இருக்கிற கிராம சேவக்குகள், மாடு பிடித்து தருகின்ற தரகர்கள் போன்றவர்களுக்கு—பாதிப் பணம் போய்விடுகிறது. அவ்வாறு இல்லாமல் தொகை முழுவதும் அந்த ஆதி திராவிட மக்களுக்கே பயன்படும் வகையிலும், அதைப் போன்று விவசாயிகளுக்கு 1/3 பங்கு மானியமாக வழங்கும் தொகை முழுவதும் அவர்களுக்கே பயன்படும் வகையிலும் ஊழல் இல்லாமல் நல்ல முறையில் முறையாக கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது அந்த மாதிரி சில இடங்களில் தகவல்கள் வந்த அடிப்படையில் அவர்களுக்கு நேரடியாக கறவை மாடுகளை வாங்கிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று ஆலோசனை சொல்லியிருக்கிறோம். அதையும் மீறி, எங்காவது தவறுகள் நடைபெறுமானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் கீழ் "டிரைசம்" வேலை வாய்ப்புக்கு பயிற்சியளிக்கும் நிறுவனங்களுக்கு ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அங்கே பயிற்சி பெற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சான்றிதழை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக அவர்களுக்கு வேலை கொடுக்க திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சித் திட்டம் அவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் தான். பயிற்சி பெறுபவர்கள் எந்தத் தொழிலில் பயிற்சி பெற விருப்பம் தெரிவிக்கிறார்களோ, அந்தத் தொழில் எந்த நிறுவனத்தில் சிறப்பாக நடைபெறுகிறதோ, அங்கே அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பிறகு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. கருப்பையா :** தலைவரவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்க ஆதி திராவிட மக்களுக்கு கடன் வழங்க வேண்டுமென்றால் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும். அங்கத்தினர்களாக இல்லை என்றால் அவர்கள் கடன் பெற தகுதி இல்லை என்று இருக்கிறது. அங்கத்தினர்களாக இல்லாதவர்களுக்கும் கடன் வழங்கும் வகையில் இப்போது இருக்கிற நடைமுறையை மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, கடன் வழங்கும்போது சில நிபந்தனைகள் இருக்கத் தான் வேண்டும். ஆகவே, இதை தளர்த்த இயலாது.

**திரு. ந. சிவஞானம் :** தலைவரவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் 1982-83 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ? மாநில அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ? ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகையை தேசிய வங்கிகள் மூலமாக, ஒழுங்காக வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(முற்பகல் 9-50).

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை முன்பே சொன்னேன். 1982-83 ஆம் ஆண்டில் மானியமாக ரூ. 8 இலட்சம் தரப்பட்டது. இதற்காக ரூ. 3,022 இலட்சம் செலவிடப்பட்டு, 376 வட்டங்களுக்காக செலவிடப்பட்டதோடு, தேசிய வங்கிகளிலிருந்து இதற்காக கடன் தரப்படும் என்று முறையாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது கொடுக்கவில்லை என்று தெரியப்படுத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.



**வண்டியூர் கண்மாயை ஆழ்படுத்தி அழகுபடுத்தும் திட்டம்.**

93—(*வினா எண் 18862) **திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியில் உள்ள வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி அதனை அழகுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :**

(அ) ஆம்.

(ஆ) வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி அழகுபடுத்தும் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன.

**பழனி நகராட்சிப் பேருந்து நிலைய கட்டுமானப் பணி.**

94—(*வினா எண் 22325) **திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகராட்சிப் பேருந்து நிலையக் கட்டுமானப் பணி முடிவடைந்து விட்டதா ?

(ஆ) அதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:**

(அ) முழுமையாக முடிவடையவில்லை.

(ஆ) ரூ. 37.55 இலட்சம்.

(இ) பிப்ரவரி 1984 முடிய ரூ. 19,47,775 செலவிடப்பட்டுள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினுடைய விஸ்தீரணம் எவ்வளவு? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் அது முடிவு பெறாமல் இருக்கிறது. இதன் காலதாமதத்திற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** அதற்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 37.55 இலட்சம். அந்த வேலைக்காக பிப்ரவரி 84 முடிய ரூ. 19,47,775 செலவிடப்பட்டிருக்கிறது. வேலை முறையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

[1984 அக்டோபர் 13

திரு. என். பழனிவேல் : நான் கேட்டுக்கொள்வது அந்தப் பேருந்து நிலையத்தினுடைய விஸ்தீரணம் எவ்வளவு? குறுகிய அளவிலே கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. வைப்பாரில் பொதுமக்கள் செல்லக் கூடிய பை-பாஸ் ரோடு இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தோடு இந்த பை-பாஸ் ரோட்டை நீட்டித்து அதை முடித்துக் கொடுக்க, இந்த ஆண்டுக்குள் அதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையத்தினுடைய கட்டுமான வேலைகள் 4 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. அதிலே 3 கட்டப் பணிகளை பொதுப்பணித் துறை நிறைவேற்றுகிறது. 4-ஆவது கட்ட வேலையை நகராட்சி பொறியியல் பிரிவு ஏற்றுக் கொண்டு செயல்பட இருக்கிறது. இன்னும் 6 மாதத்தில் இந்த வேலை முடிவடையும்.

## திருச்செந்தூரிலுள்ள கால்நடை மருத்துவமனை

95—(*வினா எண் 19101) திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூரில் கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனை செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) திருச்செந்தூரில் கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டிடத்தில் தான் செயல்பட்டு வருகிறது.

(ஆ) திருச்செந்தூரில் கால்நடை மருத்துவமனைக்கு புதிய நிரந்தரக் கட்டிடம் கட்ட 1983–84 ஆம் நிதி ஆண்டில் அரசு மானியம் வழங்க இயலவில்லை. 1984–85 ஆம் ஆண்டில் மருந்தகக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி தக்க கருத்துரு அனுப்புமாறு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூரிலே கட்டப்பட்ட அந்த கால்நடை மருத்துவமனை முழுவதுமாக இடிந்து விழுந்துவிட்டது. அப்படி அந்தக் கட்டிடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் என்ன? கட்டிட ஒப்பந்தக்காரர்களின்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.



1984 அக்டோபர் 13]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலை
வர் அவர்களே, திருச்செந்தூரில் கட்டப்பட்ட அந்தக் கால்
நடை மருந்தகம் 1964–65-ல் கட்டப்பட்ட நிரந்தரக் கட்டிடம்
ஆகும். அது பழுதடைந்து எந்த நேரமும் ஆபத்து ஏற்படக்
கூடும் என்று பொதுப்பணித் துறையினர் தெரிவித்ததால் 1972
ஆகஸ்டு மாதத்தில் நிரந்தரக் கட்டிடத்திற்கு கால்நடை மருத்
துவமனை மாற்றப்பட்டு 1–8–1972 முதல் திருச்செந்தூரில்
சரவணப்பொய்கை ரோட்டிலுள்ள வாடகைக் கட்டிடத்தில்
இயங்கிவருகிறது. 1964–65-ல் அனைத்திந்திய அண்ணா
தி.மு.க. ஆட்சி செய்யவில்லை. அதைப்போலவே 1972 ஆம்
ஆண்டும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தமிழகத்தை
ஆளவில்லை. இன்றைக்குப் பொறுப்பேற்றதற்குப் பிறகு
அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.
அதற்கு நிரந்தக் கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய வேலை
களையும், அதற்கு எந்த முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்ற எண்ணத்தோடும், 1984–85 ஆம் ஆண்டில்,
கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநருக்கு தக்க கருத்துரு
அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் அண்ணா தி.மு.க. கட்டவில்லை என்பது எனக்கும் நன்றாகத் தெரியும். இவ்வளவு குறுகிய காலத்தில் கட்டப்பட்ட ஒரு மருந்தகம் முழுமையாக இடிந்துவிட்டதே, அதற்காக இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்று கேட்டேன். அது மட்டுமல்லாமல், இன்றைக்குச் செயல்படுகின்ற இந்த மருந்தகம், திருச்செந்தூர் கோவிலுக்குப் பக்தர்கள் செல்லக்கூடிய அந்த சரவணப்பொய்கை ரோடில் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றது. அங்கே போதுமான இடவசதியில்லை என்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா? ஆகவே இனி மாற்றும்படியாக இருக்கின்ற அந்த விசாலமான இடத்திலே அந்த அரசாங்கக் கட்டிடத்திலே இந்த மருந்தகம் செயல்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டில் 29 இடங்களைத் தேர்ந்தெடுத்து, கால்நடை பராமரிபபுத் துறை இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் 3 இடங்கள், அதாவது திருச்செந்தூர், காட்டுமன்னார் கோவில், முத்தூர் போன்ற இடங்களையும் தேர்ந்தெடுத்து மொத்தம் 32 இடங்களையும் ஊரகத் வளர்ச்சி துறை இயக்குநருக்கு கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அனுப்பபப்பட்ட இடங்களை ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் தேர்ந்தெடுத்து, கால்நடை மருத்துவக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

1984-85 ஆம் ஆண்டில் இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய அனுப்பும் பட்டியலில் திருச்செந்தூர் முதலிய இடங்களில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கான பிரேரணைகளை சேர்த்து அனுப்ப தக்க நடவடிக்கை எடுத்து அனுப்புமாறு, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புக்கத்துரை கிராமக் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம்.

96—(*வினா எண். 21915) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், புக்கத்துரை கிராமத்தில் (Veterinary Hospital) கட்டிடம் பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கட்டி முடிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், புக்கத்துரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் மேல் கூரை வரை கட்டப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரால் பணியினை முடிப்பதற்கு மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் பணி எப்போது துவக்கப்பட்டது? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ? அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்தின் பணி 27—1—1976 முதல் துவக்கப்பட்டு, 30—6—1982 வரை நிறைவேற்றப்பட்டது. இந்தக் கட்டிடம் கட்டும் பணி புக்கத்துரை கிராமத்தில் உள்ள திரு. வி. பெருமாள் என்ற ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது நிறைவேறாததற்குக் காரணம் என்ன என்ற தகவல் எனக்குக் கொடுக்கப்படவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் பணி துவக்கப்பட்டு, சுமார் 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றது. அதற்குக் காரணம், அந்தக் கட்டிடத்தைக் கட்டுகின்ற





பணியைச்செய்கின்ற ஒப்பந்தக்காரருடைய சொந்தக்கட்டிடத்தில் தான் வாடகை கொடுத்து தற்போது அந்த மருந்தகம் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. அதனால் தான் அவர்கள் காலதாமதம் செய்கிறார்கள். இதைப் பற்றி நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் பல தடவைகள் பேசியிருக்கிறேன். உடுக்குறியிட்ட வினாக்கள் மூலம் நான் ஏற்கெனவே கேள்வி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1981 ஆம் ஆண்டு பதில் அளிக்கின்றபோது, இந்தக் கட்டிடம் கட்டும் பணி நிறைவேற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தக் கட்டிடம் கட்டும் பணியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக கட்டிட வேலை தடைபட்டு இருப்பதனால், மாவட்ட ஆட்சியாளரும் கால்நடை பராமரிப்பு பிரிவு இயக்குநரும் நேரிடை கவனம் செலுத்தி, அந்தக் கட்டிடத்தை விரைவில் கட்டி முடிக்க வேண்டும் என்று நேர்முக கடிதமும் எழுதியிருக்கிறார்கள். நேற்றைக்குக் கிடைத்த தகவலின்படி, அதாவது 12—10—1984 அன்று பெறப்பட்ட தகவலின்படி, புக்கத்துரை கால்நடை மருந்தகத்தின் கட்டிடப் பணி தற்போது லிண்டல் அளவுக்கு மேல் நடைபெற்று வருகிறது. தேவையான கட்டிடப் பொருள்களுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. அந்தக் கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பிட்டக் காலத்தைக் கொடுத்து, அதற்குள் கட்டி முடிக்கவில்லை என்றால், நிச்சயமாக அந்த ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், அந்தக் கட்டிடம் விரைவில் கட்டி முடிப்பதற்கான வேலைகளை அரசு மேற்கொள்ளும்.

### இரும்புச்சத்துக் கொண்ட உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

97—(*வினா எண். 21180) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரும்புச் சத்துக் கொண்ட உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை மைய அரசின் ஒத்துழைப்புடன் நிறுவ மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

[1984 அக்டோபர் 13

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஆம், மத்திய அரசின் நிதியுதவியுடனும் மாநில உப்பு தயாரிப்புக் கழகத்தின் கூட்டுறவுடனும் இரும்புச் சத்து கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ மத்திய அரசுடன் கலந்து அரசு ஆலோசித்து வருகிறது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் விதவைகளின் மகள் திருமணத்திற்கு வழங்கப்பட்ட நிதியுதவி

98—(*வினா எண். 22760) திரு. டி. மணி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளின் பெண் குழந்தைகளுக்குத் திருமணச் செலவிற்காக ரூ. 1,000 வழங்கியதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) அதில் ஆதிவாசி பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) விதவைகளின் மகள் திருமணத்திற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் 1981–82-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1981–82 ஆம் ஆண்டில் 5 பேர்களுக்கும், 1982-83-ஆம் ஆண்டில் 20 பேர்களுக்கும்1983–84 ஆம் ஆண்டில் 30 பேர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதில் ஆதிவாசி பழங்குடியினர் எவரும் இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகளின் பெண் குழந்தைகளுக்கு திருமணச் செலவிற்காக கொடுக்கப்படும் இந்த தொகை எந்தத் துறை மூலமாகக் கொடுக்கப்படுகிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் சமூக நல இயக்குநர் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியாளரின் மூலமாக அந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக இந்தத் தொகையை பெற்றுக் கொள்கிற நேரத்தில், வழங்குவதே ஆயிரம் ரூபாய், அதிலும் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் நீண்ட நாட்கள் அலைய வேண்டிய நிலை



1984 அக்டோபர் 13]

இருப்பதால் அந்தத் தொகையை பெற்றுக் கொள்வதற்குள் 500 ரூபாய்க்கு மேலே செலவழிக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இதற்கென தனி வட்ட தாசில்தார் மூலமாக குறுகிய காலத்திலே அந்தப் பணத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகத்தான் மனுக்களை கொடுத்து, அந்த மனுக்கள் நிரப்பப் பெற்று, பிறகு அவர்கள் எந்தெந்த தகுதிகளின் அடிப்படையில் வருகிறார்களோ, அந்தந்த தகுதிக்கான சான்றிதழ்களை எல்லாம் கொடுத்தால் நிச்சயமாக ஒரு தடவையிலேயே அவர்களுக்கு முழு உதவித் தொகையும் கிடைத்து விடும்.

சில சமயம் ஒரு சான்றிதழைக் கொண்டு வருவார்கள். வேறு சான்றிதழ்களை மறந்துவிடுவார்கள். இப்படி நிலைமை வருகிற போது, அந்த அடுத்த சான்றிதழையும் கொண்டு வர வேண்டும் என்று ஒரு கட்டளையை மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பிப்பார். இப்படிப்பட்ட நிலைமையினால்தான் உதவித் தொகை பெறுகிற வரைக்கும் அவர்கள் அல்லாடுகின்ற சூழ்நிலையை பெறுகிறார்கள். எப்படி அந்த வழிமுறைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதற்கேற்ப அந்த வகையில் கொடுக்கின்ற சான்றிதழ்களையெல்லாம் கொடுத்து விட்டால் நல்லது. ஆண்டு வருமானம் அந்த விதவைகளின் குடும்பத்திற்கு 3 ஆயிரத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. அப்படி ஆண்டு வருமானம் உள்ள விதவைத் தாய்மார்களின் பெண்களின் திருமணத்திற்காகத்தான் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. மேலும் வயது வரம்பு 18-லிருந்து 30 வயதிற்குள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தகுதியின் அடிக்படையில் மனுக்கள் வர வேண்டும். தகுதியை மீறிக்கூட சில சமயம் வரலாம். அதையெல்லாம் பார்த்துத்தான் செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1981 ஆம் வருடத்திலே நிர்ணயித்த இந்த ஆயிரம் ரூபாயில் இப்போது இருக்கக்கூடிய விலைவாசியேற்றம் காரணமாக அதை வைத்துக் கொண்டு கல்யாணம் செய்வது சிரமமாக இருப்பதால் அந்தத் தொகையை உயர்த்தவோ இரட்டிப்பாக்கியோ கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, பணமே இல்லாதவர்கள், திருமணமே செய்ய முடியாத அளவில் இருக்கிறவர்களுக்கு இந்த ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. இன்னும் இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நிதிநிலையை நாம் ஒட்டிப் பார்க்கவேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விதவைகளின் பெண் குழந்தைகளைக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் இந்த மாநிலத்தில் பிறந்தவர்கள் அல்ல என்ற காரணத்தினால் ஒரு கேஸிலே நிதி வழங்குவதற்கு மறுக்கப்பட்டு இருக்கிற விவரம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? மற்ற மாநிலங்களில் பிறந்தவர்களாக இருந்தாலும் இந்த மாநிலத்திலே செட்டில் பண்ணியிருந்தால் அவர்கள் விதவைகளின் குழந்தைகளைக் கல்யாணம் செய்து கொண்டால் அவர்களுக்கும் இந்த உதவித் தொகையை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : தலைவர் அவர்களே, விதவைகள் யாராக இருந்தாலும் ஏழைகளாக இருக்க வேண்டும், விதிமுறைகளுக்கு உட்பட்ட முறையில் இருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ஏழை விதவைகளுடைய பெண் குழந்தைகளின் திருமணத்திற்கு அரசாங்கத்தின் சார்பாக உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப் பெறுவதற்காக குழந்தைகளுக்கு திருமணம் நிச்சயம் செய்தவுடனே மனுக் கொடுத்தும் திருமணம் முடிந்து குழந்தை பிறந்த பிறகு தான் உதவித் தொகை வருகிறது. இப்படிக் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க உதவித் தொகைக்கான மனுக்களைக் கொடுத்து இத்தனை நாட்களுக்குள் உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்று உத்திரவிடப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை பெற்ற 4 மாதங்களுக்குள் திருமணம் நடக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மனுக் கொடுத்தபிறகு குழந்தை பிறந்தும் பணம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். பணம் கிடைத்துவிட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரும் அதைத் தெரிவிக்கவில்லை. இனிமேல் இப்படி நடக்காது, உதவித் தொகை கொடுத்த 4 மாதங்களுக்குள்ளாக திருமணம் நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டு அந்த அடிப்படையில்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, ஏழை விதவைகளுக்கு அவர்களுடைய பெண் குழந்தைகள் திருமணத்திற்காக 3 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உட்பட்டு ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே கேள்வி கேட்ட உறுப்பினர்கள் இந்த உதவித் தொகையை வாங்குவதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன



என்பதைச் சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது அந்த ஆயிரம் ரூபாய் தருவது ஒரு புறத்திலே இருந்தாலும் அதற்காகிற செலவைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒரு விதவை தன்னுடைய பெண் குழந்தையின் திருமணத்திற்காக தொகை கேட்டவுடனே வருவாய்த் துறை அதிகாரிகள் மூலம் அல்லது வேறு அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட தகவல்களைத் தயாரித்து மனுச் செய்த 15 நாட்களுக்குள் அல்லது 1 மாதத்திற்குள் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தால் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வராது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் ? ஆகவே அதற்கேற்ற வகையில் ஆணையைப் பிறப்பிக்க முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மனுக்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் முதலிலே பதில் சொல்லும்போது குறிப்பிட்டேன். குறிப்பிட்ட காலத்திற்குள் அது கிடைக்க வேண்டுமென்ற முறையில்தான் அரசாங்கம் செயல்படுகிறது. சில சமயங்களிலே காலதாமதம் ஏற்படுகிறது. தொகை வாங்குகிறவர்களைத் தான் அது சாரும். காரணம் தகுதிக்கான சான்றிதழ்களைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். மறுபடியும் கேட்டு அதைக் கொடுக்கிறார்கள். அதனால்தான் காலதாமதம் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 99, 100 இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

### அனைத்து மாவட்டங்களிலும் பட்டுத் தொழில் மையங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

99—(*வினா எண். 21048) திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பட்டுத் தொழில் மேம்பாட்டுக்காகத் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பட்டுத் தொழில் மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ) : தர்மபுரியிலுள்ள ஓசூரிலும், சேலம், வாணியபோடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் பட்டுத் தொழில் மையங்களில் செயல்பட்டு வருகின்றன. திண்டுக்கல்லில் தொடங்கவிருக்கும் பட்டுத் தொழில் மையத்தின் கட்டுமான வேலைகள் துரிதமாக

நடந்துகொண்டு வருகின்றன. விரைவில் இம்மையம் தொடங்கபடும். மேற்கொண்டு இந்த மாநிலத்தில் மற்ற இடங்களி தேவைக்குத் தகுந்தபடி அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்தொழில் மையங்கள் நிறுவுவதற்கு ஆய்வு செய்யப்படும்.

### பட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

100—(* வினா எண். 22257)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தமிழ் நாட்டில் பட்டு வளர்ச்சித் தொழில் அபிவிருத்திக்காக ஏழாவது திட்ட கால முடிவிற்குள் முசுக்கொட்டை சாகுபடி பரப்பளவை 1 லட்சம் ஏக்கராக உயர்த்தவும், நோயற்ற முட்டைத் தொகுதிகளின் உற்பத்தியை 300 லட்சமாக உயர்த்தவும், பட்டுக்கூடு உற்பத்தியை 125 லட்சம் கிலோ கிராமாக உயர்த்தவும், வருடாந்திர பட்டு நூல் உற்பத்தியை 5 லட்சம் கிலோ கிராம் அளவுக்கு மேல் உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் பட்டு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு நிலையை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எல்லா மாவட்டங்களிலும் பட்டுத் தொழில் மேம்பாட்டுக்கு அரசினுடைய முயற்சி பற்றி நான் கேள்வி கேட்டு இருந்தேன். ஆனால் அவர்கள் சில மையங்கள் பற்றி மட்டும் சொன்னார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் எல்லா மாவட்டங்களிலும் அல்லது இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிற அந்த மாவட்டங்களில் அது செயல்படுகின்ற வகையில் எவ்வளவு மூலதனம் அரசு அதற்கு ஒதுக்கி இருக்கிறது என்பதையும் அதன் மூலம் எத்தனை பேர் பயனடைவார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுத் தொழில் மேம்பாட்டுக்கு என்று சில நல்ல காரியங்களைச் செய்து இருக்கிற நல்ல நடவடிக்கைகளைச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் பட்டுத் தொழில் செய்கின்ற அதேநேரத்தில் பெடரேஷனில்



இருந்து தான் பட்டை வாங்கி அதை நெய்து தருகிறார்கள். அது நல்ல குவாலிட்டியாக இல்லை. ஆகவே ஆரணி போன்ற பகுதிகளில் தேக்கம் அடைந்து இருக்கிறது. ஆனால் மக்களுடைய ஆசை, பட்டு என்ற உடனேயே இன்னும் நன்றாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இன்னும் சன்னமாக சைனா பட்டு மாதிரி நீங்கள் உற்பத்திச் செய்வதற்கு ஆவன செய்வீர்களா என அரசை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுத் தொழிலைப் பொறுத்த வரை அதிகமான அளவுக்கு அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையில் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி முன்னேற்றத்திற்கும், விவசாயிகள் முன்னேற்றத்திற்கும் அரசு இந்த பட்டுத் தொழில் மூலம் என்ன என்ன காரியங்கள் செய்து இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த கேள்வியின் பதிலைப் படித்து விடுங்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு பதில் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சாப் பட்டுத் தரத்தை உயர்த்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ? காஞ்சிபுரம் சேலையை பணக்காரர்கள் மட்டுமே கட்டுகிறார்கள். அதை ஏழைகளும் வாங்கி கட்டும் வண்ணம் ஏழைகளுக்கு காஞ்சிபுரம் பட்டுச் சேலை சகாய விலையில் கிடைப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்து வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மந்திரி பட்டு தான் உற்பத்திச் செய்கிறார். சேலை இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதியில் தாளவாடி மலைப் பகுதியில் மாதகள்ளி என்ற இடத்தில் சுமார் 800 ஏக்கரில் அரசு பட்டு வளர்ச்சிப் பண்ணை இருக்கிறது. சென்ற 1982 ஆம் ஆண்டு அந்தப் பண்ணை அபிவிருத்திக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 25 லட்சம் ரூபாய் அனுமதித்தது. இதன் மூலம் சுமார் 3 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. அதனுடைய வளர்ச்சி மிகவும் நிதானமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இதற்காக தனி கவனம் செலுத்தி இப்போது 300 பேர் மட்டும் தான் வேலை செய்கிறார்கள். அதை வேகமாக வளர்ச்சி அடையச் செய்து 3 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் வகையில் அரசு தனிக் கவனம் செலுத்துமா என அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 13

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றி அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் போன்ற பகுதிகளில் பட்டு நூல் உற்பத்தி யாளர்களுக்குக் கிடைக்கும் விலையைவிட, தமிழ்நாட்டில் உற் பத்தி செய்யப்படும் பட்டு நூல் உற்பத்தியாளர்களுக்கு குறை வான விலை கிடைப்பதால் பட்டு உற்பத்தியாளர்களின் ஊக்கம் குறைந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா? மேலும் அதிக அளவிற்குப் பட்டு உற்பத்தி செய்யக்கூடிய பட்டுப் புழு ரகத்தைப் பட்டு உற்பத்தியாளர்களுக்கு அரசு வழங்கி இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் மைசூரை மட்டும் நம்பி இந்தப் பட்டுத் தொழில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வந்தது என்பதையும், தற்பொழுது தமிழகத்திலேயே அதன் சுய தேவை யைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்கு எல்லா வழி வகைகளையும் அரசு எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிற்சாலையில் பத்து, பன்னி ரெண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிய தொழிலாளர்கள் இப் பொழுது வெளியேற்றப்பட்டு, அவர்கள் வேலை வாய்ப்பகத்தின் மூலம் வந்தால்தான் நிரந்தரமாக்கக்படும் என்று விதித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிற்சாலையில் வேலை பார்த்த பல தொழிலாளர் கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.**



1984 அக்டோபர் 13]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

பட்டியல் I

### காஞ்சிபுரம் நகரப் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம்.

1— வினா 1613—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் நகர பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) இத் திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்குத் தேவையான சுட்ட மண் குழாய்கள் பெரிய விட்டமுள்ள பீங் கான் குழாய்கள் மற்றும் கச்சாப் பொருட்கள் உரிய காலங்களில் கிடைக்கப் பெறாத காரணத்தாலும், நில ஆர்ஜிதப் பணிகள் காலதாமதம் ஆனதாலும், பாதாளச்சாக்கடை அமைப்புத் திட்டத் திற்காக மேற்கொண்டுள்ள பணிகளை விரைவில் முடிக்க இயல வில்லை. தற்பொழுது எல்லா வேலைகளும் முடிவு பெற்று 1—4—1982-ல் திட்டம் பராமரிப்பதற்காக நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் 1980-ம் ஆண்டு நடைபெற்ற வர்த்தகப் பொருட்காட்சி மூலம் அரசுக்குக் கிடைத்த இலாபம்.

2—வினா 2429—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-ம் வருடம் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் கலந்துகொள்ள ஒவ்வொரு அரசுத் துறைக்கும் எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது?

(ஆ) மேற்படி வர்த்தகப் பொருட்காட்சியில் அரசுக்கு எவ்வளவு பணம் இலாபம் கிடைத்தது?

விடை—

(அ) அவையில் * விவரம் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1980-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியின் மூலம் கிடைக்கப் பெற்ற லாபம் 8,09,000 ரூபாய் ஆகும்.

---

* 429-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 அக்டோபர் 13

எஸ். கொடிக்குளம் பேரூராட்சிக்கு தோப்பு மற்றும் களம் புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்தல்.

3—வினா 2460—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1958 ஆம் வருடம் திருவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம், எஸ். கொடிக்குளம் பேரூராட்சிக்கு வருவாய் வாரியத்திலிருந்து சுமார் 55 ஏக்கர் தோப்பு மற்றும் களம் புறம்போக்கு நிலங்களை ஒப்படைப்பு செய்ய அரசு உத்தரவு பிறப்பித்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இன்னும் ஏன் நிலங்கள் பேரூராட்சிக்கு ஒப்படை செய்யப்படாமல் உள்ளன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

பெரிய மருத்துவ மனைகளில் தீப்புண் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தங்குவதற்கு குளிர்சாதன வசதி அறைகள் கட்டும் திட்டம்.

4—வினா 3028—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய மருத்துவமனைகளில் தீப்புண்பட்டவர்களுக்கு வைத்தியம் செய்ய தங்குவதற்கு குளிர்சாதன வசதி அறைகள் கட்ட அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பொற்கொல்லர்களுக்காக தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம்.

5—வினா 4329—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகைகளை தயாரித்து விற்பனைசெய்ய பொற்கொல்லர்களுக்காக தனியாக தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?



1984 அக்டோபர் 13]

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனியின் ரேயான் தொழிற்சாலைக்கு வனத்துறை மூலம் விற்கப்பட்ட கற்பூர மரம்.

6—வினா 5914—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனியின் ரேயான் தொழிற்சாலைக்கு மரக்கூழ் தயாரிக்க வனத்துறை அந்த நிறுவனத்திற்கு 1966-ம் வருடத்திலிருந்து கற்பூர மரத்தை சந்தை விலைக்குக் குறைவான விலையில் வழங்கியதால் ரூபாய் 65 லட்சம் வரையில் அரசுக்கு நட்ட மேற்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்குப் பொறுப்பாளிகளாயிருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) 1975-76 ஆம் ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத்தலைவரின் அறிக்கையின் பேரில், 1980-81 ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழு பேரவைக்கு சமர்ப்பித்த அறிக்கையில், சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்திற்கு 1—1—1966-லிருந்து கற்பூர மரங்களை சந்தை விலைக்கு குறைவான விலையில் வழங்கியதால் ரூ. 64·25 லட்சம் அளவிற்கு அரசின் வருவாயில் குறைவு ஏற்பட்டது என்று சுட்டி காட்டப்பட்டுள்ளது.

(ஆ) அப்போதைய அரசு எடுத்த கொள்கை முடிவின்படி விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆகவே, குறிப்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கப்பல் கட்டுமான பட்டப்படிப்பு பிரிவு ஏற்படுத்துதல்.

7—வினா 6543—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கப்பல் கட்டுமான பட்டப்படிப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்த அரசுக் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 13

**மருத்துவக் கல்லூரிகளில் குறுகிய கால மருத்துவப் படிப்பு ஆரம்பித்தல்.**

8—வினா 6762—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டு வைத்தியக் கல்லூரிகளில் குறுகிய கால மருத்துவப் படிப்பை ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

பரிசீலிக்க உத்தேசமில்லை.

**பழனி வட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கும் கடன் நிவாரண மனுக்கள்.**

9—வினா 8577 —திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் கடன் நிவாரண மனுக்கள் மிகப் பெரிய அளவில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவைகளை உடனடியாக பைசல் செய்வதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில்

| | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்கள் .. .. .. | 1,711 |
| பைசல் செய்யப்பட்ட மனுக்கள் .. .. .. | 1,706 |
| நிலுவையில் உள்ள மனுக்கள் .. .. .. | 5 |

ஆகையால் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சென்னையிலுள்ள தமிழ்க்கலைக் களஞ்சிய அலுவலகம்.**

10—வினா 9542—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்க் கலைக் களஞ்சியம் அலுவலகம் 1979 ஜூன் திங்களிலிருந்து செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?



1984 அக்டோபர் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயலுக்கு வரும் ?

(இ) தமிழ் கலைக் களஞ்சியத்தின் நோக்கம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ் கலைக் களஞ்சியம் பணிக்கென அரசு அலுவலகம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிடும் பணியை ஏற்றிருந்த தமிழ் வளர்ச்சிக் கழகம், அப்பணியைச் செய்ய இயலாதென்பதை அரசுக்குத் தெரிவித்ததால் அப்பணியை அரசே தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ) தமிழ் மொழியில், தமிழிலும், ஏனைய துறைகளிலும் ஏற்கனவே உள்ள சிறப்புகளையும் வளங்களையும் பிற மொழியில் உள்ளக் கலைச் செல்வங்களையும் அறிவியல் வளங்களையும், பிறவற்றையும் தமிழ் மொழியில் வெளிக்கொணர்தலே தமிழ் கலைக் களஞ்சியத்தின் நோக்கமாகும்.

**இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக காலணிகள் வழங்கும் திட்டம்.**

11—வினா 9830—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரும்பு காலணிகளை இலவசமாக வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

இல்லை.

**மத்திய அரசு மூலம் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் சிமெண்ட்.**

12—வினா 10009—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மத்திய அரசு நமது மாநில அரசுக்கு ஒதுக்கும் சிமெண்ட் கோட்டா எவ்வளவு ?

(ஆ) ஒதுக்கப்படும் அளவு தமிழகத்திற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

விடை —

(அ) 1981-ல் சராசரியாக ஒரு காலாண்டுக்கு 3.9 இலட்சம் டன் ஒதுக்கப்பட்டது. சிமெண்டின் மீது ஓரளவு கட்டுப்பாட்டை. தளர்த்திய பிறகு 1982 மார்ச் மாதம் முதல் ஒரு காலாண்டுக்கு சராசரியாக 1.42 இலட்சம் டன் சிமெண்ட் ஒதுக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் இது 1.52 இலட்சமாக கூட்டப்பட்டுள்ளது

(ஆ) ஆம்.

(இ) பற்றாக்குறையின் காரணமாக கூடுதலாக லெவி சிமெண்ட் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு வந்தது. அதற்கிணங்க 1983 இரண்டாம் காலாண்டிலிருந்து 1,52,200 மெ.டன் லெவி சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது. அதாவது மத்திய அரசு காலாண்டுக்கு 10,000 மெ.டன் லெவி சிமெண்ட் கூடுதலாக ஒதுக்கியுள்ளது. புதிய சிமெண்ட் கொள்கையின்படி 'டான்செம்' நிறுவனம் இவ்வரசின் அனுமதியுடன் வட கொரியாவிலிருந்து 1,93,594 டன்னும் தென் கொரியாவிலிருந்து 3,14,300 டன்னும் இறக்குமதி செய்துள்ளது.

## குத்தகைக்கு விடப்பட்ட செய்யாறு பாலம்.

13 —வினா 10015 —திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செய்யாறு பாலத்திற்கு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் சுங்கம் வசூல் செய்யப்பட்டு வருவதால், மேற்படி பாலம் எவ்வளவு ரூபாய்க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

(ஆ) எவ்வளவு காலத்திற்கு விடப்பட்டுள்ளது ?

விடை —

(அ) அரசு ஆணை 935, பொதுப்பணித் துறை, நாள் 15—5—1970-இன்படி சுங்கவரி வசூல் செய்யும் உரிமை ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு ஏலத் தொகையின் சராசரியைக் கணக்கில் கொண்டு, ஒவ்வொரு மூன்றாண்டிற்கும் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படும். அக் குத்தகைத் தொகையானது 1981 நவம்பர் திங்கள் முதல் மாதத்திற்கு ரூ. 3,850.00 வீதம் விடப்பட்டது.

(ஆ) சுங்கவரி வசூல் அந்த குறிப்பிட்ட பாலத்தின் கட்டுமானத் தொகை வட்டியுடன் திரும்பப் பெறும் வரை வசூலிக்கப்படும். பிறகு நிறுத்தப்படும்.





## தமிழ்நாட்டில் அச்சுத் தொழில் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்.

14 —வினா 10259 —திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் அச்சுத் தொழில் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எங்கு அமைக்கப்படும் ?

விடை —

(அ) அச்சுத் துறைக்கான ஒரு ஆராய்ச்சி நிலையம் துவக்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு திட்டம்.

15 —வினா 10389 —திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசித்த தொகை எவ்வளவு ?

விடை —

(அ) தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்ட தொகை ரூ. 79.16. இலட்சம்.

## தென் மாவட்டங்களிலுள்ள இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற தமிழ்நாடு அரசு விடுத்துள்ள கோரிக்கை.

16 —வினா 10595 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு தென் மாவட்டங்களில் போகும் இரயில் பாதை பிராட்கேஜ் பாதையாக மாற்றப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

[1984 அக்டோபர் 13

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) மத்திய அரசு அளித்துள்ள பதிலென்ன?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இவ்வரசு மதுரை - தூத்துக்குடி - மணியாச்சி-திருநெல்வேலி பிரிவினை அகல இருப்புப் பாதையாக மாற்றவும், சென்னை - விழுப்புரம் - தஞ்சாவூர் - திருச்சி - மதுரை - இடையே உள்ள மீட்டர்கேஜ் இருப்புப் பாதையை அகல இருப்புப் பாதையாக மாற்றவும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ) கரூரிலிருந்து திண்டுக்கல் வரை புதிய அகல இருப்புப் பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரையில் இணையான அகல இருப்புப் பாதை ஒன்று அமைப்பதற்கும், மதுரையிலிருந்து மணியாச்சி வரையிலான இருப்புப் பாதையை அகல இருப்புப் பாதையாக மாற்றுவதற்கும் மற்றும் தூத்துக்குடியிலிருந்து மணியாச்சி வழியாக திருநெல்வேலி வரையில் இணையான அகல இருப்புப் பாதை ஒன்று அமைப்பதற்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### முதலியார்பட்டி சுடுகாட்டிற்கு பாதை அமைத்தல்.

17 —வினா 10676 —திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேடசந்தூர் வட்டம், வி. புதுக்கோட்டை கிராமம், முதலியார்பட்டி சுடுகாட்டிற்கு செல்லும் பாதை பட்டா பாதையாக உள்ளதால் அதை ஆர்ஜிதம் செய்து பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

ஆம். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதியை அபிவிருத்தி செய்தல்.

18 —வினா 10737—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதியை அபிவிருத்தி செய்ய அரசு எடுக்கும் நடவடிக்கைகளின் விவரம் என்ன?



1984 அக்டோபர் 13]

விடை —

எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் நூலக வசதியை அபிவிருத்தி செய்யும் வகையில், நூலக ஆணைக் குழுக்களைச் சார்ந்த நூலகங்களில் கல்வி நிறுவனங்கள் உறுப்பினராக சேர்ந்து பயன்பெற 3-1-1981 தேதியிடப்பட்ட அரசு ஆணை (நிலை) எண் 30-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அத்திட்டத்தின் படி கல்வி நிறுவனங்களின் தலைமை ஆசிரியர்கள் நூலக ஆணைக் குழுவின் நூலகங்களிலிருந்து மாணவ, மாணவிகளுக்குத் தேவையான நூல்களை எடுத்துச் சென்று, அவர்களுக்கு விநியோகித்து, படித்தபின் அவைகளை நூலகங்களுக்கு திருப்பி அனுப்ப வேண்டும்.

### கரூர், திருநெல்வேலி அகலத் இரயில்பாதை திட்டம்.

19 —வினா 10886 —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், திருநெல்வேலி, பிராட்கேஜ் இரயில் பாதைத் திட்டத்தை இந்த ஆண்டில் எடுத்து நடத்துமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

விடை —

(அ) மற்றும் (ஆ) இவ்வரசு மத்திய அரசுக்கு தொடர்ந்து எழுதிக் கேட்டுக் கொண்டதன் பேரில், கரூரிலிருந்து திண்டுக்கல் வரையில் அகல இரயில்பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரையில் இணையான அகலப்பாதை ஒன்று அமைப்பதற்கும், மதுரையிலிருந்து மணியாச்சி வரையிலான இருப்புப்பாதையை அகலப் பாதையாக மாற்றியமைப்பதற்கும், தூத்துக்குடியிலிருந்து மணியாச்சி வழியாக திருநெல்வேலி வரையில் இணை அகலப் பாதை ஒன்று அமைப்பதற்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கரூரிலிருந்து திண்டுக்கல் வரை புதிய அகல இருப்புப்பாதை திட்டத்திற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஒரு தனித்துணை மாவட்ட ஆட்சியாளரும் அவருக்கு தேவையான பணியாளர்களும், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ஒரு வட்டாட்சியர் தலைமையின் கீழ் அடங்கிய சிறப்புப் பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. திருநெல்வேலியிலிருந்து மணியாச்சி வழியாக தூத்துக்குடிக்கு அகல இருப்புப்பாதை அமைக்கும் வேலைக்கு மத்திய இரயில்வே அமைச்சரால் தூத்துக்குடியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

[1984 அக்டோபர் 13

## SCHEME OF VOCATIONALISATION AT THE PLUS TWO STAGE UNDER THE LIST OF CENTRALLY PONSORED SCHEMES.

20 —வினா 11444—Thiru R. UMANATH: Will the H n. the Minister for Education be pleased to state :

(a) Whether this Government have made any proposal t› the Centre that the scheme of vocationalisation at the plus two stage should be brought back under the list of Centrally sponsored schemes; and

(b) If so, the details thereof?

விடை—

(அ) மற்றும் (ஆ):

கேள்வியில் குறித்தது போன்ற கோரிக்கையை, இவ்வரசு மைய அரசின் முன் வைத்தது. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், அனைத்திந்தியாவுக்கும் பொதுவான முடிவாக, மேல்நிலைப்பள்ளி வகுப்பு நிலையில், தொழிற்கல்விக்கு, மைய அரசு நிதி உதவி செய்யக்கூடிய ''மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம்'' எதையும், மைய அரசு மேற்கொள்ளாததால், இவ்வகையில் மைய அரசு நிதி உதவி பெற வாய்ப்பில்லை.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்கும் சிறப்புத் திட்டம்.

21—வினா 11547—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி காரணமாக மக்களுக்கும், கால் நடைகளுக்கும் குடிநீர் பஞ்சத்தைப் போக்கும் உடனடி சிறப்புத் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1980-81-ல் வறட்சி காரணமாக போர்க்கால அடிப்படையில் கேணிகள் ஆழப்படுத்துதல், கேணிக்குள் குழாய்கள் போடுதல். ஆகிய 512 வேலைகள் விவசாயத் துறையாலும், 372 ஆழ்துளைக் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும், 19 கிணறுகள் பொதுப் பணித் துறையினாலும், மற்றும் 1,076 கேணிகள் மேம்படுத்தல், 897 ஊரணிகளை ஆழப்படுத்துதல் ஆகிய பணிகள் ஊராட்சி ஒன்றியங்களாலும் நடைபெற்றன. 127 குடிநீர் விஸ்தரிப்பு வேலைகள் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்றன. கால்நடைகளுக்காக 20 தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 170 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 127 கை இறைப்பான்களும் அமைக்கப்பட்டுள்ளன.



1984 அக்டோபர் 13]

## பள்ளிகளில் தேர்வு முறையை மாற்றியமைத்தல்.

22—வினா 11842—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் தற்போதுள்ள தேர்வு முறையை மாற்றியமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

விடை—

தற்பொழுது ஏதும் இல்லை.

## தூக்கனாம்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

23—வினா 12017—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் ஊராட்சி ஒன்றியம் தூக்கனாம்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக அவ்வட்டார மக்கள் ரூ. 10,000-மும், 5 ஏக்கர் நிலமும் கொடுத்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 29-3-82 முதல் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தூக்கனாம்பாக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 13

## நல்லாறு என்னுமிடத்தில் அணை கட்டும் திட்டம்.

24 —வினா 12021—திரு. பி. கந்தசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் நல்லாறு என்னு மிடத்தில் அணை கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் ஆய்வு வேலைகள் தொடக்க நிலை யில் உள்ளன. தலைமைப் பொறியாளர் அவர்களிடமிருந்து திட்ட அறிக்கை அரசுக்கு கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## தாம்பரம் இரயில் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட பாம்புத் தோல்கள்.

25—வினா 12259—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1981 ஆகஸ்டில் தாம்பரம் இரயில் நிலையத்தில் ஏராள மான பாம்புத் தோல்கள் வனத்துறை அதிகாரிகளால் கைப் பற்றப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் இரயில் நிலையத்தில் பாம்புத் தோல்கள் அடங்கிய மூன்று கட்டுகள் யாரும் எடுத்துச் செல்லாமல் கேட்பாரற்று இருந்தன. உதவி ஆட்சியர், சுங்கவரி அலுவலகம், சென்னை அவர்கள் தகவல் கொடுத்தவுடன் வனத்துறை அதிகாரி தலைமையிலுள்ள பாதுகாப்புப் படை தாம்பரம் இரயில் நிலை யத்திற்குச் சென்று அக்கட்டுகளை 11-8-1981-ல் கைப்பற்றியது. பிறகு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணைக் குப்பின் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த திரு. எஸ். கரீம் என்பவர் அனுமதியில்லாமல் பாம்புத்தோல் வியாபாரம் செய்வதாகத் தெரிய வந்தது. 1972ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் (39 மற்றும் 44 ஆவது பிரிவுகளை) மீறியதாக திரு. எஸ். கரீம் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்டு அபராதத் தொகை ரூ. 500 விதிக்கப்பட்டது. மேற்கண்ட அபராதத் தொகையை திரு. கரீம் அவர்கள் செலுத்தாத காரணத்தால் பாம்புத் தோல்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு பிறகு பொது ஏலத்தில் விடப்பட்டது.



1984 அக்டோபர் 13]

## மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

26—வினா 12423—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்தில் பல கோடி ரூபாய் செலவில் மலட்டாறு குறுக்கே அணை கட்டுவதற்கு தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு என்ன?

(ஈ) பயன்பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (ஈ) சுமார் 1914 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதிபெறும். உணவு உற்பத்தி 2417 டன்கள் ஆகும்.

(இ) ரூ. 424 லட்சம்.

## கரும்புச்சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

27—வினா 12522—திரு: பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் தனியார் நிறுவனம் கரும்புச்சக்கையி லிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிலை செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு சார்பில் ஆரம்பிக்கவிருந்த திட்டத் தின் நிலை என்ன ?

(இ) அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தனியார் நிறுவனமான திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் கரும்புச் சக்கையிலிருந்து ஆண்டொன்றுக்கு 16,500 டன் காகிதம் தயாரிக்கும் தொழிலைச் செய்ய மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 60,000 டன் கரும்புச் சக்கை தேவைப்படும். இந்த மூலப்பொருளை, சர்க்கரை ஆலை மேற்கொள்ளவிருக்கும் விரி வாக்கத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும். இதனால்

அரசின் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் திட்டம் பாதிக்கப்படாது. ஏனெனில் இந்த அரசு நிறுவனத்திற்குத் தேவையான மூலப்பொருள் அதாவது கரும்புச்சக்கையை, சுற்றிலுமுள்ள பெரியார், திருச்சி, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளிடமிருந்து பெற ஒப்பந்தம் செய்துள்ளது.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பேறுகாலப் பிரிவிற்கு முதல் மாடி கட்டுதல்.

28—வினா 12627—திரு. ஏ.டி. குலசேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மெட்டர்னிட்டி பிளாக்கில் முதல் மாடி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அரசு ஆணை நிலை எண். 2825 நாள் 19-11-1973-க்கு இணங்க கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பேறுகால பிரிவிற்கு மேல் முதல் மாடியில் 32 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு அது 23-2-1976 முதல் இயங்கி வருகிறது.

திண்டுக்கல் நகரில் அனைத்து நீதிமன்றங்களுக்கும் ஒரே இடத்தில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு.

29—வினா 12762—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டுக்கல் நகரில் அனைத்து நீதிமன்றங்களுக்கும் ஒரே இடத்தில் கட்டிடம் (Combined Court Buildings) கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

விடை—

திண்டுக்கல் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்காக ஒருங்கிணைந் கட்டிடங்கள் ரு. 34·10 இலட்சங்கள் மதிப்பீட்டுச் செலவில் கட்டுவதற்கான ஆணை அரசு ஆணை (நிலை) 64, உள்துறை, நாள் 13-1-1982-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.





இராமப்புறங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயிற்சியளிக்கும் திட்டம்.

30—வினா 12910—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் பயிற்சி கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இவ்வினா விடுக்கப்பட்ட நேரத்தில் இப்பொருள் பற்றி கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் இருந்தது. 7-12-1982 நாளிட்ட அரசு நிலை ஆணை 2380-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பணி புரியும் லாயக்கற்றவர் என மருத்துவரால் அறிவிக்கப்பட்டு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம்.

31—வினா 12965—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழக அரசு ஊழியர்களில் பணிபுரியும் லாயக்கற்றவர் என்று மருத்துவரால் அறிவிக்கப்பட்டு ஓய்வு பெற்றவரின் வாரிசுக்கு அரசாங்கத்தில் வேலை கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தமிழக அரசு ஊழியர்களில் பணிபுரியும் லாயக்கற்றவர் என்று மருத்துவரால் அறிவிக்கப்பட்டு 50 வயதுக்கு முன்பு ஓய்வு பெற்றவரின் வாரிசுக்கு அரசாங்கத்தில் தமிழ் நாடு தேர்வாணைக் குழுவிற்கு உட்படாத பதவிகளில் வேலை வாய்ப்பகத்தைக் கலந்தாலோசிக்காமல் வேலை கொடுக்கும் திட்டம் பற்றி ஏற்கனவே அரசு ஆணை உள்ளது.

வடலூரில் இராமலிங்க சுவாமிகள் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

32—வினா 13488—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் உள்ள இராமலிங்க சுவாமிகள் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் தனியார் அனுபவத்தில் இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து கோவிலுக்கு உரிமையாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் தனியார் அனுபவத்தில் இருந்து வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

நகராட்சிகளின் எல்லைக்குட்பட்ட தனியார்களால் நடத்தப்படும் மருத்துவ மனைகளுக்கு அதிக வரி போடும் செயற்குறிப்பு.

33—வினா 13517—திரு. சி. கோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகளின் எல்லைக்குட்பட்ட இடங்களில் தனியார்களால் நடத்தப்படும் மருத்துவ மனைகளுக்கு அதிக வரி போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னை மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் திட்டம்.

34—வினா 13604—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் 1981-82ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(ஆ) வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா ?

விடை—

(அ) சென்னை மாநகராட்சியின் 1981-82-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி வருமானம் ரூ. 23.09 கோடி.

(ஆ) ஆம்.

விருத்தாசலம் மேமாத்தூர் அணைகளைப் புதுப்பிக்கும் திட்டம்.

35—வினா 13702—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், மேமாத்தூர் அணைகள் பெரிதும் சேதம் அடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?



(ஆ) இந்த அணைகளைப் புதுப்பிக்கவேண்டுமென்று விவசாயிகள் மூலம் மனு அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அணைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) இந்த அணைகளுக்கு மராமத்துகள் செய்யப்பட்டு, செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டெல்லியில் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

36—வினா 13826—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுடெல்லியில் ஆசிரியர்களுக்காக நடத்தும் (Puppetry for Education) சிறப்புப் பயிற்சி தமிழக கல்வி மேம்பாட்டிற்கு எவ்வாறு உதவுகின்றது?

(ஆ) அப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அரசு எவ்வாறு பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது?

விடை—

(அ) கற்பித்தலில் புதிய ஒரு நுட்பத்திறனை (Technique) ஆசிரியர்கட்கு இப்பயிற்சி அறிமுகப்படுத்துகிறது. அரசின் கல்வி மேம்பாட்டின் கொள்கைப்படி குறைந்த செலவில் நிறைந்த பயனை அதிக மாணவர்கள் பெறுவதற்கு நல்ல வாய்ப்பினை இது அளிக்கிறது.

(ஆ) மேற்படி பொம்மலாட்டக் கலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு, மொழி, வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற பாடங்களில் விளக்க முடியாத சில கருத்துக்களை மாணவர்களுக்கு எளிய முறையில் நன்கு விளங்கும்படி பொம்மலாட்டக் கலையின் மூலம் கற்பிக்கப்படுகிறது. மேலும் மேற்படி பொம்மலாட்டக் கலையை மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களும் எளிய முறையில் சிறு சிறு நிகழ்ச்சிகளைத் தயாரிக்க மேற்படி ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுவார்கள்.

அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப்பள்ளி நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகளிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை.

37—வினா 13901—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப்பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் நிர்வாகிகள் முதலியோரிடமிருந்து கடந்த 18-2-1982 தேதியிட்ட கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வரப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். அதில் தனியாரால் நடத்தப் படும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் நிர்வாக மான்யத்தினை நான்கு விழுக்காட்டிலிருந்து 25 விழுக் காடாக உயர்த்தவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

### சாரணர் இயக்கத்தில் அதிக பேர்களை சேர்க்க தீவிரத் திட்டம்

38—வினா 13902—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாரணர் இயக்கத்தில் எத்தனை பேர் உள்ளனர் ?

(ஆ) சாரணர் இயக்கத்திற்கு அதிகம் பேர்களைச் சேர்க்க அரசு ஏதேனும் தீவிரத் திட்டத்தை வைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) 1.5 லட்சம் பேர்.

(ஆ) அதிகம் பேர்களைச் சேர்க்கவென்று, தனியான தீவிர திட்டம் ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சட்டக் கல்வியை தமிழ்மொழியில் கற்கும் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்தல்.

39—வினா 13961—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்பொழுது சட்டக் கல்வியை தமிழ் மொழியில் கற்பதற்கு மாணவர்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை களின் விவரம் என்ன ?

விடை—

சட்டக் கல்லூரிகளில் சட்டக் கல்வியை தமிழ் மொழியில் கற்பதற்கு மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும், தமிழில் சட்டக் கல்வி பயிலும் மாணவர் களுக்கென, தனிப் பிரிவு ஒன்று உண்டாக்கப்பட்டு, தமிழிலேயே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அம்மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் உதவித் தொகையாக வருடத்திற்கு ரூ. 180 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.



### திருச்செந்தூர் துணை நீதிமன்றம் கட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலிருந்து நிலம் வழங்கல் பற்றிய கோரிக்கை.

40—வினா 14202—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் துணை நீதி மன்றம் கட்டுவதற்கும், செயல்படவும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத் திலிருந்து நிலம் வழங்க அறநிலையத் துறைக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இம்மாதிரி கோரிக்கை எதுவும் இந்து சமய அற நிலையத் துறைக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

### சென்னையிலுள்ள இயந்திரத் தளவாடங்கள் இருக்கும் பணிமனை

41—வினா 14242—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள இயந்திர தளவாட சாமான்கள் இருக்கும் (Transport and Machinery Workshop) சென்னையின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) இந்தப் பணிமனையில் 1981-82 ஆம் ஆண்டின் வரவு-செலவு எவ்வளவு ?

விடை—

(அ) கிண்டியில் அமைந்துள்ள நெடுஞ்சாலை மற்றும் கிரா மப் பணித் துறையினைச் சார்ந்த மத்தியப் பணிமனையானது, இத்துறைக்குச் சொந்தமான உருளைகள், சமப்படுத்தி, மட்ட வெட்டிச் சமப்படுத்தி, காற்றமுத்தி, கான்கிரிட் கலவை இயந் திரங்கள், சூட்டுக் கலவை இயந்திரங்கள், அதிர்வழுத்தி (Vibrator), ஈப்பு, சுமையுந்து இன்னும் இத்துறையில் பயன் படுத்தப்படும் பலவகை இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் அனைத்தையும் பழுதுற்ற நேரத்தில் செப்பனிட்டும், மற்றும் அவைகளுக்குத் தேவையான பகுதி உறுப்புக்களைத் தயாரித்து பொருத்தியும் எக்காலத்திற்கும் அவைகள் இத்துறைக்கு பயன் படும் வகையில் செயல்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 13

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு—

| | | ரூ. பை. |
|---|---|---|
| மொத்த வரவு | .. | 15,95,589.00 |
| மொத்த செலவு | .. | 14,39,239.00 |
| நிகர இலாபம் | .. | 1,56,350.00 |

**கரூர்-சேலம் நெடுஞ்சாலையில் கரூர் ரயில் கேட்டில் மேம்பாலம் அல்லது சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு.**

42—வினா 14325—திரு. எம். சின்னசாமி மற்றும் திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர்-சேலம் நெடுஞ்சாலையில் கரூர் ரயில் கேட்டில் மேம் பாலம் அல்லது சுரங்கப்பாதை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

**கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகட்கு நியமனம் செய்தல்.**

43—வினா 14378—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். வகுப்புகட்கு போதிக்கும் உதவிப் பேராசிரியர்கள் விருப்பம் தெரிவித்தால் அவர்களை மேல்நிலைப் பள்ளிகட்கு (சர்வீஸ், சம்பளம் குறை யாமல்) நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

விடை —

இயலாது.

**மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் வாங்கப்பட்ட வானொலிப் பெட்டிகள்.**

44—வினா 14427—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 1980-81 இல், 1981-82 இல் வாங்கப்பட்ட ரேடி யாக்கள் எத்தனை ? எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது



1984 அக்டோபர் 13]

(ஆ) புதியதாக வாங்கப்பட்ட ரேடியோக்கள் நல்ல கம் பெனியில் வாங்காததால் அவைகளில் பல இயங்காமல் இருப்பது உண்மையா ?

(இ) தவறு செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை —

(அ) 1980-81-ல் வானொலிப் பெட்டிகள் ஏதும் வாங்கப் படவில்லை. 1981-82-ல் 25 வானொலிப் பெட்டிகள் ரூ. 14,698.25-க்கு வாங்கப்பட்டன.

(ஆ) அரசால் ஒப்பளிக்கப்பட்ட ரீசா எண் 6 என்ற வானொலிப் பெட்டிகளே வாங்கப்பட்டது. நல்ல முறையில் இயங்குகின்றன.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**நவீன தோல் பதனிடும் ஆலைகள் அமைக்க லைசென்ஸ் வழங்கல்.**

45—வினா 14466—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்பு மிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) நவீன தோல் பதனிடும் ஆலைகளை அமைப்பதற்கு லைசென்ஸ் வழங்குவது பற்றிய மத்திய அரசின் கொள்கை யினால் தமிழ் நாட்டில் உள்ள தோல் பதனிடும் ஆலைகள் பாதிக் கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப் பாதிப்பை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாவை ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்துதல்.**

46—வினா 14478—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாண வர்கள் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்த மைய அரசு மாநில அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை —

(அ) இல்லை. ஆனால் மருத்துவக் கல்லூரியில் மத்திய அரசு நியமனதாரர்களுக்கு உள்ள எண்ணிக்கையை உயர்த்து மாறு மைய அரசு கோரியுள்ளது.

(ஆ) இந்தக் கோரிக்கையை அரசு ஒப்புக் கொள்ளவில்லை.

**காஞ்சிபுரம் மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதியுடன் கூடிய மகப்பேறு இல்லம் அமைத்தல்.**

47 —வினா 14570—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதிகளோடு கூடிய மகப்பேறு இல்லம் அமைக்கவேண் டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இக்கோரிக்கையினை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

**வேலூர் அரசு மருத்துவமனைகளை மேலும் விஸ்தரித்தல்.**

48—வினா 14636—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனைகளை மேலும் விஸ்த ரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**ஊராட்சி ஒன்றியங்களை பிரிக்கும் திட்டம்.**

49— வினா 14950— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களை பிரிக் கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.**

50—வினா 14961—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேலை இல்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுபவர்களுக்கு பல்வேறு துறை பணி நியமனங்களில் முன்னுரிமை அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**பழனி பாலாறு-பொருந்தலாற்று அணை.**

51—வினா 15002—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பழனி பாலாறு-பொருந்தலாற்று அணையின் வேலை முடிந்தும் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) முதல் இரண்டு வருடங்கள் இயல்பான பாசனப் பரு வத்தின்போது தண்ணீர் திறந்து விடப்பட்டது.

(ஆ) அணையின் தண்ணீர் இருப்பு பழைய ஆயக்கட்டு களுக்கே போதுமானதாக இல்லாததால் புதிய வாய்க்காலின் கீழ் உள்ள ஆயக்கட்டுக்கு 1980–81 முதல் 1982–83 வரை நீர் வழங்க முடியவில்லை.

[1984 அக்டோபர் 13

சங்கரன் கோவில் நகராட்சிக்கு தாமிரபரணி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

52—வினா 15096—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சிக்கு தாமிரபரணி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம், ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

போடிநாயக்கன்பட்டி கிராமம் கரிய பெருமாள் ஏரி.

53—வினா 15110—திரு. தி. கா. நல்லப்பன், திரு. ஏ. டி. கருப்பையா, மற்றும் திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டம் போடிநாயக்கன்பட்டி கிராமம், கரிய பெருமாள் ஏரியை அரசுடைமை ஆக்கக் கோரி அப்பகுதி பொதுமக்களிடம் இருந்து அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 13]

விருத்தாசலம் அணைக்கட்டின் பாசனக் கால்வாய் இணைக் கால்வாய்களின் பராமரிப்புச் செலவை உயர்த்தும் செயற்குறிப்பு.

54—வினா 15163—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் விருத்தாச்சலம் அணைக்கட்டின் பாசன விஸ்தீரணம் எவ்வளவு?

(ஆ) அப்பாசனக் கால்வாய் இணைக்கால்வாய்களின் பராமரிப்புச் செலவை உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆம் என்ல், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) 9,435 ஏக்கர்கள்.

(ஆ) மற்றும் (இ) ரூ. 75,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசினர் சட்டக்கல்லூரிகளில் மாணவர்கள் தேர்வில் உடல் ஊனமுற்றோர்க்கும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கும் முன்னுரிமை அளித்தல்.

55—வினா 15172—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82-இல் தமிழ்நாட்டில் உள்ள அரசினர் சட்டக் கல்லூரிகளில் மாணவர்கள் தேர்வில் உடல் ஊனமுற்றோர்க்கும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 13

சென்னை, பெரியார் நகருக்கு அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு.

56—வினா 15182—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1982 ஆம் ஆண்டு வன்னியர் சமூகத்தினரால் அரசுக்குக் கொடுக்கப் பெற்ற விண்ணப்பங்கள்.

57—வினா 15227—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஏப்ரலில் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் பேரணி நடத்தி அரசுக்கு விண்ணப்பம் கொடுத்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) அரசுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் வன்னியர் சமூகத்தினருக்கு 20 சதவீதம் ஒதுக்கீடு செய்ய மாநில அரசைக் கேட்டுக் கொள்வது ;

(2) மத்திய அரசுப் பணிகளில் வன்னிய சமூகத்தினருக்கு 2 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து தர மைய அரசைக் கேட்டுக் கொள்வது ;

(3) மண்டல் குழு அறிக்கையை வெளியிடவும் அமுல்படுத்தவும் மைய அரசைக் கேட்டுக் கொள்வது.



1984 அக்டோபர் 13]

(இ) கோரிக்கை எண். 1 :—

உச்சநீதி மன்றத்தின் ஆணைக் கிணங்க தமிழ்நாடு அரசு பிற்பட்டோர் பட்டியலை ஆய்வு செய்து தொகுக்க இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவை ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் முன்னாள் தலைவருமான திரு. ஜே. ஏ. அம்பாசங்கர், அவர்கள் தலைமையின் கீழ் அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இக்குழு தனது அறிக்கையினை ஓர் ஆண்டிற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின் அரசு முடிவு எடுக்கும்.

கோரிக்கை எண். 2 :—

மத்திய அரசுப் பணிகளில் வன்னியர்களுக்கு 2 சதவீதம் இட ஒதுக்கீடு செய்வது என்பது அவ்வரசின் கொள்கை தொடர்புடைய ஒன்றாகும். எனவே, அது பற்றி முடிவெடுப்பது அவ்வரசைச் சார்ந்தது.

கோரிக்கை எண். 3 :—

மைய அரசு, மண்டல் குழுவின் பரிந்துரைகளின் பகுதி நகல்கள் இவ்வரசிற்கு அனுப்பி அவைகளின் மேல் இவ்வரசின் கருத்துக்களை கேட்டிருக்கிறது. அவைகள் இவ்வரசின் ஆய்வில் உள்ளன.

தூத்துக்குடியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

58—வினா எண் 15615—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 13

**திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரத்துக்குச் செல்லும் கிழக்குக்கடற்கரைச் சாலையில் சோடியம் மின் விளக்குகள் போடும் திட்டம்.**

59—வினா எண் 15654—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரத்துக்கு செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சோடியம் மின் விளக்குகள் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தமிழகத்திலுள்ள நியாய விலைக் கடைகள்.**

60—வினா எண் 15784—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகள் தமிழகத்தில் மொத்தம் எத்தனை உள்ளன ?

(ஆ) எத்தனை நபருக்கு ஒரு கடை வீதம் அமைக்கப் படுகிறது ?

(இ) கடைகளை 1982–1983-க்கு அதிகரிக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) தமிழகத்தில் மொத்தம் 17,844 நியாய விலைக் கடைகள் உள்ளன.

(ஆ) மக்கள் தொகை 100-க்கு மேற்பட்டுள்ள வருவாய்க் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

(இ) ஓடைகள் குறுக்கிடுதல் போன்ற கடினமான இடையூறுகள் இருந்தாலொழிய ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடைக்கு மேல் திறக்க வேண்டியதில்லை என அரசு கருதுகிறது.

**கோவை மாநகராட்சியில் 1981-82-ல் நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட்டம்.**

61—வினா எண். 15838—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகராட்சியில் ஆலோசனைக் குழுக் கூட்டம் 1981 ஜனவரி முதல் 1982 ஏப்ரல் முடிய எத்தனை தரம் நடைபெற்றுள்ளது?



1984 அக்டோபர் 13]

(ஆ) அக்கூட்டங்களில் முன் வைக்கப்பட்ட முக்கிய ஆலோசனைகள் என்னென்ன ?

(இ) அவைகளில் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவை எவை ?

விடை—

(அ) 1981 மே மாதம் முதல் கோவை நகராட்சி, மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட பின்பு ஆலோசனைக் குழு இல்லாததால், கூட்டங்கள் கூட்டப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**காஞ்சிபுரம் நகராட்சியால் அமைக்கப் பெற்ற B. Gas Plant-ன் மதிப்பீட்டுத் தொகை.**

62—வினா எண். 15879—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகராட்சியினால் B. Gas Plant அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப் பட்டுள்ளது ?

(இ) எத்திட்டத்திற்காக அது அமைக்கப்பட்டதோ அத்திட்டம் தோல்வி அடைந்தது உண்மையா ?

(ஈ) ஆம் எனில் அக்குறைப்பாட்டை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 20,215 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

(இ) மற்றும் (ஈ)—மதிய உணவு திட்டத்தின் கீழ் மத்திய சமையலறை அமைக்கப்பட்டபொழுது இந்த சாதனம் மத்திய சமையலறைக்கு பொருத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டம் தொடங்கியதும் மதிய சமையலறை மூடப்பட்டு ஒவ்வொரு நகராட்சி பள்ளியிலும் தனித்தனி சமையல் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டது. பழுது அடைந்துள்ள எரிவாயு சாதனம் பழுது பார்க்கப்படும்.

**தமிழ்க் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்ற தமிழ் பண்டிதர்களுக்கு வேலை கொடுக்கும் தீவிர திட்டம்.**

63—வினா எண். 15987—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்க் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்ற தமிழ் பண்டிதர்கள் 1981ஆம் வருட இறுதி வரை வேலையில்லாம லிருப்பவர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அவர்களுக்கு வேலை கொடுக்க தீவிர திட்டம் (Crash Programme) ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**விடை—**

(அ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப் பகத்தின் செல்லுபடிப் பதிவேட்டில் காத்திருப்போர் எண்ணிக்கை 4,138 ஆகும்.

(ஆ) இல்லை.

**தமிழ் நாடெங்கும் பால் விலையை ஒரே சீராக அமைக்கும் திட்டம்.**

64—வினா எண். 15997—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தஞ்சை மற்றும் சில மாவட்டங்களில் பால் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் பால்விலையை ஜூலை மாதத்தி லிருந்து அதிகப்படுத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

(இ) பால் விலையை தமிழ் நாடெங்கும் ஒரு சீராக அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

**விடை—**

(அ), (ஆ) மற்றும் (இ) விபரமான *அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**வெளி நாடு பயணத்தால் தமிழ் நாட்டு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பயன்கள்.**

65—வினா எண். 16044—**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தொழிலமைச்சர் அண்மையில் வெளிநாடுகளில் உள்ள தொழில் வளர்ச்சி பற்றி கண்டறிய வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டாரா ?

* 429-431 பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





(ஆ) ஆம் எனில், அந்த பயணத்தினால் தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பயன்கள் யாவை ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) சுற்றுப்பயணத்தில் பல்வேறு நாடுகளில் வசிக்கும் குடியுரிமையற்ற இந்தியர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப் பட்டன. அவர்களுக்கு தமிழ்நாட்டில் தொழில்களுக்கு கிடைக் கும் சலுகைகள், துவங்க தேவையான வசதிகள் குறித்தும் எடுத் துரைக்கப்பட்டன. மின்னணுத் தொழில்கள் போன்றவற்றைத் துவங்குவதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர். அவர்களிடம் உள்ள சேமிப்புகள் மற்றும் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் துவங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாநிலங்களிலுள்ள நகரங்களின் வளர்ச்சிக்கு மைய அரசு நிதியுதவி.**

66—வினா எண். 16154—**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982–83-ல் மாநிலங்களில் உள்ள நகரங்களின் வளர்ச் சிக்கு மைய அரசு நிதி உதவி செய்ய உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) தமிழ்நாட்டில் உள்ள எந்தெந்த நகரங்கள் இந்த நிதி உதவியைப் பெற உள்ளன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) 1982–83ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் உள்ள ஆறு நகரங்கள் மைய அரசின் உதவி பெற உள்ளது. குடியிருப்பு வசதி, போக்குவரத்து வசதி, அங்காடிகள் போன்ற திட்டங் களுக்காக ஒவ்வொரு நகரமும் ரூ. 80 இலட்சம் நிதி உதவி பெறும்.

(இ) கீழ்க்கண்ட ஆறு நகரங்கள் 1982–83ஆம் ஆண்டில் நிதி உதவி பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன: —

| | |
|---|---|
| 1) காரைக்குடி. | (4) சிவகங்கை. |
| (2) கள்ளக்குறிச்சி. | (5) ஆரணி. |
| (3) பண்ருட்டி. | (6) அரக்கோணம். |

[1984 அக்டோபர் 13

**அரியூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஆதி திராவிட மக்களுக்கு வேலை அளிப்பதில் தனியாக ஒதுக்கப்பட்ட நிதி.**

**67—வினா எண். 16170 —திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு வணிகவரி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு அரியூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஆதி திராவிட மக்களுக்கு வேலை கொடுப்பதற்காக தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதனால் வேலை பெற்ற ஆதி திராவிடர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : ஆம். 100 ஆதி திராவிடர்களை ஆலை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் அதன் விரிவாக்கத் திட்ட செலவிற்காக அரசு ரூ. 15 இலட்சம் மானியமாக அளித்துள்ளது.

**தென் மாநில நதி நீர் அபிவிருத்திக்காக தேசிய நீர்வள அபிவிருத்தி ஏஜென்சியை அமைத்தல்.**

**68—வினா எண். 16172 —திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு தென்மாநில நதிநீர் அபிவிருத்திக்காக தேசிய நீர்வள அபிவிருத்தி ஏஜென்சியை அமைக்க மாநில அரசின் ஆலோசனையைக் கோரியதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக தேசிய நீர்வள அமைப்பு (National Water Development Agency) மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பானது நாட்டிலுள்ள நீர் வளத்தை பயனுள்ள முறையில் உபயோகப்படுத்துவதற்கான நில அளவை மற்றும் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும்.



1984 அக்டோபர் 13]

**பனமரத்துப்பட்டி ஏரிப் பகுதியில் வனத்துறை மூலம் சமூக நலக்காடுகள் அமைக்கும் திட்டம்.**

**69—வினா எண். 16230 —திரு. செ. செம்மலை :** மாண்புமிகு செய்திமற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஏரிப்பகுதியில் வனத்துறை மூலமாக "சமூக நலக் காடுகள்" அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**1981—82 ஆம் நிதியாண்டில் நஷ்டத்தில் இயங்கிய அரசுத் துறை நிறுவனங்கள்.**

**70 —வினா எண். 16243— திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1981-82 ஆம் நிதி ஆண்டில் நஷ்டத்தில் இயங்கிய அரசுத்துறை நிறுவனங்கள் எத்தனை ?

(ஆ) அந்நிறுவனங்களில் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

விடை—

(அ) தொழில் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அரசுத்துறை நிறுவனங்களில் 8 நிறுவனங்கள் 1981-82 ஆம் நிதி ஆண்டில் இழப்பில் செயல்பட்டன.

(ஆ) அவற்றில் ஏற்பட்ட இழப்பு சுமார் ரூ. 5.78 கோடி ஆகும்.

**வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கல்.**

**71—வினா எண். 16250-திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறதா ?

(ஆ) அவ்வுதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

1981-ல் குடிநீர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகை.

72—வினா எண். 16292 —திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிநீர் அபிவிருத்திக்காக 1981-ல் (Crash Programme) மூலம் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அதன்மூலம் எங்கெங்கு எத்தனை கிணறுகள், குழாய் கிணறுகள் தோண்டப்பட்டன?

(இ) செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு.

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): தமிழ் நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்திக்காக 1981 ஆம் ஆண்டில் குறிப்பாக தீவிர திட்டம் (Crash Programme) நடைபெற வில்லை. ஆனால் 1981 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் ஊரகக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன.

குழித்துறை மருத்துவமனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு.

73—வினா எண். 16376 —திரு. டி. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

குழித்துறை மருத்துவமனையை விஸ்தரிக்க ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

விருத்தாசலம் அணையில் ஏற்பட்ட உடைப்பு சீர் செய்யும் பணி.

74—வினா எண். 16441 —திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அணை தெற்கு மெயின் சானல் உடைப்பு ஏற்பட்டு சீர் செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) உடைப்புகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டன.



சோத்துப்பாறை அணை கட்டும் செயற்குறிப்பு.

75—வினா எண். 16465 —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டாரத்தில் சோத்துப் பாறை அணைக்கட்டு கட்டுவதுபற்றி அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 791 லட்ச மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்தை செயற்படுத்த, அரசு, 1982 ஆகஸ்ட் திங்களில் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் 1,000 ஏக்கர் புஞ்சை நிலமும் 1,892 ஏக்கர் நஞ்சை நிலமும் பயனடையும்.

மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கை,

76—வினா எண். 16476—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மேல் நிலைப் பள்ளி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தினர், அரசினர் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை பணி நீக்கம் செய்யாமல், அவர்கள் பணியில் சேர்ந்த தினத்திலிருந்து, பணி வரன்முறை செய்ய வேண்டும் என கோரிக்கை கொடுத்துள்ளார் களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மேல்நிலை வகுப்புகளை நடத்த பணியமர்த்தப்பட்ட முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்களின் பணியை வரன் முறை செய்ய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் இசைவைப் பெற வேண்டும். இது குறித்து தேர்வாணைக் குழுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

[1984 அக்டோபர் 13

தமிழ் நாடு கைவினைப் பொருட்கள், மேம்பாட்டு நிறுவனம் மூலம் மலேசியாவிற்கு தயாரித்து அளித்துள்ள வெள்ளி ரதம்

77—வினா எண். 16478—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Handicrafts Development Corporation Ltd.) மலேசியாவிற்கு வெள்ளி ரதம் தயாரித்து கொடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தமிழக அரசுக்கு கிடைத்த அந்நிய செலாவணி எவ்வளவு ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ரூ.2.79 இலட்சம்.

எளிய முறையில் செயற்கை மழை பொழிய அண்ணா பொறியியல் கல்லூரியில் கண்டு பிடிக்கப்பட்ட முறை.

78—வினா எண். 16481—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எளிய முறையில் செயற்கை மழை பொழிய அண்ணா பொறியியல் கல்லூரியில் ஏதேனும் முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோதையார் மின் திட்டத்திலுள்ள ட்ரான்ஸ்பார்மர்கள்.

79—வினா எண். 16610—திரு. டி. மணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோதையார் மின் திட்டத்தில் அப்பர் கேம்ப்பில் உள்ள இரண்டு ட்ரான்ஸ்பார்மர்கள் சமீபத்தில் எரிந்து போனது உண்மையா ?

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் எவ்வளவு?

(இ) இந்த ட்ரான்ஸ்பார்மர்கள் எரிய காரணம் என்ன ?



1984 அக்டோபர் 13]

விடை—

(அ) ட்ரான்ஸ்பார்மர்கள் எரியவில்லை, ஆனால் 19—9—82 அன்று பழுதடைந்தன.

(ஆ) ட்ரான்ஸ்பார்மர்கள் மிகவும் பழையனவாகும். மேலும் இதனால் எந்த விதமான நஷ்டமும் இல்லை.

(இ) 19—9—82 அன்று பெய்த பலத்த மழையினாலும் அடித்த காற்றாலும் கம்பித் தொடர்பு அறுந்து அதனால் ஏற்பட்ட அதிகமான மின்னோட்டத்தை தாங்காமல் ட்ரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்தன.

மேட்டூர் அணையிலுள்ள பூங்காக்களை நவீனமுறையில் அழகுப் படுத்தும் திட்டம்

80—வினா எண். 16631—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையிலுள்ள பூங்காக்களை நவீன முறையில் அழகுப்படுத்தும் வகையில் நீர் ஊற்றுக்கள், ஒளி விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) மேட்டூர் அணையிலுள்ள பூங்காக்களை நவீன முறையில் அழகுப் படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ரூ. 5 இலட்சம்.

1982-83-ல் குடி நீர் திட்டத்திற்காக உலக வங்கியிடம் கோரியுள்ள கடன்

81—வினா எண். 16687—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு 1982-83 ல் குடிநீர் திட்டத்துக்காக உலக வங்கியிடம் கடன் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எத்தனை கிராமங்களில் குடிநீர் திட்டம் செயல்படுத்த உத்தேசம் உள்ளது.

(ஈ) கோரியுள்ள கடன் தொகை எவ்வளவு?

விடை—

பிரிவுகள் (அ) முதல் (ஈ) வரை : கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய 3 பெரிய நகரங்களுக்கும் மற்றும் 75 சிறிய நகரங் களுக்கும் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்திற்கும், 14 நக ராட்சிகளுக்கு குறைந்த செலவில் கழிவை அகற்றும் திட்டத் திற்கென உலக வங்கியிடம் ரூ. 113.12 கோடி அரசு கோரி உள்ளது. மற்ற விவரங்கள் உலக வங்கியுடன் பேசி முடிவெடுக் கப்படும்.

ஆனை மலையில் தேசிய பூங்கா ஏற்படுத்த மத்திய அரசு நிதியுதவி.

82—வினா எண். 16690—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஆனை மலையில் தேசிய பூங்கா ஏற்படுத்த மத்திய அரசிடம் நிதி உதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

பேரூராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற துப்புரவாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல்.

83—வினா எண். 16747—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பேரூராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற துப்புர வாளர்கள் கூட்டுபவர்கள் (SWeepers) மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

விடை—

பேரூராட்சிகளில் பணியாற்றி 1-10-1973 அன்றோ அல்லது அதன் பின்னரோ பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர் களுக்கு விரிவாக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் (Liberalised Pension Scheme) ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.





வட்ட அலுவலகங்களில் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் புதிய முறையை ஏற்படுத்துதல்.

84—வினா எண். 16749—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அலுவலகங்களில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக புதிய முறையை ஏற்படுத்துவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இம்முறையை எந்த மாவட்டத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பச்சைமலைப் பகுதியில் புதிய சாலை அமைக்கும் திட்டம்.

85—வினா எண். 16788—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம்—பச்சைமலைப் பகுதியில் உள்ள வேப்படியையும் பாலக்காட்டையும் இணைக்க புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

86—வினா எண். 16797—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா வில் நீண்டகால கோரிக்கையான குழித்துறை ஆற்றின் குறுக்கே கணபதியான் கடலில் பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையி லுள்ளது ?

[1984 அக்டோபர் 13

(ஆ) 1983-84-ம் ஆண்டு இத்திட்டத்தை இரண்டாம் பிரிவு திட்டத்தில் (Part II Scheme) சேர்த்து செயல் படுத்துவதற்கு அரசிடம் திட்டமுள்ளதா ?

விடை —

(அ) இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இல்லை.

குமரி மாவட்டத்தில் தீவிர கால்நடைத் திட்டத்தை விரிவு படுத்துதல்.

87—வினா எண். 16808—திரு.சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டத்திற்கு தீவிர கால்நடைத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

(ஆ) இதனால் எத்தனை கிராம கேந்திர அலுவலகங்கள் புதிதாக திறக்கப்படும் ?

விடை —

(அ) தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுக்கு பாலிடெக்னிக்குகளில் சேர முன்னுரிமை அளித்தல்.

88—வினா எண். 16840—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுக்கு பாலிடெக்னிக்குகளில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகிறதா ?

விடை —

இல்லை.



1984 அக்டோபர் 13]

ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்க வருமானத் தொகை விகிதத்தை உயர்த்துதல்.

89—வினா எண். 16851—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச்சம்பளம் (Scholarship) வழங்க வருமானத்தொகை விகிதத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Export market for Mushroom by the Tamil Nadu Small Industries Development Corporation.*

90—வினா எண். 16853—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) Whether the export market for mushroom have been explored by the Tamilnadu Small Industries Development Corporation and

(b) If so, the details thereof ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாவட்ட தலை நகர்களில் நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் திட்டம்.

91—வினா 16887—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாவட்ட தலைநகர்களில் நிரந்தரமாக பொருட்காட்சி அமைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது துவக்கப்படும் ?

விடை —

(அ) மாவட்ட தலைநகர்களில் நிரந்தரமாக பொருட்காட்சி அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இல்லை.

[1984 அக்டோபர் 13

கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கும் திட்டம்.

92—வினா 16891—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கடல் அலைகளின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் சோதனை நடத்தும் திட்டம்.

93—வினா 16892—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் அலைகளின் உதவியால் மின்சாரம் தயாரிக்கும் சோதனையை நடத்தும் திட்டம் மின் வாரிய ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

தனியார் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து விவசாயிகளுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகை.

94—வினா 16897—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார்துறை சர்க்கரை ஆலைகளிடமிருந்து விவசாயிகளுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகை பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையாக இருப்பது குறித்து விவசாயிகளிடமிருந்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு பாக்கித் தொகை விரைவில் கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 13]

தமிழகத்திற்கு கிடைக்கும் உபரி மின்சாரம்.

95—வினா 16910—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமாநிலங்களில் உபரி மின்சாரம் இருந்தும் தமிழகத்திற்கு போதிய மின்சாரம் கிடைக்கவில்லையென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நகராட்சி, பேரூராட்சி சுகாதார ஊழியர்களுக்கு கதர் துணிகளுக்கு பதிலாக மில் துணிகள் வழங்கல்.

96—வினா 16994—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி, பேரூராட்சி சுகாதார ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கதர் துணிகளுக்குப் பதிலாக மில் துணிகள் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு நிர்ணயம் செய்திருக்கும் தொழிலாளரின் எண்ணிக்கை.

97—வினா 17054—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு நிர்ணயம் செய்திருக்கும் தொழிலாளரின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் பேருந்துகளை குறிப்பிட்ட நேரங்களில் சர்வீசில் அனுப்புவதற்கு முடியவில்லை என்று அரசுக்கு ஏதேனும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) அப்படியென்றால், அதை நிவர்த்திச் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

விடை—

(அ) 7.5

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

அமராவதி ஆற்றில் மைல்ரங்கம் அருகே அணை கட்டுதல்.

98—வினா 17059—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மைல்ரங்கம் அருகே அணை கட்ட ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) முன்னோடி ஆய்வு செய்யப்பட்டது.

(ஆ) இத்திட்டத்தினால் 12,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க சுமார் ரூபாய் 5 கோடி செலவாகும்.

பட்டியல் I

ஒட்டப்பிடாரம் ஒன்றியம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்

1—வினா 880—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் ஒன்றியம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் புதிய முத்தூரிலிருந்து பளையூர் வரை செல்லும் குடி தண்ணீர் ஒரு வருடமாக தண்ணீர் கிடைக்கவில்லையாதலால் பழுது பார்க்கப்பட்டு தண்ணீர் கொடுக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. இருப்பினும் பளையூர் கிராமத்திற்கும் ஏனைய மூன்று ஊர்களுக்கும் குடிநீர் வழங்க ரூ. 45,000 ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவழித்து 1982-83-ல் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது பளையூர் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை அகன்று உள்ளது.



ஆலங்குளம் தொகுதியில் சாலையும் பாலமும் அமைக்கும் திட்டம்

2—வினா 4007—திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு சத்துணவு திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதியில் துத்திகுளம் ஊருக்கு, சாலையும் பாலமும் அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

ஆம், 1982-83 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் 5.2 கி.மீ. நீளமுள்ள ஆலங்குளம்-துத்திகுளம் சாலையை ரூ. 9 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யவும், இரண்டு சிறு பாலங்கள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன.

செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சாலை பழுது பார்க்கும்பணி

3—வினா 6631—திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அய்யனார் குளத்திலிருந்து விக்கிரமங்கலம் வரை செல்லும் ரோடு பல ஆண்டுகளாகப் பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக வேலையைத் துவங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ): அய்யனார் குளம்—மம்பட்டி சாலையினை 1981–82-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சீர் செய்யப்பட்டுள்ளது. மம்பட்டி—நரியம்பட்டி சாலையினை 1982-83 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சீர் செய்யப்பட்டுள்ளது. நரியம்பட்டி—கொக்குளம், உத்தப்ப நாயக்கனூர் சாலையினை 1982-83 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளது. கொக்குளம் உத்தப்ப நாயக்கனூர் சாலையிலிருந்து விக்கிரமங்கலம் வரை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது.

[1984 அக்டோபர் 13

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 1972-73 முதல் 1980-81 முடிய கட்டிய பள்ளிக் கட்டிடங்கள்.

4—வினா 9495—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 1972-73 முதல் 1980-81 முடிய ஆண்டு வாரியாக கட்டிய பள்ளிக் கட்டிடங்கள் எத்தனை ?

(ஆ) செலவினத் தொகை எவ்வளவு ?

விடை—

விவர அறிக்கை* ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

திருவில்லிப் த்தூர் தொகுதியில் உடைந்த கண்மாய்களை மீண்டும் கட்டும் திட்டம்.

5—வினா 9689—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

1978 ஆம் ஆண்டு வெள்ளத்தில் முழுமையாக உடைந்து விட்ட திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள இலந்தைக்குளம் கண்மாய், வெள்ளப்பொட்டல் கண்மாய், சுந்தரபாண்டியம் அருகே பெரிய குளம் ( Tanks ) கண்மாய்களை மீண்டும் கட்டும் பணி 1980-81 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளதா ?

விடை—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள இலந்தைக்குளம் கண்மாயும், சுந்தரபாண்டியம் அருகே உள்ள பெரியகுளம் கண்மாயும் பொதுப்பணித்துறையைச் சேர்ந்ததாகும். 1978 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் இக்கண்மாய்களில் ஏற்பட்ட உடைப்புகள் அடைக்கப்பட்டு விட்டன. வெள்ளப்பொட்டல் கண்மாய் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். மேற்படி வெள்ளத்தில் இக்கண்மாயின் கலிங்கில் உடைப்பு ஏற்பட்டது. இக்கலிங்கை மீண்டும் கட்ட ரூ. 4.10 இலட்சத்திற்கான ஒரு மதிப்பீடு அரசு பரிசிலனையில் உள்ளது.

*பக்கம் 432-434 ல் இணைப்பு IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளது



1984 அக்டோபர் 13]

தேயிலை, காப்பு, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

6—வினா 10035—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் ஒரே சீரான சம்பளம் கொடுக்கப்படுகிறதா ?

விடை—

(அ) தேயிலைத் தோட்டங்களில் சுமார் 57,419 பணியாளர்களும், காபித் தோட்டங்களில் சுமார் 9,883 பணியாளர்களும், ரப்பர் தோட்டங்கவில் சுமார் 2,024 தொழிலாளர்களும் பணிபுரிகிறார்கள்.

(ஆ) மேற்சொன்ன மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளவாறு 1-12-1976 முதல் குறைந்தபட்ச ஊதியம் வழங்க ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

| தொழிலாளரின் வகை. | தேயிலை மற்றும் காபி எஸ்டேட்டுகள் (சேர்வராயன் மற்றும் பழனி மலைகளில் உள்ளவை தவிர), ரப்பர் மற்றும் சிங்கோனா மலைத் தோட்டங்கள். | | சேர்வராயன் மற்றும் பழனி மலைகளில் உள்ள காபி எஸ்டேட்டுகள். | |
|---|---|---|---|---|
| | ஒரு நாளைய குறைந்தபட்ச ஊதியம். | | | |
| | அடிப்படை ஊதியம். | அகவிலைப்படி. | அடிப்படை ஊதியம். | அகவிலைப்படி. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| வயது வந்தவர். | 3.85 | 1.35 | 3.20 | 1.35 |
| வாலிபர் | 2.65 | 0.60 | 2.25 | 0.60 |
| சிறுவர் | 2.35 | 0.35 | 2.03 | 0.35 |

குறிப்பு :

(i) அகவிலைப்படி :—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா எஸ்டேட்டுகளுக்கான அகவிலைப்படி வீதங்கள் கோயம்புத்தூர் மைய சராசரி நுகர்வோர் விலை அட்டவணையைச் (1936=100) சார்ந்த 1693 புள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேயிலை மற்றும் ரப்பர் எஸ்டேட்டுகளுக்கான அகவிலைப்படி வீதங்கள் நாகர்கோவில் மைய நுகர்வோர் விலை அட்டவணையைச் (1939=100) சார்ந்த 1934 புள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அகவிலைப்படியை சரிகட்டுதல் :—

கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவில் மைய நுகர்வோர் விலை அட்டவணையைச் சார்ந்த முறையே 1693, 1934 புள்ளிகளில் இருந்து ஏற்படும் வேறுபாட்டிற்காக கீழ்க்கண்ட வீதங்களில் அகவிலைப்படி சரிகட்டப்படும் :—

| | | |
|---|---|---|
| வயது வந்தவர். | 5 புள்ளிகள் கொண்ட ஒவ்வொரு அலகிற்கும். | 1.6 காசுகள். |
| வாலிபர் | 5 புள்ளிகள் கொண்ட ஒவ்வொரு அலகிற்கும். | 1.00 காசு. |
| சிறுவர் | 5 புள்ளிகள் கொண்ட ஒவ்வொரு அலகிற்கும். | 0.8 காசு. |

(ii) ரப்பர் இறக்குவோர்க்கான குறைந்தபட்ச அளவு துண்டு வீதங்கள்—

(அ) உத்தரவாத கால வீதம்: ஒரு நாளைக்கு ரூ. 2.05.

(ஆ) குறைந்த அளவு துண்டு வீதங்கள்—

வகுப்பு I :

| | |
|---|---|
| ஒரு ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 113 கிலோ வரை பலன். | முதல் 1½ கிலோ உலர்ந்த ரப்பருக்கு ஒவ்வொரு ½ கிலோவிற்கும் ரூ. 0.72. |

வகுப்பு II :

| | |
|---|---|
| ஒரு ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 113 கிலோவுக்கு மேல் 181 கிலோ வரை பலன். | முதல் 2½ கிலோ உலர்ந்த ரப்பருக்கு ஒவ்வொரு ½ கிலோவிற்கும் ரூ. 0.43. |

வகுப்பு III :

| | |
|---|---|
| ஒரு ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 181 கிலோவுக்கு மேல் 272 கிலோ வரை பலன். | முதல் 4½ கிலோ உலர்ந்த ரப்பருக்கு ஒவ்வொரு ½ கிலோவிற்கும் ரூ. 0.24. |



வகுப்பு IV :

| | |
|---|---|
| ஒரு ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 272 கிலோவுக்கு மேல் பலன். | முதல் 6½ கிலோ உலர்ந்த ரப்பருக்கு ஒவ்வொரு ½ கிலோவிற்கும் ரூ. 0.165. |

(இ) மற்ற கால வீத ரப்பர் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு அனுமதிக்கப்படும் அகவிலைப்படி.

இதுதவிர கோயம்புத்தூர், தொழிலாளர்துறை துணை ஆணையர் முன்பாக 20-12-1980 அன்று கையெழுத்திடப்பட்ட 12 (3) ஒப்பந்தப்படி தேயிலை மற்றும் காபித் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன :—

100 ஏக்கருக்கும் மேலான தேயிலைத் தோட்டங்கள் :

| | ரூ. | |
|---|---|---|
| வயது வந்தவர் | 10.34 | (அகவிலைப்படியையும் சேர்த்து) |
| வாலிபர் .. | 7.24 | ஷை |
| சிறுவர் .. | 6.31 | ஷை |

100 ஏக்கருக்கும் குறைவான தேயிலைத் தோட்டங்கள் மற்றும் 50 ஏக்கருக்கும் குறைவான காபித் தோட்டங்கள் :

| | ரூ. | |
|---|---|---|
| வயது வந்தவர் | 10.14 | (அகவிலைப்படியையும் சேர்த்து) |
| வாலிபர் .. | 7.24 | ஷை |
| சிறுவர் .. | 6.19 | ஷை |

இந்த ஒப்பந்தம் 31-12-1983 வரை அமுலில் இருக்கும்.

எந்த ஒரு தோட்டமாக இருந்தாலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பதற்கென்று குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

*Balance sheet for Hindu Religious and Charitable Endowments Administration Fund.*

7—வினா 12083—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(*a*) Whether any balance sheet is prepared for the Hindu Religious and Charitable Endowments Administration Fund Administered by the Commissioner of the Hindu Religious and Charitable Endowments; and

(*b*) If so, the details thereof?

[1984 அக்டோபர் 13

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேட்டூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் செயற் குறிப்பு.

8—வினா 12138—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் (Sub Employment Office) அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1-7-1981 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் அரசு ஆணை எண் 1400-ல் சேலம் மாவட்டம் மேட்டூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் மேட்டூரிலேயே இயங்குவதற்கு கட்டிடம் கிடைக்காத காரணத்தால் 16-9-1981 முதல் 31-5-1982 வரை சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயே இயங்கி வந்தது. 1-6-1982 முதல் இந்த அலுவலகம் மேட்டூரிலுள்ள பொதுப்பணித்துறை பணியாளர் குடியிருப்பு எண் 15-ல் தனியாகச் செயல்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள ஏரிகளுக்கு வசிஷ்டநதி அணைக்கட்டிலிருந்து கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

9—வினா 12270—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கொட்டவாடி வசிஷ்ட நதி அணைக்கட்டிலிருந்து கால்வாய் மூலம் பெரிய கிருஷ்ணாபுரம், தமையனூர், எடுக்கத்தம்பட்டி, இராஜபாளையம், கரடிப்பட்டி, உமையாள்புரம், ஆரியபாளையம் ஆகிய ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(இ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது துவங்கப்படும்?



1984 அக்டோபர் 13]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : இத்திட்டம் இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை. ஆயினும் தலைமை பொறியாளர் (பாசனம்) சேலம் தர்மபுரி கண்காணிப்பு பொறியாளரை, இதனை ஆய்வு செய்யும்படி தற்போது கேட்டுக் கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணப்பநாயக்கன் புதூர் கிராமத்திற்கும் ஓடும் காட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்.

10—வினா 12710—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணப்பநாயக்கன் புதூர் கிராமத்தருகே ஓடும் காட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் (Drought Prone Area Programme) தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணப்பநாயக்கன் புதூர் கிராமத்தருகே ஓடும் காட்டாற்றின் குறுக்கே ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி ஒன்று அமைப்பதற்காக அரசு 1981 ஆம் ஆண்டு, அக்டோபர் 30 ஆம் நாளன்று அனுமதி வழங்கி, இவ்வேலை நிறைவேற்றப்பட்டு வருகிறது. வறட்சியின் காரணமாக, வேலை நடக்கும் பகுதியில் தண்ணீர் இன்மையினால் இப்பணியை முழு வேகத்துடன் நிறைவேற்ற முடியவில்லை. இதுவரையிலும், 40 சதவீத வேலைகள் நடந்துள்ளன. மீதமுள்ள பணிகள் துரிதமாக்கப்பட்டு இவ்வாண்டின் (1983) இறுதியில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி தாலுக்கா சிவில் சப்ளைஸ் கிடங்கிலிருந்து அரிசி மூட்டைகள் கடத்தல் பற்றிய புகார்.

11—வினா 12819—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி தாலுக்காவில் சிவில் சப்ளைஸ் இலாக்காவை சேர்ந்த கிடங்கில் இருந்து ரூ. 20,000 மதிப்புள்ள அரிசி மூட்டைகளை நான்கு வியாபாரிகள் கடத்தியதாக 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாவட்ட ரெவின்யூ அதிகாரிக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[1984 அக்டோபர் 13

விடை—

(அ) புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) தர்மபுரி மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள்
மாவட்ட வழங்கல் அதிகாரிகளுடன் 19--12-1981 அன்று போலி
குடும்ப அட்டைகள் வைத்து ஒருவர் வாங்கிய 20 கிலோ சர்க்
கரையை பறிமுதல் செய்து கிருஷ்ணகிரியில் உள்ள தமிழ்
நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்பு கிடங்கில்
ஒப்படைக்கச் சென்றபொழுது, அக்கிடங்கிலுள்ள கணக்குகளை
சரிபார்த்தார். அந்த நேரத்தில் கிருஷ்ணகிரி வட்ட கூட்டுறவு
விற்பனைச் சங்கத்திற்கும், கக்கன்புரம் நிலக்குடியேற்ற சங்
கத்திற்கும் வழங்கப்பட்டதாக உள்ள 9 டன்கள் அரிசியில்
ஒப்படைப்பு சீட்டையும் (delivery note) வழங்கல்
குறிப்பாணையையும் கிடங்கு கண்காணிப்பாளரைக் காட்டும்
படி மாவட்ட வருவாய் துறை அதிகாரி கேட்டபொழுது கண்
காணிப்பாளர் கிடங்கின் உள்சென்று அவசர அவசரமாக அந்த
அரிசிக்குரிய வழங்கல் குறிப்பாணையையும் ஒப்படைப்புச் சீட்
டையும் தயார் செய்வதைக் கண்டார். உடனே மாவட்ட
வருவாய் துறை அதிகாரி மேற்படியாரிடம் இருந்து பதிவேடு
கள் அனைத்தையும் கைப்பற்றினார். கைப்பற்றப்பட்ட பதி
வேடுகள் மூலமாகவும் விசாரணையின் மூலமாகவும் மேற்குறிப்
பிட்ட 9 டன்கள் அரிசியும் கள்ளச்சந்தையில் விற்பதற்காக
சட்ட விரோதமாக ஓசூரில் ஒருவருக்கு லாரி எண் எம்.டி.ஆர்.
3530 மூலம் அனுப்பப்பட்டது என்பது தெரியவந்தது.
நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள பணியாளர்கள்
மூன்று பேரும் கிருஷ்ணகிரி வட்ட கூட்டுறவு விற்பனைச் சங்
கத்தின் பணியாளர்கள் இரண்டு பேரும் மற்றும் கக்கன்புரம்
நிலக்குடியேற்ற சங்கத்தின் செயலாளர் ஆகியோர் இந்த
சட்ட விரோத செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பது கண்டு
பிடிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அரிசி
ஓசூர் டவுனில் உள்ள திரு. மாதவன் செட்டியார் என்ற
மொத்த அரிசி வியாபாரி வாங்கியுள்ளதாகத் தெரிய வரவே,
வட்ட வழங்கல் அதிகாரி இந்த வியாபாரியின் கடைக்குச் சென்று
இந்த அரிசி முழுவதையும் கைப்பற்றினார். இந்த வழக்கில்
சம்பந்தப்பட்ட நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூன்று பணி
யாளர்களையும் மற்றும் 8 குற்றம் சாட்டப்பட்டவர்களையும்
காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இன்றியமையாப்
பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு
விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் சம்பந்தப்பட்டுள்ள
கிடங்கியின் பொறுப்பாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்
யப்பட்டுள்ளனர். மேல்நடவடிக்கைகளை நுகர்பொருள்
வாணிபக் கழகத்தின் தருமபுரி மண்டல மேலாளர் எடுத்து
வருகிறார்.



[1984 அக்டோபர் 13

## சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு படிகள் அமைக்கும் திட்டம்.

12—வினா 12994—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி அருகே உள்ள வத்திராயிருப்பு சமீபம் உள்ள சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு படிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மலை மீது அமைந்துள்ள மேற்படி ஆலயத்திற்கு இராமநாதபுரம் மாவட்டம், வத்திராயிருப்பு வழியாகவே அதிக பக்தர்கள் சென்று வருவதால், மேற்படி வழியாகவே மலையில் படிக்கட்டுகள் அமைக்கும் திட்டம் தொடர் நடவடிக்கையில் உள்ளது. அதற்காக உத்தேச மதிப்பீடாக ரூ. 3,00,000-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கரூர் வட்டம் வெஞ்சமாங்கூடலூர் ஆலயத் திருப்பணி.

13—வினா 13606—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், வெஞ்சமாங்கூடலூர் ஆலயத் திருப்பணி எந்த நிலையிலுள்ளது ?

விடை—

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், வெஞ்சமாங்கூடலூர் ஆலயத்தின் அருள்மிகு விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், சுவாமி சன்னதி, கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய வேலைகள் முடிக்கப்பட்டு உள்ளன. சுவாமி சன்னதி விமான வேலை, அம்மன் சன்னதி வேலை, நடராஜர் சபை, மதிற்சுவர், இராஜகோபுரம் திருப்பணி செய்யப்பட வேண்டியுள்ளது. அம்மன் சன்னதிக்கான கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகிய வேலைகளை ரூபாய் 2,00,000 மதிப்பீட்டில் ஈரோடு அறுபத்து மூவர் குழு உபயமாகச் செய்ய முன் வந்துள்ளது. தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 13

பஞ்சாயத்துக்குள் அடங்கிய மலைக் குவாரிகளை அப்பகுதியில் உள்ள ஏழை ஆதி திராவிடர் மக்களுக்கு முன் உரிமம் வழங்குதல்.

14—வினா 13764—திரு. சி. கணேசன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்குள் அடங்கிய மலைக் குவாரிகளை அப்பகுதியில் உள்ள ஏழை ஆதி திராவிடர் மக்களுக்கு முன் உரிமம் வழங்கி அவர்கள் கல் உடைத்து பிழைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஊராட்சிகளில் அடங்கியுள்ள மலைக் குவாரிகளில் கல் உடைக்க, ஆதி திராவிட மக்கள், தங்களுக்குள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அச்சங்கங்களின் மூலம் குவாரி உரிமம் வேண்டி விண்ணப்பம் செய்தால், 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம விதிகளில் உள்ள விதி 10-ன் படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் முன்னுரிமையின்படி அவர்களது மனுக்களை அரசு மிகுந்த ஆதரவுடன் பரிசீலிக்கிறது.

தாலுக்கா அலுவலகங்களில் நிலுவையிலுள்ள வீட்டுமனை மற்றும் நிலப் பட்டா மனுக்கள் ஆகியவற்றை தீர்வுகாண எடுத்துள்ள நடவடிக்கைகள்.

15—வினா 13898—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுக்கா அலுவலகங்களில் தேங்கியுள்ள வீட்டுமனைகள், நிலப்பட்டா மனுக்கள் ஆகியவற்றை தீர்வுகாண எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

வீட்டு மனைகள், நிலப்பட்டா மனுக்கள் ஆகியவற்றை துரிதமாக பைசல் செய்ய வட்ட ஆட்சியர்களுக்கு மாதாந்திர குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, அவர்களது பணியில் உள்ள முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியாளரால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வு அறிக்கை நிலநிர்வாக ஆணையரால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு தேவையான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இந்த அறிக்கை அரசுக்கும் அனுப்பப்படுகிறது.



1984 அக்டோபர் 13]

அதிகமாக மனுக்கள் தேங்கியுள்ள மாவட்ட ஆட்சியாளர்களுக்கு தேங்கியுள்ள மனுக்கள் பைசல் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆதி திராவிடர் மலைவாழ் மக்களிடமிருந்து வந்துள்ள மனுக்களுக்கு முதலிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட பட்டாக்கள் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் உரிய நபர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

ஆரகளூர் சோமேசுவரன் கற்கோயிலைப் பழுது பார்த்தல்.

16—வினா 14095—திருமதி. தா. இராசாம்பாள்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆரகளூரில் இருக்கும் பழங்கால சிற்ப வேலைமிக்க சோமேசுவரன் கற்கோயிலைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): மேற்கண்ட திருக்கோயிலுக்கு வருமானம் வரக்கூடிய இனங்கள் ஏதுமில்லை. திருப்பணி செய்ய திருக்கோயிலில் நிதி வசதியும் இல்லை. மேலும் வறட்சி காரணமாக பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்யும் சாத்தியக்கூறு இலலை. இத் திருக்கோயிலின் திருப்பணிகளுக்காக திருப்பணிக்குழு அமைக்கப்படவில்லை. இத் திருக்கோயிலில் பொருளாதார நிலை சீரானவுடன் திருப்பணி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

17—வினா 14119—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1984 அக்டோபர் 13

விடை—(அ) ஆம்.

(ஆ) மக்கள் தொகை விஸ்தீரணம் போன்றவைகளின் அடிப்படையில் மாநில அளவில் பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தும் சிறிய ஊராட்சி ஒன்றியங்களை இணைத்தும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றின் செயற்குறிப்பை அனுப்பி வைக்க ஊரக வளர்ச்சி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அச்செயற்குறிப்புடன் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தையும் கருத்தில் கொள்ளப்படும்.

**புதுப்பாடி கிராம கோயிலுக்குச் சொந்தமான பஞ்சலோக சிலைகள்.**

18—வினா 14368—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியிலுள்ள புதுப்பாடி கிராம கோயிலுக்குச் சொந்தமான பஞ்சலோக சிலைகள் திருடுபோனது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை — (அ) ஆம்.

(ஆ) 11—10—1981 அன்று இரவு இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான மூன்று பஞ்சலோக சிலைகள் களவுபோனது குறித்து 12—10—1981 அன்று கவலை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. புகார் மீதான விசாரணைக்குப் பின் செய்யார் முதல்நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் குற்ற எண் 1179/81-ல் ஒரு வழக்கு தொடரப்பட்டு களவுப் பொருட்கள் மீட்கப்பட்டு அதன் தொடர்பாக பிடிபட்ட நால்வரில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். மற்ற மூவர் மீது குற்றவியல் எண் 146/8-ல் ஒரு வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மீட்கப்பட்ட சிலைகள் குற்றவியல் நீதிமன்றத்தில் உள்ளது. நீதிமன்றத்திலிருந்து சிலையை மீண்டும் பெற்று தக்க பாதுகாப்புள்ள திருக்கோயிலில் வைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்தல்.**

19—வினா 14624—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தற்பொழுது எத்தனை சங்கங்கள் பணியாற்ற தொடங்கியுள்ளன?



1984 அக்டோபர் 13]

விடை—

(அ) ஆம்.

(ஆ) 36 சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படத் தொடங்கியுள்ளன :

மாவட்டங்களில்—

1. நெய்வேலி பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
2. பவானி பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
3. சென்னிமலை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
4. கோபி பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
5. பட்டுக்கோட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
6. காஞ்சீபுரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில்—

7. தாம்பரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
8. குரோம்பேட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
9. பல்லாவரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
10. கொரட்டூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
11. ஐ. சி. எப். காலனி பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
12. சைதாப்பேட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
13. வேளச்சேரி பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
14. ராயபுரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
15. மந்தைவெளிப்பாக்கம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
16. சேத்துப்பட்டு பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
17. ஆதம்பாக்கம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
18. நங்கநல்லூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
19. மேற்கு மாம்பலம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
20. கிழக்கு அண்ணாநகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
21. மேத்தா நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
22. கல்மண்டபம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
23. ரங்கராஜபுரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்

24. சூளைமேடு பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

25. கிழக்கு கே. கே. நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

26. மேற்கு கே. கே. நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

27. அசோக் நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

28. ஷெனாய் நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

29. கீழ்ப்பாக்கம் மேற்கு பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

30. வள்ளலார் நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

31. பீட்டர்ஸ் ரோடு பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

32. விருகம்பாக்கம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

33. நுங்கம்பாக்கம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

34. தியாகராய நகர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

35. சூளை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

36. பழைய வண்ணாரப்பேட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.

**மதுராந்தகம் நகராட்சியில் மேலும் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டுதல்.**

**20—வினா 14870—திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகராட்சியில் எத்தனை கட்டண கழிப்பிடங்கள் உள்ளன ?

(ஆ) மேலும் பல கழிப்பிடங்கள் கட்டப்படுமா ?

**விடை—**

(அ) மதுராந்தகம் நகராட்சியில் தற்போது கட்டண கழிப்பிடங்கள் இல்லை.

(ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு கட்டண கழிப்பிடம் நகராட்சிப் பெருந்து நிலையத்தில் கட்டுவதற்கான திட்டத்துக்கு நகர மற்றும் ஊர் திட்ட இயக்ககம் ஒப்புதல் அளித்து வேலை துவங்கப்பட இருக்கிறது.



**மாப்பிள்ளை நாயக்கன் குளத்தை மராமத்து செய்தல்.**

**21—வினா 15017—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், பழைய ஆயக்குடியில் இருக்கும் மாப்பிள்ளை நாயக்கன் குளத்தை மராமத்து செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை—**

பழனி வட்டம், பழைய ஆயக்குடி மாப்பிள்ளை நாயக்கன் குளத்தை மராமத்து செய்யும் வேலை வறட்சி நிவாரணத் திட்டத்தில் 1981–82ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு விட்டது.

**உசிலம்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டும் வேலை.**

**22—வினா 15136—திரு. எஸ். ஆண்டித் தேவர் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டும் வேலை எப்போது முடிவடையும் ?

**விடை—**

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு கட்டுமானப்பணி பொதுப் பணித்துறையினரிடம் வைப்புப் பணியாக ஒப்படைக்கப்பட்டது. கட்டுமானப்பணி கூரை கான்கிரீட் மட்டம் (up to roof slab) வரை முடிவு பெற்றுள்ளது. கூரை கான்கிரீட் வேலை (roof slab) ஆரம்பிக்கும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட பணி டிசம்பர் 1983-ல் முடிவடையலாம். இதுவரை இப்பணிக்காக ரூ. 4,06,000 செலவிடப்பட்டுள்ளது.

**தன்னிறைவு திட்டத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளிகளுக்கு மின்சார இணைப்பு வழங்குதல்.**

**23—வினா 15187—திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கூடங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிகளுக்கு உடனடியாக மின்சார இணைப்புகள் வழங்க அரசு உத்தரவிடுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்களில் மின் விளக்கு தேவையான அனைத்துக் கட்டிடங்களுக்கும் மின் விளக்குப் பொருத்த வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குமரிமாவட்டத்தில் பழங்குடிமக்களுக்கு விவசாயம் செய்ய கடன் கொடுக்கும் திட்டம்.**

24—வினா 15210—திரு. டி.மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு விவசாயம் செய்ய கடன் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தகைய குடும்பங்களுக்கு இந்த நிதியாண்டில் கடன் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் செலவு செய்யப்பட்ட தொகை.**

25—வினா 15477—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (N.R.D.P.) 1980–81, 1981–82 ஆண்டுகளில் ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) 1980–81 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில், வேலைக்கு உணவுத் திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்



திட்டம் ஆகியவற்றின் கீழ் மொத்தம் ரூ. 1,01,186.70 செலவிடப்பட்டது. இவ்வொன்றியத்தில் 1981-82 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 7,59,927 செலவிடப்பட்டது.

(ஆ) அதன் மூலம் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் விவரம்—

| வரிசை எண் | மற்றும் வேலைகளின் விவரம். | 1980–81. | 1981–82. |
|---|---|---|---|
| 1 | பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | .. | 9 |
| 2 | குளங்கள் மராமத்து .. .. .. | 9 | 12 |
| 3 | இணைப்புச் சாலைகள் மேம்பாடு செய்தல். | 21 | 66 |
| 4 | மரம் வளர்ப்பு .. .. .. | .. | 2 |
| 5 | இதர வகைகள் (வானொலி நிலையம், பேருந்து நிலையம் கட்டுதல், பள்ளிக் கட்டிடங்களைச் சுற்றியுள்ள பள்ளங்கள் சமப்படுத்துதல்). | 6 | 3 |
| | மொத்தம் .. | 36 | 92 |

**சென்னை நகரில் கோழி வளர்ப்புத் தொழிலை நடத்தும் வீடுகளுக்கு மின்சார கட்டணச் சலுகை.**

26—வினா 15547—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் கோழி வளர்ப்புத் தொழிலை நடத்தும் வீடுகளுக்கு மின்சார கட்டணம் சலுகை கொடுக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டில் (1980–81) எத்தனை வீடுகளுக்கு சலுகை கொடுக்கப்பட்டது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**சீவலப்பேரி ஆற்றுக் குடிநீரை அதன் சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களுக்கு விஸ்தரித்தல்.**

27—வினா 15677—திரு. மு. அப்பாத்துரை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி மணியாச்சி ரயில் நிலையத்திற்குக் கொண்டுவரப்படும் சீவலப்பேரி ஆற்றுக் குடிநீரை அதன் சுற்றுப்புறத்திலுள்ள 10 கிராமங்களுக்கும் விஸ்தரிக்க அரசு முன் வருமா ?

விடை—

சீவலப்பேரி ஆற்றிலிருந்து மணியாச்சி இரயில் நிலையத்திற்குக் குடிநீர்க்கொண்டு செல்லும் திட்டம் முற்றிலும் இரயில்வே துறையினரால் செயல்படுத்தப்பட்டுள்ளமையால் சுற்றுப் புறத்திலுள்ள 10 கிராமங்களுக்கு அதனை விஸ்தரிக்க இயலாது.

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு அமைப்புகளில் சேர்ந்தவர்களுக்கு கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்களித்துள்ளதை மறுபரிசீலனை செய்தல்.**

28—வினா 15991—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு அமைப்புகளில் சேர்ந்துள்ளவர்களுக்கு கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்களித்துள்ளதை அரசு மறு பரிசீலனை செய்ய உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதுகுறித்த விவரங்கள் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**கலவை பேரூராட்சியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி நிறுவுதல்.**

29—வினா 16095—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி கலவை பேரூராட்சியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ அரசிடம் உத்தேசம் உண்டா ?

விடை—

1983–84 ஆம் கல்வியாண்டில் கலவையில் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சிறு விவசாயிகளுக்கு பிரத்யேக சலுகைகள் அளித்தல்.**

30—வினா 16171—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சிறு விவசாயிகளுக்கு பிரத்யேக சலுகைகளை அளித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) சிறிய விவசாயி என எந்த தகுதியைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது ?

(ஈ) அதற்கு பொறுப்பான அதிகாரி யார் ?



விடை—

(அ) ஆம்; கால்நடை பராமரிப்பு சிறப்புத் திட்டம், மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் மூலம் சிறு விவசாயிகளுக்கு நேரடியாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

(ஆ) கால்நடை பராமரிப்பு சிறப்புத் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ் சேலம், வட ஆற்காடு, மதுரை, தென் ஆற்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயி ஒருவருக்கு கன்று பராமரிப்புக்காக ரூபாய் 960 மானியமாகவும் (50 சதவிகிதம்), ரூபாய் 960 கடனாகவும் வழங்கப்படுகிறது.

சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகளுக்கு ஆடு உற்பத்திக்காக ஒரு அலகு உருவாக்கும் நபருக்கு ரூபாய் ஆயிரம் மான்யமாக வழங்கப்படுகிறது. அதாவது 20 பெட்டை ஆடுகளும், ஒரு கடாவும் அடங்கிய யூனிட் ஒன்றுக்காகும் தொகையாகிய ரூ. 4,000-த்தில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

சேலம், வட ஆற்காடு, மதுரை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு கோழி உற்பத்திக்காக ரூபாய் 1,466 மானியமாக வழங்கப்படுகிறது. 100 கோழிகள் அடங்கிய பிரிவின் மொத்தச் செலவில் இது 25 சத வீதம் ஆகும்.

வட ஆற்காடு, மதுரை மாவட்டங்களில் 3 பெண் பன்றிகள் அடங்கிய பன்றிப்பிரிவு அமைப்பதற்காகும் செலவில் 25 சத வீதம் ஆக ரூ. 1,125 மானியமாக அளிக்கப்படுகிறது.

2. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.—இத்திட்டத்தின் மூலம் அயலின கிடேரி கன்று பராமரிப்புக்கென்று 25 மாதங்களுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. இம்மானியம் மூலம் கன்றுகள் பருவம் அடைந்து கருவுற்று கன்று ஈன்றபின் பால் பெருக்கு மூலம் சிறு விவசாயிகள் மிகவும் பயன் அடைகிறார்கள்.

3. ஒருங்கிணைந்த இராம வளர்ச்சித் திட்டம்.—சிறு விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் செம்மரி ஆடுகள், கறவை பசுக்கள் மற்றும் பன்றிகள் 25 சதவிகிதம் மானியத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

4. கூட்டுறவுச் சங்க கடன்கள் பொறுத்தவரை சிறு விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள பல்வேறு சலுகைகளின் விவரம்—

(i) பங்கு மூலதனம் செலுத்துதல்.—விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களின் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் பெறுவதற்கு 5 சதவிகிதம் பங்கு மூலதனம் செலுத்தினால் போதும். ஆனால் மற்ற விவசாயிகள் 10 சதவிகிதம் பங்கு மூலதனம் செலுத்தவேண்டும். நீண்டகால கடன்களை

பொறுத்தவரை சிறு விவசாயிகள் தாங்கள் செலுத்தவேண்டிய பங்கு மூலதனமாக 5 சதவிகிதம் முதல் ஆண்டில் 2 சத விகிதமும் எஞ்சிய மூன்றாண்டுகளில் 1 சதவிகிதமாக தவணைகளில் செலுத்தினால் போதும். ஆனால் இதர விவசாயிகள் 5 சதவிகி தத்தையும் ஒரே தவணையில் செலுத்தவேண்டும்.

(ii) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள்.—இதன்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் தெரிந்தெடுக்கப் பட்ட வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள சிறு விவசாயிகளுக்கு பால் பண்ணை வைத்தல், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற வேளாண்மைத் துறையைச் சார்ந்த துணை தொழில்கள் செய்ய கூட்டுறவு விவசாய சேவை சங்கங்கள் மூலம் மத்திய கால கடன் வழங்கப்படுகிறது. கொள்முதல் விலையில் 25 சதவிகிதம் மானியமாக சிறு விவசாயிகளுக்கு இந்த முகமைகள் மூலம் அரசு அளித்து வருகிறது.

(iii) கறவை மாடுகள், கால்நடைகளுக்கான காப்புறுதித் திட்டம்.—கறவை மாடுகள் மற்றும் கால்நடைகளுக்கான காப்புறுதித் திட்டத்தின்கீழ், வறட்சிப் பகுதித் திட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளிலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் கறவை மாடுகள் மற்ற கால்நடைகளை காப்புறுதி செய்து கொள்வதற்கு சந்தா தொகை 2.25 சதவிகிதத்தை சிறு விவசாயிகள் செலுத்த வேண்டியதை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள வழிவகை செய்யப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| 1. விவசாய உறுப்பினர் | .. .. | 1 சதவிகிதம். |
| 2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | .. | 0.75 சதவிகிதம். |
| 3. கடன் வழங்கும் சங்கம் | .. .. | 0.50 சதவிகிதம். |

(iv) நீண்ட காலக் கடன்கள் மான்யம்.—நீண்ட காலக் கடன்களுக்கு சிறு விவசாயிகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் புதுக் கிணறுகள் வெட்ட, கிணறுகளை ஆழப்படுத்த மற்றும் நீரேற்று இயந்திரங்கள் வைக்க போன்ற பல்வேறு காரி யங்களுக்கு 25 சதவிகிதம் மான்யம் வழங்குகிறது.

(v) இழப்பு நிதி.—ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இனம் கண்டுகொள்ளப்பட்ட சிறு விவசாயி களுக்கு மத்திய காலக் கடன்கள் வழங்க வழிசெய்யும் வகையில் மத்திய கூட்டுறவு வங்கிகளையும், விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களையும் ஊக்குவிக்க அவைகளால் வழங்கப்படும் மத்திய காலக் கடன்களில் 2 சதவிகிதம் மானியமாக அவைகளின் இழப்பு நிதிக்கு அரசு அளிக்கின்றது.

(vi) நுகர்வுக் கடன் இழப்பு நிதி மானியம்.—சிறு விவசாயிகளடங்கிய நலிந்த பிரிவினர்களுக்கு திருமணம், மருத்துவ செலவு மற்றும் ஈமக் கடன்கள் முதலியவற்றிற்காக நுகர்வுக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இது போன்ற எதிர்பாராத செலவு களுக்கு சிறு விவசாயிகள் அடங்கிய நலிந்த பிரிவினர்களுக்கு வழங் கும்போது அக்கடனில் 10 சதவிகிதத்தை விவசாய சேவை கூட் டுறவு சங்கங்கள் அவைகளின் சொந்த நிதியிலிருந்து வழங்கினால்,



136276
சென்னை-600 008.

அரசு இழப்பு நிதி மான்யமாகவும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிட மிருந்து கடன் பெற்று நுகர்வுக் கடன்களை வழங்கினால், அதில் 7½ சதவீதத்தை இழப்பு நிதி மானியமாகவும் அரசு வழங்குகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் இது போன்ற வகையான கடன்களுக் கான விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியதில் 2½ சதவீதம் இழப்பு நிதி மானியத்தை மத்திய கூட்டுறவு வங்கி களுக்கும் அரசு வழங்குகிறது. விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங் களும் மத்திய கூட்டுறவு வங்கிகளும் இவ்வகையான கடன்களை கொடுக்க ஊக்குவிக்கவே இந்த நுகர்வுக் கடன் இழப்பு நிதி மான்யத்தை அரசு வழங்குகிறது.

(vii) பொய்த்த கிணறுகள் மானியம்.—பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து பிரதம நிலவள வங்கி சிறு விவசாய உறுப்பினர்களுக்கு 1—4—68-க்குப் பின்னர் பொய்த்த கிணறு களுக்கு சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை, மொத்தம் ஆன செலவில் 90 சதவிகிதம் அல்லது வழங்கப்பட்ட கடனில் 90 சத விகிதம் அரசு வழங்குகிறது. இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் தான் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு இனங்களிலும் மானியம் ரூ. 10,000-க்கு மிகைப்படக்கூடாது.

(viii) குறுகிய காலக் கடன்களுக்கும் மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களுக்கும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறு விவசாயிகளிடமிருந்து 11.50 சதவிகிதமும், இதர விவசாயிகளிடமிருந்து 12.50 சதவிகிதமும் வட்டி வசூலிக்கின்றன.

(ix-a) திட்டங்கள் ரீதியாக மத்திய காலக் கடன்களுக்கு சிறு விவசாயிகளிடமிருந்தும் இதர விவசாயிகளிடமிருந்தும் கீழ்க் கண்டவாறு வட்டி வசூலிக்கிறது:—

(1—4—83 முதல்)

| | | |
|---|---|---|
| | | சதவிகிதம். |
| அ. சிறு பாசனம் மற்றும் நில அபிவிருத்தி காரி யங்கள். | | 10.00 |
| ஆ. பலதரப்பட்ட காரியங்கள்— | | |
| சிறு விவசாயிகள் | .. | 10.00 |
| இதர விவசாயிகள் | .. | 12.50 |

(ix-b) மற்ற வகை மத்திய காலக்கடன்களுக்கும் ரிசர்வ் வங்கியின் முன்னாள் வேளாண்மை கடன் வழங்கி வந்த மறு உதவியுடன் வழங்கப்பட்ட மத்திய காலக் கடன்களுக்கு வசூ லிக்கப்படும் வட்டி விகிதம் பின் வருமாறு :—

| | | சிறு விவசாயிகள். | இதர விவசாயிகள். |
|---|---|---|---|
| | | (1-7-1982 முதல்) | |
| அ. சிறுபாசனம் மற்றும் நில அபி விருத்திக் காரியங்கள். | | 10.50 | 10.50 |
| ஆ. பலதரப்பட்ட காரியங்கள் | .. | 11.50 | 11.50 |
| இ. இதர காரியங்கள் | .. | 11.50 | 12.50 |

[1984 அக்டோபர் 13

(ix-c) சிறு விவசாயிகள் தாங்கள் பெற்ற குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் கெடு தேதிக்குள் திருப்பிச் செலுத்தினால் அவர்கள் செலுத்த வேண்டிய வட்டிகள் 2 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படுகின்றது. சிறு விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன்களை தவணைத் தேதிக்குள் முன்னற் செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்தவே இத்திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(x) நீண்ட காலக் கடன்களுக்கு பலதரப்பட்ட காரியங்களுக்கு சிறு விவசாயிகளிடம் 10 சதவிகிதம் வட்டியும் இதர விவசாயிகளிடம் நீர்ப்பாசன காரியங்கள் நீங்கலாக இதர காரியங்களுக்கு 12.50 சதவிகிதம் வட்டியும் நிலவள வங்கிகள் வசூலிக்கின்றன.

(xi) பல்வேறு காரியங்களுக்கு நிலவள வங்கிகள் சிறு விவசாயிகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் செய்யும் முதலீடுகளுக்கு முழுமையாக கடனாக வழங்குகின்றன. இதர விவசாயிகளுக்கு 5 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரை கழிவுத் தொகை நீக்கிய பிறகு எஞ்சிய தொகைக்கு மட்டுமே கடனாக வழங்கப்படுகிறது.

(xii) நீண்ட காலக் கடன்களைப் பொறுத்தவரை சிறு விவசாயிகளுக்கு, அவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் 15 ஆண்டு தவணைகளில் வசூலிக்கப்படுகின்றன. ஆனால் இதர விவசாயிகளை பொறுத்தவரையில், 9 ஆண்டு தவணைகளில் கடன்கள் வசூலிக்கப்படவேண்டும்.

(xiii) அரசு உத்தரவாதத்தின் பேரில் நிலமற்ற விவசாயிகளுக்கு நில அடமானத்தை வற்புறுத்தாமல் கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற பலதரப்பட்ட காரியங்களுக்கு மத்திய காலக் கடன்கள் 5 கோடி வரை நிலவள வங்கிகள் மூலம் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

(xiv) சிறு விவசாயிகள் உட்பட மலை வாழ் மக்களுக்கு பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் (lamps)4 சதவிகித சலுகை வட்டியில் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கி வருகின்றன. இதனால் சங்கங்களுக்கு ஏற்படும் வட்டி வீத இழப்பை அரசு மானியமாக அளித்து வருகிறது.

பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் (lamps) சிறு விவசாயிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட விவசாய விளைப் பொருட்களை நேரிடையாக கொள்முதல் செய்து கொள்வதற்கு வகைசெய்யும் முறையில் இதனால் பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனையில் ஏற்படும் நட்டத்தை சரிக்கட்ட தனி விலை ஏற்றத்தாழ்வு நிதிக்கு கொள்முதல் செய்யப்பட்ட விவசாய விளை பொருள்கள் மதிப்பில் 2 சதவீதம் அரசு மானியமாக வழங்கி வருகிறது.

(xv) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு மானிய விலையில் 1983-84 கரீப் பருவத்தில் உர விநியோகம் செய்வதற்கு என ரூ. 360 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வறட்சியால்



1984 அக்டோபர் 13]

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறு மற்றும் மிகச்சிறு விவ சாயிகளுக்கு விதைகளை கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கு என ரூ. 50 இலட்சம், பூச்சி மருந்து விநியோகத் திற்கு என ரூ.24இலட்சம் வேளாண்மைத் துறைக்கும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் நாற்றுக்களை (Seedlings) விநியோகம் செய்ய ரூ. 30 இலட்சம் என எண்ணெய் வித்துக்கள் துறைக்கும் மேற்கூறிய அரசாணையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய சலுகைகளைத் தவிர சிறு விவசாயிகளுக்கு கடன் பளுவைக் குறைத்து பல்வேறு வட்டி சலுகைகளை அரசு 1979 முதல் 1983 ஆம் ஆண்டு வரை வழங்கி வந்துள்ளது.

(இ) ரிசர்வ் வங்கியின் விதிகளின்படி 5 ஏக்கர் நஞ்சை அல்லது புஞ்சை நிலம் அல்லது அதற்கும் குறைவாக உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நிலப்பதிவேட்டில் சங்க உறுப்பினர்கள் நில உடமை விவரங்கள் கிராம அதிகாரிகளால் சான்று செய்யப்பட்டு பதியப்படுகின்றன. இதனை அடிப்படை யாகக் கொண்டு சிறு விவசாயி நிர்ணயிக்கப்படுகிறார். அதனடிப் படையில் அரசு பல்வேறு விவசாயக் கடன் மற்றும் வட்டி சலுகை களை சிறு விவசாயிகளுக்கு 1978-79 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டு வரை அளித்து வந்திருக்கிறது.

தவிர, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானிய சலுகைகள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள வரையறைப்படி 2.50 ஏக்கர் வகை ( 1 ) என்று வகைப்படுத்தப்பட்ட நஞ்செய் நிலம் அல்லது அதற்குக் குறைவானது அல்லது 5 ஏக்கர் புஞ்செய் நிலம் அல்லது அதற்குக் குறைவானதும் உடையவர்கள் சிறு விவசாயிகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) வட்டார அபிவிருத்தி அலுவலரும், வட்டாட்சி அலுவலரும் பொறுப்பான அதிகாரிகள் ஆவர்.

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் மயானப் பாதைக்குச் செல்ல சாலை அமைத்தல்.

31—வினா 16323—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவு திட்டத்தில் எத்தனை ஆதி திராவிடர் குடியிருப்புக்கள், அவர்களுடைய மயானப் பாதைக்கு செல்ல சாலை வசதிகள் அமைக்கப் படாமல் விடப்பட்டுள்ளன ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) பத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயானப் பாதை வசதிகள் அமைக்கப்படாமல் விடப்பட்டுள்ளன.

(ஆ) 1. 220 பூதூர்
2. 221 ஈசூர்
3. பவுந்தங்கரணை
4. கிராலூர்
5. மிலாப்பூர்
6. கோடித்தண்டலம்
7. கீழக்காண்டை
8. சிறுநல்லூர்
9. விழவலம்
10. வெண்டிச்சேரி

திருக்கழுக்குன்றம் பட்சி தீர்த்த கோயிலின் சொத்துக்கள்.

32—வினா 16498—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருக்கழுக்குன்றம் பட்சிதீர்த்த கோயிலுக்கு சொத்துக்கள் எவ்வளவு ?

(ஆ) அச் சொத்துக்களிலிருந்து குத்தகை வாடகை சீராக வசூலாகின்றனவா ?

(இ) மேற்கண்ட திருக்கோயிலுக்கு மதுராந்தகம் வட்டத்தில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளன ?

விடை—

(அ) திருக்கழுக்குன்றம் பட்சிதீர்த்த கோயிலுக்கு கீழ்க்கண்டவாறு சொத்துக்கள் உள்ளன :—

| இடவிபரம். | விஸ்தீரணம். | ஆண்டுக் குத்தகை. |
|---|---|---|
| | ஏ.செ. | |
| நஞ்சை | 22.26 | கலம் 142.7.0 |
| புஞ்சை | 30.53 | ரூ. 1,750 (1391-ம் பசலிக்கு) |
| அடிமனை | 7.25 | ரூ. 34,359 |
| கட்டிடம் | 0.35 | ரூ. 10,062 |

(ஆ) 1391-பசலி முடிவில் (30—6—1982-ல்) நஞ்சை நிலக் குத்தகை வகையில் கலம் 364.2.2 நெல்லும், புஞ்சை குத்தகையில் ரொக்கம் ரூ. 2,163-ம், அடிமனை வாடகையில் ரூ. 49,610-ம், கட்டிட வாடகை வகையில் ரூ. 7,936-ம் நிலுவையாக உள்ளது. நிலுவையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



(இ) மேற்கண்ட கோயிலுக்கு மதுராந்தகம் வட்டத்தில் உள்ள சொத்துக்கள் விவரம் பின்வருமாறு :—

| கிராமத்தின் பெயர். | | நிலத்தின் தன்மை. | | பரப்பு. |
|---|---|---|---|---|
| | | நஞ்சை. | புஞ்சை. | ஏ. செ. |
| போந்தூர் | .. | 2.32 | 1.38 | 3.70 |
| கடப்பாக்கம் | .. | .. | 3.07 | 3.07 |
| செம்பூர் | .. | .. | 0.65 | 0.65 |
| | | 2.32 | 5.10 | 7.42 |

ஸ்ரீ ஏரிகாத்த ராமர் ஆலய திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு.

33—வினா 16508—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் ஸ்ரீஏரிகாத்த ராமர் ஆலய புனரமைப்புக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

விடை—

ரூ. 42,000 அரசு மானியமும், ஆணையர் பொது நல நிதியிலிருந்து 1973-74-ம் நிதியாண்டில் ரூ. 10,000—மும் இத்திருக்கோயிலின் தேர்த் திருப்பணிக்காக வழங்கப்பட்டுள்ளது.

பழுதுபட்ட பொதுப்பணித் துறை சாலைகளை பழுது பார்த்தல்.

34—வினா 16640—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதியில் உள்ள மிகவும் பழுதுபட்ட பொதுப்பணித்துறை (P.W.D.) ரோடுகளை சரிசெய்ய அரசுக்கு முறையீடு ஏதேனும் 1982 ஆம் ஆண்டில் வந்துள்ளதா ?

(ஆ) பழுதுபார்க்க எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) எப்பொழுது பழுது பார்க்கப்படும் ?

விடை—

(அ) பாபநாசம் தொகுதியில் பொதுப்பணித்துறை சாலை எதுவும் பொது மக்களின் உபயோகத்தில் இல்லை. ஆதலால் பொதுப்பணித்துறை சாலைகளை பழுது பார்க்குமாறு கோரி 1982-ஆம் ஆண்டு முறையீடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏதும் இல்லை.

(ஆ) மற்றும் (இ): இவ்வினாக்களுக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 13

**அறநிலையத் துறை பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகித வேலை வாய்ப்பு அளித்தல்.**

35—வினா 16880—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அறநிலையத் துறை பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகித விகிதாச்சாரப்படி வேலை வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) இனிமேலாவது அந்த விகிதாச்சாரப்படி வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : திருக்கோயில் பணியாளர்கள் நியமனம் சம்பந்தமாக இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 116 (2) (xxiii)-ன் கீழ் அமைந்த விதிகளில் 18 சதவிகிதாசாரப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இல்லாததால் தற்போதுள்ள விதிகளின் அடிப்படையில் திருக்கோயில் பணியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடு செய்வது வழக்கத்தில் இல்லை எனினும், தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வேலை வாய்ப்பு கேட்டு வரும் தாழ்த்தப்பட்டவர்கள் மனுக்கள் முன்னுரிமையுடன் பரிசீலிக்கப்பட்டு இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின்படி தகுதியுடையவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். தவிர இப்பணியாளர்களை 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவுகள் 55, 56-ன் கீழ் அந்தந்தக் கோயில் அறங்காவலர் குழுதான் நியமிக்கிறது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பணியும் அவர்களிடந்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆலயப் பணியாளர்கள் அரசுப் பணியாளர்கள் அல்ல.

**1970 முதல் 1982 வரை மைய அரசால் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள்.**

36—வினா 16852—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970 முதல் 1982 வரை மாநிலத்தில் மைய அரசு நிறுவிய தொழிற்சாலைகள் விவரம் யாது?

விடை—

மைய அரசு 1977 ஆம் ஆண்டு சேலத்தில் ஓர் உருக்காலையையும், 1980 ஆம் ஆண்டு இராணிப்பேட்டையில் பாரத் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான உப பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் நிறுவியது.



1984 அக்டோபர் 13]

2. சேலம் உருக்காலை 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் உருக்குச் சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது. 1982 மார்ச்சில் இது உற்பத்தியைத் தொடங்கியது. இத்திட்டத்திற்கு ரூ.181.19 கோடி செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்க, 1982 டிசம்பர் வரை ரூ. 167.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது 1,207 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த தொழிற்சாலையாகச் செயற்படுத்துவதை மத்திய அரசு உறுதி செய்வதற்காக மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் இயன்ற வரையில் எடுத்து வருகிறது. ஏற்கெனவே திட்டமிட்டபடி இவ்வுருக்காலையை முழு ஆலையாக மேம்படுத்த முடியுமா என்று ''செயில்'' (Steel Authority of India Ltd.) நிறுவனம் ஆய்வு செய்து வருவதாக மைய அரசு அறிவித்துள்ளது. ஆய்வுக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

3. இராணிப்பேட்டையில் ரூ. 32.8 கோடி செலவில் ஒரு கொதிகலன் துணை உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ மத்திய அரசு 1980 ஜூலையில் ஒப்புதலளித்தது. இந்த தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிக்கும் முழு உற்பத்தித் திறனை அடைந்தவுடன், இத்தொழிற்சாலை 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 1983 இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என்றும், முழு உற்பத்தித் திறனை 1984-85-ல் எய்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 1,400 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 75 இலட்சம் வரையில் செலவிட மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திண்டுக்கல் அரசு மருத்துவமனை ஓமியோபதி பிரிவுக்கு வாங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு.**

37—வினா 16862—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் அரசு மருத்துவமனை ''ஓமியோபதி'' பிரிவுக்கு 1979–80, 1980–81 ஆகிய ஆண்டுகளில் வாங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு எவ்வளவு?

விடை—

திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு 1979-80 ஆம் ஆண்டில் ஓமியோபதி மருந்துகள் வாங்கப்படவில்லை. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 2,560.55 மதிப்புள்ள ஓமியோபதி மருந்துகள் வாங்கப்பட்டன.

றிச்சி பேரூராட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகட்ட நில ஆர்ஜிதம் செய்துகொடுக்கும் செயற்குறிப்பு.

33 —வினா 17007—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சியில் 6ஆவது வார்டில் வீடில்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப் படும்?

விடை —

கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி 6ஆவது வார்டில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக குறிச்சி கிராமத்திலுள்ள பு. எண்கள் 132/1பி, 132/2ஏ, 141/2 மற்றும் 142-ல் 3.12 ஏக்கர் நன்செய் நிலங்களை கையகப் படுத்துவதற்காக மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்திருந்தார். மேற்படி கிராமம் நகர்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் வரும் கிராமங்களில் ஒன்று. ஆகையால் கையகப் படுத்துவதற்கு உத்தேசித்துள்ள இடங்களை நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டால் நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1894-ன் கீழ் 4(1) அறிவிக்கைக்கான செயற்குறிப்பு அனுப்பும்படியும் மாவட்ட ஆட்சியரை கேட்கப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை.

39—வினா 17071—திரு. டி. மணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் வேலை இல்லாமல் 1982 டிசம்பர் முடிய எத்தனை பேர் உள்ளனர்?

(இ) இவர்களில் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 9,134 (ஆண்கள் 3,960; பெண்கள் 5,174).

(இ) 7,682 (ஆண்கள் 3,457; பெண்கள் 4,225).



மறைமலை நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

40—வினா 17286—திரு. சி. கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டை அடுத்த மறைமலை நகருக்குக் குடிநீர் கொடுக்கும் திட்டப்பணி முடிவு பெற்றுவிட்டதா?

விடை—

திட்டப்பணிகள் பிப்ரவரி 1983-ல் முடிவு பெற்றுவிட்டன.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிராமப்புறத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற குடும்பங்கள்.

41—வினா 17306—திரு. சி. கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராமப்புறத் திட்டத்தின் கீழ் எத்தனை குடும்பங்கள் பயன் பெற்றன.

விடை—

1982—83 நிதி ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராமப்புற திட்டத்தின் கீழ் 22,655 குடும்பங்கள் பயன் பெற்றன.

தன்னிறைவுத் திட்டத்தில் அளிக்கப்படும் நிதிக்கு ஊராட்சி ஒன்றியங்களிடம் வசூல் செய்யப்படும் வட்டி விகிதம்.

42—வினா 17551—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் தரம் பிரிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) தன்னிறைவுத் திட்டத்திற்கு கொடுக்கும் நிதிக்கு ஊராட்சி ஒன்றியங்களிடம் எத்தனை சதம் வட்டி வசூல் செய்யப்படுகிறது?

[1984 அக்டோபர் 13

விடை—

(அ) ஆம். கிராம பணித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கும் 1980 ஆம் ஆண்டு முதல் துரிதமாக செயல்பட வேண்டி அரசு மான்ய விகிதமும் பங்குத் தொகையும் கீழ்க்கண்டவாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்துக் கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

| ஊராட்சி ஒன்றிய பிரிவு. | அரசு மான்யத்தின் விகிதம். | பங்குத் தொகையின் விகிதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 40% | 60% |
| 2 | 50% | 50% |
| 3 | 60% | 40% |
| 4 | 70% | 30% |
| 5 | 85% | 15% |
| 6 | 95% | 5% |

(ஆ) தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு மட்டும் சாதாரண ஆண்டு வட்டி 8.5 சதவீதமும், அபராத வட்டி 10.5 சதவீதமும் வசூலிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கீழ்பேரடிகுப்பம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

43—வினா 17667—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், கீழ் பேரடிகுப்பம் கிராமத்தில் தெருக்குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் (1983—84) நிறைவேற்றப்படும்.

முளசூர் கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

44—வினா 17669—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் முளசூர் கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?



1984 அக்டோபர் 13]

விடை—

(அ) மற்றும் (ஆ) இந்தக் கிராமத்தில் இரண்டு ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் கையிறைப்பான்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

திண்டிவனம் தொகுதியில் கிராம தெருக்களுக்கு குழல் மின் விளக்குகள் அமைத்தல்.

45—வினா 17703—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், கர்ணாபூர், ஜக்காம்பேட்டை மற்றும் சலாவதி, ஓமந்தூர் கிராமத்துக்கு தெருக்களுக்கு குழல் மின்விளக்குகள் அமைக்க ஒன்றியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேலே குறிப்பிட்ட ஊராட்சிகளில் குழல் மின் விளக்குகள் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திண்டிவனம் மின்வாரிய பொறியாளரின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஊராட்சிகளின் தீர்மானங்களை செயல்படுத்துமாறு, தமிழ்நாடு மின்வாரிய செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தென்களவாய் மதுரா, வைரம்பேட்டை கிராமத்திற்கு குடிநீர் வசதி

46—வினா 17723—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் தென்களவாய் மதுரா வைரம்பேட்டை கிராமத்திற்குக் குடிநீர் வசதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 அக்டோபர் 13

### சிங்கனூர் கிராமத்தில் குடிநீருக்காக கைப்பம்பு அமைத்தல்

47—வினா 17742—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம், மரக்காணம் ஒன்றியம் சிங்கனூர் கிராமத்தில் குடிநீருக்காக கை பம்பு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மரக்காணம் ஒன்றியம் சிங்கனூர் கிராமத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் சையிறைப்பான் பொருத்தப்பட்டு அக்கிராம மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### சிங்கனூர் கிராம அரிசன காலனியில் குடிநீருக்காக கைப்பம்பு அமைத்தல்.

48—வினா 17756—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், சிங்கனூர் கிராம அரிசன காலனியில் குடிநீருக்காக கை பம்பு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

சிங்கனூர் கிராம அரிசன காலனியில் ஏற்கனவே கையிறைப்பான் பொருத்தப்பட்டு தற்போது மக்களின் உபயோகத்தில் உள்ளது.

### ஓமந்தூர் கிராமத்திலுள்ள மருந்தகம்

49—வினா 17767—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம், ஓமந்தூர் கிராம மருந்தகக் கட்டிடத்தில் மருந்தகம் நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) மருத்துவர் தினமும் வருகை தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ஓமந்தூர் சித்த மருந்தகம் 19-5-83 முதல் முழுநேர மருத்துவருடன் தினமும் திறந்துவைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 19—5—1983 முதல் ஓமந்தூர் சித்த வைத்தியர் கூடுதல் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓமந்தூர் கிராமத்திலேயே பணிபுரிய உத்திரவிடப்பட்டு தற்போது அங்கு மட்டில் பணியாற்றி வருகிறார்.



1984 அக்டோபர் 13]

### மணப்பாறை அருள்மிகு நல்லாண்டவர் ஆலயத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.

50—வினா 17804—திரு. மெ. அ. இராசகுமார் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மணப்பாறையில் உள்ள அருள்மிகு நல்லாண்டவர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

அருள்மிகு நல்லாண்டவர் சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்காக குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை. என்னும், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள இரண்டு கிணறுகளில், ஒரு கிணற்றில் பம்புசெட் வைத்து குழாய்கள் மூலம் தண்ணீர் எடுக்கவும், மற்றொரு கிணற்றில் (நந்தவனத்திலுள்ளது) இருந்து இறவை மூலம் தண்ணீர் எடுக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. மழையின்றி வறட்சியாக உள்ள காலங்களில், பம்புசெட் வைக்கப்பட்டுள்ள கிணற்றில் நீர் வறண்டுவிட்டால் மற்றொரு கிணறான நந்தவன உரைக்கிணற்றிலிருந்து இறவை மூலம் பக்தர்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

### அருளாப்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டும் திட்டம்.

51—வினா 17811—திரு. மெ. அ. இராசகுமார் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், கொடும்பபட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் வாழும் பகுதியான பெரிய அருளாப்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்காக வீடு கட்டும் திட்டம் 1982–83-ல் எடுத்துக்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### முத்துக்காட்டில் பணிபுரியும் ஊனமுற்றோர் எண்ணிக்கை.

52—வினா 18176—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊனமுற்றோர் பணிபுரியும் முத்துக்காட்டில் தற்போது எத்தனை பேர்கள் பணிபுரிகின்றனர் ?

(ஆ) அவர்களுக்கு தரப்படும் ஊதிய விகிதங்கள் என்ன ?

[1984 அக்டோபர் 13

விடை—

(அ) ஊனமுற்றோர் பணிபுரியும் முத்துக்காட்டில் 51 பேர் பணிபுரிகின்றனர்.

(ஆ) அவர்களுக்குத் தரப்படும் ஊதிய விகிதம் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பணியாளர் பட்டியல்—

| | | |
|---|---|---|
| (1) | தொழில் மேலாளர் .. | ரூ. 750—50—1,350. |
| (2) | உற்பத்தி உதவியாளர்.. | ரூ. 600—30—750—35—890—40—1,050. |
| (3) | முதலாள் .. .. | ரூ. 600—30—750—35—890—40—1050. |
| (4) | பண்டக அலுவலர் மற்றும் கணக்காளர். | ரூ. 525—25—675—30—885—35—975. |
| (5) | அமைப்பாளர்/ மேற்பார்வையாளர். .. | ரூ. 525—25—675—30—885 35—925. |
| (6) | பண்டக காப்பாளர் .. | ரூ. 400—15—490—20—650—25—700. |
| (7) | மின் பணியாளர் .. | ரூ. 400—15—490—20—650—25—700. |
| (8) | பண்டக காப்பாளர் .. | ரூ. 450—20—590—25—740—30—800. |
| (9) | உதவியாளர் .. .. | ரூ. 295—5—315—10—475 |
| (10) | தோட்டக்காரர் .. | ரூ. 250—5—330—10—400 |
| (11) | காவல்காரர் .. .. | ரூ. 250—5—330—10—400 |

தினக் கூலிகள் பட்டியல்.

| வரிசை எண். (1) | தினக்கூலியின் பெயர். (2) | தினக்கூலி. (3) ரூ. பை. |
|---|---|---|
| (1) | கே. ராஜேந்திரன் .. .. .. | 9.25 |
| (2) | இ. இராமமூர்த்தி .. .. .. | 8.50 |
| (3) | எல். கணேசன் ... .. .. | 8.50 |
| (4) | டி. ஆர். கோதண்டராமன் .. .. | 8.50 |



1984 அக்டோபர் 13]

| வரிசை எண். (1) | தினக்கூலியின் பெயர். (2) | தினக்கூலி. (3) ரூ. பை. |
|---|---|---|
| | | 8.50 |
| (5) | ஆர். வீரராகவன் .. .. .. | 8.50 |
| (6) | டி. எஸ். பாஸ்கரன் .. .. .. | 8.50 |
| (7) | டி. சாதுலா .. .. .. .. | 8.50 |
| (8) | எஸ்.கே. குருநாதன் .. .. .. | 8.50 |
| (9) | எம். சபாபதி .. .. .. .. | 8.50 |
| (10) | வி. பழனிசாமி .. .. .. .. | 9.25 |
| (11) | எஸ். அய்யா பாண்டியன் .. .. | 8.50 |
| (12) | எம். பி. சண்முகம் .. .. .. | 8.50 |
| (13) | கே. கணேசன் .. .. .. .. | 10.00 |
| (14) | கே. விட்டல் .. .. .. .. | 8.50 |
| (15) | மீரான் சாகீப் .. .. .. .. | 8.50 |
| (16) | டி. சின்னக்கண்ணு .. .. .. | 8.50 |
| (17) | பி. லோகநாயகம் .. .. .. | 10.00 |
| (18) | கே. தயாளன் .. .. .. .. | 10.00 |
| (19) | கே. ரவி .. .. .. .. | 10.00 |
| (20) | ஆர். முருகேசன் .. .. .. | 10.00 |
| (21) | டி. கமலநாதன் .. .. .. .. | 10.00 |
| (22) | சி. மகாதேவன் .. .. .. .. | 10.00 |
| (23) | எச். என். பன்னீர் செல்வம் .. .. | 10.00 |
| (24) | கே. பிச்சை கண்ணு .. .. .. | 10.00 |
| (25) | என். சிதம்பரம் .. .. .. | 9.25 |
| (26) | சி. இராமலிங்கம் .. .. .. | 10.00 |
| (27) | பி. சத்தியநேசன் .. .. .. | 10.00 |
| (28) | ஏ. அப்துல்ஹாய் .. .. .. | 10.00 |
| (29) | வி. நாகராஜ் .. .. .. .. | 8.50 |
| (30) | எஸ். வேணுராஜ் .. .. .. | 10.00 |
| (31) | பி.ஜி.. சுகுமாரன் .. .. .. | 8.50 |
| (32) | எஸ். ஏ. ஞானசேகரன் .. .. .. | |

### கிரிப்பாறை கோட்டத்தில் அதிகாரிகள் தங்கும் விடுதிகளுக்கு அருகிலுள்ள மா, பலா, தென்னை மரங்களை குத்தகைக்கு விட்டதில் கிடைத்த வருமானம்.

53—வினா 18274—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ரப்பர் தோட்டத்தின் கிரிப்பாறை கோட்டத்தில் அதிகாரிகள் தங்கும் விடுதிகளின் பக்கத்தில் உள்ள மா, பலா, தென்னை மரங்களை குத்தகைக்கு விட்டதில் 1980, 1981 மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு கிடைத்த வருமானம் என்ன?

[1984 அக்டோபர் 13

விடை—

கீரிப்பாறை கோட்டத்தில் அதிகாரிகள் தங்கும் விடுதிகளின் பக்கத்தில் இரண்டு மாமரங்கள் மற்றும் ஒரு பலா மரம் அழகுக்காகவும், நிழலுக்காகவும் நடப்பட்டுள்ளன. இது தவிர தென்னை மரங்கள் இரண்டு உள்ளன. அவை இன்னும் காய்க்கவில்லை. மேற்கூறிய மரங்களில் தக்க மகசூல் இல்லாததால் 1980, 1981 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் அவைகள் எதுவும் குத்தகைக்கு விடப்படவில்லை. எனவே, வருமானம் ஒன்றும் அரசுக்குக் கிடைக்கவில்லை.

### கரிம்பேடு கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம்.

54—வினா 18284—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம் கரிம்பேடு கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுமார் ரூ. 4.33 இலட்சம்.

(இ) திட்டம் ஆய்வு நிலையிலேயே உள்ளது. எனவே, பணிகள் எப்போது துவங்கப்படுமென்று குறிப்பிட இயலாது.

### பாலவாக்கம் கிராமம் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்.

55—வினா 18346—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாம்பரம் தொகுதி பாலவாக்கம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1984 அக்டோபர் 13]

### திருத்தங்கூர் அரசு மருத்துவமனையில் மருந்து பற்றாக்குறையை போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.

56—வினா 18350—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம் திருத்தங்கூரில் உள்ள அரசு மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மருந்து பற்றாக்குறையை போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இம் மருந்தகத்தில் மருந்துகள் வழங்கப்படவில்லை என புகார்கள் எதுவும் பொதுமக்களிடமிருந்து வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### புலவர் குழந்தை எழுதிய ''இராவண காவியம்''/பெருங்கவிதை நூலின் பாடங்களை பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களில் சேர்த்தல்.

57—வினா 19165—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புலவர் குழந்தை அவர்கள் எழுதிய ''இராவண காவியம்'' என்ற பெருங்கவிதை நூலில் இருந்து பாடல்கள் எடுத்து பள்ளி, கல்லூரி பாடப் புத்தகங்களில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவற்றுக்கு தமிழ்ப் பாடத்திட்டம் வகுப்பது, தமிழ்ப் பாடநூல் தயாரிப்பது ஆகியவற்றைக் கவனிக்கும் வல்லுநர் குழுக்களே இதுபற்றி முடிவு செய்யவேண்டியவை. 1983-84 ஆம் ஆண்டு 9ஆம் வகுப்புக்கு புதிதாக தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இந்நூலிலிருந்து மருதநில வருணனை பற்றிய சில பாடல்களை அக்குழுக்கள் ''பல்சுவைப் பாடல்கள்'' என்னும் தலைப்பின்கீழ் சேர்த்துள்ளன. கல்லூரிகளைப் பொறுத்த வரையில் இவ்விஷயம் பல்கலைக் கழகங்களில் கல்விக் குழுக்களின் (Academic Council) அதிகார வரம்பிற்குட்பட்டதாகும்.

ஆற்காடு வட்டத்திற்கு கோயில்களுக்கு செயல் அலுவலர் ஒருவரை நியமித்தல்.

14—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆற்காடு வட்டத்திற்கு கோயில்களுக்கு செயல் அலுவலர் ஒருவரை நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கோவில்கள் அந்த நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும் ?

விடை—

(அ) ஆற்காட்டினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு செயல் அலுவலரை நியமனம் செய்யலாமா என்ற செயற்குறிப்பு ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மேற்படி செயற்குறிப்பில் கீழ்க்காணும் கோயில்களை இணைக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. அருள்மிகு கங்காதீஸ்சுவரர், வரதராஜ பெருமாள் திருக்கோயில்கள், தோப்புக்கானா, ஆற்காடு.

2. அருள்மிகு வரசித்தி விநாயகர், பழனி ஆண்டவர் மற்றும் செல்வ விநாயகர் திருக்கோயில்கள், ஆற்காடு.

3. அருள்மிகு தேவி கருமாரியம்மன் வகையறா திருக்கோயில்கள் நவல்பூர், வாலாஜா வட்டம்.

இதர திருக்கோயில்கள் ஆற்காட்டிலிருந்து 4 கிலோ மீட்டர் முதல் 22 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கோயில்களாகும். மேலும் ஆற்காட்டிலுள்ள அருள்மிகு 'காசி விசுவநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஏற்கனவேயே சட்டப் பிரிவு 45(1)-கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, மேற்படி திருக்கோயில் ஆரணி அருள்மிகு ஜாகீர் திருக்கோயில்களுடன் தொகுப்புக் கோயிலாக இணைக்கப்பட்டு, மேற்படி அருள்மிகு ஜாகீர் திருக்கோயில்களின் செயல் அலுவலர் மேற்கு திருக்கோயில்களுக்கு பொது செயல் அலுவலராக (Common Executive Officer) செயல்பட்டுக்கொண்டு வருகின்றார்.



தமிழ்நாட்டில் தோல் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்.

59—வினா 19177—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன ?

(ஆ) அதற்காக தமிழக அரசின் முதலீடு எவ்வளவு ?

விடை —

(அ) தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய பணிகள் வருமாறு :

1. சிறுதோல் பதனிடுவோர், ஓரளவு பதனிடப்பட்ட தோலினை செய்யவும், அவைகளை முற்றுப் பெற்ற தோலாக உற்பத்தி செய்யும் பொருட்டு பரவலாக வசதிகளை ஏற்படுத்துதல், தொழிலாளர்களின் தொழில் திறமை மேம்பாடடைய நிலையான பயிற்சிக்கான ஒருங்கிணைந்த கூட்டுச் சாதனம் அமைத்தல் மற்றும் தோல் தொழிலை நவீனமயமாக்குதல்.

2. ஆதி திராவிடர்களின் நலனுக்காக சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் (Special Component Plan for Scheduled Castes) தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பினரின் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை மேற்கொள்ளல்.

3. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலுள்ள கழிவு நீர்ப் பிரச்சினைகளை மத்திய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தீர்த்தல்.

(ஆ) இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 கோடி.

கருப்பம்புலம் கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி துவக்குதல்.

60—வினா 19200—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், கருப்பம்புலம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி துவக்க வேண்டுமென்று கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கையை அரசு ஆராய்ந்தது. 1983-84-ம் கல்வியாண்டில் இவ்வூரில் உயர்நிலைப் பள்ளி துவங்க அனுமதி வழங்கப்படவில்லை.

[1984 அக்டோபர் 13

**மதுராந்தகம் தாலுகாவில் அரசின் கொள்கைகளை படக்காட்சியாக்குதல்.**

61—வினா 19281—**திரு. சி. கணேசன்:** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மூலம் செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்காவில் அரசின் கொள்கைகள் படக்காட்சிகளாகக் காட்டப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், 1982-83-ல் எத்தனை படக் காட்சிகள் காட்டப்பட்டன?

(இ) அவை எந்தெந்த கிராமங்களில் காட்டப்பட்டன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 105 படக்காட்சிகள் காட்டப்பட்டன.

(இ) (1) பவுஞ்சூர், (2) செய்யூர், (3) பெரும்பாக்கம், (4) கல்குளம், (5) கூவத்தூர், (6) புத்தூர், (7) செங்காட்டு (8) கீழ்சேரி, (9) வீரயோகம், (10) கடுகுபட்டு, (7) செங்காட்டு சேரி (காலனி), (12) நெடுமரம், (11) பெரமாள் (14) வேட்டைகார்குப்பம், (15) கூவத்தூர் பேட்டை, (13) கட்டாம்பட்டு, யூர், (17) அக்கிளாம்பட்டு, (18) நத்தம், (16) முகை (20) பாசநல்லூர், (21) மதுராந்தகம், (19) அணைக்கட்டு, ஆரக்குட்டை, (24) சந்தைமேடு, (22) தேர்வீதி, (23, (26) அச்சரப்பாக்கம், (27) சன்னதா வீதி, (25) செட்டிபேட்டை) (29) சீதாபுரம், (30) தொழுப்பேடு, (28) பள்ளிப்பேட்டை, கண்டிகை, (33) மேல்மருவத்தூர், (31) பெரும்பேடு, (32) பலம்பேட்டை, (36) அரையப்பாக்கம், (34) கருங்குழி. (35) மேல் ஈரூர், (39) எல். எம். புரம், (37) கீழ்வலம், (38) மேடு, (42) படாளம், (40) அரசர்கோவில், (41) செட்டி சித்தாலமங்கலம், (43) சானூர், (44) புதுப்பட்டு, (45) (48) மேலகண்டை, (46) மேடவாக்கம், (47) வேடந்தாங்கல், (51) தேவாதூர், (49) உழுதமங்கலம், (50) முறுங்கப்பாக்கம், பெரியகாலனி, (52) காவாத்தூர், (53) அரங்குளம், (54) மழவில்கரணை, (55) சித்தாமூர், (56) பொலம்பாக்கம், (57) பேட்டை, (58) சோத்துப்பாக்கம், (59) கேசவராயன் (63) பலங்கல், (60) பொறையூர், (61) இரும்புலி, (62) முகந்தகிரி, (66) காவானூர், (64) புத்திரக்கோட்டை, (65) இங்கோரு, (69) பிலிப்பாரகோயில், (67) பெருங்கருணை, (68) ஜான்சிபுரம், (70) சித்தாலமங்கலம் ஆகிய கிராமங்களில் காட்டப்பட்டன.



1984 அக்டோபர் 13]

**அறநிலையத்துறையின் மூலம் சுற்றுலா பேருந்துகள் விடும் திட்டம்.**

62—வினா 19288—**திரு. சி. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத்துறையின் மூலம் சுற்றுலாப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) அறநிலையத்துறையின் மூலம் சுற்றுலாப் பேருந்து விடும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மதுரை மருத்துவக்கல்லூரியில் மருந்தாளுநர் டிப்ளமோ மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து கொடுக்கும் திட்டம்.**

63—வினா 19332—**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தாளுநர் டிப்ளமோ (D. Pharmacy) பயிலும் மாணவர்களுக்கு விடுதி வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது உத்தேசமில்லை.

**தண்டரை அணைக்கட்டு வலது புறக்கால்வாய்.**

64—வினா 19350—**திரு. பாபு ஜனார்த்தனன்:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு, செய்யார் வட்டம், தண்டரை அணைக்கட்டில் வலது புறக்கால்வாய் (Vent) எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

வடாற்காடு, செய்யார் வட்டம், தண்டரை அணைக்கட்டில் வலது புறத்திலிருந்து கால்வாய் ஏதும் இதுவரை வெட்டப்படவில்லை. வலது புறக்கால்வாய் வெட்டுவது குறித்தும் மதகு திறப்பது குறித்தும் தலைமைப் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

[1984 அக்டோபர் 13

## கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலின் மொத்த சொத்து.

65 — வினா 19389 — திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலின் மொத்த சொத்து எவ்வளவு?

(ஆ) இவை எந்த அடிப்படையில் குத்தகைக்கு விடப்படுகிறது?

(இ) செலவினம் போக மீதியிருப்பது எவ்வளவு?

விடை —

(அ) இத்திருக்கோயிலுக்குள்ள சொத்து வருமாறு :

| | ஏ. செ. |
|---|---|
| நன்செய் நிலம் .. .. | 0.75 |
| புன்செய் நிலம் .. | இல்லை. |

மேலும் ரூ. 1,53,203 மதிப்புள்ள நகைகள் இத் திருக்கோயிலுக்கு உள்ளன. நகைகள் மறு மதிப்பீடு 1978-ல் செய்யப்பட்டது.

(ஆ) மேற்படி நிலம் விதிகளின்படி பொதுவாக பகிரங்க ஏலத்திலும், ஏலங்களின் சரியான தொகைக்கு போகாவிட்டால் இத்துறை அனுமதி பெற்று தனிப்பட்ட முறையிலும் குத்தகைக்கு விடப்படுகிறது.

(இ) இத்திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்தரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வத்தைச் சார்ந்த 490 திருக்கோயில்களில் ஒன்றாகும். மற்ற திருக்கோயில்களைப் போன்று மேற்படி 490 திருக்கோயில்களுக்கும் தனித்தனியே வரவு-செலவு கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை. எல்லா திருக்கோயில்களின் வரவுகளையும் தேவஸ்வநிதியில் மொத்தமாக வரவு வைத்து அந்நிதியிலிருந்து மேற்படி 490 திருக்கோயில்களுக்கும் திட்டப்படி செலவு செய்து வரப்படுகிறது. எனவே தனியாக கன்னியாகுமரி அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கென்று வரவிலிருந்து செலவினம் போக மீதி இருப்பு எவ்வளவு என்று கணக்கிட இயலாது. எனினும் உத்தேச வரவு-செலவு விபரம் :—

| | (ரூபாய்) |
|---|---|
| வரவு .. .. .. | 6,97,788 |
| செலவு .. .. | 2,78,770 |
| மீதி .. | 4,19,018 |



1984 அக்டோபர் 13]

## புலியூர் குறிச்சிக்கு அருகிலுள்ள குமாரக் கோயில் சொத்து.

66 — வினா 19390 — திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலியூர் குறிச்சிக்கு அருகிலுள்ள குமாரக்கோயில் (முருகன்) மொத்த சொத்து எவ்வளவு?

(ஆ) இவை எந்த அடிப்படையில் குத்தகைக்கு விடப்படுகிறது?

(இ) செலவினம் போக மீதியிருப்பது எவ்வளவு?

விடை—

(அ) மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமாக 98 ஏக்கர் 74 சென்ட் நிலம் உள்ளது.

(ஆ) மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமான 98 ஏக்கர் 74 சென்டில் 15 திருக்கோயில்கள் (முருகன் கோயில் உட்பட) இருக்கின்றன. கோயில் இருப்பிடம் போக மீதியுள்ள இடத்தை பொது ஏலம் மூலமாகவும் தென்னை மரம் போன்றவற்றை கோயிலில் நேரடியாக பலன் பெற்று அதனை பொது ஏலம் மூலமாக விற்று முதல் செய்து வரப்படுகிறது. மேற்படி இடத்தில் 61 ஏக்கர் 17 சென்ட் பாறையாகும். இதனை சர்க்கார் புறம்போக்கு என்று தீர்வை ஏற்படுத்தியுள்ளது.

(இ) இத் திருக்கோயில் சுசீந்திரம் தேவஸ்வத்தைச் சேர்ந்த 490 திருக்கோயில்களில் ஒன்றாகும். மற்ற திருக்கோயில்களைப் போல் வரவு-செலவு கணக்குகள் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தனியாக பராமரிக்கப்படுவதில்லை. எல்லா திருக்கோயில்களின் வரவுக்கும், தேவஸ்வம் நிதியில் பொதுவாக வரவு வைக்கப்பட்டு எல்லா திருக்கோயில்களின் செலவுகளும் திட்டப்படி அவ்வாறே செலவு செய்யப்படுகின்றன. எனவே செலவினம் போக நிகர மீதியிருப்பு எவ்வளவு என்று கூற இயலவில்லை.

எனினும் உத்தேச வரவு-செலவு பின் வருமாறு :

வரவு—

| | 1390 பசலி |
|---|---|
| (1) திருக்கோயில் சொத்து மூலம் வரவு. | ரூ. 5,726.45. |

செலவு—

(1) திருக்கோயில் நித்யப்படிக்கு நெல் 13,338 லி. 083 மி.லி

| | ரூ. பை. |
|---|---|
| (2) படித்தரம் (பணமாக) .. | 61,531.17 |
| (3) அலுவலர்கள் ஊதியம் .. | 48,938.40 |

சுசீந்திரம் தானுமாலைய பெருமாள் கோயில் சொத்து.

67—வினா 19391—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) சுசீந்திரம் தானுமாலைய பெருமாள் கோயில் மொத்த சொத்து எவ்வளவு?

(ஆ) இவை எந்த அடிப்படையில் குத்தகைக்கு விடப்படுகின்றன?

(இ) செலவினம் போக மீதியிருப்பது எவ்வளவு?

விடை—

(அ) இத் திருக்கோயிலுக்குள்ள நிலங்கள் விவரம் :

| | | | ஏ. செ. |
|---|---|---|---|
| நன்செய் | .. | .. | 33.58 |
| புன்செய் | .. | .. | 2.55 |

மேலும் ரூ. 7,50,356 மதிப்புள்ள நகைகள் இத்திருக்கோயிலுக்கு உள்ளன. நகைகள் மறு மதிப்பீடு 1978-ல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிலங்கள் விதிகள்படி பொதுவாக பகிரங்க ஏலத்தில் விடப்படுகின்றன. சரியான துகைக்கு போகாவிட்டால் அற நிலையத் துறை அனுமதியுடன் தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடப்படுகின்றன.

(இ) இத் திருக்கோயில் சுசீந்திரம் தேவஸ்வத்தைச் சார்ந்த 490 திருக்கோயில்களில் ஒன்றாகும். மற்ற திருக்கோயில்களைப் போல் வரவு-செலவு கணக்குகள் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தனியாக பராமரிக்கப்படுவதில்லை. எல்லா திருக்கோயில்களின் வரவுகளும் தேவஸ்வ நிதியில் பொதுவாக வரவு வைக்கப்பட்டு எல்லா திருக்கோயில்களின் செலவுகளும் திட்டப்படி அவ்வாறே செய்யப்படுகின்றன. எனவே செலவினம் போக நிதி மீதியிருப்பு எவ்வளவு என்று கூற இயலவில்லை. எனினும் உத்தேச வரவு-செலவு பற்று—

| | | | | (ரூபாய்) |
|---|---|---|---|---|
| வரவு | .. | .. | .. | 2,26,795 |
| செலவு | .. | .. | .. | 3,44,585 |

இதர கோயில்களின் உபரி வருவாயிலிருந்து இக்கோயில் வருவாய்க்கு மேல் செலவு ஈடு செய்யப்படுகிறது.



கம்பம்—சென்னை சொகுசு பேருந்தில் இட ஒதுக்கீடு.

68—வினா 19407—திரு. கே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம்—சென்னை தடத்தில் பேருந்து எப்பொழுது முதல் நிறுத்தப்பட்டது?

(ஆ) கம்பம்—சென்னை சொகுசு பேருந்தில் பெரியகுளத்திற்கென தனியாக 5 சீட்டுகளாவது ஒதுக்கித் தர முடியுமா?

விடை—

(அ) பெரியகுளம்-சென்னை தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வந்த பேருந்து நிறுத்தப்படவில்லை. இத்திட்டம் 2-8-1982 முதல் தேனி வரை நீட்டிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) கம்பம்-சென்னை வழித்தடத்தில் இயக்கப்பெற்று வரும் பேருந்து கம்பத்திலேயே நிறைந்து விடுவதால் இதில் பெரியகுளத்திற்கென இட ஒதுக்கீடு செய்ய இயலாது. ஆகையால் சென்னை-தேனி என்கிற வழித்தடத்தில் 15 இருக்கைகள் பெரியகுளம் பயணிகளுக்கென இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2-8-1982 முதல் செயல்பட்டு வருகிறது.

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தல்.

69—வினா 19424—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சமூக நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ராஜபாளையம் அல்லது நாரைக்கிணறு பிரிவில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நாமகிரிப்பேட்டையில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அது நாரைக்கிணறு என்ற இடத்திலிருந்து 12 கி. மீ. தொலைவிலும், ராஜபாளையம் என்ற இடத்திலிருந்து 4½ கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. ராஜபாளையம் அல்லது நாரைக்கிணறு அருகிலுள்ள பெட்டலா, முள்ளுக்குறிச்சி, திம்மநாயக்கன்பட்டி மற்றும் ஜேடர்பாளையம் ஆகிய இடங்களில் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் கால்நடைகளின் எண்ணிக்கை 10,000க்கு குறைவாக உள்ளது. எனவே, அவ்விடங்களில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[1984 அக்டோபர் 13

தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கு நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி.

70—வினா 19462—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதற்கட்டபணி நடைபெற்ற தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் மீண்டும் பணிகளை செய்ய எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) நாமகிரிப்பேட்டை ஒன்றியத்துக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) தற்போது எடுக்கப்பட்டுள்ள பணிகள் எவை ? எவை ?

விடை—

(அ) ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

சென்னை நகரில் 1983ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காலரா, அம்மை நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்.

71—வினா 19486—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் 1983 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காலரா, அம்மை நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

சென்னை மாநகரில் 1983 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காலரா, அம்மை நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| மாதம். | | காலரா. | சின்னம்மை. | தட்டம்மை. |
|---|---|---|---|---|
| ஜனவரி | .. | 59 | 243 | 114 |
| பிப்ரவரி | .. | 120 | 457 | 183 |



1984 அக்டோபர் 13]

*" Collecting of Fixed Deposits from the Public employees by TIDCO "*

72—வினா 19518—திரு. எஸ். இராசாராமன் : Will the Hon. the Minister for Law, Industries be pleased to state :

(a) Whether TIDCO has been collecting Fixed Deposits from the Public and its employees,

(b) If so, the details thereof and

(c) (1) the total permissible limit for collection of s h fixed deposits and

(2) actual collections made.

விடை—

(அ) ஆம்.

(ஆ) கம்பெனி (நிதி பெற்றுக் கொள்ளுதல்) சட்டம் 1975-ல் உள்ள கோட்பாடுகளுக்கு உட்பட்டு நிதி ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(இ) (1) 31-3-1983 அன்று வரை மொத்தம் ரூ. 932.42 இலட்சம் வரை வைப்பு நிதியாக ஏற்றுக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(2) 31-3-1983 முடிய மீதமுள்ள வைப்பு நிதி ரூ. 243.515 இலட்சம் ஆகும்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுக்கொள்ளும் குறித்தகால வைப்பு நிதி.

73—வினா 19519—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மக்களிடமிருந்தும் பணியாளர்களிடமிருந்தும் குறித்த கால வைப்பு நிதியைப் பெற்றுக்கொள்ளும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் எவை ?

(ஆ) அப்படி பெற்றுக்கொள்கிற தொகையில் அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு எவ்வளவு ?

(இ) அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுகிறது.

(ஆ) ரூபாய் 42.6 கோடி.

(இ) ரூபாய் 28.00 கோடி (31-3-1983 முடிய உள்ள கால அளவிற்கு).

### தமிழக கோயில்களின் ஆண்டு வருமானம்.

74—வினா 19580—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களின் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

விடை—

தமிழ்நாடு முழுவதும் உள்ள திருக்கோயில்களின் ஒரு ஆண்டுக்குரிய வருமானம் ரூ. 17.72 கோடி.

### வனத்துறையில் 1982-83-ம் ஆண்டில் திருட்டு வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள்.

75— வினா 19583—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி அறநிலைபத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத்துறையில் 1982-83-ம் ஆண்டில் திருட்டு வழக்கில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(ஆ) தண்டனை மூலம் எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—

(அ) 42,269 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(ஆ) ரூ. 41,14,843.72.



### காட்டுமன்னார் கோயில் நகரில் நிரந்தர சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் நிறுவும் திட்டம்.

76—வினா 19674—திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில் நகரில் நிரந்தர சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை —

அத்தகைய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

### தென்னாற்காடு மாவட்டம் வாலாஜா ஏரியை தூர்வாரும் செயற் குறிப்பு.

77 —வினா 19683 —திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாத்தோப்பு ஆயக் கட்டுக்குட்பட்ட வாலாஜா ஏரியை முழுமையாக தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை —

இல்லை.

### இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகள் எண்ணிக்கை.

78 —வினா 19748—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் உள்ளன?

(ஆ) அவற்றுள் கூட்டுறவுத் துறை நடத்தும் கடைகள் எத்தனை?

(இ) நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகள் எத்தனை?

விடை —

(அ) 1,345 நியாய விலைக் கடைகள் உள்ளன.

(ஆ) கூட்டுறவுத் துறை நடத்தும் கடைகள் 1,324.

(இ) நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகள் 21.

[1984 அக்டோபர் 13

### கல்லுப்பட்டி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்தல்.

79—வினா 19773—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி கல்லுப்பட்டி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் உத்தேசம் உள்ளதா?

விடை—

தே. கல்லுப்பட்டி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்ய சில அவசியமான பணிகளை செய்ய வேண்டியுள்ளது. அப்பணிகளை செய்வதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை—ஆதலால் இதுபற்றி மேலும் பரிசீலித்து வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

### திருவில்லிப்புத்தூர் வட்டம் காடனேரியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

80—வினா 19783—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வட்டம் காடனேரியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

திருவில்லிப்புத்தூர் வட்டம் காடனேரி கிராமத்திலுள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 325. இந்த கிராமத்திலிருந்து 6 கி.மீ. தூரத்திலுள்ள சுந்தரபாண்டியம் கிளை நிலையத்திலிருந்தும் 5 கி.மீ. தூரத்தில் உள்ள குன்னூர் கால்நடை மருத்துவ மனையிலிருந்தும், 4 கி.மீ. தூரத்திலுள்ள அரசப்பட்டி கால்நடை மருத்துவ மனையிலிருந்தும், காடனேரி கிராமத்தின் கால்நடைகளின் அனைத்து மருத்துவ தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. எனவே காடனேரி கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவ கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.



1984 அக்டோபர் 13]

### குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்வோருக்கு அளிக்கும் ஊக்கத் தொகையை அதிகரிக்கும் செயற்குறிப்பு.

81—வினா 20534—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்வோருக்கு அளிக்கும் ஊக்கத்தொகையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1983 பிப்ரவரி 28-ம் நாளிட்ட ஆணை எண் 303-ல் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ. 85-ஐ ரூ. 115 ஆக உயர்த்தியும் ஆண்களுக்கு வழங்கப்பட்டுவந்த ஊக்கத்தொகை ரூ. 75 ஐ ரூ. 105 ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### இராமநாதபுரத்தில் பிளாஸ்டிக் பொருள்கள் தயார் செய்யும் தொழிற்கூடம் அமைத்தல்.

82—வினா 19798—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிளாஸ்டிக் பொருள்கள் தயார் செய்யும் தொழிற்கூடம் இராமநாதபுரத்தில் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் சிறு தொழிற்சாலை அரசுத் துறையில் தொடங்கும் உத்தேசம் இல்லை. ஆனால் குன்றக்குடியில் பி.வி.சி. பைப்புகள் தயாரிப்பதற்கு ஒரு தொழிற் கூட்டுறவு சங்கமும், பாலித்தீன் கோணிப் பைகள் தயாரிப்பதற்கு ஒரு தொழிற் கூட்டுறவு சங்கமும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஓசூர் சந்திரசூடேஸ்வரர் சுவாமி கோயில் திருப்பணி.

83—வினா 19802—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி, ஓசூர் சந்திரசூடேஸ்வரர் சுவாமி கோயிலைத் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இல்லை.

### மதுரையிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு.

84—வினா 19805—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, சொந்தக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### சவலாப்பேரி கிராமத்தின் அருகில் அணை கட்டுதல்.

85—வினா 19823—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு உப்போடையில் சவலாப்பேரி கிராமத்தின் அருகில் அணை கட்ட வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆவியல் உள்ளது.

### லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் பணிகளின் மதிப்பு.

86—வினா 19896—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் எத்தனை பணிகளின் மதிப்பு (Revise) செய்யப்பட்டுள்ளன?



(ஆ) அவைகளின் மதிப்பு எவ்வளவு?

(இ) Estimate Revise செய்யப்பட்டதன் காரணங்கள் யாவை?

விடை—

(அ) 34 பணிகளின் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவைகளின் மொத்த மதிப்பீடு ரூ. 2,90,500 ஆகும்.

(இ) சாலைப் பணிகளின் நீளம் ஏற்கெனவே மதிப்பிட்டதைவிட கூடுவதாலும், பள்ளமான பகுதிகளில் முதலில் முரம்பு பரப்பி பின்னர் ஜல்லி போட வேண்டியுள்ளதாலும் சிறு பாலங்களில் முதலில் ஒரு வரிசைக் குழாய் அமைக்கத் திட்டமிட்டதற்கு பதில் இடங்களைப் பொறுத்து தண்ணீர்ப் போக்கைக் கருதி ஒன்றுக்கு மேற்பட்ட வரிசைக் குழாய்கள் அமைக்க வேண்டி ஏற்பட்டதாலும், பள்ளிக் கட்டிடங்களுக்கு கட்டுமான பொருட்கள் கூடுதல் தேவை ஏற்பட்டதாலும் மதிப்பீடுகள் திருத்தியமைக்க வேண்டியதாயிற்று.

### ஜீப் வசதி, தொலை பேசி வசதி பெற்றுள்ள கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் எண்ணிக்கை.

87—வினா 19927—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1983 ஏப்ரல் முடிய ஜீப் வசதி, தொலை பேசி வசதி பெற்றுள்ள கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் (Divisional Development Officer) எத்தனை?

(ஆ) மீதமுள்ளவர்களுக்கு எப்போது கொடுக்கப்படும்?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள 52 கோட்ட வளர்ச்சி அலுவலர்களில் 1983 முடிய 36 கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் கோட்ட வளர்ச்சி அலுவலருக்குத் தவிர மற்ற எல்லா மாவட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர்கட்கும் தொலை பேசி தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்பொழுது புதிய ஜீப்புகள் வாங்க தற்காலிக தடை விதித்துள்ளது. இந்தத் தற்காலிகத் தடை நீக்கப்பட்ட பிறகு மீதமுள்ள 16 கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு புதிய ஜீப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாகர்கோயில் கோட்ட வளர்ச்சி அலுவலருக்கு தொலைபேசி வசதி அளிக்க மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன்மொழிவு வரப் பெற்றதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஊரகவளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### மானாமதுரை தொகுதியில் இற்றுப்போன இரும்பு மின் கம்பங்களை மாற்றி அமைத்தல்.

88—வினா 19944—திரு. க. பாரமலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதியைச் சேர்ந்த கொந்தகை கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள சில ஊர்களிலும் இரும்பு மின் கம்பங்கள் இற்றுப்போய் சாய்ந்துவிடும் நிலையில் உள்ளன என்பது பற்றி பொதுமக்களிடமிருந்து தகவலெதுவும் அரசுக்கு கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றுக்குப் பதில் புதிய கம்பங்கள் நட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மானாமதுரைத் தொகுதியைச் சேர்ந்த கொந்தகை கிராமத்தில் ஐந்து ஆர். எஸ். ஜே. கம்பங்களும், கொந்தகை கிராமத்தில் சுற்றுப்புற ஊர்களான இலந்தைக்குளம், மேல வேலூர் கிராமங்களில் 6 மின் கம்பங்களும் சேர்த்து மொத்தம் 11 மின் கம்பங்கள் இற்றுப் போனதினால் சேதமடைந்தன. கொந்தகை கிராமத்தில் இற்றுப் போன 5 மின் கம்பங்கள் 19-7-1983 அன்றும், இலந்தைக்குளம், மேல வேலூர் ஆகிய கிராமங்களில் பழுதுபட்ட 6 மின் கம்பங்கள் 29-8-1983 அன்றும் புதிய ஆர்.சி.சி. மின் கம்பங்களைக் கொண்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

### ஆற்காடு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்க்கும் பணி.

89—வினா 19945—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதுபட்டுள்ள கட்டிடம் சீர்படுத்தி புதுப்பிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?





விடை—

இப்பள்ளிக் கட்டடத்தைப் பழுது பார்ப்பதற்கு தேவையான மதிப்பீடு பட்டியலை அனுப்பி வைக்கும்படி வேலூர் செயற் பொறியாளர் கோரப்பட்டுள்ளார் என்றும், அவரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டவுடன் '' சிறப்பு மராமத்துக்கள் '' என்ற தலைப்பின் கீழ் இவ்வாண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 3 இலட்சம் தொகைக்குள் இப்பணி எடுத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கப்படும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### சேலம் மாவட்டத்திலுள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

90—வினா 19965—திரு.இ. கணேசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் எத்தனை இயங்கி வருகின்றன ? எந்தெந்த இடங்களில்?

(ஆ) அரசு செய்யும் உதவி என்ன ?

விடை—

(அ) சேலம் மாவட்டத்தில் 42 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் பின்வரும் இடங்களில் இயங்கி வருகின்றன :—

1. துசூர்
2. காவகாரன்பட்டி
3. நெ. 3, கொமாரபாளையம்
4. என். புதுப்பட்டி
5. கோடாசேரி
6. முட்டலாடம்பட்டி
7. வத்திவாடி
8. செவந்திப்பட்டி
9. தேவராயபுரம்
10. கபிலர்மலை
11. தூத்துக்குளம்
12. மூலகாடு
13. மடகாசம்பட்டி
14. அருகனூர்
15. கம்மாலப்பட்டி
16. வீரகானூர்

17. நாவக்குறிச்சி
18. கீரிப்பட்டி
19. கல்பாரப்பட்டி
20. கல்லநாதம்
21. கல்பகனூர்
22. அய்யனார்பாளையம்
23. அலம்ததுபட்டி
24. நடுப்பட்டி
25. ராமமூர்த்தி நகர்
26. உப்பிலியம்பட்டி
27. மேச்சேரி
28. தாரமங்கலம்
29. காவேரிபுரம்
30. சந்தைப்பேட்டை
31. ஆட்டுக்காரனூர்
32. சரக்கப்பிள்ளியூர்
33. அரூர்பட்டி
34. வேலூர்
35. சின்னதண்டா
36. இடப்பாடி
37. வெள்ளேரிவெள்ளி
38. அழகப்பன் பாளையம்பலூர்
39. மகுடம் சாவடி
40. இருப்பவல்லி
41. பூலம்பட்டி
42. சித்தூர்

(ஆ) 1. சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 3,000 முதல் ரூ. 4,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

2. ஆடுகள் வாங்குவதற்காக, சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்ட உதவி அலுவலர் (ஆடு அபிவிருத்தி), சேலம் அவர்களால் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களுக்கு பின்வரும் முறைப்படி மானியம் அளிக்கப்படுகிறது.

(i) சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதம் ;

(ii) குறுநில விவசாயிகள் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 33 1/3 சதவீதம்.





3. அங்கத்தினர்களுடைய ஆடுகள் இறந்து போனால் அந்த நட்டத்தை ஈடுகட்ட ஆடுகள் காப்பீடு (Insurance) செய்யப்படுகின்றன.

4. ஆடுகளுக்கு ஆண்டொன்றுக்கு நான்கு முறை குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது.

5. ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் நடமாடும் கால்நடை மருந்தகம் அவ்வப்போது ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்று தகுந்த சிகிச்சை மற்றும் தடுப்பூசி போன்ற நோய்த் தடுப்புப் பணிகள் செய்யப்படுகின்றன.

6. இந்த ஆடு வளர்ப்புச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்க கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவு சங்க முதுநிலை ஆய்வாளர் ஆகிய அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

### புதுக்கோட்டை—சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் இர்வு நேரத்தில் சூப்பர் டீலக்ஸ் விடல்.

91—வினா 20014—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் விடப்படும் பேருந்தை இரவு நேரத்தில் மட்டுமாவது சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸாக விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போது இயக்கப்பெற்றுவரும் பேருந்தினை சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸாக மாற்றும் உத்தேசம் ஏதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

### பேராம்பூர் கிராமத்தின் தெரு விளக்குகளை குழல் விளக்குகளாக மாற்றும் கோரிக்கை.

92—வினா 20015—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதி விராலிமலை ஒன்றியம் பேராம்பூர் கிராமத்தில் தெருவிளக்குகளை குழல் விளக்குகளாக மாற்றும்படி கோரிக்கை வந்தும் ஊராட்சி ஒன்றியத்தில் இன்னும் நடவடிக்கை எடுக்காதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) உடனடியாக குழல் விளக்காக மாற்ற ஆவன செய்யப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்படி பணி ஆரம்பிக்கப்பட்டு முடியும் தருவாயிலுள்ளது.

*The number of Agricultural Colleges in the State.*

93—வினா 20041—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

The number of Agricultural Colleges in the State, with the number of students studying in each, community wise:

விடை—

மாநிலத்திலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளும், அவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் சாதி பிரிவுகளும் கீழ்வருமாறு :—

| | பிற வகுப்பினர். (1) | பிற்பட்ட வகுப்பினர். (2) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலை ஜாதியினர். (3) | மைய அரசினால் நியமிக்கப்படுபவர். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|---|
| 1 வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர். | 85 | 294 | 74 | 31 | 484 |
| 2 வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை. | 59 | 235 | 72 | .. | 366 |
| 3 வேளாண்மைக் கல்லூரி, அண்ணாமலை நகர். | 108 | 158 | 62 | .. | 328 |
| | | | | மொத்தம் .. | 1,178 |



1982–83ல் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை.

94—வினா 20192—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய 1982-83-இல் எத்தனை பாஸ் வழங்கப்பட்டன ?

(ஆ) எந்தத் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்டன ?

விடை—

(அ) போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய 1982-83-இல் பத்திரிகை நிருபர்களுக்கும் மற்றும் பணியாளர்களின் குழந்தைகட்கும் மொத்தம் 4,059 இலவச பாஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) அவை ஏற்கெனவே அரசால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் திருக்கோயிலின் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டும் செயற்குறிப்பு.

95—வினா 20330—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், இடும்பவனம் திருக்கோயிலின் சார்பில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு ஏதும், உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், இடும்பவனம் அருள்மிகு சற்குணநாதசுவாமி திருக்கோயிலின் சார்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

96—வினா 20331—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தாலூகா, தகட்டூர் அருள்மிகு பைரவ நாதர் திருக்கோயிலின் சார்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் எப்பொழுது கட்டப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தகட்டூர் அருள்மிகு பைரவநாதர் திருக்கோயிலின் நிதி நிலைமை அதன் அன்றாட பராமரிப்பிற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. தற்பொழுது பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்யும் சாத்தியக்கூறும் ஏதுமில்லை. எனவே, இத் திருக்கோயிலின் சார்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டத்திற்குரிய சாத்தியக்கூறு இல்லை.

97—வினா 20332—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் அருள்மிகு மறைக்காட்டீசர் திருக்கோயிலில் புதிய கட்டிடம், திருமண மண்டபம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில் அந்த வேலைகள் எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு மறைக்காட்டீசர் திருக்கோயிலில் புதிய திருமண மண்டபம் கட்டும் திட்டம் உள்ளது. அவ்வேலையின் மதிப்பு ரூ. 1,50,000. இப்பணியினை மேற்கொள்வதற்கு தற்போது இத்திருக்கோயிலில் நிதிவசதி இல்லை. நிதிவசதி ஏற்படும்போது இவ்வேலை மேற்கொள்ளப்படும்.





**வேதாரண்யம் அருள்மிகு மறைக் காட்டீசர் கோயில் ஊழியர்களுக்கு கோயில் நிலத்திலிருந்து வீட்டு மனைகள் ஒதுக்கப்படல்.**

98—வினா 20335—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் அருள்மிகு மறைக்காட்டீசர் கோயில் ஊழியர்களுக்கு வீட்டுமனைகள் கோயில் நிலத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு எவ்வளவு நிலம் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு மறைக்காட்டீசர் என்கின்ற வேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் பணியாளர்கள் 8 நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு மொத்தம் 0.44 சென்ட் புஞ்சை மனைப்பகுதி நிலம் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு (மனைப்பகுதிக்கு) கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், திருக்கோயில் பணியாளர் பெயரும். | கிராமம், சர்வே எண். | குத்தகைக்கு விடப் பட்டுள்ள விஸ்தீரணம். | குத்தகை தொகை பசலி 1-க்கு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ஏ. செ. | ரூ. பை. |
| திருவாளர்கள் :— | | | |
| 1 கே. பழனிவேல் .. | வேதாரண்யம், நாகப்பட்டிணம் வீதியில் மேல் புறம் 175/59. | 0.06 | 60.00 |
| 2 ஆர். தியாகராஜன் .. | டி | 0.06 | 60.00 |
| 3 எம். வீரப்பன் .. | டி | 0.06 | 60.00 |
| 4 என். சுப்பிரமணியன் .. | டி | 0.06 | 60.00 |
| 5 கே. சங்கரன் .. | டி | 0.07 | 60.00 |
| 6 ஆர். அனந்தகிருஷ்ணன் | டி | 0.06 | 60.00 |
| 7 கே. சிவராமன் .. | டி | 0.03½ | 30.00 |
| 8 எம். சுப்பையன் .. | டி | 0.03½ | 30.00 |

[1984 அக்டோபர் 13

தஞ்சை மாவட்டம், வேதாரண்யம், தலை ஞாயிறு ஒன்றியங்களில் சொந்த அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

99—வினா 20347—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம், தலைஞாயிறு ஒன்றியங்களில் சொந்த அலுவலகம் இல்லாத ஊராட்சிகள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு அலுவலகம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) வேதாரண்யம் —

| | |
|---|---|
| மொத்த ஊராட்சிகள் .. .. .. | 36 |
| சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத ஊராட்சிகள். | 16 |

தலைஞாயிறு —

| | |
|---|---|
| மொத்த ஊராட்சிகள் .. .. .. | 26 |
| சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத ஊராட்சிகள். | 8 |

(ஆ) நிதி நிலைமைக்கு ஏற்ப, வரும் ஆண்டுகளில் தேசிய ஊரக வேலை-வாய்ப்புத் திட்டம் மற்றும் அரசு திட்டங்களிலும் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐயன்பேட்டை கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவக்குதல்

100—வினா 20359—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84 தமிழகத்தில் எத்தனை புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அரசு எண்ணியுள்ளது ?

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம் ஐயன்பேட்டை கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படுமா ?

விடை—

(அ) 1983-84 ஆம் கல்வியாண்டில் 14 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம் ஐயன்பேட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க இவ்வருடம் அனுமதி வழங்கப்படவில்லை.



1984 அக்டோபர் 13]

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்

தமிழக முதல்வர் உடல் நலம் குறித்து

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்களுடைய உடல் நலத்தைப்பற்றி ஒரு சிறு அறிக்கை.

''The Hon. Chief Minister is undergoing peritoneal dialysis. He has shown good clinical improvement and his general condition is satisfactory.''

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாட்டில் குறிப்பாக வடஆற்காடு மாவட்டத்தில் நெற்பயிரை நோய் தாக்சியிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், என். வரதராஜன், என். பழனிவேல், டி. மணி, ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், செ. இராமலிங்கம், கி. சத்தியசீலன், பொ. உத்திராபதி, சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம், எம். செல்ல முத்து, கே. அய்யாறு வாண்டையார், எஸ். இராசாராமன். மற்றும் இல. பலராமன் ஆகியோர், "தமிழ்நாட்டில் பரவலாகக், குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலும் சம்பா பயிரை துங்குவைரஸ் நோய் தாக்குவதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும், நெல் பயிருக்கு பலவிதமான நோய்கள் ஏற்பட்டிருப்பதினால் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளிடையே ஏற்பட்டிருக்கும் கவலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவையினுடைய தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற அறிக்கையில் கொடுத்துள்ள விவரங்களைத் தாங்கள் படித்தபடி, தமிழகத்திலே பரவலாக பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. துங்குவைரஸ் என்ற நோயினால்

பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மெத்தவும் அவதிக்குள்ளாகி
இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

இந்த நோய் எப்படி வந்தது, இதற்கு என்ன பரிகாரம்
என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய வேளாண்
மைத்துறை உரிய நடவடிக்கையை எடுக்காமல் மெத்தனமாக
இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்கள் மூலமாக
அரசுக்கு மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

காரணம், ஏற்கனவே, வடஆற்காடு, செங்கற்பட்டு, தென்
ஆற்காடு, தஞ்சை, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்கள், இன்
னும் பல்வேறு மாவட்டங்களில் பெரும்பாலும் இந்த நோய்
மூன்றாம் போகம் என்று சொல்லப்படுகின்ற ஐ.ஈ.டி. 1724
பயிர்களைத் தாக்கி இது அடியோடு அழித்துவிட்டது. எப்படி
ஒரு மனிதனுக்குக் கடுமையான குஷ்டம் ஏற்பட்டால் அவனது
அவயவங்கள் குறைந்து காணப்படுமோ அதைப் போல இந்தப்
பயிரானது, விவசாயி உழுது, அடி உரமிட்டு, பயிரிட்டு, நடவு
போட்டு, மேல் உரம் போட்டு, செழிப்பாக வளரும் கட்டத்தில்
தான் இந்த நோய் தாக்குகிறது.

(முற்பகல் 10-20)

அந்தக் கட்டத்திலே தான் இந்தத் துங்குவைரஸ், மஞ்சள்
கொட்டை போன்ற நோய் ஏற்பட்டு பயிரை அடியோடு அழித்து
விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லாமல் செய்து
விடுகின்றது. அப்படி எங்களுடைய பகுதியில் மூன்றாம் போகம்
பாதிக்கப்பட்ட அந்தக் காலத்திலே என்னைப் போன்ற சட்டமன்ற
உறுப்பினர்கள் போய்ப் பார்த்தோம். என்னுடைய கலசப்
பாக்கம் தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு கிராமங்களுக்குச்
சுற்றுப்பயணம் செய்த நேரத்திலே நான் அந்த நிலைமைகளைக்
கண்கூடாகப் பார்த்தேன். எங்களுடைய கட்சியினைச் சேர்ந்த
பூந்தமல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு.
ராஜரத்தினம் அவர்கள் மற்றும் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர்
ஆகிய அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும்
வேளாண்மைத் துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதி இருக்கி
றோம். அப்போதே வேளாண்மைத் துறை அதிகாரிகள் என்
னிடத்திலே சொன்னார்கள். இந்த நோய் மூன்றாம் போகத்
தோடு நின்றுவிடாது, சம்பா பயிரையும் இது தாக்கக் கூடும்
என்ற தகவலை அந்த வேளாண்மைத்துறை அதிகாரிகள் சொன்
னார்கள். அதற்குப் பிறகு தான் நாங்கள் இந்தக் கடிதத்தை
எழுதினோம்.

அதுமட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டத்திலே இந்தக் குறைகள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்
களாலும் எடுத்து வைக்கப்பட்டபோது மாவட்ட ஆட்சித்





தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்
தார்கள். ஆனால் இதுவரையில் சரியான முறையில் ஒரு பாது
காப்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான்
இங்கே தெரிவித்து மெத்த வருத்தப்படுவது மட்டுமல்ல, இந்த
அரசு பொறுப்பாக இந்தக் காரியங்களை எல்லாம் கவனிக்கின்றதா
என்பதைக் கூட நான் வேதனையோடு கேட்க விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை குறித்து எங்களுடைய திராவிட
முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் கூட பத்திரிகை
நிருபர்களிடத்திலே சொல்லுகின்றபோது இந்த நோய் பரவ
லாகத் தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கின்றது ; எனவே உடனடி
யாக அரசு கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று அந்த நேரத்திலே சொன்னது குறித்து பத்திரிகைகளிலே
எல்லாம் செய்திகள் வந்தன. இந்த நோய் ஏற்பட்டது குறித்து
ரேடியோவிலேயும், பத்திரிகைகளிலேயும் செய்திகள் வந்தன.
அப்படிப்பட்ட நேரத்தில் இதன் இயக்குநர்களாக இருக்கின்ற
அதிகாரிகள் ரேடியோவிலே சொன்னதை நான் கேட்டேன்.
ஆனால் என்ன நடவடிக்கை இதற்காக அதிகாரிகளால் எடுக்கப்
பட்டிருக்கின்றது என்பது குறித்து அந்த நேரத்திலே சொல்ல
வில்லை. அவர்கள் சொல்கிறார்கள் இந்த நோய் பரவுவது
தமிழகத்தின் துரதிஷ்டவசமானது என்று. இதை நான் அன்று
கேட்டபோது மெத்த வருத்தப்பட்டேன். நோய் பரவுவது
துரதிஷ்டவசமானதாக இருக்கலாம். ஆனால் என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அதைச் செய்வதற்கு அந்த
அதிகாரிகள் தவறி விட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்
திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கூடச் சொன்னதாகப்
பத்திரிகையில் பார்த்தோம். அதற்கான மருந்துகள் எல்லாம்
மலிவு விலையில் தரப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் சொல்லிய
தாகப் பத்திரிகையில் செய்திகள் வந்தன. இந்தச் செய்தியினைப்
பார்த்தவுடன் வேளாண்மைத் துறையின் மருந்துக் கிடங்கு
களுக்குச் சென்று மருந்தை எடுப்பதற்காக சிறிய விவசாயிகளும்
மற்றும் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்
கான அதிகாரிகளைத் தேடி அதற்கான பெர்மிட் என்று சொல்லத்
கூடிய சர்ட்டிபிக்கேட்டைப் பெற்று ஆங்காங்கே ஊராட்சி
ஒன்றிய அளவிலே இருக்கின்ற கிடங்குகளுக்குச் சென்றால் மருந்து
இல்லை என்ற பதில்தான் கிடைக்கின்ற நிலைமை ஏற்பட்டது.
ஆனால் அதே நேரத்தில் தனியார் கடைகளில் இந்த மருந்துகள்
கிடைக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே அரசுக்குச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையினைப் பொறுத்த வரையில் நல்ல
அதிகாரிகள் இருக்கலாம். அத்தனை பேரும் தவறு செய்கிறார்
கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் பெரும்
பாலான மருந்துகள் வந்தவுடன் அவற்றுக்கான தவறா

பெர்மிட்டுகளைத் தயாரித்து அந்த மருந்துகளை நகரங்களில்
இருக்கக் கூடிய கடைகளில் விற்று விடுகிறார்கள் என்பதைத் தான்
ஆங்காங்கே இருக்கின்ற சிறிய விவசாயிகளும் அங்கே சென்று
வருகின்றவர்களும் சொல்லக்கூடிய நிலைமை இருக்கின்றது
என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடக் கேட்கலாம். ஆனால்
இது போன்ற நூற்றுக்கணக்கான பெர்மிட்டுகளை வேண்டுமானா
லும் நான் இந்த மன்றத்திலே தர முடியும். ஊசாம்பாடி
கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த
விவசாயிக்கும், கலசப்பாக்கம் தொகுதியிலே துரிஞ்சாபுரம் கிரா
மத்தைச் சேர்ந்த மொட்டையன் என்ற ஒருவருக்கும் 20-9-84
அன்று சர்ட்டிபிகேட் பெற்றதற்குப் பிறகும் அவர்களுக்கு இது
வரை மருந்து கிடைக்கவில்லை. நான் அமைச்சரைக் கேட்டுக்
கொள்ள விரும்புவதெல்லாம் பயிர்கள் மஞ்சள் குட்டைநோயினால்
பாதிக்கப்பட்டு விட்டன என்று வேளாண்மைத் துறை அதிகாரிகள்
சொன்னாலுங்கூட உடனடியாக மருந்து கிடைத்து, அந்த
மருந்தை நாங்கள் அடித்தாலுங்கூட, அந்த வியாதியைக் கட்டுப்
படுத்த முடியாத சூழ்நிலை இருக்கும்போது, மருந்துக்காக, நாள்
கணக்காக, மாதக் கணக்காக அலைந்தால் அந்த வியாதியைக்
கட்டுப்படுத்த முடியுமா என்பதை வேளாண்மைக் குடும்பத்திலே
பிறந்த வேளாண்மைத் துறை அமைச்சரே சிந்தித்துப் பார்க்க
வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று, இன்றைய தினம் அடிக்கப்பட வேண்டுமென்று
சொல்லப்படுகிற மருந்து பீரிட்டான் என்று சொல்லப்படுகிற
மருந்தாகும். அதனுடைய விலை ஒரு கிலோ ரூ. 22. ஒரு ஏக்கருக்கு
5 கிலோ மருந்து அடிக்கப்பட வேண்டுமென்று வேளாண்மைத்
துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். 5 கிலோ என்று சொன்னால்
ரூ. 100-க்கு மேலாகிறது. ஒரு ஏக்கர் வைத்திருக்கிற சாதாரண
விவசாயி, ஒரு முறைக்கு இரண்டு முறை இவ்வளவு பெரிய தொகை
யைச் செலவழித்து மருந்து அடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.
இன்றைக்கு விவசாயிகளுடைய பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்
பட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் இந்த ஆண்டு மானா
வாரி மணிலா பயிர் நூல் பூச்சி என்ற பூச்சியால் அடியோடு தாக்
கப்பட்டுள்ளது. விதை மணிலா கூட கிடையாது. எந்த விவசாயிக்
கும் கிடையாது. சிறு விவசாயிக்கும் கிடையாது, பெரிய விவசாயிக்
கும் கிடையாது. மணிலா பயிரும் அழிக்கப்பட்டு விட்டது. இந்த
நெல் பயிரும் இப்படி அழிக்கப்பட்டு விடுகின்றது என்று சொன்
னால், விவசாயிகளை நாம் எப்படிக் காப்பாற்றப் போகிறோம்
என்பதை அரசு சிந்திக்க வேண்டும். நான் அரசைக் கேட்டுக்
கொள்வதெல்லாம், எப்படி நாட்டிலே காலரா அல்லது வேறு
வகையான தொத்து வியாதிகள் ஏற்படும்போது, நீங்கள் பெரிய





விவசாயி, காசு கொடுத்தால்தான் உங்களுக்குக் காலரா தடுப்பு
போடுவோம் என்று சொல்வதில்லையோ, அதைப் போல
அரசு சிறிய விவசாயிக்கு மானியம் கொடுத்து அவன் அடித்தால்
கூட, பக்கத்து நிலத்திற்குப் பரவுகின்ற கடுமையான நோயாக
இருக்கிற காரணத்தால் நெல் பயிரில் அந்த வியாதி எங்கே தென்
பட்டாலும் அல்லது எந்தக் கிராமத்தில் ஏற்பட்டாலும் உடனடி
யாக இலவசமாகவே தேவையான மருந்தைத் தெளித்து, அந்த
வியாதியைக் கட்டுப்படுத்துகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்
கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே அரசாங்
கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மூன்றாம் போகம் பயிரிட்டு பாதிக்கப் பட்டி
ருக்கிற விவசாயிகள், அதுவும் குறிப்பாக, வட ஆற்காடு, செங்கல்
பட்டு மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறார்கள். அதை நானே
நேரில் பார்த்தேன். அது போல் என்னுடைய நிலமும் அந்தப்
பூச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சட்ட மன்ற உறுப்
பினர்கள் பலரது நிலங்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றன.
ஏழை, எளிய விவசாயிகள் நிலங்கள் கூட பாதிக்கப்பட்டு அவர்
கள் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்
கொள்வது, பாதிக்கப்பட்ட சிறிய விவசாயிகளுக்கு, நிலத்தி
னுடைய உரிமையாளருக்கு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் இனாமாக,
மானியமாக வழங்கி விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும், துரித
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. இதுவரையில் அரசாங்
கம் மெத்தனமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு
பேர்கள் காதிலே இந்தப் பிரச்சினையைப் போட்டாலும் இந்த
அரசாங்கத்தின் செயல் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்து
வருகிறது. அதனால் அரசாங்கம் விரைந்து உடனடியாக நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லி, இன்னும் விரிவாகப் பல
சட்டமன்ற உறுப்பினர்களும் தானும் பல மருத்துக்களைச்சொல்ல
வேண்டியிருக்கிற காரணத்தினால் இந்த அவையினுடைய இதர
அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று
பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் பணிவுடன் கேட்டுக்
கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து
அமர்கிறேன்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டம், திருச்சி, வட ஆற்காடு, இன்னும்
புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் மட்டுமின்றி, தமி
ழகம் முழுவதும் விவசாயிகள் விவசாயம் செய்த நெல் பயிரிலிருந்து
கதிர்கள் வருகின்றபொழுது புகையான் என்ற பூச்சி கடுமையாகத்
தாக்கி பல ஆயிரக்கணக்கான ஏக்கர்—குறிப்பாக தஞ்சை மாவட்
டத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறது. சிறு விவசாயியானாலும் பெரு
விவசாயியானாலும் அவர்கள் பாடுபட்டு, கஷ்டப்பட்டு பயிரிட்டு
அதிலே கதிர் வருகின்ற சூழ்நிலையில், அது பால் கட்டு என்று
சொல்கின்ற சூழ்நிலையில் இருக்கும்போது, மாலையிலே போய்
பார்த்தால் நன்கு உள்ள பயிர், காலையிலே போய் பார்த்தால்,

திரு. எம். செல்லமுத்து [1984 அக்டோபர் 13

ஆயிரக்கணக்கான பூச்சிகள் புகுந்து, அந்தப் பயிர்களுடைய அடித் தண்டில் இருக்கக்கூடிய சாறை உறிஞ்சி விடக் கூடிய காரணத்தி னால், கதிர்கள் எல்லாம் பாழாகி, அதன் காரணமாக, இன்றைக் குத் தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் நட்ட நடவை அறுக்க முடியாமல் விவசாயிகள் மிகப் பயங்கரமான சூழ் நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

அவர்கள் நட்டு அறுவடை வருகிறபோது நஷ்டம் அடைகிறபோது பெற்ற பிள்ளை இறந்ததைப் போல பரிதவிக்கிறார்கள். அவர் கள் உற்பத்தி செய்த பயிர் கைக்கு வருவதில்லை. குறிப்பாக திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர் தாலுக்கா, இன்னும் பல்வேறு தாலுக்காக்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் புகையான் பூச்சியை கட்டுப்படுத்து வதற்கு விவசாய இலாக்கா கூட இன்னும் மருந்து கண்டுபிடிக்க வில்லையென்று சொல்கிறார்கள். அவர்கள் மண்ணெண்ணெய் தூவுங்கள், பி.எச்.டி 10 சதவீதம் தூவுங்கள் என்று சொல்கிறார் கள். அப்படி அவர்கள் சொல்வதைப் போல இவற்றை தூவினா லும் அந்தப் பூச்சிகள் அவற்றால் அழிவதில்லை. இதன் காரண மாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் மிகப்பெரிய நஷ்டத் திற்கும், தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டுகளில் வெள்ளத்தாலும், வறட்சியாலும், மழையினாலும், விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்பிற்கு ஆளானார்கள். இந்த நேரத்தில் அவர்களுக்கு புகையான் பூச்சி மிகப்பெரிய தொல் லையைக் கொடுத்து வருகிறது. இந்தப் பூச்சிகளை அழிப்பதற்கு தேவையான மருந்துகளை விவசாய இலாக்கா கண்டுபிடித்து வைத்திருக்கிறதா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் தங்கள் மகசூலை இழந்து தவித்துக் கொண்டிருக்கிற ஏழை விவ சாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் நஷ்ட யீடு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியை சுற்றிப்பார்த்துவிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதி இருக்கிறேன். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் புகையான் பூச்சி புகுந்து விவசாயிகள் கஷ்டப்படுகிற நிலை இருக்கிறது. அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும்; விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவுப் பொருள்களுக்கு, நெல்லுக்கு கட்டுப்படியான விலை வேண்டும், கடந்த ஆண்டு கொடுத்ததைப் போல குவின் டாலுக்கு 35 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டு கடிதம் எழுதினேன். அதற்கும் இதுவரை அரசு பதில் சொல்லவில்லை. ஆகவே, இன்னும் இதுபோன்று பல கருத்துக்களை விவாதிக்க வேண்டியதிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



1984 அக்டோபர் 13]

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, தமிழகத்
திலே தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், தென்னார்க்காடு
மாவட்டத்தில் சிதம்பரம் தாலுக்கா இன்னும் பல இடங்களில்
இந்த ஆண்டு குறுவை பயிர் செய்து பால் கட்டு முற்றி பாதி நெல்
லாக வருகிற நேரத்தில் புகையான் என்ற பூச்சி வந்து விவசாயி
களுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. புகையான்
விழுந்தவுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்
களுக்கு நான் ஒரு விவசாயி என்ற முறையிலே விவரமாகக் கடிதம்
எழுதினேன். 10 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் விவசாயம்
செய்து, குறுவை வளர்ந்து வந்து, பொங்கல் வருகிற நேரத்திலே
விவசாயிகள் முகமலர்ச்சியுடன் இருக்கிறார்கள். இந்தப் புகை
யானைப் பார்த்தவுடன் மிகக் கவலையாக படுத்து விடுகிறார்கள்.
எனவே, தமிழக அரசு எலிகாப்டர் மூலம் உடனடியாக எங்கெங்
கெல்லாம் இந்தப் புகையான் பூச்சி தாக்கி இருக்கிறதோ அங்கெல்
லாம் மருந்தடித்து பயிரையும், விவசாயிகளையும் காப்பாற்றுங்
கள் என்று கடிதம் எழுதி இருந்தேன்.

வேளாண்மை அதிகாரிகள் விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்
னாலே அறிவிக்கிறார்கள். டி. கே. 9 போடுங்கள்; ஏக்கருக்கு
40 மூட்டை கிடைக்கும்; ஆடுதுறை 31 போடுங்கள், ஆடுதுறை
36 போடுங்கள் என்றேல்லாம் சொல்கிறார்கள். ஐ. ஆர். 50
போன்ற பல்வேறு நெல்களுக்கு ஊர் ஊராக வந்து பிரச்சாரம் செய்
கிறார்கள். அதற்காக ஊரெல்லாம் சொல்கிறார்கள். இவ்வள
வையும் போட்டு விவசாயம் செய்தவுடனே புகையான்
பூச்சி மிகக் கடுமையாக பாதித்து விடுகிறது. அப்படிப்
பாதிக்கப்படுகிறபோது விவசாய இலாகாவினர் பல்வேறு
மருந்துகள் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். டெமக்
ரான் போடுங்கள், பி.எச். 10 சதவிகிதம் போடுங்கள் என்று சொல்
கிறார்கள். அதெல்லாம் வாங்கிப் போட்டோம். ஆனால் அந்த
நோய் ஒழியவில்லை. பின்னர் வயலில் தண்ணீர் இல்லாமல் வடிய
விடுங்கள் என்று சொல்கிறார்கள். அதையும் செய்து பார்த்தோம்.
பலன் இல்லை. தண்ணீரில் மண்ணெண்ணையை ஊற்றிப் பாருங்
கள் என்று சொன்னார்கள். அதையும் செய்து பார்த்தோம். இரவு
நேரங்களில் விளக்கு ஏற்றி வையுங்கள், அரிக்கேன் விளக்கு வையுங்
கள் அந்தப் பூச்சிகள் அதிலே வந்து விழுந்து இறந்து விடும் என்று
சொன்னார்கள். அதையும் செய்து பார்த்தோம். ஆனால் பலன்
இல்லை. இப்படி வேளாண்மைத்துறை சொன்ன அத்தனையையும்
நாங்கள் செய்து பார்த்தோம். ஆனால் இந்தப் புகையான் பூச்சி
யால் பாதிப்பு தொடர்ந்து இருந்து வருவதால், அதை ஒழிப்பதற்
கான முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அரசு முழுக்கவனம்
செலுத்த வேண்டும் என்று கேட்டு, இதிலே காலதாமதம் இருக்கக்
கூடாது என்பதையும் நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்பு
கிறேன்.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் 4½ லட்சம் ஏக்கர் குறுவை
பயிரிடப்பட்டு இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் சுமார் 1
லட்சம் ஏக்கருக்கு மேல் இதனால் பாதிப்பு ஏற்பட்டு, அவற்றில்

[திரு. பொ. உத்திராபதி] [1984 அக்டோபர் 13

இருந்து ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை கூட அறுவடை செய்ய முடியாத அளவிற்கு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியில் ஆடுதுறை 31 போட்டால் நல்ல முறையில் விளைச்சல் கிடைக்கும் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. அங்குள்ள விவசாயிகளும் அந்த ஆடுதுறை 31-ஐ போட்டார்கள். ஆனால் பலன் ஒன்றும் இல்லை. எனக்கு தெரிந்த விவசாயி ஆடுதுறை 31-ஐ ஒரு 10 ஏக்கர் நிலத்தில் போட்டு இருக்கிறார். ஆனால் இன்றைக்கு 30 மூட்டை கூட மொத்தமாக அதில் இருந்து கண்டுமுதல் வராது போல் இருக்கிறது. அந்த அளவிற்கு புகையான் நோயால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் புகையான் நோய் வராமல் தடுப்பதற்கு தகுந்த ஆராய்ச்சிகளை வேளாண்மைத் துறை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளாமல் இருந்து விட்டால், எவ்வளவு தான் விவசாயத் துறை விளைச்சலை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு அறிவுரை கொடுத்தாலும், அதற்காக வேளாண்மைத்துறை செலவு செய்தாலும் அது விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வராது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மானிய விலையில் உரம் கொடுப்பதாகவும், பூச்சிக் கொல்லி மருந்து கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த நேரத்தில் நான் ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 15—9—1984 அன்று 50 சதவீத மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்து கொடுப்பதற்காக, விரிவாக்கப் பணியாளர் அவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டு அதை எடுத்துக் கொண்டு விவசாயி அந்த கிடங்கிற்குச் சென்றபோது அங்கே சொன்னார்களாம், எங்களிடத்தில் இப்போது உரம் கைவசம் இல்லை. 1—10—1984 அன்று தான் வரும், அப்போது வாருங்கள் என்று திருப்பி அனுப்பிவிட்டார்களாம். விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்து, அதன் பலனை அடைய விவசாயி முயற்சிக்கிற நேரத்தில் இப்படி உரம் இல்லை என்று சொன்னால், விவசாயி அலைந்து திரிந்ததுதான் மிச்சமாகிறதே தவிர அவனுக்கு எந்த விதமான பயனும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, இந்த புகையான் நோயால் முழுவதுமான பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

கடந்த முறை வெள்ளம் பாதித்த நேரத்தில், அந்த விவசாயிகளுக்கு எல்லாம் முழு உதவி அளிப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரையில் எந்த விதமான உதவியும் செய்யப்படவில்லை. உதாரணமாக, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகவே, இந்த முறையாவது முழுமையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க அரசு முன் வரவேண்டும். அதே நேரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படாமல்



1984 அக்டோபர் 13] [திரு. பொ. உத்திராபதி]

இருக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இனா
மாக பூச்சி மருந்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதிரி பாதிப்பு ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம்
நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வருகிற நேரத்
தில் நாங்கள் இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லிக்
கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும்
அதிகாரிகள் தருகின்ற விவரங்களை இங்கே சொல்லி, பிறகு
இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்கிற நிலைமையில் இது
முடிகிறது என்று இல்லாமல், இந்த முறை உண்மையிலேயே இந்த
அரசு சீரிய முயற்சிகளை எடுக்கும் வகையில் ஒரு அவசர
உணர்வோடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தஞ்சை
மாவட்டத்தில் புகையான் நோயால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து
விவசாயிகளுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். பாதுகாப்பு
கொடுக்க வேண்டும். எதிர்காலத்திலாவது இந்த பூச்சிகொல்லிக்
மருந்துகள், உரம் போன்றவை காலதாமதம் இல்லாமல் கிடைக்க
வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டு, இவற்றிற்கெல்லாம்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை விரைந்து
எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எதிர்காலத்தில் இன்னின்ன விதைகளை விவசாயிகள் போட
வேண்டும் என்று சிபார்சு செய்கிற நேரத்தில் அந்தந்தப் பகுதியில்
உள்ள மண் வளத்திற்கு ஏற்றவாறு சிபார்சு செய்யவேண்டும் என்
கிற ஆலோசனையை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.
ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவித மண் வளம் இருக்கிறது.
கோயம்புத்தூர் விவசாயி செய்கிற அதே பயிரை தஞ்சை மாவட்
டத்தில் செய்ய முடியாது. இந்த மண் வளம் பரிசோதனை இல்லா
மல் ஆலோசனைகள் செய்வதால் சில நேரங்களில் விவசாயிகள்
பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மண் பரிசோதனையை எல்லா
மாவட்டங்களிலும் நடத்தி, அந்தந்த மண் வளத்திற்கு ஏற்றவாறு
ஆலோசனை கூறினால் அது விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும்
என்பதைச் சொல்லி, எதிர்காலத்தில் இவற்றைச் செய்ய அமைச்
சர் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, இந்த புகையான்
நோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலை
குறித்து முழுமையாக விவாதிக்கவும், அதற்குத் தக்க நடவடிக்கை
எடுக்கவேண்டியது குறித்து விவாதிக்கவும் வழிவகுக்கும் வகை
யில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது
குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை
முடிக்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பெரு
வாரியாக ஏற்பட்டிருக்கிற பேரிழப்பைக் குறித்து இந்த அவை

யிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதிக்கின்ற இந்த விவாதத்திலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ''துங்கு வயரஸ்'' என்ற நோயும் ''புகையான்'' நோயும் பரவலாக இருக்கின்றன. இது குறித்து எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த நோய் காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய் போல் பரவி, விவசாயப் பெருமக்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது. விவசாயிகள் அந்தக் கிராமத்தையே காலி செய்கின்ற அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து தீவிரம் காட்ட வேண்டுமென்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நவீன விஞ்ஞான ரீதியில் பல தடுப்பு மருந்துகள் இருந்தும் இந்த ''துங்கு வயரஸ்'' நோயைக் கட்டுப்படுத்த மருந்து இல்லாத நிலைமைதான் இருக்கிறது. இன்றுவரை இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஒரு விவசாயி என்ற முறையில்—சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அல்ல—விவசாயப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களைக் கேட்டபோது அவர்கள் இதற்கு ஒரு மாற்று அபிப்பிராயத்தைத்தான் கூறினார்கள். அவர்கள் கூறிய ஆலோசனை என்னவென்றால், அந்த நிலத்தை பயன்படுத்தாமல் விட்டுவிட வேண்டும்; அதோடு பயிரின் வேர்களை ஒவ்வொன்றாக எடுத்து கொளுத்திவிட வேண்டும்; அப்படியானால் இந்த நோய் போய் விடும் என்று சொன்னார்கள். இது ஒரு சிறு விவசாயியால் செய்யப்படக் கூடியதா? சிறு விவசாயிகளுக்கு இது சாத்தியமாகுமா? நிலத்தை பயிரிடாமல் விட்டால் அவர்களுடைய ஜீவனம் என்னவாகும்? அவர்களுடைய தொழில் என்னவாகும்? இப்படிப்பட்ட நிலையில் யார் இதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்றால், விவசாயிகளால் முடியாது; அரசுதான் இதற்குப் பரிகாரம் காண வேண்டும்.

இந்த நோய், குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் பரவுகின்ற சூழ்நிலை அதிகமாக இருப்பதால் பல நேரங்களில் நாங்கள் இது குறித்து அமைச்சருக்கு கடிதம் எழுதியும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. இந்த நோயினால் பல இலட்சம் ஏக்கர் நிலம் நாசம், விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் என்று பத்திரிகை மூலமாகத் தெரியப்படுத்தினோம். இந்தப் பாதிப்பினால் விவசாயிகளுக்கு ஒரு பைசாகூட வருமானம் இல்லை. கிடைக்கின்ற நெல்லையும் விற்க முடியவில்லை, அதனால் எந்தவிதமான பலனும் இல்லை; இதற்கு பரிகாரம் என்ன என்று பத்திரிகை வாயிலாக மக்கள் பிரதிநிதி என்ற முறையிலும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்



என்ற முறையிலும் கூறினோம். இதுவரையில் ஏதாவது நட
வடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அதன் பிறகு
தான் இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து, அவை
யின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று
அந்தப் பிரச்சனையை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புகை
யான் நோய், துங்கு வயரஸ் நோய் என்ற இரண்டு நோய்களும்
கலந்து தாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வட ஆற்காடு
மாவட்டத்தில் பரவலாக இருந்த துங்கு வயரஸ் நோய் இப்போது
செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் வந்திருக்கிறது என்று சொல்
கிறார்கள். இப்படியே இந்த நோய் தமிழ்நாடு முழுவதும் பரவி
னால் உணவு உற்பத்தி என்னவாகும்? இது குறித்து அரசாங்கம்
அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இதனால் விவசாயி
களுக்கு நஷ்டம் ஒரு பக்கம் இருந்தாலும் அரசு மக்களுக்கு
வழங்கும் உணவு தானியத்திற்கு எங்கே போகும்? ஆந்திரா
வுக்குப் போகுமா, பஞ்சாபுக்குப் போகுமா என்ற கேள்விக்குறி
எழுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு இதிலே அக்கறை இருக்க
வேண்டும். அதிலும் குறிப்பாக விவசாய அமைச்சர் விவசாயி
களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இந்த ''மஞ்சைக்குட்டை'' நோய்க்கு ''கீரீட்டான்'' என்ற
மருந்தை அடிக்கச் சொல்கிறார்கள். அந்த மருந்தை அடித்
தாலும் பயனில்லை. ஏற்கனவே வறட்சி காரணமாக பயிர்
செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. உற்பத்தி இல்லாததால்
விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதற்குப் பின்
னாலே பெய்த மழையினால் குளம் குட்டைகள் நிறைந்து, விவ
சாயிகள் பயிர் செய்யும்போது இப்படிப்பட்ட கொடிய நோய்கள்
வந்து, விவசாயிகளுக்கு பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.
இதற்கெல்லாம் அரசாங்கம் ஒரு முடிவு காண வேண்டும். அரசு
இதிலே தீவிரம் காட்ட வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று எங்கள்
மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வட ஆற்காடு மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால் உரிய
நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. தேவையான ''ஸ்ப்
ரேயர்ஸ்'' இருக்கிறதா என்றால் தெரியாது. ஒட்டுமொத்த
மாக தனிப்பட்ட விவசாயிகளால் மருந்து அடித்து இந்த நோய்
களைத் தீர்க்க முடியாது.

விவசாயக் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் கூறியதுபோல் இதில்
அரசு நடவடிக்கை எடுத்தாலொழிய இது தீராத பிரச்சினை
யாகத்தான் இருக்கும். அரசு இதில் தீவிர கவனம் காட்ட
வேண்டும். அங்கே இன்று நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்
கிறது. அந்த நஷ்டத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் அரசாங்
கம் பரிகாரம் காணுமா? மேலும் விதைகள் தரப்படுமா அல்லது

விதைகள் வாங்குவதற்கு மான்யம் தரப்படுமா? நடவடிக்கை
எடுத்துத் தீர்க்கப் போகிறதா என்பது கேள்விக் குறியாக இருந்து
கொண்டுதான் இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் பதில்
சொல்வார்கள் என்று கருதுகிறேன். இந்த நோய்கள் வருவதற்கு
மூல காரணமே விதைகள் தான். விவசாயிகள் தனியார்
இடத்திலே விதைகள் வாங்குவதன் மூலமாகத் தான் இந்த நோய்
வருகிறது என்பதைச் சுட்டிக் காண்பித்தேன். தனியாரிடம்
வாங்குகின்ற விதைகள் மூலமாகத் தான் இந்த நோய் வந்து
இருக்கிறதா? எப்படி வந்தது என்பதைக் கண்டறிய இதிலே
ஒரு தீவிரம் காட்ட வேண்டும். அதுவும் இராணுவ நடவடிக்கை
போல் நடவடிக்கை எடுத்தால் எங்கள் மாவட்டத்திலுள்ள விவ
சாயிகள் பாதுகாக்கப்படுவார்கள்.

மேலும் கடலை மானாவாரியிலும், சம்பா நெல்லிலும் உற்
பத்தியைப் பார்க்க முடியவில்லை. அங்கே பல ஏக்கரில் இன்று
மிகப் பெரிய அளவில் பல இலட்சக் கணக்கில் உற்பத்தியாக
வில்லை. இப்படிப்பட்ட நிலைக்கர்க விவசாய மக்கள் மத்தி
யிலே பயம் ஏற்பட்டிருக்கிறது. ஒரே நாளில் அவைகளைக்
கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தக் கூடிய நடவடிக்கை
களை இத்துறை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை.
அதைக் கண்டுபிடிக்க 2, 3 நாட்கள் ஆகின்றன. அதற்குப்
பிறகு நடவடிக்கை எடுக்க 10, 15 நாட்கள் ஆகின்றன. அதற்
குள்ளாக அந்தக் கடலைப் பயிர் வேகமாக அழிந்து விடுகிறது.
இப்படி ஒரே இடத்தில் பார்த்தோமேயானால் 150 ஏக்கருக்கு
பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய
பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால் அரசாங்கம்
இதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. துறையும் ஏனோ
தானோ என்ற நிலையில் செயல்படுவதைப் பார்க்கும் போது
மிகவும் வருத்தமாக இருக்கிறது. வறட்சியினாலும், வெள்ளத்
தினாலும், இயற்கையின் சீற்றங்களினாலும், பயிர்களை நோய்
தாக்குவதினாலும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்
கள். எனவே விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான்
கருதுகிறேன். எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்தி
வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தி
அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம்
தமிழகத்தினுடைய பல பகுதிகளில் நெற் பயிர்களுக்கு ஏற்
பட்டிருக்கின்ற நோயின் தன்மையைக் குறித்து அரசின் கவனத்
திற்கு சில கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்து
இருக்கிறார்கள்.

வேளாண்மையைப் பொறுத்த வரையில், அதிலே உரம்
இடுவது, பாசன வசதிகள் என்பவைகள் எப்படி இன்றியமை
யாதவைகளோ, அதைப் போலவே பயிர்கள் பூச்சிகளுக்கு இலக்





காவதும், அந்தப் பூச்சிகளை கட்டுப்படுத்தவும், தடுக்கவும்
அதற்கு பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவது என்பதும்
வேளாண்மையின் இன்றியமையாத ஒரு பகுதியாக இருந்து
வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக
அறிவார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு வகைப் பூச்சி
யினால், பயிர்கள் பூச்சிகளுக்கு இலக்காவதும், அதைத் தடுப்
பதற்கு பூச்சி மருந்துகளின் மூலமாக மான்ய விலையில் விவசாயப்
பெரு மக்களுக்கு உதவி செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடுகளை
நாம் செய்வதும் அல்லது ஒட்டுமொத்தமாக மருந்து தெளிக்கிற
முயற்சிகளை நாம் மேற்கொள்வதும் நடைமுறையில் இருந்து
வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இப்போது
மாண்புமிகு உறுப்பினர்கள், பலராமன் அவர்களும், திருவேங்கடம்
அவர்களும் சுட்டிக்காட்டியதைப் போல் துங்குவைரஸ் நோய்
நெற்பயிரை தாக்கியிருக்கிறது. அது கடுமையான வகையிலே
நெற் பயிரை பாதித்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. அந்த
வகையில் வைகை, காஞ்சி கோ. 43 போன்ற பல பயிர்களை
நோயிலிருந்து தடுக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கி
றார்கள். இது ஒரு குறிப்பிட்ட நச்சு விதைகளின் மூலம் வருகின்ற
காரணத்தால், அது வந்த பிறகு அதைத் தடுப்பது
இயலாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. என்றாலும், அதற்கு
வேறு மாற்று ஏற்பாடுகள் செய்யலாம் என்று துறையின்
ஆராய்ச்சியாளர்கள் மூலமாக எடுத்து தெரிவித்திருக்கிறார்கள்.
அதற்குரிய மருந்து தெளிக்கிற முயற்சிகளிலே வேளாண்மைத்
துறை கவனிக்கத் தவறவில்லை. 10,000 எக்டேர் அளவில் துங்கு
வைரஸ்-ஐ கட்டுப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டி
ருக்கிறது. விவசாயப் பெருமக்களுக்கு 50 விழுக்காடு மான்ய
விலையிலே மருந்துகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்
பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதைப்போலவே புகையான் நோயை ஒழிப்பதற்கு உரிய
மருந்துகளை 50 விழுக்காடு மானிய விலையில் தருவதற்கும்
மருந்து தெளிப்பதற்கு ஆகின்ற செலவில் ஒரு ஹெக்டேருக்கு
15 ரூபாய் வழங்குவதற்கும் இந்தத் துறையின் மூலமாக முயற்
சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரி
வித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கிடங்குகளிலே மருந்துகள் பற்றாக்குறை இல்லை
என்றுதான் எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறதே தவிர, அப்
படியில்லாமல், எங்காவது பற்றாக்குறை இருக்கிறது, தேவை
யிருக்கிறது என்றால் நிச்சயமாக அந்தத் தேவையை ஈடு செய்
கிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் மாண்பு
மிகு உறுப்பினர்களுக்கு கவனப்படுத்த விரும்புகிறேன். பெருந்த

[டாக்டர் கா. காளிமுத்து] [1984 அக்டோபர் 13

அளவிலே இந்த நோய்த் தாக்குதல் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்
கப்படத்தக்க அளவிற்கு சூழ்நிலைகள் உருவாகுமானால் அவர்
களை நிச்சயமாக அரசு கைவிட்டுவிடாது. மாண்புமிகு உறுப்
பினர் திரு. பலராமன் போன்றவர்கள் மிக நன்றாக அறிவார்கள்.
இதற்கு முன்னாலே பல்வேறு விதமான பூச்சிக் கிருமிகளின்
தாக்குதல்களுக்கு நெற்பயிர்கள் இலக்கான நேரத்திலே, அதைக்
கட்டுப்படுத்துகின்ற முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.
பெரிய அளவிலே பயிர்களைப் பாதுகாக்கக்கூடிய சூழ்நிலையில்,
விவசாயப் பெருமக்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை, நிவா
ரணங்களை எல்லாம் அரசு செய்து இருக்கிறது என்பதை அவர்கள்
மறந்து இருக்கமாட்டார்கள்.

ஆகவே அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற
வர்களுடைய கருத்துரைகளைக் கேட்டு, எந்த அள
விலே அந்தப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை
அறிந்து, அவர்கள் தரக்கூடிய அந்த அறிக்கையின் அடிப்படை
யிலே, ஏதாவது நிவாரணங்கள் தேவைப்பட்டால் அதைச் செய்
வதற்கும், அரசு பரிசிலிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

துறையைப் பொறுத்தமட்டில், எந்த அளவிற்கு மருந்துகளை
வழங்குவதற்கும், விவசாயிகளுக்கு துணை புரிவதற்கும் உரிய
முன் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமோ, அந்த வகையிலே
முன் முயற்சிகளை மேற்கொள்ளும். ஒட்டுமொத்தமாக மருந்துகள்
அடிக்கிற அத்தகைய முயற்சிகளை செய்யவேண்டுமானாலும்,
அந்தகைய முயற்சிகளை இந்தத் துறை செய்யும் என்பதையும்
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால், தமிழகம்
முழுவதும் ஒரு குறிப்பிட்ட நோய் பரவலாகத் தாக்கி, நெற்
பயிர்களை பாதிப்பது என்ற சூழ்நிலை இல்லை. சில பகுதி
களிலே குருத்துப் பூச்சிகள் என்றும், சில பகுதிகளிலே புகையான்
நோய் என்றும், தஞ்சை போன்ற பகுதியிலே புகையான் நோய்
என்றும், வட ஆர்க்காடு போன்ற பகுதியிலே துங்ரபுவைஸ்
என்றும், இப்படி பல்வேறு பகுதிகளிலே, பல்வேறு நோய்களி
னுடைய தாக்குதலுக்குப் பயிர்கள் இலக்காகி வருகின்றன.
அவைகளை எல்லாம் ஆங்காங்கே இருக்கின்ற வேளாண்மைத்
துறை விரிவாக்கப் பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்களோடு
தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளை விவசாயப் பெருமக்
களுக்குத் தெரிவித்து, உரிய, தேவையான உதவிகளைச் செய்து
கொண்டிருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகளை இன்னும்
தீவிரமாக செய்வதற்கு ஏற்ற வகையிலே அரசு பல்வேறு பாது
காப்பு ஏற்பாடுகளையும், உதவிகளையும் செய்கின்ற முயற்சி
யிலே ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் போன்றவர்கள் சுட்
டிக் காட்டியதை எல்லாம் நான் செவிமடுத்துக் கேட்டிருக்கிறேன்
என்ற காரணத்தால், நிச்சயமாக அவைகள், செவிடன் காதிலே



1984 அக்டோபர் 13] [டாக்டர் கா. காளிமுத்து]

ஊதிய சங்காக இருக்காது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்
கும் என்று நான் நம்புகிறேன். ஆகவே இத்தகைய நல்லுறுதி
களையும், இந்தக் கருத்துக்களையும் அவர்கள் ஒப்புக்கொள்வார்
கள் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, அவையினுடைய இதர
அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று
கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மெ. அ. இராசகுமார்) :
மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர
அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்
கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறு
கிறது.

## 4. அறிவிப்புகள்.

### அரசினர் சட்டமுன்வடிவுகள் (மே. செ.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மெ. அ. இராசகுமார்) :
பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்ட மன்ற
மேலவையில், கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏது
மின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலை
வர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :

(1) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச
வரம்பு-முறைப்படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு
(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1984).

(2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கட்டிட கட்டுமானப்
பணியாளர்கள் (பணிநிலைமைகள் பல் வகை விதித்துறைகள்) சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/1983.)

## 5. கவன ஈர்ப்புகள்.

### திருவில்லிப்புத்தூர் நகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அளிக்கப்படும் மின்சாரம் குறைப்பு.

திரு. இரா. தாமரைக்கனி : மாற்றுத் தலைவர் அவர்களே,
''திருவில்லிப்புத்தூர் நகர மக்களுக்கு குடிநீர் வழங்கி வந்த பெய
னாறு ஆற்றுப்படுகை கிணறுகளுக்கு 24 மணி நேர மின்சாரத்
திற்குப் பதில் 14 மணி நேரமாக குறைக்கப்பட்டதால், திரு
வில்லிப்புத்தூர் நகர மக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்
துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் நீர் வழங்கு பணிகளுக்கான மின் விசை முதலில் இராஜபாளையம் துணைமின் நிலையத்தில் ஜானகிராம் மில் 11 கே. வி. கம்பித் தொடரிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. திருவில்லிப்புத்தூரில் ஒரு புதிய 66 கே. வி./11 கே.வி. துணை மின் நிலையம் இயங்கத் தொடங்கிய பிறகு நல்ல முன்னேற்றத்திறனோடு இயங்கி பலனளிக்க வேண்டுமென்பதற்காக திருவில்லிப்புத்தூர் நீர் வழங்கு பணிகளுக்குத் தேவைப்படும் மின் விசையை மம்சாபுரம் புறநகர் கம்பித் தொடரிலிருந்து பெற மாற்றப்பட்டது. மம்சாபுரம் புறநகர் கம்பித் தொடர் புறநகர் தேவைகளின் பெருமளவை (அதாவது 465 விவசாய இணைப்புகள் மொத்தம் 2,610 குதிரைத் திறனில் 80 சதவிகிதம் அளவுக்கான 2,078 குதிரைத் திறன்) வழங்கி வருவதால், இக் கம்பித் தொடர் மாநிலத்திலுள்ள மற்ற புறநகர் கம்பித் தொடர்களைப் போலவே 14 மணி நேரம் மின் விசை வழங்கப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் நீர் வழங்கு பணிகளுக்கென தனி கம்பித் தொடர்களை அமைக்க அரசு ஏற்கனவே ஒரு திட்டம் வகுத்துள்ளது. இவ்வாண்டு மொத்தம் 98.3 இலட்சம் ரூபாய் செலவில் இத்தகைய 26 பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 200 இலட்சம் செலவில் இதுவரை இத்தகைய 69 நீர் வழங்கு பணிகளுக்கென தனி கம்பி தொடர்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் திருவில்லிப்புத்தூர் நீர் வழங்கு பணிக்கு தனி கம்பித்தொடர் அமைக்கப்படவில்லை. ஒரு தனி கம்பித் தொடர் அமைக்க 6.5 லட்சம் செலவாகும். அவ்வாறு தனி கம்பித்தொடர் அமைக்கப்பட்டால் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க இயலும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் நகராட்சி வருமானம் இல்லாத நகராட்சி. அங்கே வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்குக் கூட மாதச் சம்பளம் கொடுப்பதற்குக் கூட மிகவும் சிரமப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ராஜபாளையம் சப்-ஸ்டேஷன் மூலமாக திருவில்லிப்புத்தூர் நகராட்சிக்கு பேயனாறு ஆற்றுப் படுகையில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. டவுன் ஷிப்பாக கருதி 24 மணி நேரமும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது. இப்போது சப்-ஸ்டேஷன் ஆரம்பித்ததால் ரூரல் ஏரியாவாக கருதி 14 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுகின்றது. ஏற்கனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட கடுமையாக பாதிக்கப்பட்ட ஸ்ரீவில்லிப்புத்தூரில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 24 மணி நேரமும் மின் இணைப்பு இருந்தால்தான், குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் வருமானம் இல்லாத நகராட்சியாக இருக்கிற காரணத்தால் அரசாங்கம் பல திட்டங்களுக்கு கடன் கொடுத்து உதவுகிற நிலை இருக்கிற





காரணத்தால், இந்த 6½ லட்சம் ரூபாயை எங்கள் நகராட்சிக்கு கடனாக கொடுத்தும், ஏற்கெனவே உள்ளது போல ராஜ பாளையம் சப்-ஸ்டேஷன் மூலமாக கரண்ட் கொடுத்து வந்தது போல கொடுப்பதற்கும், உத்தரவு பிறப்பிக்க மாண்புமிகு அமைச் சர் அவர்கள் கருணை கூர்ந்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மீண்டும் ராஜபாளையத்திலிருந்து வழங்குகிறபோது 24 மணி நேரமும் மின் சப்ளை கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதி னால், அது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். 6 1/2 லட்சம் ரூபாயை அந்த நகராட்சிக்கு அரசு கடனாக வழங்க வேண்டும் என்கிற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற யோசனை உரிய துறைக்கு அனுப்பி வைக்கப் படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ராஜபாளை யம் சப் ஸ்டேஷன் மூலமாக கரண்ட் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டசபையிலே பதில் சொன்னவுடன், அங்கே கரண்ட் உடனே வரக்கூடிய சூழ்நிலை கிடையாது. எந்தத் தேதியிலிருந்து கரண்ட் கொடுப்பீர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் என் றால், நான் ஊருக்குப்போகும்போது, பொதுமக்கள் அங்கே கேட் கும்போது, அவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாவது சொல்ல எனக்குசரியாக இருக்கும். குடிக்கத்தண்ணீர் கிடைப்பதற்காக தயவு செய்து நீங்கள் அவசர உத்திரவை இதற்காக பிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊருக்குப் போகிறபோது என்னைக் கேட்டுவிட்டு போகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. மெ. அ. இராசகுமார்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்....

திரு. வீ. கிருஷ்ணமூர்த்தி : மாற்றுத் தலைவர் அவர்களே அறிமுகம் செய்ய இருக்கிற இந்த 3 சட்டமுன் வடிவுகளின் மீதும், அறிமுக நிலையிலேயே எதிர்த்து நாங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். அதனால் எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்து விடுங்கள். உங்களுக்கு பாஸ் பண்ணுவதற்கும் வசதியாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்றையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

1984 அக்டோபர் 13]

(முற்பகல் 11-00).

(அ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

(ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு, 1984.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

(இ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1984.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மூன்று சட்டமுன் வடிவுகள் மீதும் ஒன்றாகச் சேர்த்துப் பேசிவிடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே அறிமுகம் செய்ய கோரக் கூடிய பஞ்சாயத்து ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகிய இந்த நிறுவனங்களை நடத்தக்கூடிய தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று கோரக் கூடிய இந்த மூன்று சட்டங்களையும் நான் மிகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

நான் எதிர்ப்பதற்குக் காரணம் தாங்கள் அறியாதது அல்ல, மன்ற உறுப்பினர்களும் அறியாதது அல்ல. நீண்ட காலமாக இந்தியாவிலேயே மிகத் திறமையாக சீரிய முறையிலே நடைபெற்ற ஒரு நிர்வாகம் தமிழகத்திலே இருந்த பஞ்சாயத்து நிர்வாகம் ஆகும். பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியங்களாக இருந்தாலும் சரி, கிராமங்களிலுள்ள



[1984 அக்டோபர் 13 [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

மக்களின் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யக் கூடிய
பேசிக் டெமாக்ரடிக் இன்ஸ்டிட்யூஷன் என்ற முறையிலே பங்க்ஷன்
செய்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்
பட்ட பிறகு பஞ்சாயத்து ஒன்றியங்களை முதலிலே கலைத்
தார்கள், அப்போது குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தது.
அன்றைக்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் இருந்தார்கள். அதையும்
அகில இந்திய அண்ணா தி. மு. க. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த
உடன் ஏறத்தாழ 15 ஆயிரம் ஊராட்சித் தலைவர்களையும்
போகச் சொல்கிற அளவுக்கு கிராம மக்களின் தேவைகளைப்
பூர்த்தி செய்கின்ற அவர்களுடைய பதவிகளையும் ரத்து செய்து
விட்டார்கள். அதிலிருந்து ஏறக்குறைய 7 ஆண்டுக் காலமாக
கிராமங்களிலே பஞ்சாயத்து நிர்வாகம் இல்லாத காரணத்தினால்
தனி அதிகாரிகள் என்ற போர்வையில் காரியங்கள் நடைபெறு
வதன் காரணமாக கிராம மக்களின் தேவையான நல்ல செயல்
களைச் செய்ய முடியவில்லை, மக்களுக்குத் தேவையான விளக்கு,
குடிநீர் வசதி இவைகளைச் செய்ய முடியவில்லை. அவைகளை
எல்லாம் உடனடியாகச் செய்வதற்கு தேர்தலை நடத்த வேண்டு
மென்று திராவிட முன்னேற்றக் கழக சார்பிலேயும் மற்றக்
கட்சிகளும் பல முறைகள் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

முதலிலே இதற்கு அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து
அவர்கள் சொல்லிச் சொல்லிப் பார்த்தார்கள், அவர்களும் 5, 6
தடவைகள் நீட்டித்து நீட்டித்துப் பார்த்து அந்த மந்திரியிட
மிருந்து இன்னொருவர் கைக்குப் போனது, அவரும் 5, 6 தடவை
கள் நீட்டித்துப் பார்த்து பார்த்து புளித்துப் போய் இன்றைய
தினம் புதிய அமைச்சராக உள்ள திரு. சௌந்திரராஜன் அவர்
களிடம் அதைக் கொடுத்திருக்கிறார்கள். நீட்டிப்பு தான் கோரு
கிறார், தேர்தல் வந்தபாடில்லை. The Government is adopting
the dialatery practice of posponding the elections.
உள்ளபடியே நடத்த வேண்டுமென்று நீங்கள் நினைத்தால்
நடத்தலாம். நீங்கள் காரண காரிய விளக்கங்களைச் சொல்லி
இருக்கிறீர்கள். உயர்நீதி மன்றம் ஸ்டே கொடுத்திருக்கிறது
என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்தத் துறை அமைச்சராக திரு.
குழந்தைவேலு இருந்த போது உச்ச நீதிமன்றத்திலே ஸ்டே
கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஸ்டே கொடுத்து
இருக்கிறார்கள், ஸ்டே கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லிச்
சொல்லி 7 ஆண்டுக் காலம் மக்களுக்குச் செய்ய வேண்டிய
பணிகளை பஞ்சாயத்து தலைவர்கள், யூனியன் சேர்மன் செய்ய
வேண்டிய பணிகளை செய்ய விடாமல் அடிப்படை ஜனநாய
கத்தைப் பறிக்கக் கூடிய முறையிலே அகில இந்திய அண்ணா
தி.மு.க. ஆட்சி செயல்பட்டு வந்ததைச் சுட்டிக் காட்டி இந்தச்
சட்டத்தை அனுமதிக்கக் கூடாது, உடனடியாக தேர்தலை
நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்மையிலே
இந்தியப் பிரதமர் ராஜஸ்தானுக்குச் சென்றார்கள். அங்கே
அந்தப் பஞ்சாயத்துக்களைப் பார்த்துவிட்டு அவை மிக மிகத்
தேவை என்று சொல்லி 1 அல்லது 2 கோடி அளவுக்கு கட்டடம்
கட்டுவதற்கு நிதி கொடுத்து இருப்பதாக பத்திரிகையிலே நான்
பார்த்தேன்.

ஆகையால் காரணம் சொல்லாமல் ஹைக்கோர்ட்டில் ஸ்டே இருந்தால் அந்த ஹைக்கோர்ட்டு ஸ்டேவை வெக்கேட் செய்வதற்கு அரசு என்ன உருப்படியான நடவடிக்கை எடுத்து இருக்கிறது? உள்ளபடியே தேர்தல் நடத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் உடனே வெக்கேட் பெட்டிஷன் போடலாம் அல்லது அந்த ரிட் பெட்டிஷனை டிஸ்போஸ் செய்வதற்கு அர்ஜன்ட்டு மோஷன் போட்டு அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கலாம். உங்களால் தேர்தல் நடத்த முடியவில்லை. தேர்தல் நடத்தினால் கட்சிக்கு பாதகம் வந்து விடுமோ என்ற எண்ணம் கூட உங்களுக்கு இருக்கலாம். அந்தக் காரணத்தினால்தான் தமிழகத்தில் தேர்தலை நடத்தாமல் நீங்கள் இருக்கிறீர்கள். தனி அதிகாரிகள் இருந்து கொண்டு இருப்பதால் இன்றைய தினம் பூரா பணமும் விரயம் ஆகிக் கொண்டு இருக்கிறது. மக்களுக்கு தேவையான காரியங்கள் நடைபெறவில்லை. ஆகவே இந்த சட்டமுன் வடிவை இந்த சட்டமன்றத்தில் அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நான் மிக மிகக் கடுமையாக ஆட்சேபித்து எதிர்க்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று கூறக் கூடிய இந்த மசோதாக்களை அறிமுகம் செய்யக் கூடிய நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பில் வன்மையாக ஆட்சேபித்து இந்த மசோதாக்களை அறிமுகம் செய்வதற்கு உண்டான அனுமதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அளிக்கக் கூடாது என்பதை நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் கிராமத்தில் இருக்கின்ற அடிப்படையான ஜனநாயக அமைப்பு ஊராட்சிகள் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டாலும் அந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி மன்றங்களிலும் ஜனநாயக முறையில் தெரிந்து எடுக்கப்பெற்ற மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகளை செயல்படுத்த விடாமல் கடந்த 12 ஆண்டு காலத்திற்கு மேலாக தனி அதிகாரிகள் ஆட்சி அங்கு நடந்து கொண்டிருக்கிறது. தனி அதிகாரிகளின் ஆட்சி என்று சொல்லக் கூடிய நேரத்தில் அரசியல் கட்சிகள் இருக்கிறார்கள், மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள், அவர்களைக் கலந்து கொண்டு ஏதாவது திட்டங்கள் உருவாக்கப்படுகிறதா என்றால் அப்படி எதுவும் நடைபெறுவது இல்லை. அதிகாரிகள் என்ன காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதையே திட்டமாக உருவாக்கிவிடுகிறார்கள். அதிகாரிகளும் காண்டிராக்டர்களும் கூட்டாக சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடிப்பது தான் இன்றைய தினம் ஊராட்சியாக இருந்தாலும் ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் அங்கே நடைபெறும் வேலையாக இருக்கிறது. எத்தனை காலத்திற்கு இந்தக் கொள்ளையை அனுமதிக்க இருக்கிறீர்கள்? இன்றைய தினம் நாட்டில் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக, மக்களைப் பாதுகாப்பதற்





காக அமைக்கப்பட்டு இருக்கிற இந்தச் சட்டமன்றத்தில் நமக்கு இருக்கிற அடிப்படைக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று வரக் கூடிய நேரத்தில் அந்த மன்றங்களுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தான் நாம் நம்முடைய கடமைகளை நிறைவேற்றியவர்கள் ஆவோம். ஆகவே அந்த அடிப்படையில் இந்தப் பதவி கால நீட்டிப்புக்கு எப்படி நாம் அனுமதி அளிக்க முடியும்? இன்றைய தினம் இந்த தனி அதிகாரிகளின் தனி ராஜ்ஜியம் நடந்து கொண்டிருக்கிறது. உடனடியாக அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இன்றைய தினம் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள் அல்லது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆலோசனை கூறுவதற்கு உள்ள மக்கள் குழுக்கள் இருக்கின்றன. ஆனால் எந்த ஒரு இடத்திலும் மக்கள் குழு கூடுவது இல்லை. அது மட்டும் அல்ல, உருவாகக் கூடிய திட்டங்கள் எந்தத் திட்டமாக இருந்தாலும் அது தேசிய கிராமப்புற வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி அல்லது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி, மத்திய அரசு சமீபத்தில் அறிவித்து இருக்கக் கூடிய ரூரல் எம்பிளாய்மெண்டு கியாரண்டி புரோகிராம் என்று இப்படி எந்தத் திட்டமாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் திட்டம் உருவாக்கப்படுகிறது என்று எதுவும் தெரிவிக்கப்படுவது இல்லை. அதிகாரிகள் திட்டத்தைப் போடுவார்கள்; அவர்களுக்கு மேல் இருக்கின்ற அதிகாரிகள் அதற்குத் தேவையான ஒப்புதலைப் பெறுகிறார்கள். பிறகு அது நிறைவேறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு இடம் கூட இன்றைய தினம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் களுக்கே இந்த நிலை என்றால் மக்கள் குழுக்கள் எந்த நிலையில் இருக்கும் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்த மசோதாக்களை அறிமுகம் செய்வதன் மூலமாக இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற அந்த படுகொலையை மேலும் இன்றைய தினம் நீட்டிப்பதற்கு ஒரு இடம் நாம் கொடுக் கிறோம் என்றுதான் அர்த்தம். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த மசோதாக்களை அறிமுகம் செய்யக் கூடிய இந்த நேரத்தில் இந்த அறிமுகத்தை எதிர்த்து வன்மையாக ஆட்சேபணையைத் தெரிவித்து நான் அமைகிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்பொழுது உங்கள் கட்சி சார்பில் ஆட் சேபிக்கலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே யும் எதிர்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அவசியமில்லை. இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். உங்கள் கட்சித் தலைவர்கள் வேண்டுமானால் கருத்துக்களைச் சொல்லலாம், ஆனால் இப்பொழுது உங்கள் கட்சித் தலைவர்கள் யாரும் இல்லை. (குறுக்கீடு) சரி, திரு. பழனி வேல் அவர்களைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களினுடைய ஆலோசனைக் குழுக்கள், ஊராட்சி மன்றங்களுடைய ஆலோசனைக் குழுக்கள், அதிகாரிகளினுடைய அதிகாரத்தை மேலும் நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

அதற்குக் காரணம், இன்றைக்கு ஊராட்சிகளுக்குத் தேர்தல் கள் நடைபெற்று 13 வருஷங்களாகிவிட்டன. கிட்டத்தட்ட ஏழெட்டாண்டுக் காலமாக இது நீட்டிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. தனி அதிகாரிகளின் கைகளிலே இந்த அதிகாரத்தைக் கொடுத்து, ஒவ்வொரு தடவையும் ஆறு மாதங்கள், ஆறு மாதங் கள் என்று சொல்லி இந்த ஆட்சி ஏற்பட்ட காலத்திலேயிருந்து நீட்டித்துக் கொண்டேதான் வருகிறது. ஆகவே, உங்களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமும் இல்லை என்பதுதான் இதிலேயிருந்து தெளிவாகத் தெரிகிறது. தேர்தல் இல்லாததால் இன்றைக்கு மக்களின் அடிப்படை ஜனநாயகம் பறிக்கப்படுகிறது உங்கள் ஆட்சியினால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் இதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

அடுத்தபடியாக, தன்னிறைவுத் திட்டம் போட்டு எல்லாம் முடிந்துவிட்டது என்று சொல்லி நீங்கள் வெளியிலே பிரச்சாரம் செய்கிறீர்கள். ஆனால் உண்மையான நிலைமை என்ன? கிராமப்புறங்களிலே குடிநீர் கிடைப்பதில்லை. பல ஊர்களில் குடிநீருக்காக ஒரு மைல், இரண்டு மைல் தூரம் நடந்து ஏழை மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் பிடிக்கின்ற அவல நிலைமை இன்றைக்கு இருக்கிறது. பெருவாரியான ஊர் களில் உள்ள தெருக்களில் சாக்கடை வசதிகள் சரியாக இல்லை. அவைகளை மராமத்து செய்வதற்கு ஊராட்சிகளிலே ஆட்களும் இல்லை, போதுமான நிதியும் இல்லை. எனவே, இதுபற்றி யாரிடத்திலே போய் என்ன சொல்வது என்பதே புரியவில்லை.

ஆலோசனைக் குழுக்கள் என்று சொல்கிறோம். அவைகள் எங்கே கூடுகின்றன? இந்த பில்லில் கூட, ஒரு ஆண்டுக்கு ஒரு முறை ஆலோசனைக் குழு நியமிக்கப்படும் என்று சொல்லி





யிருக்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராக வந்து எட் டாண்டுக் காலம் ஆகிறது. இந்த எட்டாண்டுக் காலமாக ஒரே நியமிக்கப்பட்ட குழுதான் இருக்கிறதே தவிர, ஆட்கள் மாற்றி வருவதில்லை. அப்படியே போடப்படும் அந்தக் குழுவிற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அவர்கள் சொன்னால்கூட யார் எங்கே கேட்கிறார்கள்? எனவே, அதுகூட ** மக்களை ஏமாற்றுவதற்காகப் போடப்பட்ட குழுவே தவிர மக்களுக்கு சேவை செய்யும் குழுவாக, மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங் களை நிறைவேற்றுகின்ற குழுவாக அந்த ஆலோசனைக் குழு செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பி.டி.ஓ.-க்களை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தூக்கித் தூக்கி அடிக்கிறார்கள். பி.டி.ஓ. விடம் போய் ஏதாவது வேலையைப்பற்றிச் சொன்னால், நான் இப்பொழுதுதான் வந்திருக்கிறேன், பத்து நாட்களுக்குப் பொறுத்திருங்கள், நான் சுற்றி வந்து பார்க்கிறேன் என்று சொல்கிறார். பிறகு போனால் அந்த பி.டி.ஓ. அங்கே இருப்ப தில்லை, வேறொருவர் வந்துவிடுகிறார். ஆளுங்கட்சிக்காரர் களின் சொல்லைக் கேட்காத பி.டி.ஓ.,க்கள் மாற்றப்படுவ தாகச் சொல்லப்படுகிறது. இதனால் நிர்வாகம் சரியாக நடத் தப்படவில்லை. ஆளுங்கட்சியினரின் செல்வாக்குதான் அங்கே அதிகமான அளவில் இருக்கிறது.

1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, கழக உடன்பிறப்புகள் அரசாங்க வராண்டா பக்கமே வரக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை என்ன? ஆளுங்கட்சி யைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றியங்களை கட்சி அலுவல கங்களாக மாற்றிவிட்டார்கள். அதுதான் இன்றைக்கு நடக் கிறது. ஆகவே, விரைவில் அவைகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டும். சர்வ கட்சிக் கூட்டம் நடந்தது........

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஊராட்சி * * ஒன்றியக் குழுக்கள் அத்தனையும் என்பது மாதிரி சொன்னார்கள். இரண்டாவதாக, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் ஊராட்சி ஒன்றியங்களை தங்களது சொந் தக் கட்சிக் காரியாலயங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். நானெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செல்வதில்லை. அவர்கள் இப்படி பகிரங்கமாக * * என்று சொல்வது சரியா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1984 அக்டோபர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற வகையிலே பேசவேண்டாம் என்றும் இந்த பில் சம்பந்தப்பட்ட காரண காரியங்களை மட்டும் பேசினால் போதுமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் ...............(குறுக்கீடு)........ .............. * * என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ கட்சிக் கூட்டங்கள் பல தடவை நடந்தன. தமிழ்நாட்டிலே உள்ள 10, 15 கட்சிகளைக் கூப்பிட்டு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல தடவை பேசினார்கள். தேர்தல் ஆகஸ்ட் மாதம் வரப் போகின்றது., பிப்ரவரி மாதம் வரப் போகின்றது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்காக இரண்டு தடவை நாமினேஷன் கூட தாக்கல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள் என்று சொல்லி தேர்தலை நிறுத்தினார்கள். முன்னாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே இல்லாத ஒரு புதுமையைச் செய்து காட்டினார்கள். சர்வ கட்சிக் கூட்டங்களுக்கு,—இப்படி ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள், எனவே எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் தேர்தல் வந்தால் போதும் என்ற அளவிலே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை அந்தக் கூட்டங்களுக்கு வர மறுத்து விட்டன. அந்த நிலையில் முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 36 கட்சிகளைக் கூப்பிட்டு சர்வ கட்சிக் கூட்டம் நடத்தினார்களாம். தமிழ் நாட்டிலே 10, 15 கட்சிகள்தான் இருக்கும். இந்த நிலையில் 36 கட்சிகளைக் கூப்பிட்டு கூட்டம் நடத்தினார்கள் என்று சொன்னார்கள். அதிலே ஒரு முடிவை எடுத்து 1984 ஆம் ஆண்டு பிப்ரவரியில் சட்டமன்றம் முடிந்தவுடன் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். எனவே இவ்வாறு உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தந்தே காலம் கடந்துவிட்டது. நீங்கள் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவே போவதில்லை என்ற நிலைமையில் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய ஜனநாயகத்தைக் கொடுக்காமல் நீங்கள் உங்கள் கையிலே எடுத்து வைத்துக் கொண்டீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலமும் முடியப் போகின்றது. எனவே இந்த பில்லை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கின்றது. விரைவிலே தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை வந்தால்தான் அது நியாயமாக இருக்கும். அதல்லாமல் சும்மா தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தோம் ; பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தோம்; 18 வயதை அடைந்தவர்களுக்கு ஓட்டுரிமை கொண்டு வந்தோம் என்றெல்லாம் சொல்வதில் பயன் இல்லை. அதை எல்லாம்

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 அக்டோபர் 13] [திரு. என். பழனிவேல்]

எங்கே கொடுத்தீர்கள் ? எங்கே நடந்தது ? எனவே நடைமுறைக்கு வராத த்வறான தகவல்களை எல்லாம் கொடுத்து அவற்றை விளம்பரப்படுத்தி, விளம்பர அரசாகத்தான் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லி இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது என்பதைச் சொல்லி அமைகிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்றங்களுக்குத் தனி அலுவலர்களை நியமித்து தேர்தலையே நடத்தாமல் தள்ளிவைத்துக் கொண்டு வருவது பொது மக்களுக்கும், உண்மையான ஜனநாயக வாதிகளுக்கும் செய்கின்ற ஒரு கடுமையான பாதகமாகும். அது ஆட்சேபகரமான ஒன்றாகும். தனி அலுவலர்கள் இருக்கின்ற காரணத்தால் பொதுமக்கள் அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்றால் யாரை அணுகுவது என்பது தெரியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டதுபோல் தனி அதிகாரிகளையும் மற்றவர்களையும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால் ஆணையாளரைப் பார்த்து ஏதேனும் கேட்டால் அது எனக்கு முன்னாலே இருந்தவர் செய்த தவறாகும் என்று சொல்கிறார்கள். என்னுடைய ஊரிலே ஒரு ரோடு போடப்படவில்லை என்று நான் போய்க் கேட்டேன். அதற்கு அந்த ஆணையாளர் சொன்னார் ரோடு போட்டதாக ரிக்கார்ட் ஆகி இருக்கின்றது எனவே ரோடு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த ரோடு போடப்படவில்லை என்பதைத் தெளிவாகச் சொன்னதற்குப் பிறகு இது எப்படியோ தவறாக, ரோடு போடப்பட்டதாக ரிக்காட் ஆகி இருக்கின்றது என்றும் அவ்வாறு எழுதி அதற்கான பணத்தையும் எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்றும் இனிமேல் இப்படிப்பட்ட தவறு நடக்காது என்றும் சொன்னார்கள். ஆகவே இந்த பில்லை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்பதை * * * * சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய இயக்கத்தின் பெயர் பற்றிச் சொன்னார்கள். அது குறித்த வ்ழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்றது. எனவே அவர் அவ்வாறு குறிப்பிட்டது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். இராசாராமன் : பேரவையினுடைய தலைவர்
அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத்திற்குத் தனி அதிகாரி
கள் நியமிக்கின்ற இந்தமசோதாவை இந்திய தேசிய காங்கிரஸ்
கட்சியினுடைய சார்பாக வன்மையாக எதிர்க்கிறோம். சுதந்
திரம் பெற்றதற்குப் பிறகு மகாத்மா காந்தி அவர்கள் கிராமங்
கள் முன்னேற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், கிராமத்திலே
இருக்கின்றவர்கள், ஊரிலே இருக்கின்றவர்கள் அந்த ஊரை
ஆட்சி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், ஊராட்சி
களை நிறுவினார்கள். அதன் வாயிலாக கிராமப் பகுதிகளிலே
சாலை வசதிகள், பள்ளி வசதிகள், குடி நீர் வசதிகள் போன்றவை
எல்லாம் அளிக்க, அந்தக் கிராமத்திலே இருக்கிற, தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேவையான நடவடிக்கையை
உடனுக்குடன் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால், இந்த
அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த 1977-க்
குப் பிறகு ஊராட்சி மன்றத் தேர்தல் களையோ, ஊராட்சி
ஒன்றியத் தேர்தல்களையோ நடத்தவில்லை. ஊராட்சி ஒன்றிய
மும் ஊராட்சி மன்றமும் இல்லாத காரணத்தால் ஊராட்சிகளை
கிராம அதிகாரிகள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் அந்தக் கிராம நல ஊழியர்கள் கிராமத்திற்கே வருவ
தில்லை. ஊராட்சிக்குவருகின்ற பணத்தை உடனடியாக அவர்
கள் காலி செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்கு
நான் சொல்ல வேண்டுமென்றால், ஒரு ஊராட்சியிலே ரூ. 500,
ரூ. 1,000 நிதி இருக்கிறது என்றால் உடனடியாக மேல வீதிக்கு
மண் வெட்டி ரோட்டைச் சமப்படுத்த வேண்டுமென்ற ஒரு
தீர்மானத்தையும் செக்கையும் தந்து அதன் வாயிலாகக் கிடைக்
கின்ற பணத்தை ஆணையாளர்கள், ஊராட்சி ஒன்றியத்திலே
இருக்கிற பொறியாளர்கள், கிராம சேவக்குள் பங்கு போட்டுக்
கொண்டிருக்கிறார்கள். ஒரு ஊராட்சியிலாவது நிதிநிலைமை
சரியாக இருப்பதாகத் தெரியவில்லை. நான் கூட கடந்த 14
ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தேன். நான்
ஊராட்சிமன்றம் கலைக்கப்படுகிற நேரத்திலே ஏறத்தாழ
ரூ. 12,000 அளவுக்கு வைத்துவிட்டுத்தான் வெளி வந்தேன்.
இன்றையதினம் எந்த வேலையும் உருப்படியாகச் செய்யவில்லை.
ஆனால் பணம் அத்தனையும் காலியாகி விட்டது. இதைக்
கேட்பதற்கு அங்கே யாரும் தயாராக இல்லை. மக்கள் குழு
என்ற ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். நான் சட்டமன்ற
உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, என்னுடைய
காமராஜ் ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து ஊராட்சி மன்றத்
தினுடைய குழுக் கடிதங்கள், சரியான நேரத்தில், சரியான
காலத்தில் கிடைக்கவில்லையென்பதை இந்த நேரத்தில் தெரி
வித்துக் கொள்கிறேன். ஊராட்சித் தேர்தல்கள், ஊராட்சி
ஒன்றியத் தேர்தல்கள் வராத காரணத்தினால் இன்றையதினம்
ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளர்கள் அரண்மனை
கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கோட்டவளர்ச்சி அதிகாரிகள்
கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்கள் ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளும்போது ,பேசுங்கள். இப்பொழுது அறிமுகம்
தான்.

திரு. எஸ். இராசாராமன் : இந்த மசோதா மக்கள் ஆட்சிக்கு
விரோதமான மசோதா, கைவிடுங்கள், கைவிடுங்கள் என்று
சொல்லி, இந்த மசோதாவை எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை
அறிமுக நிலையிலேயே 5 உறுப்பினர்கள் எதிர்த்து இங்கே
தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஜனநாய
கத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்
அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னதாக இங்கே தெரிவித்
தார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன், ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்று எந்த அளவிற்கு
அவர்களுக்கு எண்ணம் இருக்கிறதோ அதைவிட அதிகமான
அளவுக்கு ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்வு
இந்தப் பகுதியிலே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசுக்கும் இருக்கிறது என்பதை நான்
இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது ஒன்றைச்
சொன்னார்கள், இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாவற்றை
யும் தன்னுடைய கையிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்ற
காரணத்தாலே ஜனநாயகத்தைக் கொன்று விட்டது என்று இந்த
அரசைக் குற்றம் சாட்டினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசே ஜனநாயக
முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டதுதான் என்பதை அவர்கள்
மறந்து விடக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்
துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே ஜனநாயகத்திலே
மேலும் அவர்கள் சில முன்னேற்றங்களைக் காண வேண்டும்
என்பதற்காக முற்போக்கான திட்டங்கள் தீட்டி அங்கே பெண்
களுக்கு இடமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடமும் ஒதுக்கி
இந்தத் தேர்தலை நாம் நடத்த வேண்டுமென்ற உணர்வோடு
செயல்பட்டோம். நீங்கள் கொஞ்சம் எண்ணிப்பார்த்தால் அது
எவ்வளவு சரியானது என்பது புலப்படும். பாராளுமன்ற சட்ட
மன்ற தேர்தலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு
இருக்கிறது. ஆனால் ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்கிற
அஸ்திவாரமாக இருக்கிற ஊராட்சி மன்றத்திலே ஊராட்சி
ஒன்றியத்திலே அவர்களுக்கு அந்த விகிதாச்சாரம் இல்லை.
அதேபோல பெண்கள் இன்றைக்கு சரிநிகர் சமமாக வரவேண்டு
மென்றுச் சொன்னால் கிராமங்களிலே இருக்கிற பெண்கள்
அந்த வாய்ப்பை, வசதியை பெறவேண்டும். இந்த நல்ல
நோக்கத்தின் அடிப்படையில் அந்தத் திட்டத்தை உருவாக்கி

அதைச் சட்டமாக்கி தேர்தலை நடத்தலாமென்று சொன்ன போதே இதை ஏற்றுக்கொள்ளாத சிலர் உயர்நீதிமன்றத்திலிருந்து உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். இன்றைக்கு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தினாலே தான் இந்தத் தேர்தலை நடத்தமுடியாத நிலையிலே இருக்கிறதே தவிர வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் தேர்தலைச் சந்திப்பதற்கு பயந்து இந்த அரசு இத்தகைய சட்டத் திருத்தங்களைச் கொண்டு வருகிறது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. இந்த இயக்கம் துவங்கி ஆறு மாதக் குழந்தையாக இருந்த போதே ஒரு பெரிய தேர்தலைச் சந்தித்து, பெரிய வெற்றியைப் பெற்றது என்பதை நான் உங்களுக்கு சூசகமாக எடுத்துச்சொல்லி, ஆகவே தேர்தலைச் சந்திப்பதற்கு பயந்தவர்கள் அல்ல நாங்கள் என்று கூறி, தேர்தலை முறைப்படியாக சந்திப்பதற்கு எப்போதும் தயாராக இருப்பவர்கள் தான் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கொண்டு வரப்பட்டிருக்கிற மூன்று திருத்த சட்டமுன்வடிவுகளையும் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், (தனி அதிகாரிகள் நியமித்தல்)
இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1984

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: '' தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச்
சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஊராட்சிகள் (இரண்டாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1984 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு *சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

(உ) பாரதியார் பல்கலைக் கழகம். பாரதிதாசன் பல்கலைக் கழகம்
(திருத்த) சட்ட முன்வடிவு, 1984

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''ஆளுநர் அவர்களால் 4—7—1984 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1984) இப்பேரவை நிராகரிக்கிறது''.

தீர்மானம் முறையே வழிமொழியப்பெற்றது.

---

*1984 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1984 அக்டோபர் 13

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தலைவர் அவர்களே, இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களைப் பொறுத்தது ஆகும். இந்த மூன்று பல்கலைக் கழகங்கள், பாரதி யார், பாரதிதாசன் மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் சட் டங்களைப் பற்றி நாம் பல்கலைக் கழக மானியக் குழுவோடு விவாதித்த நேரத்திலே அவர்களால் சொல்லப்பட்ட யோசனை கள் அடிப்படையில், அந்தப் பல்கலைக் கழகங்கள் மானியக் குழுவினுடைய நிதியுதவியைப் பெறுகிற வகையில் இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தங் கள் பெரும்பாலும் அவர்களுடைய யோசனை பேரில் கொண்டு வந்திருக்கிற திருத்தங்களாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கள் இவைகளை ஆய்விற்கு எடுத்துக் கொண்டு, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து நிறைவேற்றித் தரக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு கல்வி அமைச்சரின் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத் திற்கு வைக்கப்பெறுகின்றன.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்திற்கான திருத்தச் சட்ட முன் வடிவும், பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்திற்கான திருத்தச் சட்ட முன்வடிவும் இங்கே அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் எந்த அடிப்படையில் கொண்டு வரப் பட்டு இருக்கிறது என்று சொல்கிறபோது, இந்தச் சட்ட முன் வடிவின் காரண காரிய விளக்கக் குறிப்பில் என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்றால் இந்த இரண்டு பல்கலைக் கழகங் களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் சொல்லியிருக்கும் ஆலோ சனைகள், இந்திய சர்க்கார் சொல்லியிருக்கும் ஆலோசனைகள், பல்கலைக் கழக மானியக் குழு வழங்கியிருக்கும் ஆலோசனை கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று சொல் லப்பட்டு இருக்கிறது. ஆனால், என்னுடைய கருத்து—அவர்

*1984 ஆம் ஆண்டு அக்டோபர் 13ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1984 அக்டோபர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

களுடைய ஆலோசனைகளை மட்டுமல்லாமல், இந்த அரசாங்
கத்தின் ஆலோசனைகளின் அடிப்படையிலும் இந்தச் சட்ட
முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது இந்தச் சட்ட
முன்வடிவைப் படித்துப் பார்க்கிறபோது தெரிகிறது.

இந்தச் சட்டத்திலே உள்ள ஒரு அம்சத்தை நான் வர
வேற்கிறேன். பல்கலைக் கழக நிர்வாகம், கல்வித் தரம் எப்படி
இருக்க வேண்டும் என்று பொதுவாக திட்டமிட்டுச் சொல்வ
தற்கு பிளானிங் போர்ட்—திட்டக் குழு—போட வேண்டும்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து முன்னாள்
பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஆதிசேஷய்யா அவர்கள்
தெரிவித்த ஒரு சிறந்த கருத்து. இதை நான் சார்ந்து இருக்கும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

ஆனால் அதற்கு அடுத்தாற்போல் ஒரு பிரச்னை இருக்கிறது.
அது குறித்து ஏற்கனவே இந்தச் சட்டப் பேரவையில் இந்தச்
சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நேரத்திலேயே நான்
தெரிவித்து, என்னுடைய எதிர்ப்பையும் தெரிவித்து இருக்கி
கிறேன். பல்கலைக் கழகத்தின் நிர்வாக அமைப்புகளாக இருப்
பது ஆலோசனைக் குழு—செனட், ஆட்சிக் குழு - சிண்டிகேட்,
கல்வி விவகாரங்கள் குறித்த நிலைக்குழு—ஸ்டாண்டிங் கமிட்டி
ஆன் அகடமிக் அஃபேர்ஸ்—என்று 3 குழுக்கள் இருக்கின்றன.
அந்த 3 குழுக்களில் ஏதேனும் ஒரு குழுவிலே 6 ஆண்டுக் காலம்
ஒருவர் பதவி வகித்து இருந்தால் அவர் மீண்டும் தேர்தலில்
நின்று வெற்றி பெற்று வந்தாலும் அல்லது நியமனம் செய்யப்
பட்டு வந்தாலும் அது செல்லாது என்று ஒரு ஷரத்தை இப்போது
இதிலே இணைத்து இருக்கிறீர்கள்.

அது மட்டுமில்லாமல், இது இந்த ஒரு பல்கலைக் கழகத்
திற்கு மட்டுமில்லாமல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்
கலைக் கழகத்திற்கும் பொருந்தும் என்ற குறிப்பையும் இதிலே
இணைத்து இருக்கிறீர்கள். இந்தக் கருத்து அமைச்சர் அவர்
களின் ஆலோசனை, இந்த அரசாங்கத்தின் ஆலோசனை என்று
நான் கருதுகிறேன். இந்த மாதிரியான ஒரு ஷரத்தை முதலில்
மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு கொண்டு வரப்பட்
டது. அந்தச் சட்டத் திருத்தம் வந்தபோது நான் இந்த அவையில்
பேசியிருக்கிறேன். இப்படி 6 ஆண்டுகாலத்திற்குமேல் யாரும்
அந்தப் பதவியில் இருக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு
வருவதற்கு அரசியல் உள்நோக்கம் இருக்கிறது. காரணம்,
மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தில் எங்கள் கட்சியைச்
சேர்ந்த திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் சிண்டிகேட் உறுப்
பினராக இருப்பதால், அவருடைய பதவியைப் பறிக்க வேண்டும்
என்ற அரசியல் உள்நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தைக்
கொண்டு வருகிறீர்கள் என்று நான் அன்றைக்கே எடுத்துச்
சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், இது என்ன பல்
கலைக்கழக திருத்த மசோதாவா அல்லது பழனிவேல்ராஜன்
பதவி பறிப்பு மசோதாவா என்று கூட நான் பேசியதாக நினைவு.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 அக்டோபர் 13

ஆனால், இப்போது அதே காரணத்தைச் சொல்லி மற்ற
பல்கலைக் கழகங்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக்
கொண்டு வருகிறார்கள். ஒரு கதை சொல்வார்கள். பாண்டிய
மன்னன் தவறுதலாக ஒரு வீட்டைத் தட்டி விட்டதற்காக, தன்
னுடைய தவறு எங்கே மற்றவர்களுக்குத் தெரிந்து விடப்
போகிறது என்பதற்காக எல்லோருடைய வீட்டுக் கதவுகளை
யும் தட்டிவிட்டுச் சென்றானாம். அதைப் போல, மதுரை-
காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் கொண்டு வந்தால்
எங்கே நம்முடைய நோக்கம் வெளிப்பட்டு விடுமோ என்று அஞ்சி
இப்போது எல்லாப் பல்கலைக் கழகத்திற்கும் இந்த அரசு கொண்டு
வந்து இருக்கிறது. அதனால் தான் 6 ஆண்டுகாலம் பதவி
வகித்து விட்டால் அவர் பதவியை விட்டு விலகவேண்டும் பதவி
அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்
டுள்ளது. (குறுக்கீடுகள்) சின்டிகேட்டிலே, செனட்டிலே அல்லது
அந்த கல்வி நிலை குழுவிலே ஒருவர் தொடர்ந்து 6 ஆண்டு
காலம் பதவி வகித்து விட்டால், அவர் அங்கே மேலும் தொடர்ந்து
பதவி வகிப்பதன் மூலம் அவருடைய சொந்த நலனுக்கு வழி
வகுக்கக்கூடும் அல்லது லஞ்சத்திற்கு வழிவகுத்து விடும் அல்லது
ஊழலுக்கு வழி வகுத்துவிடும், பலர் அந்தப் பொறுப்புக்கு வர
முடியாமல் போகும் சூழ்நிலை ஏற்படும் என்ற முறையிலே இங்கே
அமைச்சர் அவர்கள் காரணங்களைக் சொன்னார்கள்.

அப்படியானால், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க
ஆசைப்படுகிறேன். ஒரு பல்கலைக் கழகத்தின் துணை வேந்
தருக்கு இச்சட்டம் பொருந்தாது; அவர் 6 ஆண்டுகளுக்கு
மேலும் தொடர்ந்து இருக்கலாம் என்றால் அவர் 6 ஆண்டு
களுக்குமேல் இருந்தால் ஊழல் செய்ய மாட்டாரா? அவர்
தொடர்ந்து இருந்தால் மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய
சந்தர்ப்பம் பாதிக்கப்படாதா? அவர் தொடர்ந்து இருந்தால்
சொந்த நலன் காரணமாக 'வெஸ்டட் இன்டரஸ்ட்' அவருக்கு
வராதா? செனட் உறுப்பினர், சின்டிகேட் உறுப்பினர், பிளா
னிங் கமிட்டி ஆன் அக்கடமிக் அஃபயர்ஸ் உறுப்பினர்கள் 6 ஆண்டு
களுக்கு மேல் இருக்கக்கூடாது என்றால் துணை வேந்தர்
இருக்கலாமா?

அதைப் போன்று எக்ஸ் அபிஷியோ மெம்பர்கள்—கல்லூரிக்
கல்வி இயக்குநர் இருக்கலாம், மருத்துவக் கல்லூரி இயக்குநர்
இருக்கலாம்—அவர்களுக்கு எல்லாம் இது பொருந்தாது என்
றால் அவர்கள் எல்லாம் தவறு செய்ய மாட்டார்களா? அதைப்
போன்று பட்ட மேற்படிப்பு இயக்குநருக்கு இந்தச் சட்டம்
பொருந்தாது. கவர்னரால் நியமிக்கப்படுகின்ற எக்ஸ் அபிஷியோ
மெம்பர் யாருக்கும் இந்தச் சட்டம் பொருந்தாது. அப்படி
யென்றால் இந்த இரட்டை அணுகுமுறை ஏன் என்று நான்
கேட்க ஆசைப்படுகிறேன்.



1984 அக்டோபர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

அதைப் போன்று, இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். தொடர்ந்து நம்முடைய சட்டமன்ற உறுப்
பினர்கள் 6 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று யாரா
வது சொல்லத் தயாரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள்
6 ஆண்டுகளுக்கு மேல் பொறுப்பில் இருக்கக் கூடாது என்று
சொல்லத் தயாரா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 7 ஆண்டு
களுக்குமேல் தொடர்ந்து அமைச்சராக இருக்கிறார்கள். 6
ஆண்டுகளுக்கு மேல் நான் பதவியில் இருக்கமாட்டேன்; இருந்
தால் ஊழல் வந்துவிடும்; 6 ஆண்டுகளுக்குமேல் அமைச்சராக
இருந்தால் வேண்டியவர்களுக்குச் சலுகை செய்ய வேண்டி வந்து
விடும்; 6 ஆண்டுகளுக்குமேல் அமைச்சராக இருந்தால் தப்பு
நடந்துவிடும்; எனவே, நான் பதவியில் 6 ஆண்டுகளுக்குமேல்
இருக்க மாட்டேன்; ஆண்டது போதும், பதவியை விட்டுவிடு
கிறேன் என்று சொல்லத் தயாரா? 7 ஆண்டுகள் பதவியில்
இருந்தும், மீண்டும் இந்த பதவிக்கு வரமாட்டோமா என்ற
எண்ணம் தானே இருக்கிறது. பதவியை விடத் தயாராக
இல்லையே. பதவி கிடைக்குமா, கதவு திறந்திருக்கிறதா என்ற
எண்ணம்தானே இருக்கிறது. 6 ஆண்டுகளுக்கு மேல் ஆனாலும்
அமைச்சர் பதவியை விட தயாராக இல்லையே.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
10 ஆண்டு, 12 ஆண்டு பதவியில் இருக்கிறவரே ஆசைப்பட்டுக்
கொண்டு இருக்கும் போது நான் இருப்பதிலே எந்தவிதமான
தவறும் இல்லை. அங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவு
மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அமைச்சர்கள், எம்.எல்.ஏ.
போன்றவர்களுக்கு அல்ல. அவர்கள் அந்தந்த கட்சிக்கு உட்பட்டு
நடக்க வேண்டும். இங்கே சொல்லியிருப்பது தனிப்பட்டவர்
சின்டிகேட், செனட் போன்றவைகளில் உறுப்பினராக இருந்து
கொண்டு, அவர்கள் எப்படி நடந்து கொண்டு வருகிறார்கள்
என்று பார்த்த பிறகு, அதிலும் குறிப்பாக அது சம்பந்தப்பட்ட
கல்லூரி, பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளின்
அடிப்படையில், அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படை
யில், அந்த அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு
கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர யாரையும் மனதிலே
வைத்துக் கொண்டு, இதைக் கொண்டு வரவில்லை. உங்களுக்கு
பழனிவேல்ராஜன் வேண்டியவர் என்பதால் எங்களுக்கு அவர்
வேண்டாதவர் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அரசால் கொண்டு வருகிற ஒரு
சட்டம் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருக்கிறவ
ருக்குப் பொருந்தாது, மற்றவர்களுக்குப் பொருந்தும் என்று
சொல்வது எப்படி நியாயம் என்று நான் கேட்க ஆசைப்படு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
இதிலே நான் குறிப்பிட விரும்புவது, 6 ஆண்டுகளுக்கு மேல்
தொடர்ந்து பதவியில் இருந்தால் என்ன லாபம்? அதனால்

பல்கலைக் கழகத்திற்கு என்ன பயன் ஏற்படும்? அல்லது பதவியில் இல்லாமல் போனால் பல்கலைக் கழகத்திற்கு என்ன நஷ்டம்? என்பவை பற்றிச் சொன்னால் நானும் பதில் சொல்ல வசதியாக இருக்கும். இப்படி வேறு வகையிலே ஏதாவது பேசினால் நானும் ஏதாவது சொல்ல வேண்டிவரும். ஆகவே, இந்த சட்ட முன்வடிவுக்கு பொருத்தமாக விவரங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக ஒரு பிரச்சினையை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் ரெக்கமென்டேஷன் அடிப்படையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தக் கமிஷன் சொல்லியிருக்கிற சில முக்கியமான பகுதிகளை மட்டும் நான் வாசிக்கிறேன். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,

"The concept of University autonomy, however be that it would be appropriate on the part of the democratic legislatures not to interfere with the administration of University both academic and non-academic. That has been well observed in the representation of the Committee on governance of University and Colleges"

அரசியல்வாதிகளுடைய தலையீடுகள் பல்கலைக் கழகத்திற்குள் இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தச் சட்டம் பல்கலைக் கழகங்களுடைய சுயேச்சையாக செயல்படும் தன்மையை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. ஏதோ ஒரு நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக ஒரு தவறைச் செய்யக் கூடாது, 6 ஆண்டுகளுக்கு மேல், இருக்கக்கூடாது என்ற சட்டம் இரண்டு பேர்களுக்கு மட்டும் பொருந்தும், மற்றவர்களுக்குப் பொருந்தாது என்ற பாகுபாட்டை ஏற்படுத்தக் கூடாது என்பதை மட்டும் சொல்லிவிட்டு மற்ற பிரச்சனைகளுக்கு வருகிறேன்.

(முற்பகல் 11-40)

## 7. தகவல் கோரல்

## தமிழக முதல்வர் உடல் நலம் குறித்து.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காலையில் நம்முடைய சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் முதலமைச்சரின் உடல்நிலை பற்றி ஒரு அறிக்கையைக் கூட படித்திருக்கிறார்கள். முதலமைச்சரின் உடல்நிலை பற்றி பத்திரிகைகளில் வந்திருக்கக் கூடிய செய்திகள் வேதனை தரக்கூடியதாக இருக்கின்றன. அவருக்கு ப்ளட் யூரியா 300 ஆக இருக்கிறது. (குறுக்கீடுகள்) உங்களை விட எனக்கு



அவர் வேண்டியவர். 30, 40 ப்ளட் யூரியா இருக்கவேண்டு
மென்று சொல்கிறார்கள். நான் இந்த அரசாங்கத்தைக்
கேட்கிறேன். கிட்னி வைத்தியத்திற்குப் பெயர் பெற்றது
ஆஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா ஆஸ்பத்திரி தான். அங்கே
புகழ் பெற்ற டாக்டர் மோஹன் ராவ் இருக்கிறார். 'கிட்னி
இஸ் சம் வாட் டேமேஜ்ட்' என்று சொல்கிற அளவிற்கு
வந்திருக்கிறது. இந்த சர்க்கார் என்ன செய்து கொண்டிருக்
கிறது? டாக்டர்களை நம்பிக் கொண்டிருக்கிறார்களா?
ப்ளட் யூரியா 30, 40 இருக்கவேண்டியது 300-க்கு போய்
இருக்கிறது. ஏன் அவரை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்ல
நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை? ஆஸ்திரேலியாவில் இருக்
கிற விக்டோரியா ஆஸ்பத்திரி இந்த வைத்தியத்திற்கு மிகச்
சிறந்தது. மிகப் பெரிய ஹாஸ்பிடல் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு அறிக்கை கொடுத்துவிட்டார்கள். அவர் தான் இதற்கு பொறுப்பு.

திரு. துரைமுருகன் : ஏன் அவரை ஆஸ்திரேலியாவிற்கு கொண்டு போகக் கூடாது? ஏன் அவரை ஆஸ்திரேலியாவிற்கு கொண்டு போகப் பயப்படுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர் ஒரு அறிக்கை கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.
பத்திரிகையை நம்புவதா அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சரை நம்புவதா? அவரை வெளிநாட்டிற்குக் கொண்டு
செல்வதை டாக்டர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அரசு
அல்ல. (குறுக்கீடுகள்) டாக்டர் பிரதாப் ரெட்டி கையெழுத்து
போட்டு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதை மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சர் படித்திருக்கிறார். (குறுக்கீடு) நான்
டாக்டர் இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : யூ ஆர் மோர் தன் எ டாக்டர் யூ கேன் கோ அண்டு சீ அண்டு இன்பார்ம் தி ஹவுஸ். திஸ் இஸ் யுவர் ட்யூட்டி ஆல்சோ.

திரு. துரைமுருகன் : தாங்கள் அண்ணாவோடு வெளிநாடு
களுக்குச் சென்று இருக்கிறீர்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள விக்
டோரியா ஹாஸ்பிடல் மிகச் சிறந்த ஆஸ்பத்திரி. அங்கு
எல்லா சௌகரியங்களும் இருக்கின்றன. அது தங்களுக்கே
தெரியும். ஆஸ்திரேலியாவிற்கு முதலமைச்சரை கொண்டு
செல்ல அரசு முடிவெடுத்து, முதலமைச்சரைக் காப்பாற்ற வேண்டு
மென்ற நல்லெண்ணத்தில் சொல்கிறோமே தவிர, வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லெண்ணத்திற்கு நன்றி.

[1984 அக்டோபர் 13

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காலையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்,
டாக்டர் எச். வி. ஹண்டே கொடுத்த அறிக்கையிலே இரண்டே
இரண்டு வாக்கியங்களே இருந்தன. அதுவும் சாதாரணமாக
இருக்கிறது. பத்திரிகைச் செய்தி கவலை தரக்கூடியதாக
இருக்கிறது. முதலமைச்சர் விரைவில் குணம் பெறவேண்டு
மென்ற நல்லெண்ணத்தில் தான் நாங்கள் சொல்கிறோம்.
தீவிர நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டுமென்ற
நல்லெண்ணத்தில் தான் சொல்கிறேன். காலையிலே கொடுக்கப்
பட்ட அறிக்கையிலே இரண்டே இரண்டு வாக்கியங்களே இருந்
ததால், விவரமான அறிக்கையை இந்த மன்றத்திற்குக் கொடுப்ப
தற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்
அரசாங்கம் வெகு விரைவில் நடவடிக்கை எடுத்து,
முதலமைச்சரைக் காப்பாற்ற வேண்டுமென்பது தான் எங்க
ளுடைய கவலை,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
முதல்வர் அவர்கள் இப்போது மருத்துவமனையில் இருந்துகொண்
டிருக்கிறார்கள். தேவையான சிகிச்சைகளும், பரிசோதனை
களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்கள் இங்கே
இருந்து இந்த சிகிச்சையை செய்யமுடியும் என்று நம்புகிறார்கள்.
வெளிநாடு போகின்ற அவசியம் இருக்கிறது என்று மருத்துவர்கள்
சொல்வார்களேயானால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை
அரசு எடுக்கும். அதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.
இப்போது இருக்கிற நிலையில் அது தேவையில்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் அப்போலோ
ஆஸ்பத்திரியைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் கண்
ணுக்குத் தெரிந்து பிளட் யூரியா 300 எம். ஜி. வரை போயிருக்கிறது
என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலே இதைப் படிக்கிற
போது கை நடுங்குகிறது. ஏன். இதற்காகச் சர்க்கார் நடவடிக்கை
எடுக்கக்கூடாது? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை நான்
மதிக்கிறேன். அவர்கள் நல்ல உணர்வோடு தான் பேசுகிறார்கள்.
இப்போது இருக்கின்ற நிலைமையிலே இங்கேயே பரிசோதனை
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது தேவைப்
பட்டால் நாம் கொண்டுபோகவேண்டுமே தவிர, தேவையில்லாத
சமயத்திலே நாம் வெளிநாட்டிற்குக் கொண்டு போகிற
அவசியம் இல்லை. இங்கே இருப்பவர்கள் நல்ல அனுபவம்
மிக்கவர்கள். அவர்கள்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.
உடல் தேறிக் கொண்டிருப்பதாகத்தான் எங்களுக்கு வருகின்ற
செய்தியாகும்,



6. அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1984

(உ) பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம்
(திருத்த) சட்ட முன்வடிவு 1984—(தொடர்ச்சி).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இடைவேளைக்
குப் பிறகு மீண்டும் சினிமா ஆரம்பம் ஆவதைப் போல, என்
பேச்சைத் துவக்குகிறேன். ஏற்கனவே 6 ஆண்டுகாலம் பதவி
வகிக்கின்ற கால கட்டத்தைப் பற்றிக குறிப்பிட்டார்கள். ஆனால்,
இதற்கு முன்பாக, பல்கலைக் கழகத்திலே எங்களைப் போன்றவர்
கள், 6 ஆண்டுகள், காமராசர் பல்கலைக் கழகத்திலே பதவி
வகித்தால், அடுத்து சென்னைப் பல்கலைக் கழகத்திலே நாங்கள்
பதவி வகிக்கத் தடையில்லை ; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
திலே பதவி வகிக்கத் தடையில்லை. ஆனால் இப்போது ஏதாவது
ஒரு பல்கலைக் கழகத்திலே இந்த 3 நிர்வாகப் பொறுப்பிலே
6 ஆண்டுகாலம் இருந்துவிட்டால், எந்தப் பல்கலைக் கழகத்
திலும் பதவி வகிக்க முடியாது என்று கொண்டு வந்திருப்பது
அவ்வளவு சரியானதல்ல ; முறையானதல்ல என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

ஏற்கனவே இந்த அவையிலே எழுப்பப்பட்ட கேள்விக்கு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அவர்கள் தவறான
தகவலைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, அவர் மீது
நான் உரிமைப்பிரச்சனை கூட கொண்டு வரமுடியும். பால
கிருஷ்ணன் என்பவர், பேராசிரியர், அவர் 15 ஆண்டுகாலமாக
சிண்டிகேட்டிலே உறுப்பினராக இருக்கக்கூடியவர். ஆனால்
மீண்டும் அவர் இந்த 6 ஆண்டுகள் என்ற உச்ச வரம்பை மீறி
தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு சிண்டிகேட் உறுப்பினராக
இருக்கிறார்கள். அமைச்சரைக் கேட்டால் அவர் ஸ்டே வாங்கி
யிருக்கிறார் என்று சொல்கிறார். தவறான தகவலைச் சபைக்குச்
சொல்லக்கூடாது.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.
சண்முகநாதன் என்பவர், பச்சையப்பன் கல்லூரியிலே முன்னாள்
முதல்வராக இருந்தவர். ஏற்கனவே சொல்லியதைப் போல.
15 ஆண்டு காலத்திற்கு மேலே பொறுப்பிலே இருக்கிறார்.
அவர் இப்போது கவர்னரால் சிண்டிகேட் உறுப்பினராக
நியமிக்கப்படுகிறார். ஆகவே இவைகளிலே எவ்வளவு
முரண்பாடுகள், கொள்கைக் குழப்பங்கள். எனவேதான்
சொல்கிறேன். வேண்டியவர்களுக்கு என்றால் சட்டம் எப்படி
வளைக்கப்படுகிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இந்த 6 ஆண்டுகள்
என்ற உச்ச வரம்பு தேவையற்றது. மற்றும் கோர்ட்டிலே
கூட இது சம்பந்தமாக வழக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.
அப்படிப்பட்ட ஒரு கால கட்டத்திலே அவசரம் அவசரமாக
இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுவது சரியா என்பதை நான்
கேட்க விரும்புகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 அக்டோபர் 13

அதைப் போலவே இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். பல்கலைக் கழகம் என்பது சுயாட்சி பெற்றதாக இருக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு அதனுடைய அட்டானமஸ், சுயாட்சிக்கு ஆபத்து வருகின்ற விதத்திலே அரசாங்கம் இன்றைக்கு தபளீகரம் செய்கின்ற அளவிற்கு அதனுடைய எல்லைக்குள்ளே சென்று, தன்னுடைய அதிகார வரம்பிற்குள்ளே பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியிலே ஈடுபட்டு, அதனுடைய அதிகாரத்தைப் பறிக்கின்ற காரியத்தை இந்தத் திருத்தத்தின் மூலமாக அரசாங்கம் செய்கிறது. உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நீங்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த திருத்தச் சட்டத்திலே அரசு சிபாரிசு செய்கின்ற நபர்களைத் தான் அங்கே பைனான்ஸ் ஆபிசராக போடவேண்டிய அவசியம் அதிலே இருக்கிறது. இது அரசு ஆதிக்கம் செய்வதற்கு வேண்டிய கதவைத் திறக்கும். சிண்டிகேட்டில் 18 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதிலே 7 பேர்கள் அரசால் நியமனம் செய்யப்படுவார்கள். அரசினுடைய அதிகாரத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். அதைப் போலவே எக்ஸ்-அபிசியோ மெம்பர்கள் அரசால் நியமனம் செய்யப்படுவார்கள். அதைப் போலவே பிளானிங் போர்டிலே ஆளுநர் 8 பேரை நியமிக்கலாம். இவைகள் எல்லாம் எதைக் காட்டுகிறது என்றால், பல்கலைக் கழகம் ஒரு கிளைக் கழகமாக ஒரு ஏஜென்சியாக இன்னும் சொல்லப்போனால் அரசாங்கத்தினுடைய ஒரு கைத்தடியாக பயன்படுத்துவதற்காக இந்தத் திருத்தத்தின் மூலம் அதிகாரம் சர்க்காருக்கு வருகிறது. அதனுடைய அட்டானமஸ் நேச்சர் சுயாட்சிக்கு இது மிகப் பெரிய இடையூறுகளை உருவாக்குவதாகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த எக்ஸ்-அபிசியோ ஆபிசர்களாக இருக்கக்கூடியவர்கள் சுற்றுத் தேர்ந்த அந்தத் துறையிலே வல்லுநர்களாக இருப்பவர்கள் எல்லாம் அதிலே நியமிக்கப்படுகிறார்கள். மருத்துவக் கல்லூரியினுடைய முதல்வர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பல்வேறு துறையைச் சேர்ந்த டைரக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவ்வளவு பேரையும் நியமித்ததற்குப் பிறகு இன்றைக்கு உங்களுடைய திருத்தச் சட்டத்திலே சொல்கிறீர்கள்.

The Syndicate may consult the standing Committee on academic matters where it considers such consultation is necessary. கல்வி சம்பந்தமாக ஆலோசனைப் பெற வேண்டும் என்று விரும்பினால் 'may consult' ஆலோசனைப் பெறலாம் என்று. அப்படியானால் என்ன அர்த்தம்? பெறவேண்டிய அவசியம் இல்லை என்று புலப்படுகிறது. ஆகவே நான் கேட்கிறேன். சிண்டிகேட்டுக்கு அரசியல்வாதிகள் என்ற முறையில் யார்வேண்டுமானாலும் வந்துவிட முடியும். ஆனால் எக்ஸ்-ஆபிசியோ மெம்பராக இருப்பவர்கள் பல்கலைக் கழகத்தை, கல்லூரிகளைப் பொறுத்த மட்டிலும், பாடத் திட்டத்தைப் பற்றி, கல்வியின்



1984 அக்டோபர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

(முற்பகல் 11–50)

அதிலே ஞானம் தரத்தைப் பற்றி மிகவும் தேர்ந்தவர்கள். ஆனால் அவர்களுடைய ஆலோசனையை சிண்டி பெற்றவர்கள். கேட்டுத்தான் தீரவேண்டும் என்று இல்லை கேட் அவசியம் இருப்பது தவறு, may consult என்ற என்ற வாசகம் மாற்றி, 'shall consult' கலந்தே தீரவேண்டும் வார்த்தையை Mandatory-யாகப் போட வேண்டும் என்று நான் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். யூனிவர்சிட்டி கிரேண்ட் கமிஷன் அமைத்திருக்கக்கூடிய 1971-ஆம் ஆண்டு குழு, வைய்ஸ் சான்ஸ்லர் பதவியைப் பற்றி தெளிவாகச் சொல்கிறது. அதில் The appointment of Vice-Chancellor is of very crucial importance to University. என்று சொல்லி விட்டு,) அவர் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும். திறமையானவராக இருக்க வேண்டும். ஊழல் பெருச்சாளியாக இருக்கக்கூடாது. இல்லாவிட்டால், அது பல்கலைக் கழகத்தினுடைய தரத்தையும், தகுதியையும், எல்லாவற்றையும் கெடுத்து விடும் என்று கிராண்ட் கமிஷன் கமிட்டி 1971-ஆம் ஆண்டு தெளிவாக அறிவித்திருக்கிறது. நான் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களை நமது சபாநாயகர் அவர்களின் மூலமாக, கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலே துணை வேந்தராக 'மணிசுந்தரம்' அவர்கள் இருக்கிறார்கள். இதோ உங்கள் முன்னாலே சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள், இதே மாமன்றத்திலே பேசுகிறபோது, அவர் மீது பல குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்கள்.

அப்படி அவர் சொல்லிய குற்றச்சாட்டுகளுக்கு, அந்த விவரத்திற்கு, பின்னால் நான் வருவதற்கு முன்பாக, நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு அந்த மணிசுந்தரம் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள் தங்கியிருக்கக்கூடிய இடம் எது தெரியுமா? — பல ஆயிரம் ரூபாய்க்கு மேலே, பல லட்சம் ரூபாய்க்கு மேலே பல்கலைக் கழகத்தினுடைய பணம் எப்படி தவறாக மிஸ்யூஸ் செய்யப்படுகிறது, செலவழிக்கப்படுகிறது என்பதை கோடிட்டுக் காட்டுவதற்காகச் சொல்கிறேன்; பி. டபிள்யூ. டி. பங்களாவிலே, அவர் தங்கியிருக்கிறார்.

அப்படி அவர் தங்கியிருந்தபோது, அதை ஒரு மிகப் பெரிய மகாராஜா அவர்களின் அரண்மனையைப் போல, அந்த பி. டபிள்யூ. டி. பங்களாவை தன்னுடைய தங்குதல் என்ற சிறிய காரணத்திற்காக, பல லட்சம் ரூபாய் செலவழித்து அரண்மனையாகவே ஆக்கியிருக்கிறார்கள். அது

[திரு. அ. ரகுமான்கான்] [1984 அக்டோபர் 13

யூனிவர்சிட்டிக்கு சம்பந்தப்பட்ட பில்டிங் அல்ல. பொதுத்
துறைக்கு சம்பந்தப்பட்ட பில்டிங். நான் கேட்கிறேன்.
இது யூனிவர்சிட்டியினுடைய பணம் அல்லவா? அதைத்
தவறாகப் பயன்படுத்தலாமா என்று.

அதைப் போலவே இன்னொன்றையும் சொல்கிறேன்.
ஒரு தனியார் வீட்டிலே அவர் தங்கிய போதுகூட; அது
பல்கலைக் கழத்தினுடைய கட்டிடம் அல்ல, அங்கேயும் அவர்,
தான் தங்குவதற்காக, தனக்கு வசதி உண்டாக்கிக் கொள்வதற்
காக, பல ஆயிரக் கணக்கான ரூபாய்களை, பல லட்சக்
கணக்கான ரூபாய்களை செலவழித்திருப்பதாக எனக்கு
தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, நான் கேட்கிறேன்,
ஒரு பல்கலைக் கழத்தினுடைய துணை வேந்தர், பல்கலைக்
கழத்தினுடைய பணத்தை பாதுகாப்பதற்கு பதிலாக, தவறான
வழிகளில் செலவழிப்பதை இந்த சர்க்கார் பார்த்துக் கொண்
டிருக்கிறதா ? அல்லது இந்த சர்க்காருக்கு அது தெரியாதா
என்று நான் தெரிந்துக் கொள்ளவிரும்புகிறேன்?

அது மட்டும் அல்லாமல், இங்கே தமது மாண்புமிகு
கல்வி அமைச்சர் அவர்கள், இதே பேரவையிலே ஒரு உறுதி
கொடுத்தார்கள். ஒரு அறிக்கையை வைப்பதாகச் சொன்
னார்கள். இதே துணை வேந்தர் மீது ஒரு விசாரணைக்
கமிட்டி இருக்கிறது. அந்த விசாரணைக் கமிட்டியிலே ஒரு
பிரச்சினையிலே தெளிவாக தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.
என்ன தீர்ப்பு என்று கேட்டால், பீஹாரைச் சேர்ந்த கபீல்
தேவ்யாதவ் என்கிற ஒருவர் ஒரு மத்திய அமைச்சருக்கு
மிகவும் வேண்டியவர். அவருக்கு பகுதி நேர பட்டப்படிப்புக்கு
ரீஜினல் என்ஜினியரிங் காலேஜிலே நம்முடைய துணை
வேந்தர் அட்மிஷன் கொடுத்தார்கள். இன்னும் சொல்லப்
போனால், அதற்கான தகுதிக்காக, அரியமங்கலம் என்று
பக்கத்திலே இருக்கக்கூடிய ஊரிலே 4 ஆண்டுகள் தொழில்
துறை பணி அனுபவம் பெற்றவர் என்று பயிற்சிக்கான
சான்றிதழையும் அவர்கள் கொடுத்தார்கள். அது பொய்யான
சான்றிதழ் என்று, ஒரு புகாரை அனந்தன் நம்பியார் போன்ற
வர்கள், உமாநாத் போன்றவர்கள் புகார் கொடுத்ததற்கும்
மேலாக நம்முடைய சர்க்காருடைய சி.ஐ.டி. செல் கண்டு
பிடித்து அது பொய்யான சான்றிதழ்தான், பீகார்காரருக்
கும் அரிய மங்கலத்திற்கும் சம்பந்தமே இல்லை. 4 ஆண்டு
பயிற்சியும் இல்லை; சர்டிபிகேட் பொய்யானது என்று
சொல்லிவிட்டார்கள்.

அந்தத் தீர்ப்பு சி.ஐ.டி. ரிப்போர்டிலேயே வந்துவிட்டது.
அது கமிட்டிக்கு ரெஃபர் பண்ணப்பட்டது. உங்களாலேயே
அமைக்கப்பட்ட கமிட்டி அது. அந்த கமிட்டியின் விசாரணைக்
குழு பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தவறு
செய்திருக்கிறார்கள். தெரிந்தே செய்திருக்கிறார்கள். பொய்
யான சான்றிதழ்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று



1984 அக்டோபர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதாக நான் கேள்விப்
படுகிறேன். அந்த அறிக்கையின் காப்பி உங்களிடத்திலே
இருக்கலாம். நான் கேட்கிறேன், யூனிவர்சிட்டி கிராண்ட்
கமிஷனுடைய ரிப்போர்ட்டினுடைய அடிப்படையில்தான்,
இப்பொழுது சட்டத்திருத்தம் கொண்டு வருவதாகச் சொல்
கிறீர்களே, ஒரு பல்கலைக் கழக துணை வேந்தர் கறைப்படி
யாத கரமாக இருக்க வேண்டாமா? நான் கேட்கிறேன் இந்த
கமிட்டி ரிப்போர்ட் வந்ததற்குப் பிறகும் கூட, விசாரணைக்
குழு தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிறகும் கூட, இந்தக் கறை
படிந்த கரத்திற்குச் சொந்தக்காரரை இந்த சர்க்கார் திரும்ப-
வும், இன்னமும் துணை வேந்தராக நீடித்து இருக்கலாம்
என்று ஏற்பாடு செய்திருப்பதற்கு என்ன காரணம்? அப்படி
யானால் இந்த ஊழல் நபர்களுக்கு இந்த சர்க்கார் துணை போகி
றதா ? அப்படியானால் நீங்கள் யு. ஜி. சி. யின் ஆலோசனை
அடிப்படையில் சட்டத் திருத்தம் கொண்டுவருவதாக சொல்
வது ஏமாற்றுவேலை இல்லையா என்பதை தலைவர்
அவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்க
விரும்புகிறேன்.

இங்கே, கமிஷன் ரிப்போர்டை படித்துக்காட்டினேன்.
அதன்படி யாரும் பல்கலைக் கழத்திலே தேவையற்ற முறை
யிலே தலையிடக்கூடாது, அப்படித் தலையிடுவது என்று
சொல்வது அதனுடைய அட்டானமியைக் கெடுத்துவிடும்
என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர்
அவர்களே, பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
பற்றி சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்
கள் மீது வந்த்துள்ள புகார் மீது குழு தந்துள்ள அறிக்கை
ஆர். இ. சி. கவர்னிங் பாடிக்கு முன் பரிசீலைனயில் உள்ளது.

திரு. அ. ரகுமான்கான் : பரிசீலனையில் உள்ளதாக அமைச்
சர் சொல்கிறார். ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது.
1978 ஆம் ஆண்டு. இன்றைக்கு இந்த ஆண்டைப் பாருங்கள்.
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், புகார்
கொடுத்த திரு. உமாநாத் அழைக்கப் பட்டாரா? புகார்
கொடுத்த அனந்தன் நம்பியார் அழைக்கப்பட்டாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; புகார்
கொடுத்த தேதியிலேயே நாம் ஒரு நடவடிக்கை எடுப்பது
என்று வைத்துக் கொண்டால் அது எப்படி சரியாகும்?
ஆகவே நாம் விசாரித்து ஒரு அறிக்கை தந்தோம். அது
இங்கே விவாதிக்கப்பட்டது. விவாதிக்கப்பட்டபோது குழு
வின் முன்பு வைப்பதாகச் சொல்லப்பட்டது. அது இப்போது
குழுவின் முன்னால் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே அதைப்பற்றிய பரிசீலனை தொடர்ந்து நடை
பெற்றுக்கொண்டிருக்கிறது, நிறுத்தப்பட்டவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 அக்டோபர் 13

திரு. அ. ரகுமான்கான் : விசாரணை கைவிடப்படவில்லை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லியதற்கு மகிழ்ச்சி. ஆனால் விசாரித்து முடிவு எடுத்து நடவடிக்கை எடுப்பதற்கான அறிகுறி தெரியவில்லை என்பதுதான் என்னு டைய குற்றச்சாட்டு. 1978 ஆம் ஆண்டு திரு. உமாநாத் அவர்கள் குற்றச்சாட்டு சொன்னார்கள். அனந்தன் நம்பி யார் குற்றச்சாட்டு சொன்னார்கள். புகார் கொடுத்த திரு. உமாநாத் விசாரணைக்கு அழைக்கப்பட வேண்டுமா? வேண்டாமா? இது என்ன ராமபிரசாத் ராவ் கமிஷனா? அவர்கள் ஏன் அழைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் கல்வித் துறையில் இதுவரைக்கும் என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள்? அவர்கள் விசாரிக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கூப்பிட்ட விசாரணைக் குப் போகாத ஒரு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் இப்பொது விசாரணைக்குச் கூப்பிடவில்லை என்று சொல் கிறார். இனிமேலாவது வழக்கு மன்றத்திலிருந்து ஏதாவது வந்தால் போகிற பழக்கத்தை வைத்துக் கொள்வது நல்லது.

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் முறையாகப் போடுகிற வழக்குகளைச் சந்தித்துந்தான் பழக்கமே. தவிர இடிஅமீன் போடுகிற வழக்குகளுக்கு எல்லாம் போகிற பழக்கம் இல்லை. தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கரப்ட் பிராக்டிஸ் உள்ள ஒரு நபரை துணைவேந்தராக நியமிப்பது பல்கலைக் கழகத்திற்கே சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்பு கிறேன். எக்ஸ் அபிஷியோ மெம்பராக டெக்னிக்கல் எஜூகேஷன் டைரக்டர் இருக்கிறார். அரசியல்வாதிகள் தலை யிடக்கூடாது என்று யு. ஜி. சி. நமக்குச் சிபாரிசு செய்கிறது, நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒரு தகவலை இங்கே தருகிறேன். அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலிடெக்னிக்குகள் டெக்னிக்கல் எஜூகேஷன் பிரிவில் வருகின்றன. பாலிடெக்னிக்குகள் வழங்குவதில் நிறைய முறை கேடுகள் நடக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். வீடு இல்லாத ஒருவர், சொத்து இல்லாத ஒருவர், பணமே இல்லாத ஒருவர் அண்ணா தொழில் நுட்பக் கல்லூரியிலே வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறவர், ஒரு எம்ப்ளாயி 3 பாலிடெக்னிக்குகளை வாங்கி இருக்கிறார். நான் ஆதாரம் வைத்திருக்கிறேன். பொய்யாக போகஸாக ஒரு டிரஸ்ட் வைத்திருக்கிறார். நான் பெயரைச் சொல்கிறேன். சுஜாதா எஜூகேஷனல் டிரஸ்ட், இது ஏற்கனவே அமைச்சருக்குத்



[1984 அகடோபர் 13 [திரு. அ. ரகுமான்கான்]

தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சுஜாதா எஜூகேஷனல் டிரஸ்ட் பவுண்டர்தான் அந்த நபர். அவருடைய பெயரைக்கூட தேவையானால் நான் சொல்கிறேன். காத்தமுத்து. எங்கே வாங்கியிருக்கிறார் தெரியுமா? தென்கரை தங்கமுத்து பாலி டெக்னிக் இருக்கிறது, பெரியகுளத்திலே ஒரு பாலிடெக்னிக், மானாமதுரையிலே கெங்களத்தூர் காமாட்சியம்மன் பாலி டெக்னிக், சீதையம்மாள் பாலிடெக்னிக் இப்படி 3 பாலிடெக்னிக்குகளை ஒரே நபர் நடத்துகிறார். அந்த நபருக்கு சொத்து கிடையாது, வீடு வாசலும் கிடையாது. அரசாங்கத்திலே உள்ள அண்ணாதொழில் நுட்பக் கல்லூரி யிலே வேலை பார்க்கக்கூடியவர் அவர். நான் கேட்க விரும்புகிறேன். ஒரு நபர் 3 பாலிடெக்னிக்குகளை நடத்து கிறார். அதற்கு அர்த்தம் விளங்குகிறதா. தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு வாசித்துக் காட்டவிரும்புகிறேன். தென்கரை தங்கமுத்து பாலிடெக்னிக் துவங்குவதற்கு அனுமதி வழங்கிய நபர்கள் என்று சொல்லி அமைச்சர் அரங்கநாயகம் மற்றவர்கள் படங்களையெல்லாம் பத்திரிக்கையிலே போட்டு வாழ்த்துச் சொல்கிறார். அதைப்போலவே சீதையம்மாள் பாலிடெக்னிக் துவங்குகிறபோதும் அதற்கும் பத்திரிக்கை யிலே நாம் செய்யும் தொழில் சிறக்க தொழில் கல்வி மேன்மை அடைய அறிவியலையும் கல்வியையும் தனது இரண்டு கண்களாகக் கொண்டு கல்வித் தொண்டாற்றி வரும் தமிழக அரசின் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்களுக்கும் சுந்தரராஜ் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் பி. எஸ். பாண்டியன், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்று தெரிவிக்கிறார். நான் கேட்கிறேன், விதிகளைப் பார்த்தீர்களா, முறைகளைப் பார்த்தீர்களா? ஆயிரம் ரூபாய் போட்டு ஒரு டிரஸ்ட் போட்டிருக்கிறது ஒரு நபர் வீடு இல்லாத ஒருவர் சொத்து இல்லாத ஒருவர் ஒரே நபருக்கு 3 பாலி டெக்னிக்குகளைக் கொடுத்திருக்கிறீர்களே அதற்குப் பின்னாலே என்ன நடைபெற்றது? எப்படி இந்தத் தவறை அனுமதித் தீர்கள்? சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்ற கேள்வியை நான் கேட்க விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் தன்னு டைய பதிலுரையிலே பதிலைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

அதைப் போலவே நான் இன்னும் ஒன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு சேலத்தில் ஒரு பாலிடெக்னிக் துவங் கப்பட்டு இருக்கிறது. டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜூகேஷன் இருக்கிறார், கல்வித் துறைச் செயலாளர் மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்த அரசு அனுமதி வழங்குவதற்கு முன்பு அவர்களுடைய ஆலோசனையை பெற்றார்களா? நான் கேள் விப்படுகிறேன். இடமே இல்லாமல் நிலம் ஆர்ஜிதம் இல்லாமல் ஒரு பாலிடெக்னிக்குக்கு எங்காவது அனுமதி வழங்குவார்களா?

ஆனால் சேலத்தில் வழங்கியிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்
பிரஸ் பத்திரிகை நிருபர் அங்கே சென்று பார்த்துவிட்டு பாலி
டெக்னிக்குகளில் நடைபெற்று இருக்கக்கூடிய ஊழல்களை எல்
லாம் அவருடைய பத்திரிகையில் எழுதினார்கள். பத்திரிகை
செய்தி சபையில் சொன்னால் அது தேவையில்லை என்று சொல்லி
விடுவீர்கள் என்ற காரணத்தால் நான் அதை நம்பி இங்கே
சொல்லவில்லை. கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்
கிறேன். 35 ஏக்கர் நிலம், எங்கே இருக்கிறதாம். பொன்னம்மா
பட்டிக்குப் பக்கத்தில். அந்த இடத்தை இனிமேல்தான் பெற்று
பால்டெக்னிக் ஆரம்பிக்கப் போகிறார்களாம். ஆனால் பாலி
டெக்னிக்குக்கு அனுமதி கொடுத்து ஆகிவிட்டது. இடம் ஆர்
ஜிதம் இல்லாமல் எப்படி அனுமதி கொடுத்தீர்கள்? என்ன
காரணம்? எந்த அடிப்படையில் கொடுத்தீர்கள்? அதைப்
போலவே யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் ரிப்போர்ட் சொல்
கிறது. அரசியல்வாதிகள் தலையீடு கூடாது என்று. இது என்ன
தலையீட்டில் நடந்தது.

இன்னும் ஒன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்
றைக்கு இருக்கக்கூடிய இன்னொரு முக்கியமான ஊர், அதாவது
திருச்செங்கோடு. அந்த திருச்செங்கோட்டுக்குப் பக்கத்தில் ரங்க
சாமி பாலிடெக்னிக். இந்த ரங்கசாமி பால்டெக்னிக்கில் எஸ்.
எஸ்.எல்.சி. பாஸ் செய்து சேர வேண்டும் என்று சொன்னால்
10 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுக்க வேண்டும். அதே
போல் டியூஷன் பீஸ் 2,200 ரூபாய் கொடுக்க வேண்டுமாம்.
நான் கேட்க விரும்புகிறேன், 10 ஆயிரம் ரூபாய் டொனேஷனும்,
2,200 ரூபாய் டியூஷன் பீஸும் கொடுத்து ஒரு ஏழை மாண
வனால் அந்த பால்டெக்னிக்கில் சேர முடியுமா? ஒரு எளிய
மாணவனால் சேர முடியுமா? ஆகவே இன்றைக்கு பாலிடெக்னிக்
என்ற கல்விக்கூடம் பொன் முட்டை இடுகின்ற வாத்தாக ஒரு
தங்கச் சுரங்கமாக, ஒரு பகற் கொள்ளைக்காரர்களின் ஒரு நல்ல
இடமாக.......

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அது அப்படி இருக்குமானால் நிறைய
பேர் இதை ஆரம்பிக்க முன் வருவார்கள். கடந்த 2 ஆண்டு
காலமாக நாம் பல்வேறு இடங்களில் சொன்னதற்கு பிறகு தான்
இப்போது சில பேர் ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்களே தவிர,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைத்துக் கொண்டு இருப்
பதைப் போல் ஏதோ கொள்ளை அடிப்பதற்காகவும், லாபம்
சம்பாதிப்பதற்காகவும் ஆரம்பிக்கிறார்கள் என்று நாம் ஆரம்ப
காலத்தில் தவறான நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று
கேட்டுக் கொள்கிறேன். அப்படி இருக்குமானால் மாண்புமிகு
உறுப்பினர் இது போன்ற முயற்சியில் இறங்குவார்களானால்
எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.





**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொல்ல வேண்
டாம் என்றும் நீங்களும் அந்த முயற்சியில் ஈடுபட்டால் வர
வேற்கிறேன் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு
கிறார்கள். அது எந்த அர்த்தத்தில் என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முயற்சியில் ஈடுபட்டால்
தான் அதில் இருக்கின்ற கஷ்டம், நஷ்டம் தெரியும். ஆகவே
எப்படி ஆரம்பிப்பது? அதில் என்ன என்ன நிபந்தனைகள்
இருக்கின்றன. அதற்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதை
பார்த்தால் அதில் லாபம் இருக்கிறதா இல்லையா என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளலாம்.
லாபம் இருக்குமானால் எவ்வளவோ பேர் ஆரம்பித்து இருப்பார்
கள்.

**திரு. அ. ரகுமான்கான் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு சர்க்காரால் துவக்கப்பட்டு இருக்கிற
கல்லூரிகளின் பட்டியலை வையுங்கள்; அதேபோல் தனியார்
எவ்வளவு பேர் இன்ஜினியரிங் கல்லூரி, பாலிடெக்னிக் கேட்டு
விண்ணப்பித்து அனுமதி பெற்று இருக்கிறார்கள். நேற்றுகூட
சட்டசபையிலே நான் கேட்டேன். அதற்கு அமைச்சரவர்கள்
பதில் தருவதற்கு மறுத்தார்கள். நான் வேண்டுமானால் அந்தப்
பட்டியலை வாசிக்கட்டுமா? சபாநாயகர் அவர்களின் மூலமாக
நான் கேட்கிறேன், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எவ்
வளவு பேர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்ற விவரம் அப்
பொழுது தெரியும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவ
ரவர்களே, நான் இப்பொழுது சொல்வது, திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பில் எத்தனை பேர்கள் வந்து கேட்டார்கள்,
நான் தர மாட்டேன் என்று சொன்னேன் என்பது சம்பந்தமாகத்
தான்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவரவர்களே, கல்வி வளர்ச்சிக்காக பாலிடெக்னிக்குகளை
உருவாக்குவது சம்பந்தமாக எதிர்க் கட்சிக்காரர்களோ, ஆளுங்
கட்சிக்காரர்களோ அல்லது பொது மக்களோ, கல்வியாளர்
களோ கேட்பதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. அது
சம்பந்தமாக நான் உள்நோக்கம் கற்பிக்கவில்லை. ஆனால் நான்
சொல்வது, இந்தச் சர்க்கார், விதிகளை மீறி, நிலமே இல்லாத
வருக்கு—குறிப்பாக திருச்செங்கோடு பகுதியிலே மாட்டுக் கொட்
டகைக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்தில்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சம்பந்தமாக நான்
ஒன்றைச் சொல்லி விடுகிறேன். அதை நான் தான் திறந்து
வைத்தேன். அது மாட்டுக் கொட்டகை அல்ல. ஒரு பெரிய
புங்களாவைத்தான் வாங்கியிருக்கிறார்கள். நல்ல ஷெட்

[பேரவைத் தலைவர்] [1984 அக்டோபர் 13

போட்டிருக்கிறார்கள். ஸ்டீல் சேர்கள் வாங்கியிருக்கிறார்கள்.
ரங்கசாமி கவுண்டர்—பெரிய கவுண்டர் பங்களா, இப்படி பெரிய
பங்களாவையே விலைக்கு வாங்கி விட்டார்கள். அது நல்ல
முறையில் தான் இருக்கிறது. ஏன் இதை நான் சொல்கிறேன்
என்றால், திருச்செங்கோட்டிற்கு நான் போய் விட்டு வந்தேன்.
அன்றைக்கு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் வரவில்லை
நான்தான் திறந்து வைத்தேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ
ரவர்களே, பலபேர் கேட்டு, நாங்கள் சில பேருக்கு மட்டும்
தந்து, பல பேருக்குத் தரவில்லை என்ற நிலைமையிருந்தால்தான்
இத்தகைய புகார்களைச் சொல்லலாம். இப்பொழுது நாங்களே,
வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில்—இப்பொழுதும்
கூட சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். — பலபேர் வர வேண்டு
மென்று சொல்கிறேன். ஆகவே, இதிலே, யாருக்கும் அந்த
நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்குத் தகுதியுடைய
வர்களாக இருந்தால் தருகிறோம். அதிலே தவறு செய்தால்
அதை இந்த ஆண்டு அல்ல, அடுத்த ஆண்டு அல்ல, எப்பொழுது
வேண்டுமானாலும் அந்த அனுமதியை நாம் ரத்து செய்யலாம்.
அந்த அளவிற்குத்தான் நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம்.
எனவே, இதிலே வித்தியாசம் பார்க்கின்ற நிலைமை இல்லை.
அப்படி ஏதாவது வித்தியாசம் பார்க்கின்ற நிலைமையிருந்தால்
மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்ற கருத்து சரியாக இருக்
கும். அப்படி இல்லை என்பதால்தான், திராவிட முன்னேற்றக்
கழகத்தினர்கூட இதை ஆரம்பியுங்கள் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏறக்குறைய 30 நிமிடங்
கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. ரகுமான்கான் அவர்கள்
நிறையப் பேச வேண்டியிருக்கலாம். அதிலே எனக்கு ஆட்சே
பணை இல்லை. ஆனால் மற்றவர்களும் பேச வேண்டுமல்லவா ?
12 பில்கள் இருக்கின்றன. அந்த பில்களையெல்லாம் நிறை
வேற்றுவதற்கு எனக்குக் கொஞ்சம் உதவிகரமாக இருக்க வேண்டு
மென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே,
இன்னொரு முக்கியமான சம்பவத்தைப் பற்றிச் சொல்ல விரும்பு
கிறேன். பாலி டெக்னிக்குகள் தவறான நோக்கத்தோடு காரி
யங்களைச் செய்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்
போம் என்று சொல்கிறார்கள். அது குறித்து மகிழ்ச்சி. ஆனால்
அரசாங்கத் தரப்பில் அனுமதி வழங்குவதில் முறைகேடுகள் இருக்
கின்றன என்பதுதான் குற்றச்சாட்டு.

இன்னும் சொல்லப் போனால், கல்லூரிகள் வியாபார ஸ்தலங்
களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஏற்கெனவே சர்க்கார் உத்
தரவு போட்டு, கல்லூரிகள் நன்கொடை வசூலிக்கக் கூடாது



1984 அக்டோபர் 13] [திரு. அ. ரகுமான்கான்]

என்று சொல்லியிருக்கிறது. ஆனால், ஏழை எளிய மாணவர்களி
டம் 10,000 ரூபாய், 50,000 ரூபாய் என்று நன்கொடை கேட்
கிறார்கள். ஒரு கல்லூரியில் சேர்வதற்கு—அந்தக் கல்லூரியின்
பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அந்த என்ஜினியரிங்
கல்லூரியில் சேர்வதற்கு 50,000 ரூபாய் டொனேஷன் கேட்
டார்கள். பிறகு என்னுடைய தலையீட்டிற்குப் பின் அந்த மாண
வனுக்கு இடமே இல்லை என்று மறுத்து விட்டார்கள். ஒரு
ஏழை மாணவன் என்ஜினியரிங் கல்லூரியில் சேருவதற்கு 50,000
ரூபாய் டொனேஷன் கொடுப்பதற்கு எங்கே போவான் ? எனவே
தான் இன்றைக்கு இதுபோன்ற கொள்ளை நடப்பதைப் பற்றி
இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அறிக்கையின்
அடிப்படையிலே இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுவதாகச்
சொல்கிறார்கள். 1974 இல் போடப்பட்ட கமிட்டி சொல்கிறது,
அரசியல்வாதிகளின் தலையீடு இருக்கக் கூடாது என்று.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு தந்
திருக்கின்ற அறிக்கையை வைத்துக்கொண்டு, ரெஃபர் செய்து
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.
இங்கே ஒன்றை நான் தெளிவாக்கிவிட விரும்புகிறேன். நாங்கள்
நேரடியாக—துணைவேந்தரும், நானும், செயலாளரும் போன்ற
வர்களும் பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய தலைவர்
மற்றும் அதிகாரிகளுடன் நேரடியாகப் பேசியதில் அவர்கள்
சொன்ன யோசனைகளில் நாங்கள் சிலவற்றை ஏற்றுக்கொண்
டோம் ; சிலவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட
யோசனையின் அடிப்படையிலே கொண்டுவரப்பட்டதே தவிர,
அதற்கு முன்னால் ஏதாவது ரிப்போர்ட் இருந்தால் அல்லது
வேறு ஏதாவது அறிக்கை இருந்தால் அந்த அடிப்படையிலே
கொண்டுவந்ததாக நான் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே,
நான் பேசுகின்ற பேச்சுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று
ஒருவேளை சொல்லக்கூடும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்
காட்டினேன். லெஜிஸ்லேச்சர் இன்டர்பீயரன்ஸ் இன் தி அட்
டானமி ஆப் தி யூனிவர்சிட்டி கூடாது என்று அதிலே போட்
டிருக்கிறது.

பேரவைத் தலைவரவர்களே, நேற்றைக்கு ஒரு பத்திரிகை
யிலே ஒரு விளக்கம் வந்ததை நான் படித்தேன். இன்றைக்கு
உள்ள முக்கியமான பிரச்சினை என்னவென்றால், சென்னை உயர்
நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்
பின் வாசகத்தை நான் படித்து காட்ட விரும்புகிறேன்.

தயவுசெய்து நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைத்
தவறாகக் கருதக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதா
வது பொலிட்டிக்கலி மோட்டிவேட்டட். அமைச்சர் அவர்க
ளுடைய உதவியாளர் இடம் பெற்ற சட்டக் கல்லூரியில், அமைச்
சர் திரு. அரங்கநாயகத்தின் உதவியாளர் என்ற காரணத்திற்
காகவே அரசியல் உள்நோக்கத்தோடு இடம் தரப்பட்டிருக்கின்
றது என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். நான் கேட்க விரும்பு
வது எல்லாம், கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம்
வேறு ஒன்றும் அல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய அமைச்சரைப்
பற்றி நான் தவறாகச் சொல்வதாகக் கருதக்கூடாது. அவர்களே
கூட இங்கே நியாயங்களைக் கேட்டு வாதாடுவது என்றால் இங்கே
வாதாடட்டும். ஆனால், இங்கே ஒரு பட்டியலை நான் வாசித்
துக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

எம்.ஏ. படித்தவர் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்
திரு. வைத்தியலிங்கம். அவர் 206 மார்க் எடுத்திருக்கிறார்.
பாலசுப்பிரமணியன், பி.எஸ்.சி., அவர் 182 மார்க் எடுத்திருக்
கிறார். மோகன்தாஸ் 169 மார்க் எடுத்திருக்கிறார்.
140 மார்க் எடுத்திருக்கிறார். அவுட் ஆஃப் 300 இவ்வளவு
மார்க்குகள் எடுத்தும் சட்டக் கல்லூரியில் இவர்களுக்கெல்லாம்
இடம் கிடைக்கவில்லை. நான் கேட்கிறேன். பிற்பட்ட வகுப்
பைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள்
இவர்களுக்கெல்லாம் மதிப்பெண் குறைவாக இருக்கின்றது என்ற
காரணம் காட்டப்பட்டு அவர்களுக்கு சட்டக் கல்லூரியில் இடம்
இல்லை என்று மறுக்கிறார்கள். ஆனால், முற்போக்கு சமுதா
யத்தைச் சேர்ந்த திரு. கோபிநாத் என்ற அமைச்சருடைய செய
லாளருக்கு 300-க்கு 115 மார்க் எடுத்திருந்தும் சட்டக் கல்லூரி
யில் இடம் தரப்படுகின்றது. அமைச்சரவர்கள் நேற்றைய பத்
திரிகையில் கொடுத்த அறிக்கையை நான் படித்தேன். அவர்கள்
சட்டசபையிலும் அதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்
தான்..........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலை
வர் அவர்களே, இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய்
இருக்கின்றது. ஆனால், ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சுப்ரீம்
கோர்ட்டிற்குப் போய் இருக்கின்றது என்பதால் தான் நான்
கேட்டுக்கொண்டிருந்தேன். அந்த தாழ்த்தப்பட்ட ஆதி திரா
விட வகுப்பைச் சேர்ந்த மாணவர் மைசூர் ஓப்பன் யூனிவர்சிட்டி
யிலே, பி.ஏ., பி.எஸ்.சி., படிக்காமல் எம்.ஏ., பட்டம் பெற்
றிருக்கிறார். அதற்கு முன்னாலே தரப்பட்ட உயர்நீதிமன்றத்
தின் தீர்ப்புப்படி எம்.ஏ., எம்.எஸ்.ஸி., மார்க் எடுத்துக்கொள்ளப்
படக்கூடாது என்று இருக்கின்றது. எனவே, அந்தக் காரணத்
தினால்தான் அவருக்கு அனுமதி தர முடியவில்லையே தவிர வேறு





எந்தக் காரணமும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இருக்குமே யானால் அந்த 18 சதவீதத்திலேயே அவர் வந்திருப்பார். எனவே, அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

என்னுடைய உதவியாளர் திரு. கோபிநாத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே எக்ஸ் சர்வீஸ் மேன் என்ற கோட்டா இருக்கின்றது. அந்தக் கோட்டாவிலேதான் அவர் வந்திருக்கிறார். அவர் மட்டுமல்ல. அவருக்குக் கீழே குறைந்த மார்க் வாங்கிய இரண்டு பேர்களும் அவ்வாறு வந்திருக்கிறார்கள். ஆனால், உயர்நீதிமன்றம் அதைப் பரிசீலித்து அந்த விவரங்கள் தருவதில் அது குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்தால்தான் அந்த அனுமதியை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அந்த வகையிலேதான் தவறு என்று சொல்லி இருக்கின்றதே தவிர, தகுதி அடிப்படையில் சொல்லவில்லை. இவ்வாறு உயர் நீதிமன்றம் சொல்வதை ஏற்றுக்கொண்டால் அதற்குப் பிறகு 18 சதவீதமும் பொருந்தாது, 50 சதவீதமும் பொருந்தாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அவையெல்லாம் சர்க்கார் உத்தரவு மூலமாகத்தான் நடந்து வருகின்றன. எனவே, ஒரு சட்டச்சிக்கல் வந்திருப்பதன் காரணத்தால் உச்ச நீதிமன்றத்திற்கு அந்த வழக்கைக் கொண்டு சென்றிருக்கிறோம். எனவே, எந்தவிதமான தவறும் நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பினை முழுவதுமாகப் படித்துவிட்டுத்தான் நான் இங்கே பேசுகிறேன். நீங்கள் சொல்வது போல் திரு. வைத்தியலிங்கம் கர்நாடக யூனிவர்சிட்டியிலே எம்.ஏ., படித்தவர் என்ற இந்தக் கேள்வி நீதிமன்றத்திலே வந்தது. சென்னை பல்கலைக் கழகத்தின் ரிஜிஸ்ட்ராராகஇருந்தாரே உங்களுடைய பழைய திரு. குமாரசாமி அவர் பி.ஏ., ஹானர்ஸ் படித்தவர். ஆனால், பி.ஏ., பி.காம்., பி.எஸ்.ஸி., போன்ற பேச்சலர் டிகிரி இருந்தால்தான் சட்டக் கல்லூரியிலே இடம் உண்டு என்பது ஒரு கண்டிஷன். எனவே, பிரச்சினை வந்தது. ஏனென்றால் அவர் பி. ஏ., ஹானர்ஸ் படித்தவராயிற்றே. பி.ஏ., ஹானர்ஸ்லே பேச்சிலர் டிகிரி எங்கே இருக்கின்றது. அதேபோல் எம்.ஏ., படித்தவராயிற்றே, இதிலே பேச்சலர் டிகிரி பி.ஏ., எங்கே இருக்கின்றது என்ற கேள்வி..........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு நடைமுறை உண்டு. பி.ஏ. படிக்காமல் எம்.ஏ. படிக்க முடியாது. ஆனால், பி.ஏ., படிக்காமல் பி.ஏ. ஹானர்ஸ் படிக்கலாம் என்பது எப்போதும் இருக்கின்ற நடைமுறை. அந்த அடிப்படையிலேதான் எம். ஏ., எம்.எஸ்.ஸி., படிப்பினைக் கணக்கிலே எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தீர்ப்பு இருக்கின்ற காரணத்தால்தான் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே, ஆதி திராவிட மாணவரின் பெயர் விடுபட்டுப் போனதற்கு வேறு எந்தவிதமான காரணமும் இடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 44 நிமிஷங்களாகிவிட்டன, முடித்து விட்டால் பரவாயில்லை.

[திரு. கே. சௌந்திரராசன்] [1984 அக்டோபர் 13

மூலமாக ஆளுநருக்கு அதிகாரத்தைத் தந்து அதன்மூலமாக மத்திய சர்க்காருடைய ஏகாதிபத்தியத்திற்கு, வழிவகுத்திருக்கிறது. ஆகவே, இருக்கிற அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குத் தாரை வார்க்கிற சட்டத் திருத்தம் இது என்பதை நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–20)

ஒவ்வொரு வரியும் நீங்கள் எழுதித் தந்திருக்கிறீர்கள். நேற்றைக்கு முன்தினம் இதே மன்றத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். மாநிலங்களின் அதிகாரங்களை மத்திய அரசு கபளிகரம் செய்து விடுகிறது என்று குறிப்பிட்ட நேரத்தில் எங்கே நாங்கள் செய்தோம். எந்த இடத்திலே தாரை வார்த்துக் கொடுத்தோம் என்று ஆளும் கட்சியிலே இருக்கிறவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கி பேசிய காட்சி என் கண் முன்னாலேயே இருக்கிறது. மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறேன், இந்தச் சட்டத்தை நீங்கள் ஒவ்வொரு வரியாக எடுத்துப்பாருங்கள். இங்கே எங்கேயாவது மத்திய அரசிற்கு இருக்கிற அதிகாரத்தை நாம் கைப்பற்றுவதற்கு இந்தச் சட்டம் பயன்படுகிறதா ? அல்லது மாநிலங்களில் இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு போய் தாரை வார்த்து கொடுத்து விட்டு கீழே விழுந்து சாஷ்டாங்கமாய் கும்பிட்டு வருவதற்கு இந்தச் சட்டம் பயன்படுகிறதா என்பது தான் என்னுடைய ஆணித்தரமான கேள்வி. இதிலே நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் யார் இங்கே வருகிறார்கள், யாருக்கு நீங்கள் தரப்போகிறீர்கள், எப்படியெல்லாம் இதிலே தவறுகள் நடைபெறுகின்றன என்பதையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மதிப்பிற்குரிய ரகுமான்கான் அவர்கள் அக்குவேறு ஆணிவேறாக பேசினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் நான் குறிப்பிட விரும்புவது இன்றையதினம் கவர்னர் என்று ஒருவர் இருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் கவர்னரைப் பற்றி குறிப்பிடுகிற போது ஆட்டுக்கு தாடி எப்படியோ அப்படித்தான் நாட்டிற்கு கவர்னர் என்று சொன்னார்கள். அந்த ஆட்டின் தாடியின் மூலமாக இந்தச் சட்டத்தைச் செய்து நீங்கள் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள் என்பது தான் என்னுடைய மிகப்பெரிய குற்றச்சாட்டு. நீங்கள் அண்ணா பெயரை பயன்படுத்துவது உண்மையானால், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்கிறபோது அண்ணா பெயரும் வருகிறது, திராவிடம் என்றும் வருகிறது. இந்த இரண்டையும் நீங்கள் வைத்துக்கொள்கிற தகுதி இருக்க வேண்டுமானால், தயவுசெய்து குறிப்பிட விரும்புகிறேன், மிகுந்த கண்ணியத்தோடு இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு, தகுதியான ஒரு சட்டத்தை இந்த அவையில் வைப்பதுதான்



1984 அக்டோபர் 13] [திரு. கே. சௌந்திரராசன்]

நியாயமாக இருக்க முடியும். இன்னும் சொல்லப்போனால் இதிலே ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார்கள், துணை வேந்தரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு நியமிக்க வேண்டுமானால் அங்கே இருக்கிற ஆட்சிக்குழுவிலிருந்து ஒருவர், ஆலோசனைக் குழுவிலிருந்து ஒருவர், அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற ஒருவர், ஆக இந்த மூன்று பேர்களும் சேர்ந்து மூன்று பேர்களை சிபார்சு செய்ய வேண்டும். அப்படி சிபார்சு செய்யப்படுகிறவர்களில் தகுதியுள்ள ஒருவரை துணை வேந்தராக நியமிப்பது—தமிழ் பல்கலைக்கழகம்பற்றி நான் குறிப்பிடுகிறேன்—1982-ல் இருந்த நிலைமை. ஆனால் இன்றையதினம் இந்தத் திருத்தத்தில் நீங்கள் என்ன குறிப்பிடுகிறீர்கள் என்றால், ஆலோசனை குழுவிற்கு ஒருவர், ஆட்சிமன்றக் குழுவிற்கு இருவர், அரசுக்கு ஒருவர், ஆளுநர் சார்பிலே ஒருவர். ஒருவரை நியமிப்பது என்பது ஆளுநராலே நியமிக்கப்படுகிற ஒருவரின் கீழே, அவர் தலைமையின் கீழே தான் அந்த அமைப்பு இயங்கும். அந்த அமைப்புதான் மூன்று பேரை தேர்ந்தெடுத்து அனுப்பும் என்றால் ஆளுநர் மூலமாக ஒருவரை அனுப்பி அவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து அவர் அந்தக் குழுவிற்கு தலைமை தாங்கி மூன்று பேரை தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால் அது யாராக இருக்க முடியும் என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் யாரை விரும்புகிறார்களோ அவரைத் தான் அவர் நியமிக்கிற ஒருவராக தேர்ந்தெடுத்து அனுப்புவாரே தவிர வேறல்ல; அதில் தான் கவர்னர் சிபார்சு செய்கிற சூழ்நிலை இருக்கிறது. இங்கே துணை வேந்தரை நியமிக்கிற அதிகாரம் துணை வேந்தருக்கு பேனல் கொடுக்கிற அதிகாரம் ஆளுநரால் நியமிக்கப்படுகிற ஒருவரால் உருவாக்கப்பட்டு, துணை வேந்தரை தேர்ந்தெடுக்கிற அதிகாரம் துணை வேந்தருக்கே தரப்படுகிறது என்று சொன்னால் தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலே எந்த இடத்திலேயிருந்து நீங்கள் விரும்புகிற ஒருவரை, அதிலும் குறிப்பாக ஒரு தமிழ் பல்கலைக்கழகத்திற்கு —இங்கே தமிழரா கவர்னராக இருக்கிறார்? துணை வேந்தராக நியமிக்கிறபோது வடபுலத்திலிருந்து அனுப்பப்படுகிற ஒருவரை, கவர்னராக வடபுலத்திலிருந்து வந்த ஒருவரை வைத்துக் கொண்டு, அவர் சொல்கிற ஒருவரை தமிழ் பல்கலைக் கழகத்திற்கு நியமிக்கிற அவல நிலைமை இருக்கவேண்டுமானால் இது எந்த வகையிலே நியாயம் என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். முதலில் இருக்கிற சட்டம் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

Act 9 of 1982 Part I. Every appointment of the Vice Chancellor shall be made by the Chancellor from out of a panel of three names recommended by the Committee referred to in Sub-section (2) of Section 12 and such panel shall not contain the names of any member of the said Committee.

என்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கே. சௌந்திரராசன்] [1984 அக்டோபர் 13

அடுத்து பிரிவு 12 (2)-லே

"For the purposes of sub-section (1) the Committee shall consist of three persons, of whom one shall be nominated by the Government, one shall be nominated by the Senate and one shall be nominated by the Syndicate".

என்று மிகத் தெளிவாக அன்றையதினம் 1982 ஆம் ஆண்டு இருந்த நியாய உணர்வு, 1982 ஆம் ஆண்டிலே இருந்த ஆற்றல் மங்கிபோய், இன்றைக்கு ஏன் மத்திய சர்க்காரிடத்தில் போய் மண்டியிடுகிறீர்கள் என்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் உள்ள ஒவ்வொரு வரியையும் எடுத்துக்கொண்டால் அது அவர்கள் சொல்லிய சிபாரிசின் அடிப்படையிலே செய்யப்பட்டதாகத்தான் இருக்கிறது. நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் இப்படிப்பட்ட திருத்தத்தைக்கொண்டு வருவதன் மூலம் நீங்கள் எப்படிப்பட்ட காரியத்தை செய்கிறீர்கள் தெரியுமா? இந்தச் சட்டமன்றத்திலே உள்ள மிகப்பெரும்பான்மையைப் பயன்படுத்தி உங்கள் பொறுப்புகளை எல்லாம் அவர்கள் ஆலோசனைப்படி தாரைவார்க்கிறீர்கள். இப்படிச் செய்கிற காரியத்தால் எதிர்கால சமுதாயம் உங்களைப் பற்றி என்ன நினைக்கும்? எதிர்கால சமுதாயம் உங்கள் மீது எப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டு, இந்தத் திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்று, மூலச் சட்டத்தில் உள்ள பிரிவுகளையே ஏற்றுக்கொள்வது நல்லது என்று என்னுடைய கருத்தை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஒரு கலைக்களஞ்சியம் சென்னையில் உருவாக்கப்பட்டது. அந்தக் கலைக்களஞ்சியம் சென்னையில் இருந்து தஞ்சைக்கு மாற்றப்பட்டு இருக்கிறதே தவிர அந்தக் கமிட்டியில் இருந்த அத்தனைபேரும் ராசினாமா செய்து விட்டார்கள். பல்கலைக்கழகம் தஞ்சையிலே இருந்தாலும் அது தமிழ்ப்பல்கலைக்கழகம் என்பதால் தமிழ்நாட்டிலுள்ள அத்தனைபேருக்கும் சொந்தம். ஆகவே, அந்தக் கலைக்களஞ்சியம் தயாரிக்கப்படவேண்டுமென்று சொன்னால், அதற்குத் தேவைப்படுகிற விவரங்கள், குறிப்புகள், ஆராய்ச்சிப் புத்தகங்கள் ஆகியவைகள் எல்லாம், சென்னையில் இருந்தால் சுலபமாக பெறமுடியும். இங்கே இருக்கிற நூலகங்கள் மூலமோ அல்லது மற்றவற்றின் மூலமோ அந்த விவரங்களை நாம் சேகரித்துக் கொள்ள முடியும். ஆகவே, அந்தக் கலைக்களஞ்சியம் சென்னையிலிருந்து செயல்பட்டால்தான் நல்ல வகையில் விவரங்களைச் சேகரித்துத் தரமுடியும். ஆனால் நீங்கள் யாரோ சொன்ன கருத்தைக் கேட்டு அந்தக் கலைக்களஞ்சியத்தை தஞ்சைக்கு மாற்றிவிட்டீர்கள். இன்றைக்கு பெயரளவிலே அது அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, எந்தவிதமான காரியங்களையும் செய்ய முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட



1984 அக்டோபர் 13] (திரு. கே. சௌந்திரராசன்)

காரியங்களில் நீங்கள் ஈடுபடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் திருத்தச் சட்டத்தை திரும்பப்பெறுவதன் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு மண்டியிடும் சூழ்நிலைக்கு வராமல் இருங்கள் என்று கூறி, நான் சார்ந்திருக்கின்ற... .. ..

* * * *

இயக்கத்தின் சார்பாக இந்த சட்டத்திருத்தத்தை எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் கூறிய இயக்கத்தின் பெயர் இந்த அவையில் இல்லாததால் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்ப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சட்டங்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து என்னுடைய கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

இந்தச் சட்டத்திருத்தங்களின் மீது ஒரு அடிப்படை பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராசன் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் வகுக்கப்பட்ட அந்தக் காலத்தில் இருந்து இடைவிடாத ஒரு போராட்டம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே இது குறித்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. திரு. அபுல்கலாம் ஆசாத் அவர்கள் இந்திய நாட்டின் கல்வி அமைச்சராக இருந்தபோது அந்த ஆரம்ப நிலையிலேயே, மத்திய சர்க்கார் இந்த அதிகாரங்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. அன்றைக்கு துணிச்சல் மிக்க முதலமைச்சர்கள் பல பேர் இருந்த காரணத்தால், அந்த வெகுவாக எதிர்த்துப் போராடினார்கள். அதற்கு அடிபணிய மறுத்தார்கள். ஆனாலும் கூட மத்திய அரசு அன்றிலிருந்து இன்றுவரையில் கொஞ்சம் கொஞ்சமாக கல்வித் துறையில் மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறது. அந்த முயற்சிக்கு இந்த அரசு துணைபோய் இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இந்தச் சட்டங்களை எல்லாம் பார்ப்போமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராசன் அவர்கள் சொல்லியதைப் போல மாநில அரசு மத்திய அரசிடத்தில் சரணாகதி அடைந்து

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. நெடுமாறன்] [1984 அக்டோபர் 13

இருக்கிறது என்ற நிலையைத்தான் நாம் பார்க்க முடிகிறது அதிலும் கூட அவர்கள் இதற்காக அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் அவசர சரணாகதி அடைந்து இருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டாகும்.

(பிற்பகல் 12-30)

உங்களுடைய நிலைமை என்ன என்பதை இங்கே சொல்லப் பட்டிருக்கக்கூடிய பிரிவுகள்சிலவற்றில் கூறப்பட்டிருப்பதை உதாரணத்திற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் யார் துணை வேந்தர் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படுகிறது. அதாவது 12-வது பிரிவில் உட்பிரிவு (2) (1)-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அக் குழுவில் ஐவர் இருக்க வேண்டும். அவர்களில் ஒருவரை வேந் தரும், ஒருவரை அரசும், ஒருவரை ஆலோசனைக் குழுவும், இருவரை ஆட்சிக்குழுவும் நியமிக்கவேண்டும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. அரசு தனது பிரதிநிதியை நியமிக்கும்போது வேந்தர் தனியாக ஒருபிரதிநிதியை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? அரசுதான் பெரியது. இதுவரையில் பல்கலைக் கழகத்தில் யாரை நியமிக்க வேண்டுமென்று இருந்தாலும் அரசுதான் அதிகாரம் பெற்றிருந்தது. இந்த அதிகாரத்தை ஏன் ஆளுநருக்குக் கொடுக்க வேண்டும் ?

அது மட்டுமல்ல. பிரிவு 6-ல் உறுப்பினர் பற்றிச் சொல்லி யிருக்கிறீர்கள். உட்பிரிவு (2) (1)-ல் அவர் தகுதியற்றவர்தானா என்பது குறித்துத் தகராறு அல்லது ஐயம் எழுந்தால், பல்கலைக் கழக ஆட்சிக் குழு (சிண்டிகேட்) அது குறித்து முடிவு செய்யும். அம்முடிவே இறுதியானதாகும் என்பது முதலிலே இருந்த சட்டம். அதற்கு நீங்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தம் '' ஒருவர் தகுதியற்றவரா என்பது குறித்துத் தகராறு அல்லது ஐயம் எழுந்தால், பல்கலைக் கழக ஆட்சிக் குழு (சிண்டிகேட்) அது குறித்து வேந்தருக்குத் தெரிவிக்க வேண்டும். இதில் அவருடைய முடிவே இறுதியானதாகும்'' என்று இருக்கிறது.

பல்கலைக் கழக ஆட்சிக் குழுவுக்கு இருந்த அதிகாரத்தைப் பறித்து ஆளுநரிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-வது பிரிவில் உட்பிரிவு 2-ல் '' வேந்தர் இல்லாதபோது அல்லது வேந்தரால் செயலாற்ற இயலாதபோது, இணைவேந்தர் வேந்தருக்குரிய எல்லா அதிகாரங்களையும் செலுத்துவார். மற்றும் வேந்தரின் எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றுவார்'' என்று



1 84 அக்டோபர் 13] [திரு. ப. நெடுமாறன்]

இருந்தது. இணை வேந்தர் என்றால் அது கல்வி அமைச்சர்தான். ஆனால் இன்றைக்கு அவரே, அவருடைய அதிகாரத்தை முழுமை யாக ஆளுநர் கையிலே ஒப்படைக்கிறார். அதற்கான திருத்தம் என்னவென்றால், '' இந்தப் பிரிவையே விட்டுவிட வேண்டும்'' என்பது. இப்படி, தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டுபோய் ஆளுநர் கையிலே ஒப்படைக்கிற திருத்தத்தைக் கொண்டுவர மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று தெரியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போன்று 12-வது பிரிவிலே ஒரு திருத்தம். ''அவ்வாறு வேந்தரால் நியமிக்கப்படும் நபர், இக் குழுவின் கூட்டங்களைக் கூட்ட வேண்டும்'' என்று இருக்கிறது. அப்படியானால் ஆளு நரால் நியமிக்கப்படுகின்ற நபருக்குத்தான் உச்ச அதிகாரம். அவர் விரும்பினால் கூட்டத்தைக் கூட்டுவார், இல்லை என்றால் கூட்டமாட்டார். குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு இணை வேந்தரான கல்வி அமைச்சருக்கும் அதிகாரமில்லை; மற்றவர் களுக்கும் அதிகாரம் இல்லை. இப்படி ஆளுநரிடம் இந்த அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறீர்கள்.

அதைப்போன்று இன்னொரு திருத்தம். வகை 2 ஏனைய உறுப்பினர்கள் என்பதில் உட்பிரிவு (2)-ல் ''இணை வேந்தரால் கல்வி வல்லுநர்களிடையேயிருந்து நியமனம் செய்யப்படும் இரு உறுப்பினர்கள் '' என்று இருக்கிறது. அதாவது இருவரை இணை வேந்தர் நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். அதற்குப் பதிலாக இப்போது ''கல்வி வல்லுநர்களிடையேயிருந்து இரு உறுப்பினர்கள் ; இவர்களில் ஒருவரை வேந்தர் நியமிக்கவேண் டும்; மற்றொருவரை இணை வேந்தர் நியமிக்க வேண்டும்'' என்று திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆக, இதிலேயும் இணை வேந்தருக்கு இருந்த அதிகாரம் ஆளுநரிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

இன்னொரு இடத்தில், பிரிவு 42-ல் '' ஆனால், பல்கலைக் கழகம் இரகசியமானது எனக் கருதும் தகவலை இணைவேந்தர் முன் வைக்க வேண்டும்'' என்று முதலிலே சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் அதற்குப் பதிலாக இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தம் என்ன ? '' ஆனால் பல்கலைக் கழகம் இரகசியமானது எனக் கருதும் தகவலை வேந்தர், இணை வேந்தர் முன்வைக்க வேண்டும் '' என்று திருத்தியிருக்கிறீர்கள். ஏன் இப்படி ஆளுநரிடம் உங்களுடைய அதிகாரத்தை ஒப்படைக் கிறீர்கள்? அமைச்சர்தான் இதை விளக்க வேண்டும்.

அதைப்போன்று பாரதியார் பல்கலைக் கழகத்திலும் நிறைய திருத்தங்கள் இருக்கின்றன. பிரிவு 6-ல் '' இணை வேந்தரால் நியமனம் செய்யப்படும் எட்டு உறுப்பினர்களுக்கு மேற்படாத வர்கள்'' என்று இருந்தது. அதாவது 8 உறுப்பினர்களை

இணை வேந்தர் நியமனம் செய்யலாம். அதற்கு நீங்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தம் என்ன ? "வேந்தரால் நியமனம் செய்யப்படும் எட்டு உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்கள்" என்று திருத்தி, உங்களுக்கு அதாவது கல்வி அமைச்சருக்கு இருந்த அதிகாரத்தை ஆளுநர் கையிலே ஒப்படைத்திருக்கிறீர்கள்.

அதைப்போன்று 52—வது பிரிவில் "ஆனால், பல்கலைக் கழகம் இரகசியமானது எனக் கருதும் தகவலை, பல்கலைக் கழகம், இணைவேந்தர் முன்வைக்க வேண்டும்" என்று இருந்ததை மாற்றி "ஆனால், பல்கலைக்கழகம் இரகசியமானது எனக் கருதும் தகவலை பல்கலைக்கழகம், வேந்தர், இணைவேந்தர் ஆகியோரின் முன் வைக்க வேண்டும்" என்று திருத்தம் செய்திருக்கிறீர்கள். எதற்காக இந்த திருத்தங்கள், அதுவும் அவசரச் சட்டம் மூலம்கொண்டு வரப்பட்டன. பாராளுமன்றத்தில் மத்திய கல்வி துணை அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னால் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். பல்கலைக் கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுபெற வேண்டும் என்பதை, வலியுறுத்திச் சொன்னார்கள். நீங்கள் பல்கலைக் கழகச் சட்டங்களுக்குக் கொண்டு வந்திருக்கக் கூடிய அத்தனை திருத்தங்களும், அந்த அதிகாரத்தை நீங்களாக மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டீர்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

இந்தத் திருத்தங்கள் நம்முடைய மாநிலத்தின் சுயாதிக்கத்தை பாதிக்கிற திருத்தங்கள். நம்முடைய கையிலே இருக்கிற அதிகாரத்தை, மாநிலத்தில் இருக்கிற பல்கலைக் கழகத்தை, நாம் பெற்றிருக்கிற அதிகாரத்தை, பல்கலைக் கழகங்கள் தன்னாட்சி பெற்றவையாக இயங்க வேண்டுமென்று சொல்கிற அத்தனை அதிகாரங்களையும் கொண்டு போய் நீங்கள் மத்திய அரசிடம் கொடுத்து விட்டீர்கள். சரணாகதி அடைந்து விட்டீர்கள். அவசரச் சட்டத்தைப் போட்டு விட்டு, அவசரமாக சரணாகதி அடைந்து விட்டீர்கள். எந்த வகையிலே இது நியாயம் என்பதை நான் கேட்கிறேன். அப்படி என்ன? மத்திய அரசு உங்களைமிரட்டியிருக்கிறதா? இப்படியெல்லாம் செய்தால்தான் உங்களுக்கு நிதி உதவி செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்களா ? அதையாவது தைரியமாகச் சொல்லுங்கள். அதை எதிர்த்து போராடுவதற்காக, இந்தப் பக்கத்தில் இருக்கிற அத்தனை பேரும் உங்களோடு சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறோம். என்னென்ன வகையிலே நமது பல்கலைக்கழகங்கள் இயங்க வேண்டுமென்று நாம் தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, அதை ஆளுநர் மூலமாக முடிவு செய்ய, அதை மத்திய அரசாங்கம் ஆட்டிப் படைப்பதற்காக, நீங்கள் இடம் கொடுப்பீர்களேயானால், பின்னர் கல்வித் துறை முழுக்க முழுக்க நம்முடைய கையிலிருந்து போய்விடும். பின்னர் இங்கே ஒரு கல்வியமைச்சர் இருக்க வேண்டிய அவசியமே இருக்காது



என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசாங்கமே தன்னுடைய கல்வித்துறை மூலமாக என்னென்ன உத்தரவுகள் போட வேண்டுமோ, அதனைப் போடும். நம்முடைய மாநிலத்திலே தாய் மொழிக் கல்வி இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். நாம் விரும்புகிறோம். அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அதற்கு ஆபத்து வந்து சேரும். மத்திய அரசாங்கத்தின் கையிலே அத்தனை அதிகாரங்களும் ஒப்படைக்கப்படுமானால், பல்கலைக் கழகங்களில் இந்தியின் ஆதிக்கம் வரும் என்பதை சுட்டிக் காட்டி நான் எச்சரிக்க விரும்புகிறேன். இந்தி ஆதிக்கத்திற்கு நீங்கள் சிவப்புக் கம்பளம் விரித்து விட்டீர்கள். இந்தி ஆதிக்கத்திற்கு தமிழகத்தில் வலை வீசுவதற்காக நீங்கள் அத்தனை திருத்தங்களையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். நம்முடைய மொழியை ஒதுக்கித் தள்ளி, ஆளுநர் மூலமாக மத்திய அரசாங்கம் பல்கலைக் கழகங்களில் ஆதிக்கம் செலுத்துவதற்காக நீங்கள் இடம் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இந்த திருத்தங்களை யெல்லாம் நீங்கள் வாபஸ் பெற வேண்டுமென்று நான் வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த இரண்டு சட்டங்களைப் பற்றி சில முக்கியமான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று இந்தத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முக்கியமான அம்சம் யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் சில ஆலோசனைகளைச் சொல்கிறது. அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு கடமை நமது அரசிற்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மேலும் இங்கே இருக்கிற இந்த பல்கலைக் கழகங்களுடைய துணை வேந்தர்களைக் கலந்து பேசி என்னென்ன நியாயமான திருத்தங்களைச் சட்டத்தில் கொண்டு வர வேண்டுமோ, அந்த முறையில் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. உண்மையாகப் பார்த்தால் யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன், அவர்கள் விரும்புவது போல் ஒவ்வொரு மாநிலத்தின் பல்கலைக் கழகங்களுடைய சட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு பாதையிலே புறப்பட்டால் அது அபாயகரமான பாதைக்கு கொண்டு செல்லும் என்பதை திட்டவட்டமாக நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே அதற்கு உதாரணம் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியை இப்போது என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. துணை வேந்தர்களை நியமிப்பதற்காக இங்கே இருக்கக் கூடிய அரசாங்கத்திற்கும் நமது ஆளுநருக்குமிடையே தகராறு ஏற்பட்டதுண்டு. அப்படிப்பட்ட சம்பவம் எனக்கு ஞாபகம். மேற்கு வங்காளத்திலே என்ன நடந்தது, கல்கத்தா யூனிவர்சிட்டி, பர்த்துவான் யூனிவர்சிட்டி இரண்டு யூனிவர்சிட்டியிலும் அரசால் சிபாரிசு செய்யப்பட்ட துணை வேந்தர்களை நியமிக்க முடியாது என்று ஓவர்ரூல் செய்து அங்கே இருக்கிற ஆளுநர் தனக்கு இஷ்டமானவர்களை நியமித்திருக்கிறார்.

[திரு. கு. ரமணி] [1984 அகடோபர் 13

(பிற்பகல் 12-40)

அதனால் அந்தச் சட்டமன்றமே எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. அந்த ஆளுநரை வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அதற்கு மத்திய சர்க்காரும், இணங்காததும், ஆளுநருடைய நடவடிக்கையும் இப்படியிருக்கும்போது, அங்கேயிருக்கிற ஜனங்கள் எல்லாம் அந்த ஆளுநருடைய நிகழ்ச்சியிலே பங்கு எடுப்பதில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகவேதான் சொல்கிறேன். யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் நம்முடைய தமிழ் நாட்டிலே வளரக்கூடிய எந்த மாநிலமாகிலும் சரி—பல்கலைக் கழகங்கள் சிறந்த அறிவுக் களஞ்சியங்களாக வளருவதற்கு என்னென்ன உதவி செய்ய வேண்டுமோ, அதற்குத்தான் அவர்கள் முன்னுதாரணமாக நிற்க வேண்டுமே தவிர, அதனுடைய சிண்டிகேட் எப்படியிருக்க வேண்டும், செனேட் எப்படியிருக்க வேண்டும், ஸ்டாண்டிங் கமிட்டி எப்படியிருக்க வேண்டும், அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை, எக்-அபிசியோ எத்தனை, நாமினேசன் எத்தனை என்று இதற்கெல்லாம் முழு விவரங்களையும் தயார் பண்ணி, அதை இங்கே அமுலாக்குகிற மாதிரி இருக்கக்கூடிய போக்குகளை கட்டாயமாக எதிர்த்துத் தீர வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை அனுமதிக்க முடியாது. இன்று பல்கலைக் கழகத்திலே ஜனநாயக முறையான நடவடிக்கை தேவை அது மேலும் மேலும் வளர்க்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஆட்சிக் குழுவிலேயிருந்தும், மற்றக் குழுக்களிலே இருந்தும், பல்வேறு பிரிவுகளிலேயிருந்தும் செயல்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்—இதிலே நிர்வாகத்தை நடத்தக் கூடிய சிண்டிகேட் போன்ற, செனேட் போன்ற ஸ்தாபனங்களிலே எல்லாம் அதிகப்படியான உறுப்பினர்கள் வர வேண்டும். வைஸ்-சான்சலரும், அவரைச் சேர்ந்தவர்களும், அவருக்கு விருப்பமுள்ளவர்களும் எக்ஸ்-அபிசியோ அல்லது நியமனம் செய்யப்பட்டவர்களாக வந்து, எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவைகளில் லோட் பண்ணி விட்டால், நிலைத்து விட்டால், என்ன ஜனநாயகத்தை இந்த ஸ்தாபனங்களிலே காண முடியும் ? மனித சமுதாய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு, கல்வி, கலாச்சாரம், நாகரிகம் போன்றவைகள் முன்னேறுவதற்கு வேண்டிய அறிவினை வளர்த்துக் கொடுக்கக் கூடிய மையங்கள்தான் இந்தப் பல்கலைக் கழகங்கள். இதிலே ஜனநாயக முறையிலே எண்ணங்களும் கருத்துக்களும் ஏற்பட்டு, அதன் மூலம் இதன் பேரிலே விவாதங்களும், நடவடிக்கைகளும் ஏற்பட்டு, வளர்ச்சி அடைய வேண்டியது மிக அவசியம்.

இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய சட்டத்திலே இதைப்பற்றி பரிசீலனை பண்ணும்போது, ஜனநாயகத்திற்கு விரோதமான நிலையில் அது நொறுக்கப்படுகிறது என்ற நிலை இருப்பதை நான் சில விஷயங்கள் மூலமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும். அப்படிப்பட்ட, நிலையிருக்கிறது என்று



1984 அக்டோபர் 13] [திரு. கு. ரமணி]

சொன்னால், அந்த நிலையை மாற்றியாக வேண்டும். அந்த நிலையை நாம் அனுமதிக்க முடியாது. இந்தப் பல்கலைக் கழகங்களிலே எல்லாம் ஜனநாயக முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட இந்த அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையானால், இதை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் முழுவதும் எடுக்கப்பட வேண்டும். ஆனால் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அப்படித் தெரியவில்லை. சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே இருக்கிற ஆக்ட்படி, Six Members elected by Senate from among its members என்று கூறுகிறது.

இந்த செனட்டுக்கு என்று இருக்கிற மெம்பர்ஸ், ஆசிரியர்களிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரக் கூடியவர்கள் அவர்கள் 6 பேர்களை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, Two Principals should be elected from among themselves on proportionate representation என்று உள்ளது.

மூன்றாவதாக, Two University Professors should be elected from among themselves. அப்படி இரண்டு பேர்.

நான்காவதாக, Two Members should be elected by Teachers of Affiliated Colleges other than Principals from among themselves on proportionate representation. அப்படி 2 பேர்கள், இப்படி 2 பிளஸ் 2 பிளஸ் 2 பிளஸ் என்று 6 வருகிறது. முதலிலே சொன்ன ஆறும் சேர்த்து 12 பேர்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். எக்ஸ்-அபிசியோ மெம்பர்கள் இந்தச் சட்டத்திலே 5 பேர்கள். பை நாமினேசன் 5, இந்த ஐந்தும், ஐந்தும் பத்தாகிறது. இப்படி இந்த புரப்போர்சன் இருந்து இருக்கிறது. அந்தக் சட்டத்திலே, இப்போது நிலைமை என்ன, புதிய சட்டத்திலே வருகிறது என்றால், Two Principals from among themselves to be elected. அப்படி இரண்டு Two Members elected by the Teachers of affliated Colleges other than Principals, from among themselves who are Members of Senate அப்படி இரண்டு One Member other than Principal, College Teacher or University Professor. அப்படி ஒரு ஆள். இப்படி வரும்போது, 5 பேர்கள் வருகின்றனர். எக்ஸ்-அபிசியோ மெம்பர்ஸ் இதிலே 5 பேர். நாமினேஷன் 6. ஆறும் ஐந்தும் பதினொன்று. அதாவது நாமினேஷன் அண்ட் எக்ஸ்-அபிஷியோஸ் சேர்ந்து 11. 5 பேர்கள் எலக்ட்டட் பியூப்பிள். இதுதானே இப்பொழுது

வந்திருக்கக் கூடிய சட்டத்தின்படியான இருக்கக் கூடிய நிலை. இந்த விஷயத்திலே நான் சொல்லுவது தவறானால் அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும். இல்லை, இதுதான் இருக்கின்ற நிலை, நான் சொன்னது சரியானது என்றால், இப்படித்தான் இருக்கிறது என்று சொன்னால், திட்டவட்டமாக இது அனுமதிக்கப்படக் கூடாது. அப்படியானால் ஜனநாயக முறைகளை ஏற்படுத்தி நாம் இந்த ஸ்தாபனங்களை வளர்க்கிறோம் என்று சொல்கிற நிலை மாற்றி, இது நாமினேஷன் அண்ட் எக்ஸ் அபீஷியோ முறை என்று சொல்லி விடலாம்.

சாதாரணமாக இதனுடைய பொதுவான நிலை என்ன? நாமினேஷனோ அல்லது எக்ஸ்-அபீஷியோவோதான் பெரும்பான்மையாக வரக் கூடியது என்றால், அது ஆளும் கட்சியினுடைய அதிகாரத்தைச் சார்ந்துதான் நிற்கும். ஜனநாயகத்திற்காக பொதுவாக வாதாடக் கூடியதோ அல்லது ஆசிரியர்களுடைய மற்ற பகுதிகளின் ஊழியர்களுடைய பிரதிநிதிகளோடு சேர்ந்து இருக்கிற ஒரு நியாயமான ஜனநாயக முறையிலோ இல்லாமல் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும். இது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கக் கூடிய விஷயம். அதனால்தான் தேர்தல் மூலமாக இப்படிப்பட்ட அமைப்புகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிகப்படியாக இந்த ஸ்தாபனங்களில் இருக்க வேண்டும். இது ஒன்றுதான் ஜனநாயகத்தை ஓரளவிற்குப் பாதுகாப்பதற்கும், தவறுகளைத் திருத்துவதற்கும் அல்லது யூனிவர்சிட்டி போன்ற இடங்களிலே நடக்கக் கூடிய தகாத முறைகள் அல்லது ஊழல் முறைகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால்,—இங்கே பல விதமாக பிரச்சினை கிளப்பப்படுகிறதே, மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே சிமெண்ட் சம்பந்தப்பட்ட எவ்வளவு பெரிய ஊழல் பற்றி இங்கே நாம் விவாதத்தை நடத்தியிருக்கிறோம்—அப்படிப்பட்ட நடவடிக்கைகள் வராமல் முளையிலேயே கிள்ளக் கூடிய பரிசீலனையையும் விவாதத்தையும், நடவடிக்கையையும் கொண்டு வருவதற்கு வழி ஏற்படும். ஒரு ஜனநாயக முறையிலான பங்ஷனிங், அந்த அமைப்புகளிலே ஏற்பட்டாக வேண்டும். அந்த நிலை இப்பொழுது இல்லை. அது மாற்றப்பட்டிருக்கிறது. சட்டம் திருத்தப்படுகிறது என்று சொல்லி, நிலைமைகளை இப்படி, இந்தச் சட்டத்தின் மூலமாக மாற்றுவது தப்பு, அந்தத் தப்பைத் திருத்த வேண்டும். அந்த முறையில் இந்தச் சட்டம் இருக்கக் கூடாது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இதிலே இருக்கும்படியான நிலைமைகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் அதிகமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கக் கூடிய சட்டத்திலேயே அதற்கு இடம் இருந்திருக்கிறது. அந்த நிலை இப்போது இந்தச் சட்டத்தின் மூலம் மாற்றப்படக் கூடாது. அடுத்து, பல்கலைக் கழகங்களிலே பணிபுரியக் கூடிய





ஊழியர்கள், ஆசிரியர்கள், அத்தோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளிலே இருக்கும் படியான ஆசிரியர்களுடைய பாதுகாப்பு, அவர்களுடைய உழைப்பு தான், இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய முன்னேற்றமும், வளர்ச்சியும் பேரும் பிரக்யாதியும். அப்படிப்பட்ட ஊழியர்கள் அவர்கள்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், தேர்தல் புறக்கணிப்பு போராட்டம் என்று நடத்த அவர்கள் முன் வந்தார்கள். அவர்களோடு பேச்சு வார்த்தை நடந்தது. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களே தலையிட்டு, அவர்களோடு பேசி, அந்தப் பிரதிநிதிகளோடு பேசி, ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ஒரு அறிக்கையாகவே இங்கே வைத்தார்கள், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள். நாம் அத்தனை பேரும் அதனை வரவேற்றோம். அப்படி ஒரு நல்ல நிலை அப்போது உருவாகியது. ஆனால் அந்த அறிக்கை உண்மையிலேயே அமல் ஆக்கப்படாமல் இன்னமும் விடப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்த ஆசிரியர்களுடைய நிலைமை என்ன? ஏப்ரலில் இருந்து இன்னமும், இதுவரைக்கும் அமல் ஆக்கப்படவில்லை. அதற்கு முன்னால் இருந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தானே அவர்கள் அந்தப் போராட்டத்திற்கே போனார்கள்? தேர்தல் மறுப்பு போராட்டம் என்று. ஆனால் அவர்கள் போராட்டமும் நிறுத்தப்பட்டது, இதுவரைக்கும் அறிக்கையும் அமல் ஆக்கப்படவில்லை என்று சொன்னால், இந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளும், அதன் நிர்வாகமும் எப்படி இருக்கிறது?

ஒரு ஜனநாயக முறையில் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை. அமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிற ஒப்பந்தம், இந்த அவையிலே தெரிவிக்கப்பட்ட ஒப்பந்தம், அதைக் கூட அவர்கள் மதித்து நடக்கத் தயாராக இல்லை என்ற நிலை இருக்கிறது. இது என்ன ஜனநாயகம்? ஜனநாயகம் அல்ல இது. இது நிச்சயமாக யாரையும் திருப்திபடுத்தாது என்பது மாத்திரம் அல்ல, அது அவர்களை வலுச் சண்டைக்கு இழுக்கிற நிலைமைக்குத்தான் கொண்டு போகும்.

ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. அரசு ஆணை எண். 1820, தேதி: 18—9—1983-ஐ அமலாக்க ஒத்துக் கொண்டது என்பது, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே வெளியிடப்பட்ட அறிக்கையிலே இருக்கிற ஒரு அம்சம் ஆகும். அது என்ன சொல்கிறது? அரசுக்கல்லூரிகளில் 10 (1) பிரிவின் கீழ் பணி செய்யக்கூடிய ஆசிரியர்களின் பணிக் காலத்தை, முன் தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தல்—ரெட்ராஸ்பெக்டிவ்

ரெகுலரைசேஷன்—என்ற வகையில் சொல்கிறது 18—9—1983 தேதியிட்ட அரசு ஆணை எண். 1820. அது உடனடியாக அமல் படுத்துவதற்கு பரிசீலிக்கப்படும் என்று அன்று சொல்லப் பட்டது.

[பிற்பகல் 12-50]

தகுதி தளர்த்தல் பெற்றவர்களுக்கும் இந்த ஆணையை அமல்படுத்துவது தொடர்பாக பப்ளிக் அன்ட் அட்மினிஸ்டி ரேடிவ் ரீபார்ம்ஸ் இந்தக் குழுவோடு கலந்தாலோசிக்கப்படும். பணி மூப்பு நிலை, சீனியாரிட்டி, பாதுகாக்கிற வகையிலே தமிழ் நாடு தேர்வாணைக் குழுவோடு கலந்தாலோசித்து தற்காலிகப் பணிக் காலத்தைப் பதவி மேம்பாட்டுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வளவும் இன்றைக்கு ஒப்புக் கொள்ளப் பட்ட விஷயங்கள். நல்ல விஷயங்கள். ஆனால் இவைகள் எல்லாம் அமலாக்கப்படாமல் கிடப்பிலே போட்டுவிட்டு அதோடு அந்த ஆசிரியர்களை சும்மாவிடவில்லை, திருப்பித் தாக்குவது என்ற இடத்திற்குப் போனால் எப்படி ஜனநாயகம் நடக்கிறதா என்று பார்ப்பார்கள். ஜனநாயகம் நடக்கவில்லை. நியாயம் வழங்கப்படவில்லை. குமுறல்தானே ஏற்படும். இப் படிப்பட்ட காரியங்கள்தான் நடக்கின்றன. அது மட்டுமல்ல, அதற்கு எதிரான நடவடிக்கைகள் கல்லூரிகளிலே எடுக்கப்படு கின்றன.

அண்மையில் இயக்குநர் செயல்முறைக் குறிப்பு ந.க. எண். 54858/பி. 9/82, நாள் : 7—8—1984-ன் படி சிறப்புத் தேர்வு மூலம் நியமிக்கப்பட்ட உதவிப் பேராசிரியர்களிடமிருந்து ரூபாய் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பிடித்தம் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த ஆசிரியர்களுடைய மாதாந்திரச் சம்பளத்திலிருந்து இப்படிப் பிடிக்கும்படியான நிலை வந்தால் என்ன ஆகும்?

தனியார்கள் கல்லூரிகள் ஆரம்பித்தால், செல்ப்-பைனான்ஸிங் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பது இங்கே விவாதிக்கப்பட்டது. அதிலே கொள்ளையடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அது உண்மைதான். செல்ப்-பைனான்ஸிங் கல்லூரிகள் இருக்கிறதே அதிலே அவர்களுடைய செல்ப்-பைனான்ஸ் இல்லை. அந்த பைனான்சிங் முழுவதும் அதிலே வந்து சேரக்கூடிய மாணவர்களிடமிருந்து 20 ஆயிரம் 30 ஆயிரம் என்று வாங்கித்தான் செய்கிறார்கள். ஆரம்பித் திலே அவர்கள் ஒரு தொகை போட்டிருந்தாலும் பணம் போடாமல் வியாபாரம் நடத்தமுடியாது. அப்படித்தான் அது போய்க்கொண்டு இருக்கிறது. அதை நாம் கொள்ளை என்று சொல்கிறோம். உண்மையிலேயே அது கொள்ளைதான். எந்த மாணவர்களும் அங்கே போய்ச் சேர முடியாது. எஞ்சினியரிங்





காலேஜ், சேலத்திலே சட்டக் கல்லூரியே ஒன்று இருக்கிறது அதற்கு கட்டடம் இல்லை. அந்தச் சட்டக் கல்லூரியிலே சேர்ப்பதற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு எல்லாம் கடிதம் எழுதியிருந் தார்கள் நல்ல நோக்கத்திலேதான் எழுதினார்கள். நான் அவர்களை குற்றம் சாட்ட சொல்லவில்லை.

இங்கே இடம் கிடைக்காத ஒரு மாணவரை நான் அங்கே கடிதம் கொடுத்து அனுப்பினேன். சேலத்திலே உள்ள அட்ர ஸைக் கொடுத்தேன். அங்கே போய் அவர் பார்க்கிறபோது மைதானம் தான் இருக்கிறது, போர்டு இருக்கிறது, காலேஜ் இல்லை. அந்த மாணவர் வந்து சொன்னார். நீங்கள் இப் படி அனுப்பிவிட்டீர்களே என்று. மைதானம் தான் இருக்கிறது காலேஜே இல்லை என்றார். நான் என்ன செய்வது ? அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் சொல்லத் தவறிவிட்டேன். அதற்கான கடிதப்போக்குவரத்து மற்றவை எல்லாம் சென்னையிலேதான் இருக்கிறதாம், ஆகவே, அங்கே போங்கள் என்று சொல்லி அங்கே போய்ப் பார்த்தார். அங்கே அந்த மாணவருக்கு இடம் கொடுத்தார்கள். பணம் வாங்கி சேர்த்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

இப்படி இடம் இல்லாமல், கட்டடம் இல்லாமல் மைதான த்தை வைத்துக் கொண்டு நடக்கிறது. அது உண்மைதான் அந்த உண்மையை நாம் நெருங்கும்போது சுடத்தானே செய்யும், வேதனை இருக்கத்தானே செய்யும். ஆகவே நாம் வருத்தப் படுவதிலே பிரயோசனம் இல்லை. We have to face the truth அதற்கு நமக்கு கரேஜ் வேண்டும் ; தைரியம் வேண்டும். நாம் கல்வியைப் பற்றியும், சர்வகலாசாலைகள் பற்றியும் பேசும் போது அநியாயத்தையும், அக்கிரமத்தையும், பொய்மையையும் எதிர்த்து நிற்க துணிச்சல் இல்லை என்று சொன்னால் இங்கே எப்படி பேச முடியும். ஆகவே அப்படிப்பட்ட நல்ல பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட குந்தகங்களையும், தீமைகளையும் விளைவித்தால் என்ன கல்வி முறையை என்ன ஜனநாயக முறையை வளர்க்கப் போகிறோம் நாம். இதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று நினைக்கிறேன். நிச்சயமாக இந்த நிலை கூடாது.

இன்னும் ஒரு உதாரணம். ஒன்று இரண்டு உதாரணங்களை மட்டும் சொல்லிவிடுகிறேன். சேலத்தில் சௌடேஸ்வரி கல் லூரி. இதனுடைய புரபசர் ஸ்ரீதரன் என்பவர். அக்கடமி கவுன்சிலுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் டிரான்ஸ் பர் செய்யப்படுகிறார். அது என்ன ஜனநாயகத்தை காப்பாற்று வதா ? இல்லை ஜனநாயகத்தை கொலை செய்கிறார்கள் என்றால் பல பேருக்கு பிடிக்கவில்லை. இதற்கு என்ன என்று

சொல்லலாம். மனிதனுடைய உடம்பில் இருக்கிற 9 துவாரங்களையும் அடைத்து பிடித்து மூச்சு விடாமல் கொல்வது என்று சொல்லலாமா? அது ஒரு அகிம்சா முறை. ஏன் இந்த வேலை? தேர்ந்தெடுக்கப்பட்டவரை வேறு கல்லூரிக்கு உடனே மாற்றுகிறார்கள். அப்புறம் அவர் அதன் பேரில் நடவடிக்கை எடுத்து திரும்பவும் மாற்றுகிறார்கள். திரும்பவும் இந்தக் கல்லூரியில் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இப்படி நடக்கிறது. இப்படி பல கல்லூரிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு முழுவதற்குமே இந்த அரசு சொல்லித்தான் நடக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. இந்த மாதிரி கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் எப்படி துன்பப்படுகிறார்கள், பழி வாங்கப்படுகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். பெரிய பல்கலைக் கழகங்களை நாம் நிறுவி அதாவது தமிழ் பல்கலைக் கழகம், மற்றும் பல்வேறு விதமான பல்கலைக் கழகங்களை நிறுவி அது வளர்ந்து முன்னுக்கு வரக்கூடிய காலத்தில் இந்த மாதிரியான நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். ஆரம்பத்திலேயே முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயத்தை சொல்லிவிடுகிறேன். முறைகேடுகள் பற்றி சிலவற்றை சொல்லவேண்டியிருக்கிறது. அதை மிகவும் வேதனையோடு இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது. கோவையில் நாம் மிகவும் சந்தோஷப்பட்ட நடவடிக்கை பாரதியார் பல்கலைக் கழகம் ஏற்பட்டது. அதேபோல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. நல்ல பெயர்களுடன் முக்கியமான செயல். மிகவும் மன நிறைவு உள்ள விஷயம். அந்தப் பல்கலைக் கழகங்கள் தோன்றி 2, 3 வருடங்கள் தான் ஆகிறது. ஆனால் இப்போதே முறைகேடுகள் முளைத்து வளர ஆரம்பித்து இருக்கிறது. இதை இந்த அரசு குறிப்பாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்

எம்பிளாய்மெண்டு எக்சேஞ்சிலிருந்து பதிவு செய்யப்பட்டு இருக்கிற வேலை அற்ற படித்த பட்டதாரிகளை அல்லது மற்ற ஊழியர்களை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும், அங்கிருந்து கேட்டு எப்படி வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. ஆனால் அங்கே என்ன நடக்கிறது தெரியுமா? இன்றைக்கு அவர்கள் இஷ்டம் போல் ஆட்களை வேலைக்கு சேர்த்துக்கொள்கிறார்கள். உதாரணமாக 3 டைப்பிஸ்ட்டுகள், 4 ஜூனியர் அஸிஸ்டெண்டுகள் உள்பட 20 பேர்களுக்கு மேல் வேலைக்கு சேர்த்து இருக்கிறார்கள். எப்படி அது சாத்தியம் ஆகிறது. அப்படி என்றால் இந்த எம்பிளாய்மெண்டு எக்சேஞ்ஜில் போய் படித்த வேலை இல்லாத பட்டதாரிகள் பதிவு செய்து இருக்கிறார்களே அவர்கள் எதற்கு பதிய வேண்டும். இப்படி என்றால் வேறு முறையை தானே அவர்கள் கையாள வேண்டி வரும் என்ற நிலை ஏற்படுகிறதா? இல்லையா? இது அங்கே





இருக்கிற வைஸ் சான்சிலருக்குத் தெரியும். பைனான்ஸ் கண்ட்ரோலராக இருக்கக்கூடிய உத்தியோகஸ்தருக்குத் தெரியும். அவரை அரசு 3 பெயர்களை கொடுத்து அதிலிருந்து ஒரு பெயரை சிண்டிகேட் தீர்மானம் செய்து எடுத்து அவர் அங்கே கண்ட்ரோல் செய்கிறார் என்று வேலை அவருக்கு—தெரியும். இவரும் வைஸ் சான்சிலரும் சேர்ந்து இவர்களை தேர்ந்தெடுத்து சம்பளம் கொடுக்கிறார்கள். அப்படி என்றால் என்ன விதிமுறைகளை கையாளுகிறார்கள்?

அதே சமயத்தில் இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு விஷயத்தை ஒரு சில நாட்களுக்கு முன் தான் கேள்விப்பட்டேன். 7 லட்சம் ரூபாய் விலை பெறும் ஒரு கம்ப்யூட்டர் மிஷினை வாங்கியிருக்கிறார்கள். அதற்கு டெண்டர் கூட கிடையாது. அப்படியானால் யார் தீர்மானம் செய்து அதை வாங்கினார்கள். அமைச்சரோ, மற்றவர்களோ நிச்சயமாக அவர்கள் இஷ்டத்திற்கு செய்து இருக்கக்கூடிய விஷயம் அல்ல. இது அவர்களுடைய சொந்த ஆட்சி தானே. இது பற்றி என்ன பேச்சு பாரதியார் பல்கலைக் கழகத்தில் உருவாகியிருக்கிறது தெரியுமா? 10 சதவீதம் கமிஷன் இல்லாத பிசினசே கிடையாது. 10 சதவீதம் கமிஷன் கொடுத்தால் 70 ஆயிரம் ரூபாய் ஆகிறது. என்ன நடந்து இருக்கிறது என்று கேட்டால் நாம் இதற்கு ஒன்றும் பதில் சொல்ல முடியாது. ஜனங்கள் கேள்வி இது. ஒரு எம்.எல்.ஏ. வை கண்ணில் கண்டால் மக்கள் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம் என்ற நிலைமை இப்போது இருக்கிறது. இதற்கு எப்படி பதில் சொல்வது? இது மிகவும் சீரியஸான விஷயம். இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். என்ன நடந்து இருக்கிறது என்று அவர்களுக்கு தெரிய வேண்டும்.

இப்போது அண்மையில் இன்னொரு விஷயம் நடந்தது. அந்த சிண்டிகேட்டில் கோரம் இல்லாத கூட்டத்தில் ஏற்கனவே சில தீர்மானங்கள் உருவாக்கப்பட்டதை ஒப்புதலுக்குக் கொண்டு வந்து வைத்தபோது கோரம் இல்லாத கூட்டத் தீர்மானங்கள் என்பதை தெரிந்து புதிதாக வந்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் பிரதிநிதிகள் எடுத்துச் சொல்லியும் கேட்காமல் அவர்கள் அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதை உங்களுக்கு இன்பர்மேஷனுக்காகத்தான் வைத்தேன். இதை ஒன்றும் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு சான்சிலர் (கவர்னர்) தான் அதிகாரி. இது ஆளுநர் கையெழுத்து போட வேண்டியது. ஜஸ்ட் ஒரு இன்ப்பர்மேஷன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடத்தில் வைஸ் சான்சிலர் பதில் சொல்லியிருக்கிறார்.

(பிற்பகல் 1—00)

அவர்கள அத்தனை பேர்களும்வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் இது சம்பந்தமாக மெமோராண்டம், கடிதம் அனுப்பியிருப்பார்கள்.

அவர்கள் ஆளுநர் அவர்களைக் கூடச் சந்திப்பதாகச் சொன்னார்கள் எனவே, இப்படி நடப்பது என்ன ஜனநாயகம் என்பதை யோசிக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் என்பது ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய—எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சமுதாய மாற்றத்திற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரனாக நின்று போராடிய மகாகவி பாரதியாரின் பெயரால் நடக்கின்ற பல்கலைக் கழகத்தைப் பற்றிப் பேசும்பொழுது, இதையும் அதையும் சேர்த்துப் பேசுகின்றபொழுது தலையைக் குனிய வேண்டியிருக்கும். அம்மாதிரி காரியங்கள் நடைபெறுகின்றன.

அங்கே வேலைக்கு ஆள் எடுப்பது சம்பந்தமாக உள்ள ஜி.ஓ, எம். எஸ். நெம்பர் 728—தேதி 15—4—1983 இருக்கிறதே. இதை மீறித்தான் அங்கே நியமனங்கள் நடைபெறுகின்றன. ஆகவே தான் சொல்கிறோம். இந்தப் பல்கலைக் கழகங்கள் ஜனநாயகத்திற்கு இடமில்லாத இடமாக மாறக் கூடாது என்று. முளைக்கும் முளையிலேயே அம்மாதிரி போக்குகளைத் தவிர்க்க வேண்டும். அதனுடைய சிண்டிகேட் நல்ல அதிக அதிகாரம் படைத்த அமைப்பாகும். 1982-ஆம் வருடத்திய சட்டத் திட்டபடி இருப்பதைக் கூட பூரணமாக நிறைவேற்றப் பெற்றது என்று சொல்லத் தயாராக இல்லை. அதையே மேலும் மேலும் வளர்க்க வேண்டிய நிலையில், அதில் சொன்னதற்கே கூட குறைவாக, ஆசிரியர்கள் மற்ற ஊழியர்கள் மத்தியிலே தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஒட்டு மொத்தமான எண்ணிக்கையையும் குறைத்து, அவர்களை மைனாரிட்டியாக ஆக்கி, எக்ஸ்-அபிஷியோ, நியமனம் என்ற முறையில் உள்ள மெம்பர்களை அதிகமாக ஆக்கிக் கொண்டு வருவதற்குக் காரணம் வேறொன்றுமில்லை, யாருக்கும் தெரிந்தது தான் நெல்லுக்குள்ளே அரிசி இருக்கின்றது என்பது இரகசியம் என்பதை யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். எனவே, அம்மாதிரி அதிகாரங்கள் முழுவதையும் வைஸ்-சான்சலர் இன்னும் அவரைச் சுற்றியிருக்கிற ஒருசிலரின் கையில் குவித்து வைத்துக்கொண்டு, தங்களுடைய இஷ்டம்போல் ஆட்சி நடத்த வேண்டும் என்ற இடத்திற்குத் தான் அது போகிறது. இப்படிப்பட்ட நிலைமையை அனுமதிக்கக்கூடாது.

இன்னொன்றையும் வேதனையோடு சொல்லியாக வேண்டும். பாரதியார் பல்கலைக் கழகம் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகம் போன்ற இப்படிப்பட்ட பல்கலைக்கழகங்களில் இப்பொழுது ஆரம்பத்திலேயே இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அரசு இதிலே முனைப்பாக இருக்க வேண்டும். இந்த முறையில் தான் சட்டத் திருத்தங்கள் போக வேண்டுமே தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கக் கூடாது. பாரதியார் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரே ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு அது கோயம்புத்தூர் மில் முதலாளிகளின்



கைகளில் அடக்கமாக ஆகிவிட்ட ஒரு அமைப்பாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற என்னுடைய கருத்தை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சொல்லியிருக்கின்ற விஷயங்களில் குறையிருந்தால் சொல்லட்டும். இதில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவைகளுக்காக இந்தத் திருத்த மசோதாவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு விழைகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இந்த மன்றத்தின் முலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, இன்றைக்கு இந்தத் திருத்தம் ஏன் வருகிறது என்று கூறும் பொழுது, பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசு அடிப்படையிலே, அவர்களின் கருத்துரைகளின் அடிப்படையிலே இந்தத் திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இங்கே இதை வைத்திருக்கிறார்கள்.

1982-ஆம் ஆண்டு உருவாக்கப்படுகின்ற காலத்திலேயே இப்படிப்பட்ட திருத்தங்கள் வரும் அல்லது இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொடுப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்களா அல்லது எதிர்பார்க்கவில்லையா என்பது தெரிவில்லை. இருந்தாலும் கூட தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டிலும் ஏன், இன்னும் சொல்லப்போனால், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலும்கூட, அங்கேயிருக்கின்ற வைஸ் சான்சலர், இணை வேந்தர் ஆகியவர்களை நியமிக்கின்ற அதிகாரம் இன்றைக்குக் கவர்னரின் கரங்களிலே ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்தப் பல்கலைக் கழகங்கள் எந்தக் காரண காரியங்களுக்காக தொடங்கப்பட்டிருக்கின்றனவோ அதை இந்த அரசால் நிறைவேற்ற முடியும். இன்றைக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழி ஆராய்ச்சிக்காகவும், உலக மகாகவி சொன்னதைப் போல உலகத்திலேயுள்ள நல்ல சாஸ்திரங்களை இங்கே கொண்டு வருவோம் என்றும், அதைப்போல பிற மொழி நூல்களை மொழி பெயர்த்தும், தமிழில் உள்ள தலை சிறந்த நூல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்தும், தமிழின் பெருமையும், தமிழரின் பெருமையும் உலகத்திலே பரவச் செய்கின்ற முறையில் இந்தப் பல்கலைக் கழகத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு அந்தத் தமிழ் பல்கலைக் கழகத்தின் மூலமாக அங்கே இருக்கின்ற சொற்களஞ்சியம் உருவாக்கக்கூடிய ஆராய்ச்சித் துறை— இன்றைக்கு அந்தத் துறையை மாற்றி இருந்தாலும் கூட—

[திரு. மு. அப்பாதுரை] [1984 அக்டோபர் 13

கொடுத்திருக்கின்ற ஒரு அறிக்கையைத் தவிர மறு அறிக்கை இதுவரையில் வரவில்லை. எனவே அந்த தமிழ் பல்கலைக் கழகம் எப்படிப்பட்ட காரியத்தைச் செய்துகொண்டிருக்கின்றது, அதன் மூலமாக கடந்த இரண்டாண்டுக் காலத்தில் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய அனுபவம் என்ன, தமிழுக்குக் கிடைத்திருக்கின்ற வாய்ப்பு என்ன என்பதைப் பற்றி எல்லாம் இதுவரையில் இந்த அரசின் வாயிலாக ஒன்றுமே புலப்படவில்லை. அதற்கான காரணம் என்ன ? அங்கே இதுவரையில் போதுமான அளவுக்கு அந்தத் துறை சம்பந்தப்பட்ட பேராசிரியர்களையும், ஆசிரியர்களையும் நியமனம் செய்யாததுதான் அதற்கான காரணம் என்பது ட்டிக்காட்டப்படுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்தக் காரணத்திற்காக தமிழ்ப் பல்கலைக் கழகத்தைக் கொண்டுவந்திருக்கின்றீர்களோ அந்தக் காரணத்தின் ஒரு சதமானம் கூட நிறைவேற்றப்படவில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு யார் இணைவேந்தராக நியமிக்கப்பட வேண்டும் என்ற அதிகாரத்தை மத்தியிலே இருக்கக்கூடிய அரசாங்கத்தின் கையிலே கொடுத்தால் அவர்கள் நாளைக்கு இந்தியாவினுடைய ஒட்டு மொத்தமான நிலையை எண்ணிப்பார்த்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலமாக இந்தி கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலையைக் கூட உருவாக்கினாலும், உருவாக்கிவிடுவார்கள். அப்போது அதை எதிர்த்துப் பேச நீங்கள் இருப்பீர்களோ இல்லையோ, தமிழகம் இருக்கும். தமிழ்ப் பல்கலைக் கழகம் இருக்கும். எனவே அப்படிப்பட்ட ஒரு முரண்பாடான நிலையை உருவாக்குகின்ற விதத்திலே இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையிலே சிண்டிகேட்டிலே உள்ள உறுப்பினர்கள் 22 பேர்கள். அவர்களிலே 12 பேர் பல்வேறு துறைகளின் மூலமாக அதாவது விரிவுரையாளர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்கள். அரசாங்கத்தின் மூலமாக எக்ஸ் அஃபிஷியோ மெம்பர் என்ற வகையிலே அரசுத் துறைகளைச் சேர்ந்த 5 பேரும், கவர்னர் நாமினேஷன் மூலம் 5 பேரும் நியமனம் செய்யப்படுவார்கள். அதுதான் இருந்து வந்த நிலைமை. ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற உறுப்பினர்கள் 12 பேர் என்பதைக் குறைத்து 11 பேர் என்றாக்கி அதிலேயும் 6 பேரை நியமனம் செய்கின்ற நிலையினை ஏற்படுத்தி 5 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் வருகின்ற நிலையினை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலைமை எல்லாம் ஜனநாயக உரிமையைப் பறிப்பதாக இருக்கின்றதல்லவா ? ஊராட்சி மன்றம் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றம் மற்றும் உள்ளாட்சிகள், கூட்டுறவுத் துறை என்ற அளவிலே எல்லாம் உங்களால் ஜனநாயகத்தைக் காக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட



1984 அக்டோபர் 13] [திரு. மு. அப்பாதுரை]

வருங்கால சந்ததியினர் நல்ல கல்வியினைப் பெற வேண்டும் என்ற வகையிலே உருவாக்கப்பட்டிருக்கின்ற பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டிலே கூட உங்களால் நிலையான உறுதியான ஜனநாயக அமைப்பு முறையைக் காக்க முடியவில்லை என்பது இந்த ஆணைப்படி சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நாட்டிற்குத் தேவையான சரியான நல்ல கல்வி முறையினைத் தருவதற்காகத்தான் பாரதியார் பல்கலைக் கழகம் என்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் என்றும் பிரித்து வைத்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். ஆனால் அதற்கு எதிராக இன்றைக்கு அதிகப்படியான தொழிற் பயிற்சிக் கல்லூரிகளையும் பாலிடெக்னிக்குகளையும் துவக்குவதற்கு அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்துவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்ற திட்டமல்லவா ? இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களையும் திறந்து விட்டு அதே நேரத்திலே தொழில் கல்விக்கு அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்லி பல்கலைக் கழகங்கள் எல்லாம் செயலற்றுப் போகக்கூடிய அளவுக்கு பல்கலைக் கழகங்களின் கீழே உள்ள கல்லூரிகளை எல்லாம் செயலற்றுப் போன நிலைமையில் மூடிவிடக்கூடிய அளவுக்குத்தான் உங்களுடைய கல்வித் திட்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே எதிர் மறையான, முரண்பாடான கொள்கையைக் கொண்டிருக்கின்ற உங்களுடைய ஆட்சியில் நீங்கள் சட்டத் திருத்தங்களை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்.

கடந்த காலங்களிலே பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இந்த அரசுக்குத் தங்களுடைய 10 அம்சக் கோரிக்கைகளை வைத்துப் போராடியபோது, இதே மன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து பேசியபோது, கல்வியமைச்சர் அவர்கள் பதிலிலே ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் எல்லாம் திகைப்படையும் விதத்திலே அந்தப் போராட்டத்தை முடித்து வைத்திருக்கிறோம் என்று சவால் விட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு அவைத் தலைவரின் மூலமாக நான் மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அன்றைக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம், இந்த மன்றத்திலே கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம், பேராசிரியர்களின் போராட்டக் குழுவிடத்திலே நீங்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1–10)

அது மட்டுமல்லாமல், உங்களிடத்திலே ஒத்துக்கொண்ட அந்தத் தனியார் கல்லூரிகள், இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தை மீறி அங்கே இருக்கக்கூடிய பேராசிரியர்களிடமிருந்து ரூ. 20,000, ரூ. 10,000 என்ற முறையில் சம்பளப் பிடித்தம் செய்யக் கூடிய அளவுக்குத்தான் உங்களுடைய ஒப்பந்தத்தை அமுல் படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தானே இவையெல்லாம் சுட்டிக்காட்டுகின்றன.

[திரு. மு. அப்பாதுரை] [1984 அக்டோபர் 13

அது மட்டுமல்லாமல் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற இந்த இரண்டு பல்கலைக் கழகங்களிலே எவ்வளவு பெரிய முறைகேடுகள், ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். கடந்த 1978 ஆம் ஆண்டிலே திரு. மணிசுந்தரம் தவறு செய்தார் என்று சொன்ன பிறகு இதுவரையில் அந்த திரு. மணிசுந்தரம் பல்கலைக் கழகத்தில் நீடித்திருக்கிறார் என்றால், அவர் செய்த தவறு களுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா, உறவு இருக் கிறதா என்றுதான் நான் கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, பாரதியார் பல்கலைக் கழகம் அங்கே இருக்கக்கூடிய மில் முதலாளிகள் கரங்களில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை இங்கேயிருக்கிற மாண்பு மிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்க உங்களுக்கு ஆன்மீகசக்தி உண்டா என்று கேட்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே தொழில் கல்வி நிலையங்களைப் பொறுத்தமட்டில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் இவை எல்லாம் கொள்ளைக் கூடங் களாகத்தான் மாற்றப்பட்டிருக்கின்றனவே ஒழிய இந்த 3 பல் கலைக் கழகங்களை உருவாக்கியதன் மூலமாக நாளைக்கு தமிழ்ச் சமுதாயம் நல்ல வளர்ச்சியைப் பெறும் என்பதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை. அப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவது வீரமாகாது. உங்க ளுடைய ஆட்சியில் கல்விப் பாதையில் கல்விக்கு நிலையான கொள்கை கிடையாது, நிலையான திட்டம் கிடையாது.

இந்த ஆண்டு கவர்னர் உரையிலே நீங்கள் தொழில் கல்விக்கு அடிப்படையான கல்வித் திட்டத்தை புகுத்தப் போகிறோம் என்று சொன்னீர்கள். அந்தத் திட்டத்தை உங்களால் நிறை வேற்ற முடியவில்லை என்பது மட்டும் அல்ல, பாரதியார் பெய ரிலும் பாரதிதாசன் பெயரிலும் பல்கலைக் கழகங்கள் தொடங்கி யிருக்கிறீர்கள். அந்த இருவரும் இந்த நாட்டில் ஜாதி, மதத்தை எதிர்த்தார்கள். ஆனால் இன்றைக்கு கல்விக் கொள்கையின் மூலமாக நீங்கள் எடுத்திருக்கிற நிலை, தமிழ்நாட்டில் என்றும் இல்லாத ஜாதிக் கலவரங்களும் மதக் கலவரங்களும் இனக் கல வரங்களும் உருவாகக்கூடிய நிலைதானிருக்கிறது. அந்த முறையில்தான் உங்களுடைய திட்டங்கள் இருக்கின்றன. அப்படிப் பட்ட திட்டத்திற்கு முலாம் பூசுவதற்குத்தான் இந்தத் திருத்தம் இருக்கிறது என்று கூறி, வன்மையாக எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே கொண்டு வரப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு சட்ட முன்வடிவுகளும் புதிதாக தொடங்கப்பட்ட 3 பல்கலைக் கழகங் களைப் பொறுத்ததாகும். தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதி யார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலை க்கழகம் ஆகிய



1984 அக்டோபர் 13] [திரு. செ. அரங்கநாயகம்]

வற்றிற்கு பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய நிதியைப்
பெற வேண்டுமென்பதற்காக நாம் முயற்சிகளை எடுத்துக்
கொண்டபொழுது அவர்கள் பல்வேறு மாறுதல்களைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் விவாதித்து
ஒருசிலவற்றை நாம் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில்
இந்தச் சட்டமுன்வடிவுகள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்
கின்றன. அதிலே உள்ள பிரச்னை, இங்கே பேசிய மாண்புமிகு
உறுப்பினர்களுடைய பேச்சுக்களின் மூலமாகத் தெரிவிக்கப்பட்
டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
ஒரு கோணத்திலேயிருந்து இந்தச் சட்டத் திருத்தத்தினைப்
பற்றி விளக்கத்தினைத் தந்தார்கள். பெரும்பாலும் அரசு
தலையிடுகிறது என்கிற அடிப்படையிலேதான் அவர்கள் தன்
னுடைய கருத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதே
நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள்
மத்திய அரசின் சார்பாக இருக்கிற கவர்னருடைய தலையீட்
டைக் கோருகின்ற விதத்தில் மாநில அரசு தன்னுடைய அதிகாரங்
களை விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்
கள். இரண்டு பேரும் இந்தச் சட்ட முன்வடிவினை எதிர்த்துப்
பேசுவதுபோல் அமைந்திருந்தாலும் அவர்கள் பேசிய கருத்துக்
கள் ஒன்றுக்கொன்று முரணானது என்பதையும் ஒருவருடைய
கருத்துக்கு இன்னொருவருடைய கருத்து எதிராக இருந்தது என்
பதையும் இப்படித்தான் நாங்களும் அந்த மானியக் குழுவோடு
விவாதிக்கிற பொழுது என்னைப் பொறுத்தமட்டில் திரு. நெடு
மாறன் பேசியதைப் போல் பல்வேறு கருத்துக்களை நாங்கள்
விட்டுக் கொடுக்க முடியாது என்றுதான் சொன்னேன். ஆனால்
மானியக் குழுத் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியதைப் போல் மாநில அரசு
தலையிடுகிற வாய்ப்பு இருக்கிறது, அதைத் குறைக்க வேண்டு
மென்று சொல்லித்தான் அவர்கள் சில மாறுதல்களைச் சொன்
னார்கள். அதிலே ஒருசிலவற்றை நாம் ஏற்றுக்கொண்டதன்
காரணமாக, இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. இப்
பொழுது பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் பேசுகின்ற
பொழுது நம் முன்னாலே வருகின்ற பிரச்னைகள் முக்கியமாக
மாநில அரசு தலையிடக் கூடாது என்று வருகிற நேரத்தில் அந்த
அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றபொழுது, அது கவர்ன
ருடைய கைக்குப் போகிற நிலைமைதான் இதுவரையில் இருக்
கிறது. ஆனால் அதிலே, 3-வது விதமாக மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரமணி அவர்கள் பேசினார்கள். அப்படியில்லாமல் ஜன
நாயகப்படுத்தப்பட்ட முறையிலே இது சிண்டிகேட்டிற்கு வர
வேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். முழுமை
யாக அப்படி நடக்கவேண்டுமென்று அவர் சொல்லவில்லை
என்றாலும், ஜனநாயகப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை
அழுத்தமாக பேசினார்கள். நான் இதையும் மானிய குழுவி
னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மானியக் குழு
அல்லது மத்திய அரசின் சார்பிலே பேசுகின்ற கருத்துக்கள்
பெரும்பாலும் கவர்னர் கைக்கு அதிகாரங்கள் போகக்கூடியவை
களாக இருக்கிறதே தவிர அந்தப் பல்கலைக் கழகங்கள் ஜன

நாயகப்படுத்தப்படுகிற முறை இல்லையென்கிற உணர்வை நானே அங்கே வெளிப்படுத்தினேன். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் ஜனநாயகப்படுத்துகிற உணர்வோடு செயல்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவாறு ஒத்துக்கொள்வார்ச்ள் என்று கருதுகிறேன், பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு இல்லாத உரிமைகளை இப்போது நாம் கொண்டு வருகிறோம். இதுவரையில் அவர்களுக்கு இல்லாத வாய்ப்புகளை நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 1977-க்கு பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையில் அவர்களுக்கு அத்தகைய வாய்ப்புகள் இல்லாமல் இருந்தன. அந்த வாய்ப்புகளை புதியதாக ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலமாக உண்மையிலே பல்கலைக் கழகங்கள் யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் இல்லாமல் ஜனநாயகப்படுத்தப்பட்ட அமைப்புகள் மூலமாகக் கட்டுப்படவேண்டுமென்பதும், அந்த ஜனநாயகப்படுத்தப்பட்ட அமைப்பும் பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் பெரும்பாலும் அடங்கியதாக இருக்கவேண்டுமென்ற கருத்தை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்ட வகையிலே தான் எங்களுடைய திருத்தங்கள் 1977-லிருந்து வந்திருக்கின்றன, இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்றாலும் இன்றைக்கு வந்திருக்கிற திருத்தங்கள் மூலமாகக் கூட பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக டிபார்ட்மெண்டிலே வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு நல்ல பிரதிநிதித்துவத்தை நாம் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். ஆனால் அந்த ஆசிரியர்கள் பிரதிநிதித்துவத்தை நாம் குறைக்கவில்லை. ஆனால் ஆசிரியர்கள் வர வாய்ப்பிருந்த ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் ஆசிரியர்களுடைய பிரதிநிதித்துவத்தைக் குறைக்க வேண்டுமென்பதல்ல. இன்னொரு தேர்தல் நடத்துகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே நாம் அந்த செனட்டிலே தேர்ந்தெடுக்கப்படுகிற 6 உறுப்பினர்களை குறைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டு இருக்கிறோம். எதிர்காலத்திலே இந்த நிலைமை பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்கள் பொறுப்பிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அமைப்பாக வரவேண்டுமென்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அந்த அடிப்படையிலே தான் பல்கலைக் கழகங்களுடைய திருத்தங்கள்; பல்கலைக் கழகப் பிரச்னைகள் பற்றி இங்கே பேசுகிறபோது அந்தக் கோணத்திலிருந்து பேசினால் பிரச்னைகளுக்கு நல்ல தெளிவு ஏற்படும். ஆனால் மூன்று விதமான கருத்துக்கள் பேசும்படி இருந்தாலும்......

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே எல்லா ஆசிரியர்கள் மத்தியிலிருந்தும் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பெற்று வரவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இப்போது ஆறு உறுப்பினர்கள் வருவதை கைவிட்டோம் என்றால் அதற்கு அர்த்தம் என்னவென்று சரியாக புரியவில்லை, அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதை எடுத்ததற்கு காரணம் இன்னொரு தேர்தல் நடத்தப்படும். அல்லது சிண்டிகேட்டில் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை வைத்துச் சொன்னார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பெரும்பாலும் ஆசிரியர்களாக இருக்கவேண்டுமென்ற கருத்தை நாம் ஏற்றுக்கொண்டு அந்த ஆசிரியர்கள் பிரதிநிதிகளோடு பேசுகிறபோது அதைச்சொல்லி அதற்கேற்பத்தான் திருத்தங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. உதாரணமாகச் சென்னை பல்கலைக் கழகத்திலே ஆசிரியர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது; சொண்டு வர வேண்டுமென்ற கருத்துச்களை ஏற்றுக்கொண்டு நாம் கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே கல்லூரி ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் இல்லாத உரிமைகளைத் தர துவங்கி இருக்கிறோம். அந்த வகையிலே இந்த அரசு திறந்த மனதோடு காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள் வரவேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்து ஒற்றுமை இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அரசு தலையீடு பல்கலைக் கழகங்களில் இருக்கக்கூடாது என்று பல்கலைக் கழக மானியக் குழு வலியுறுத்தியதன் காரணமாக இந்தத் திருத்தங்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் தன்னுடைய நிலையை தெளிவுபடுத்த வேண்டும். அரசு தலையீடு இல்லையென்று சொன்னால் பல்கலைக் கழகங்கள் சுயாதிக்க அமைப்புடையதாக, அட்டானமஸ் பாடியாக இருக்க வேண்டும். அட்டானமஸ் பாடியாக பல்கலைக் கழகங்களை அமைக்கின்ற அந்த திசை நோக்கிலே இந்தத் திருத்தங்கள் இருக்கின்றனவா ? அல்லது இருக்கிற அதிகாரங்களை ஆளுநரின் கையிலே ஒப்படைக்கிற நோக்கிலே இந்தத் திருத்தங்கள் இருக்கின்றனவா என்பதைக் குறித்து அரசாங்கத்தின் கொள்கை நிலை என்ன என்பதை இதிலே தெளிவுபடுத்த வேண்டும்.

(பிற்பகல் 1–20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே மிகத் தெளிவாகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் என்ன கோணத்தில் இருந்து பேசினார்களோ அதே கோணத்தில் இருந்துதான் மத்தியில் இருக்கிற கல்வித்துறையைச் சார்ந்த பல்கலைக்கழக மானியக்குழுவும் மாநில அரசின் தலையீட்டைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த இடத்தில்தான் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் என்னென்ன அடிப்படையில் பேசினார்களோ, அதே அடிப்படையில்தான் பேசினேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 அக்டோபர் 13

அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய உதவியை நாம் பெற வேண்டும் என்பதற்காக நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், ஆளுநரின் தலையீடு வந்து ஒரு பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் பாதிக்கப்படும் சூழ்நிலை வருமானால் அதை நாம் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டோம் என்கிற அந்த உறுதியை மட்டும் நான் இங்கே தருகிறேன்.

பொதுவாக கவர்னர் அவர்கள் எங்களைக் கலந்தாலோசித்துதான் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. ப. நெடுமாறன் : இன்றிருக்கும் ஆளுநர் அரசியல் ரீதியில் பல்வேறு காரணங்களால்—தேர்தல் உடன்பாடு வரும் என்ற காரணத்தால்—உங்களுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளலாம். ஆனால் உங்களுக்கு எதிரான ஒரு நிலை வருகிறபோது பல்கலைக் கழகம் என்னாகும் ? உங்களுடைய சட்டம் என்னாகும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதற்கு முரணான சூழ்நிலை இருந்த நேரத்தில் கூட சொன்னவற்றை ஏற்றுக்கொண்டுதான் செயல்பட்டிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலோ அல்லது ஆந்திராவிலோ ஏற்பட்டது போன்ற பிரச்சினை தமிழ்நாட்டில் ஏற்பட்டது இல்லை.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னாலே இதே அரசாங்கத்தின் கீழ், இந்த அரசாங்கம் செய்த சிபாரிசை கவர்னர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி இந்த அவையிலேயே நாம் டிஸ்கஸ் செய்து இருக்கிறோம். ஆகவே, இங்கேயும் நடந்து இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** முதலில் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து இருக்கலாம். ஆனால், பின்னர் நாங்கள் அவரை ஏற்றுக்கொள்ள வைத்தோம். அவரும் ஏற்றுக்கொண்டார். மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி ஏற்கெனவே, சொல்லப்பட்டு இருந்தால் அது தவறான தகவல் ஆகும்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து பணம் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டோம் என்று சொன்னார்கள். பணம் பெறவேண்டும் என்பதற்காக, அவர்கள் சொல்வதற்காக எதைவேண்டுமானாலும் விட்டுவிட்டு அல்லது ஏற்றுக்கொண்டு நமக்கு இருக்கும் உரிமையை தாரை வார்த்துக் கொடுத்து விட வேண்டுமா ?



1984 அக்டோபர் 13]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எதைவேண்டுமானாலும் விட்டு விடுவதற்கு யாரும் முன் வரமாட்டார்கள். ஆனால், பல்கலைக் கழக மானியக் குழு என்பது ஒரு அரசியல் சார்பற்ற குழுவாகும். பல்கலைக் கழக நிபுணர்களைக் கொண்ட குழு ஆகும் அது. அது இந்தியா முழுமைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு குழு. அவர்களை மதிக்கும் அடிப்படையில்தான் நாம் அவர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

எப்படியாவது இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரத்தைப் பறிக்க வேண்டும் என்று அவர்கள் பேசியிருப்பார்களானால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நிச்சயமாக நாம் அதை மறுத்து இருப்போம். பல்கலைக் கழக மானியக் குழு என்பது அகில இந்திய அடிப்படையில் செயல்படுகிற ஒரு குழு. அவர்கள் கருத்து தெரிவிக்கிறபோது நாம் அதற்கு மதிப்புத் தருவது என்பது யாரோ நம்மீது அதிகாரம் செலுத்துவதற்கு அடங்கி நடப்பதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். பழைய சட்டப்படி பார்க்கிறபோது, 22 பேர் சிண்டிகேட் உறுப்பினர்கள் என்று இருந்தால் அவர்களில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள். ஆனால், புதிய சட்டப்படி மொத்த எண்ணிக்கை 11. அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் 5 பேர் தானே ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் பொதுவான முறையில் பதில் சொல்ல விரும்புகிறேன். மற்றபடி தனி கருத்துக்கள் எல்லாம், குறிப்பிட்ட கருத்துக்கள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதிலே குறிப்பாக பைனான்ஸ் ஆபீசர் என்று ஒரு அதிகாரியைப் போடுவது இதுவரையிலும் அரசின் கையில் இருந்தது. இப்போது அதை சிண்டிகேட்டிற்குத்தந்து இருக்கிறோம். காரணம் என்னவென்றால் நம்முடைய நோக்கம் அரசாங்கத்தின் கையில் இருக்கும் அதிகாரத்தை சிண்டிகேட்டிற்குக் கொடுப்பதன் மூலம் அந்தப் பல்கலைக் கழக நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துகிறோம் என்றுதான் அர்த்தம். ஆகவே, அந்த முறையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதற்காக அதைக் குறைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டு இருக்கிறோம். ஆசிரியர் சங்கங்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு நேரடியாக

இரண்டு பிரதிநிதிகளை அனுப்புகிற வாய்ப்பு இருக்கிறதே, அதை அவர்கள் தொடர்ந்து பெற்றுக் கொண்டே இருக்கலாம். அதிலே எந்தவிதமான மாற்றத்தையும் நாம் செய்யவில்லை. ஆனால், மறைமுகமாக சிண்டிகேட்டிலிருந்து 6 பேர் என்று வரும் ஒரு வாய்ப்பு இருந்தது. அது இன்று இல்லை என்பதுதான் அவர்களுடைய குறை.

**ஆனால்,** அந்தக் குறையை எதிர்காலத்திலே போக்க நாம் வேறு வகையிலே முயற்சி எடுத்துக் கொள்ளலாம். இங்கே கல்லூரி ஆசிரியர்கள் கோரிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் பரிசீலிப்போம் என்று அப்போது சொன்னோம். பரிசீலித்து முடிவு எடுத்தவுடன், ஆசிரியர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், அவர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்வோம். இப்போது கூட அவசரமாகப் பரிசீலித்து, இந்த சட்டமன்றக் கூட்டம் முடிவடைவதற்கு முன்னால் சில முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அப்படி முடிவு எடுக்கப்படுமானால் 20-ந் தேதிக்குள்ளாகவாவது இந்த மன்றத்திலே அறிக்கை வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, 20-ந் தேதிக்குள்ளாகவாவது அறிவிப்போம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே முந்திய செஷன் நடந்தபோது, ''எக்ஸாமினேஷனை பாய்காட்'' செய்வோம் என்று ஆசிரியர்கள் சொன்ன நேரத்தில் நான் கூட இன்டர்வீன் பண்ணி, அவர்களோடு பேசி, ஒரு சுமுகமான முடிவுக்கு வந்து, அவர்கள் கோரிக்கைகளை ஏற்று, அறிவிப்புச் செய்தார்கள். அது முடிந்துவிடும் என்று நாங்களும் பேசாமல் இருந்தோம். இப்போது மீண்டும் அந்தப் பிரச்சனைகளை முடிவு செய்து, அறிவித்துவிட்டு நடைமுறைப்படுத்தாததை, அறிவிப்போம் என்று புதிதாக செய்வதைப் போல் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முன்னாலே அறிவித்தது 'பரிசீலிப்போம்' என்று. இப்போது அறிவிப்போம் என்பது ஏற்கெனவே சொன்னபடி பரிசீலனை செய்து, அதிலே ஒரு முடிவு எடுத்து, அந்த முடிவை அறிவிப்போம். ஆகவே, இந்த இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. பரிசீலிப்போம் என்றுதான் அப்போது சொன்னோம். அந்த அடிப்படையில் அறிக்கை வைத்திருக்கிறேன். அதைக் கருத்திற் கொண்டு இப்போது பரிசீலனையை விரைவு படுத்தியிருக்கிறோம். அதிலே ஒரு முடிவை எடுத்து, இனிமேல் அரசின் உத்தரவை அறிவிப்போம். மீண்டும் பரிசீலிப்போம் என்ற வாக்குறுதியாக இருக்காது, உத்தரவாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு, ரகுமான்கான் அவர்கள் இரண்டு 'டெர்ம்' இருப்பதைப் பற்றி சொன்னார்கள். யாரோ தனி நபரை மனதிலே வைத்துக் கொண்டு இப்படிச் செய்வதாகச் சொன்னார்கள். தனி நபரை மனதிலே வைத்துக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் மாறுதல் செய்வது முறையல்ல. பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற கருத்திலேதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

பல ஆண்டு காலமாக பல்கலைக் கழக நடைமுறைகளை நாம் பார்த்திருக்கிறோம். பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவில் பலரும் உறுப்பினர்களாக வருகிறார்கள் என்பது நாம் அனுபவத்தால் அறிந்து கொண்டிருக்கிற ஒன்று. அப்படி உறுப்பினர்களாக வந்தவர்கள், தொடர்ந்து அவர்களே வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களிலே பலர் தொடர்ந்து, நிரந்தரமான பிரதிநிதிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது என்று கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் கேட்டுக் கொண்டது. ஏனென்றால், தொடர்ந்து ஒருவரே உறுப்பினராக இருப்பதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். இந்த குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று அவர்கள் நீண்ட நாட்களாகச் சொல்லி வந்தார்கள். ஒவ்வொரு தடவையும் சின்டிகேட்டில் ஏதாவது ஒரு பிரச்சனை வரும்போது இப்படிப்பட்டவர்கள் அதற்கு தடையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் தொடர்ந்து ஒருவர் உறுப்பினராக இருந்து கொண்டிருந்தால் அவருக்கு 'வெஸ்டட் இன்டரஸ்ட்' வந்துவிடுகிறது. அது பல்கலைக் கழக வளர்ச்சிக்கு இடையூறாக இருந்து வருகிறது.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, தேர்தலிலே வாக்கு பெற்று, வெற்றி பெற்று, செனட், சின்டிகேட் ஆகியவற்றிற்கு உறுப்பினர்களாகப் போகிறவர்கள் 6 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து இருந்தால், 'வெஸ்டட் இன்டரஸ்ட்' அவருக்கு வந்துவிடுகிறது, அதனால் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் பல்கலைக் கழகத்தில் இருக்கிற பேராசிரியர்கள்—ஹெட் ஆஃப் தி டிபார்ட்மென்ட்—அவர்களுடைய பதவிக் காலம் முடிகிற வரையில் உறுப்பினர்களாக இருக்கிறார்களே ; அவர்களுக்கு வெஸ்டட் இன்டரஸ்ட் வராதா ? அவர்கள் 10 வருஷத்திற்கு மேலாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் வெஸ்டட் இன்டரஸ்ட் வராதா ?

இன்னொன்று. பல அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எஜுகேஷன் செக்ரட்டரி, மற்றவர்கள் வருகிறார்கள். 4 வருஷம் ஒருவர் எஜுகேஷன் செக்ரட்டரியாக இருக்கலாம், சிலர் அதற்கு மேலும் இருக்கலாம். இயக்குநராக இருந்த

வையாபுரி அவர்கள் 9 வருஷம் உறுப்பினராக இருந்தார்கள். அரசாங்கத்தின் சார்பிலே போகிற இப்படிப்பட்ட அதிகாரிகள் 6 ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு திரு. வையாபுரி.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக பேராசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெஸ்டெட் இன்டரெஸ்டு என்பது அக்காடெமிக் இன்டரெஸ்டு என்று நினைத்து அந்த வகையில் ஒத்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன், பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மற்றவர்களுக்கு இருப்பதைப் போல அவ்வாறு இன்டரெஸ்டு இல்லை என்கிற அடிப்படையில் தான் நாம் அந்தப் பேராசிரியர்களுக்கு அனுமதியை வழங்கி வருகிறோம். ஆகவே, அப்படி குறிப்பிட்டு சில பேர்கள் தொடர்ந்து பல்கலைக் கழகங்களிலே இருந்து வருகிற காரணத்தால் பல்கலைக் கழக வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்ற அடிப்படையிலே தான் நாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். புதியதாக சிலர் வருவதின் மூலம், இளைஞர்களாக அல்லது புதியதாக படித்து வருகிறவர்களாக, அல்லது புதியவர்களாக வருகின்ற போது, ஒரு பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்தில் நல்ல மாற்றம் ஏற்படும் என்று நம்பி நாம் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறோம். அந்த வகையிலே தான் இந்தச் சட்டமுன்வடிவு.

**திரு. அ. ரகுமான்கான் :** பதவி குறித்து 6 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால், வெஸ்டெட் இன்டரஸ்டு, மற்ற காரியங்களிலும் ஆகிவிடும் என்று எல்லாம் அமைச்சரவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் ஏற்கனவே கேட்ட கேள்வியை அமைச்சரவர்கள் நினைவு கூறுவார் என்று கருதுகிறேன். சண்முகநாதனை எப்படிப் போட்டீர்கள் ? 15 வருஷத்திற்குப் பிறகு ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சண்முகநாதன் மட்டுமல்ல ; திரு. இளையபெருமாள், திரு. சண்முகநாதன், திரு. சுப்பையா பிள்ளை, டாக்டர் ஆர். முத்துகுமரன், திரு. எல். சுவாமிக் கண்ணு, திரு. எல். கண்ணப்பன், திரு. ஏ. முருகேசன், திரு. தில்லை வெள்ளாளன், திரு. கே. பாலகிருஷ்ணன், திரு. டீ. எஸ். சுப்பிரமணிய பிள்ளை, திரு. எல். பி. கே. ஆர். ராமநாதன் செட்டியார், திரு. ஏ. நடராஜன் ஆகியோர்கள்



எல்லாம் உயர்நீதி மன்றத்திலே ஒரு அனுமதியைப் பெற்று,
அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்த வழக்கு
முடிகின்றபோது அவர்கள் சட்டப்படி பதவியை இழப்பார்கள்.
இங்கே நான் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புவது, பல்கலைக் கழகங்களுடைய நிலை
பற்றி நாம் பேசுகிறபோது ஒரு பொதுவான கருத்தை நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு ஒருமித்த கருத்தை
நாம் உருவாக்குவோமேயானால் நிச்சயமாக எதிர்காலத்தில்
இப்போது இருப்பதை விட ஒரு நல்ல நெறிமுறைக்கு வரமுடியும்.
ஒரு வேளை தமிழகத்தில் இருந்து பார்க்கிறபோது பல்கலைக்
கழகங்கள் ஒழுங்காக நடைபெறுகின்ற உணர்வு ஏற்படலாமே
தவிர, இந்தியா முழுவதும் இருக்கிற பல்கலைக் கழகங்களுடைய
நிலைமைகளை பார்க்கும்போது அப்படி இல்லை என்பதை
நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையின்
பேரில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் அனுமதியின்
பேரில், ஓர் இரு கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இதிலே ஒருவர், 'டைம்ஸ் ஆப் இண்டியா' பத்திரிகை
யில் "Anti-Cultural Pandemonium—Higher Education of India"
என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்கள்.
அதிலே அவர்கள் சொல்வது நம்மை திடுக்கிட வைப்பதாகவும்,
அதிர்ச்சி தரத்தக்கதாகவும் அதே நேரத்தில் நாம் சந்திக்க
வேண்டிய நிலைமைகள் பற்றி கூறப்படுகின்ற காரணத்தால்,
நான் ஓர் இரு கருத்துக்களை இங்கே சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். அதாவது அவர்கள் சைனாவோடு ஒப்பிட்டுக்
காட்டுகிறார்கள். சைனாவின் கலாச்சாரப் புரட்சி ஏற்பட்ட
காலத்தில் அங்கே பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகிய
வற்றை எல்லாம் மூடியிருந்தார்கள். ஆனால் அவர்கள் மூடி
இருந்தார்களே தவிர, அந்த மூடப்பட்ட காலத்திற்குப் பிறகு
அவர்கள் அங்கேயிருந்த தவறான நிலைமைகளை எல்லாம்
போக்கி, இன்றைக்கு அவர்கள் ஒரு முன்னேற்றத்தைக் கண்டு,
எல்லாவிதமான உற்பத்தி துறைகளிலும் ஒரு கணிசமான முன்
னேற்றத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அங்கே
இருக்கிற நிலைமைக்கும், இங்கு இருக்கின்ற நிலைமைக்கும்
உள்ள ஒற்றுமை என்னவென்றால், அங்கேயும் மூடியிருக்கிறார்
கள். இங்கே கூட நினைத்தால் மூடிக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் அங்கே அரசு மூடியது. இங்கே மக்கள் மூடுகிறார்கள்.
ஆனால் அங்கே அரசு மூடியதன் காரணத்தால் பல்கலைக்
கழகங்களைத் திறந்து விடுகிறார்கள். ஆனால் இங்கே மக்கள்
மூடுகின்றார்கள், சில வெளிப்புறச் சக்திகள் மூடிக் கொண்
டிருக்கிறது என்கிற அடிப்படையில் அரசினுடைய அனுமதி
இல்லாமல் அல்லது நம்முடைய விருப்பம் இல்லாமல், ஆசிரியர்
களுடைய போராட்டம் என்றாலும், மாணவர்களுடைய
போராட்டம் என்றாலும், மதப் பிரச்சினையின் காரணமாகவும்,
ஜாதிக் கலவரம் காரணமாகவும் மூடப்படுகின்றன. இந்த
நிலையில் மூடப்பட்டிருக்கின்ற சூழ்நிலைகளில் இந்தியாவைப்
பொறுத்த வரையில் நாம் கவலை கொள்ளக்கூடிய அம்சமே
இப்போது பெரும்பாலும் மேலை நாடுகளில் வயதானவர்கள்

அதிகமாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் இளைஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நம்முடைய பல்கலைக் கழகங்களில் இருக்கின்ற பல்வேறு நடைமுறைகளை நாம் திருத்தி நல்ல செயல்பாட்டிற்குக் கொண்டுவரத் தவறுவோமேயானால், பல நூற்றாண்டு காலத்திற்கு நம்முடைய இந்தியாவைக் காப்பாற்ற முடியாத நிலைமை ஏற்படுகின்ற நிலையை, ஒரு பயத்தை, ஒரு அச்சத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், அல்லது ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்று பார்க்கிறபோது நாம் முதலிலே கவனிக்க வேண்டிய துறையே, பகுதியே பல்கலைக் கழகம்தான் என்கிற ஒரு கருத்து, இதிலே தெளிவு படுத்தப்படுகிறது என்பதை நாம் இங்கே சொல்லிக் கொண்டு வருகிறோம். ஆகவே பல்கலைக் கழகங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வரவேண்டும் என்பது மட்டுமல்ல, அங்கே நடைபெறுகின்ற காரியங்கள் மக்களுக்கு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது, மக்களுக்குத் தேவையானதாக இருக்கிறது, மக்கள் எதிர்பார்க்கின்றதாக இருக்கிறது, மக்களுக்குத் தொடர்பு உடையதாக இருக்கிறது என்கிற அந்த வகையிலே, இந்தப் படிப்பும், கல்வியும், ஆராய்ச்சியும் இருந்தால்தான் மக்கள் அதை விரும்புவார்கள். அப்போதுதான் பல்கலைக்கழகம் தன்னுடைய பணியை உண்மையாக, முழுமையாக செய்ததாக ஆகும். அப்படிப்பட்ட நிலைமையை நாம் உருவாக்க வேண்டும் என்றால், பல்வேறு நிலைகளிலே சிந்திக்க வேண்டிய ஒரு பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திலே தொடர்பு கொண்டு இருக்கின்ற பலருக்கும் இருக்கிறது. அதை அவர்கள் செய்கின்றபோது, நாம் அந்தக் குறைபாடுகளைப் போக்க முடியும்.

ஆகவே இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்ற நேரத்திலே பல்கலைக்கழகங்கள் ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்திலே ஜனநாயகப்படுத்தப் படுகின்றபோது, அதிலே பொறுப்பு ஏற்கிறவர்களும், இதிலே சம்பந்தப்பட்டவர்களும், தங்களுடைய நோக்கமாக, தங்களுடைய லட்சியமாக, எப்படி எதை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், நாம் நிர்ணயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை, இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு, நல்ல லட்சியத்தோடு, செயல்படக் கூடியவர்கள் பல்கலைக்கழக வளர்ச்சியிலே ஆர்வம் உள்ளவர்கள், அப்படிப்பட்ட பிரதிநிதிகள் நிறைய பேர்கள் பல்கலைக்கழகத்திலே வந்து அமருவது என்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல அம்சமாகும். ஆகவே இந்த அரசைப் பொறுத்தமட்டில் நாம் அந்தப் பாதையை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக நகர ஆரம்பித்திருக்கிறோம். இந்தக் கருத்துக்கள் வேறு எந்தச் சட்டமன்றத்திலும் பேசப்படாத கருத்துக்கள்தான் இப்போது இங்கே பேசப்படுகின்றன. ஆகவே நாம் ஆரம்பத்திலேயே விழித்துக் கொண்டு இருக்கிறோம் என்று கூட சொல்லலாம். ஆகவே நான் பேசியிருக்கின்ற இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதலைச் செய்தால் நமது பல்கலைக்கழகங்கள் சீராக அமையும் என்பதோடு





மட்டுமல்ல, பல்கலைக்கழகங்கள் மூலமாக இந்த நாடு நல்ல பயனைப் பெறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1984 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1984 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறை வேற்றப் பெற்றது.

பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

திரு. ரகுமான்கான் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1984 அக்டோபர் 13

பிரிவுகள் 2 முதல் 29 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 15–10–1984 திங்கட்கிழமை காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

156. 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 9–8–1984 ஆம் நாளிட்ட 1533 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

157. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம் மற்றும் தமிழ் ஒரே தொகுப்பு) [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் II/1953) 169-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

25. 1984–85 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).



1984 அக்டோபர் 13]

26. 1984–85 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

27. 1984–85 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

28. 1978–79 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

29. 1978–79 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

30. 1978–79 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

31. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (முதல் பட்டியல்).

32. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (இரண்டாம் பட்டியல்).

இணைப்பு I.

[205ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 83 (*வினா எண் 22954) க்கான விடையைக் காண்க.]

கிருஷ்ணகிரி நீர்த் தேக்க அணைக்குக் கீழ்ப் பகுதியில், குண்டலப்பட்டி மற்றும் கத்தேரி கிராமங்களில் உள்ள மேடான பகுதிகளை, தென் பெண்ணை ஆற்றினால் பாசன வசதி பெறும் வகையில் கொண்டு வரும் திட்டமே இந்த '' ஆற்று நீரேற்றுத் திட்டம் '' ஆகும்.

2. தென் பெண்ணை ஆற்றில் மிகுதியாகச் செல்லும் நீரை அதிகமாகத் தேங்கி நிற்கும் இடத்திலிருந்து, மின் இயந்திரங்கள் மூலம் ( Electric Motor ) எடுத்து, குழாய்கள் மூலமாக 281 ஏக்கர் நிலப் பகுதிக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது. இக் குழாய்கள், தனிப்பட்டவர்களின் நிலங்களில் பதியப்பட்டு, அவற்றின் மூலம் நீர் பாசனத்திற்காக திட்டமிடப்பட்ட நிலங்களுக்கு அருகில் கட்டப்படும் மேல் நிலைத் தொட்டிக்கு கொண்டு செல்லப்படும். இந்த மேல் நிலைத் தொட்டியிலிருந்து இத் திட்டத்தில் பயன் பெற விருக்கும் விவசாயிகளின் நிலங்களுக்கு பாசனத்திற்கு நீர் வழங்கப்படும். இத் திட்டத்தின் மொத்தச் செலவான ரூ. 7.50 இலட்சத்தில், 50 சதவீதம் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் (Drought Prone Areas Programme) மானியமாக வழங்கவும், மீதியை, வங்கிகள் மூலம் கடனாகவும் பெற வகை செய்யப்பட்டது.

3. இத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் மூலமாக ( Co-operative Society ) இத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு 'கால்வெள்ளி நீர் ஏற்றப் பாசனச் சங்கம்' என்ற ஒரு கூட்டுறவு அமைப்பு 9–12–1980 இல் அமைக்கப்பட்டது.

4. இருப்பினும்,

(அ) பாசனத்திற்காக அமைக்கப்பட வேண்டிய குழாய்களை தங்கள் நிலங்களில் பதிக்க, சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் 1981–82 இல் சம்மதம் அளிக்காததாலும்,

(இ) இத் திட்டத்திற்கு முதன் முதலாக கடன் வசதி அளிக்கக் கோரியிருந்த நில வள வங்கி, பிறகு, அதன் நிதி நிலையில் ஏற்பட்ட கஷ்டங்களால் கடன் வழங்க முன் வராததாலும்,

(உ) இத் திட்டத்தின் மூலமாக பயன் பெறுவோர்கள், ஆரம்பத்தில் தங்களுடைய நிலங்களை இத் திட்டத்திற்கான கடனைப் பெறுவதற்காகச் சம்பந்தப்பட்ட வங்கிக்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் பதிவு செய்து தர சம்மதிக்காததாலும்,

(எ) இந் நிலையில் தருமபுரி மாவட்டத்தில் நிலப் பதிவுகளை புதிதாக்கும் பணி மேற் கொள்ளப்பட்டு, அதனால் இத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்கள் தங்களது நிலங்களை கூட்டுறவுச் சங்கத்திற்கும், வங்கிக்கும் பதிவு செய்யும் வகையில் நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்க 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை அவகாசம் எடுத்துக் கொண்டதாலும்,

(ஐ) முதலில் தயாரிக்கப்பட்ட இத் திட்டத்தினை மீண்டும் வங்கிகளுக்கு மறுநிதி வழங்கும் பொருட்டு தேசிய விவசாய கிராமிய அபிவிருத்தி வங்கி ( National Bank for Agriculture and Rural Development ) கோரியபடி உடனே மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாலும் இத் திட்டத்தை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டது.

5. பெருமுயற்சி மேற்கொண்டதன் பொருட்டு சம்பந்தப்பட்ட சில உரிமையாளரிடமிருந்து அண்மையில் தான் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் பெரு முயற்சியின் காரணமாக, சம்பந்தப்பட்ட வங்கிகள் கடன் வழங்கக் கோரியவாறு, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தங்கள் நிலங்களைக் கூட்டுறவு சங்கத்திற்கும், வங்கிக்கும் பதிவு செய்து தர ஒப்புக் கொண்டு வருகிறார்கள். காவேரிப்பட்டணத்தில் உள்ள இந்தியன் வங்கி இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்க முன் வந்துள்ளது. அதன் பொருட்டு செய்ய வேண்டிய நடைமுறைச் செயல்கள் யாவற்றையும் இவ்வங்கி முடித்து, கடன்—வழங்கத் தயாராய் உள்ளது. இவ்வாறு இடையில் ஏற்பட்ட மேற்கூறிய எல்லாத் தடைகளையும் கடந்து தற்போது திட்டத்தினை செயல்படுத்தக் கூடிய நிலை அடைந்து வருகிறது. இத் திட்டத்தினை வெகுவிரைவில் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1984 அக்டோபர் 13]

## இணைப்பு II.

(237 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 2 வினா 2429-க்கான விடையைக் காண்க.)

| | துறையின் பெயர். | நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. (ரூபாய்.) |
|---|---|---|
| 1 | செய்தி மக்கள் தொடர்புத் துறை | 40,000 |
| 2 | மீன் துறை | 35,000 |
| 3 | பொதுப்பணித்துறை | 35,000 |
| 4 | வனத்துறை | 35,000 |
| 5 | வேளாண்மைத் துறை | 35,000 |
| 6 | தொழில் நுட்ப கல்வித் துறை | 20,000 |
| 7 | ஓவிய நுண்கலைக் கல்லூரி | 20,000 |
| 8 | அருங்காட்சியகம் | 25,000 |
| 9 | நெடுஞ்சாலைத் துறை | 25,000 |
| 10 | கால்நடை துறை | 30,000 |
| 11 | அரிசன மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நல் வாழ்வுத்துறை | 25,000 |
| 12 | தொல் பொருள் ஆய்வுத் துறை | 20,000 |
| 13 | காவல் துறை | 30,000 |
| 14 | தொழில் மற்றும் வணிகத் துறை | 25,000 |
| 15 | மருத்துவத் துறை | 25,000 |
| 16 | தொழிலாளர் துறை | 15,000 |
| 17 | ஊரக வளர்ச்சித் துறை | 25,000 |
| 18 | கூட்டுறவுத் துறை | 20,000 |
| 19 | பொது சுகாதாரத் துறை | 15,000 |
| 20 | வேளாண்மை விற்பனைத் துறை | 15,000 |
| 21 | இந்து சமய அறநிலையத் துறை | 35,000 |
| 22 | சென்னை மாநகர வளர்ச்சிக் கழகம் | 25,000 |
| 23 | காதி மற்றும் கிராமத் தொழில் நிறுவனம் | 20,000 |
| 24 | இந்திய மருத்துவத் துறை | 5,000 |
| | மொத்தம் | 6,00,000 |

## இணைப்பு III.

(266 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 64—வினா 15997-க்கான விடையைக் காண்க.)

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திலும் மற்றும் சில மாவட்டங்களிலும் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள் பால் விலையை ஜூலை 1982 மாதத்திலிருந்து அதிகப்படுத்தியுள்ளன.

(ஆ) அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது —

கொள்முதல் விலை.

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | | பசுவின்பால் கொள்முதல் விலை. | |
|---|---|---|---|
| | | 1982 ஜூலை மாதத்திற்கு முன்பு. | 1982 ஜூலை மாதத்திற்கு பின்பு. |
| 1 | தஞ்சாவூர் மாவட்டம் .. | ரூ. 1.80 லிருந்து ரூ. 2.10 வரை. | ரூ. 1.90 லிருந்து ரூ. 2.20 வரை. |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம் .. | ரூ. 2.20 | ரூ. 2.30 |
| 3 | திருச்சி மாவட்டம் .. | ரூ. 1.70 லிருந்து ரூ. 1.90 வரை. | ரூ. 2.00 லிருந்து ரூ. 2.20 வரை. |

| | | எருமைப்பால் கொள்முதல் விலை. | |
|---|---|---|---|
| | | 1982 ஜூலை மாதத்திற்கு முன்பு. | 1982 ஜூலை மாதத்திற்கு பின்பு. |
| 1 | தஞ்சாவூர் மாவட்டம் .. | ரூ. 1.90 லிருந்து ரூ. 2.10 வரை. | ரூ. 2.00 லிருந்து ரூ. 2.20 வரை. |
| 2 | புதுக்கோட்டை .. | ரூ. 2.20 | ரூ. 2.30 |
| 3 | திருச்சி மாவட்டம் .. | ரூ. 1.80 லிருந்து ரூ. 2.00 வரை. | ரூ. 2.10 லிருந்து ரூ. 2.30 வரை. |

தஞ்சாவூர் புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் பாலின் விற்பனை விலை கிழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| மாவட்டத்தின் பெயர் .. | கூப்பன் விற்பனை விலை. | |
|---|---|---|
| | 1982 ஜூலை மாதத்திற்கு முன்பு. | 1982 ஜூலை மாதத்திற்கு பின்பு. |
| தஞ்சாவூர் மாவட்டம் .. | ரூ. 2.30 லிருந்து ரூ. 2.40 வரை. | ரூ. 2.40 லிருந்து ரூ. 3.20 வரை. |
| புதுக்கோட்டை மாவட்டம் .. | ரூ. 2.60 | ரூ. 2.70 |
| திருச்சி மாவட்டம் .. .. | ரூ. 2.10 | ரூ. 2.30 |





| | ரொக்க விற்பனை விலை. | |
|---|---|---|
| | 1982 ஜூலை மாதத்திற்கு முன்பு. | 1982 ஜூலை மாதத்திற்கு பின்பு. |
| தஞ்சாவூர் மாவட்டம் .. .. | ரூ. 2.20 லிருந்து ரூ. 3.00 வரை. | ரூ. 2.20 லிருந்து ரூ. 3.50 வரை. |
| புதுக்கோட்டை மாவட்டம் .. | ரூ. 2.80 | ரூ. 3.00 |
| திருச்சி மாவட்டம் .. .. | ரூ. 2.20 | ரூ. 2.50 |

| | சிறப்பு விற்பனை விலை. | |
|---|---|---|
| | 1982 ஜூலை மாதத்திற்கு முன்பு. | 1982 ஜூலை மாதத்திற்கு பின்பு. |
| தஞ்சாவூர் மாவட்டம் .. .. | ரூ. 2.50 லிருந்து ரூ. 3.00 வரை. | ரூ. 3.00 லிருந்து ரூ. 3.50 வரை. |
| புதுக்கோட்டை மாவட்டம் .. | .. | .. |
| திருச்சி மாவட்டம் .. .. | .. | .. |

(இ) இடத்திற்கும், காலத்திற்கும், பால் உற்பத்திக்கும், பாலின் உள் கொழுப்பு சத்திற்கும், பாலை பதப்படுத்துவதற்கும், போக்குவரத்திற்கு ஆகும் செலவிற்கும் ஏற்ப, பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட ஒன்றியங்களும், கூட்டுறவு இணையமும் பால் கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் நிர்ணயம் செய்கின்றன. மேலும் வருட முழுவதும் பால் உற்பத்தி ஒரே சீராக இருப்பதில்லை. எனவே, பால் விலையை தமிழ் நாடெங்கும் சீராக அமைப்பது சாத்தியமில்லை.

# இணைப்பு IV

(282 ஆம் பக்க அடிக்குறிப்பைக் காண்க)

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 1972-73 முதல் 1980-81 முடிய ஆண்டு வாரியாக கட்டிய பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை மேலும் அவைகளின் செலவினத் தொகையையும் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1972-73 | | 1973-74 | | 1974-75 | |
|---|---|---|---|---|---|---|
| | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை. | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை. | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1 செங்கல்பட்டு .. .. .. | 69 | 7,51,162 | 58 | 8,97,573 | 65 | 8,29,972 |
| 2 வட ஆற்காடு .. .. .. | 89 | 11,17,986 | 109 | 16,42,667 | 91 | 12,08,414 |
| 3 தென் ஆற்காடு .. .. .. | 91 | 9,29,098 | 89 | 11,98,651 | 100 | 14,54,933 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 83 | 13,39,090 | 91 | 16,90,613 | 106 | 28,07,446 |
| 5 புதுக்கோட்டை .. .. .. | 26 | 2,93,186 | 28 | 3,42,914 | 32 | 2,45,075 |
| 6 திருச்சி .. .. .. | 67 | 8,20,976 | 74 | 12,04,977 | 71 | 10,06,557 |
| 7 சேலம் .. .. .. | 76 | 9,66,695 | 75 | 11,42,582 | 76 | 13,34,218 |
| 8 தருமபுரி .. .. .. | 53 | 5,51,080 | 60 | 7,52,580 | 61 | 6,66,602 |
| 9 பெரியார் .. .. .. | 44 | 7,01,537 | 55 | 8,80,389 | 48 | 8,08,978 |
| 10 கோயம்புத்தூர் .. .. .. | 49 | 7,31,704 | 50 | 10,75,211 | 52 | 8,02,404 |
| 11 நீலகிரி .. .. .. | 10 | 1,44,904 | 10 | 2,25,611 | 7 | 2,62,159 |
| 12 மதுரை .. .. .. | 115 | 12,51,000 | 98 | 13,18,000 | 91 | 9,44,000 |
| 13 இராமநாதபுரம் .. .. .. | 114 | 8,89,600 | 98 | 12,43,500 | 69 | 9,47,600 |
| 14 திருநெல்வேலி .. .. .. | 91 | 9,44,954 | 74 | 10,27,955 | 54 | 8,06,335 |
| 15 கன்னியாகுமரி .. .. .. | —ஒன்றியப் பள்ளிகள் கிடையாது. — | | | | | |
| மொத்தம் .. .. | 977 | 1,14,32,972 | 969 | 1,46,43,223 | 923 | 1,41,24,693 |



| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1975-76 | | 1976-77 | | 1977-78 | |
|---|---|---|---|---|---|---|
| | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை. | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை. | பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. | செலவினத் தொகை |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1 செங்கல்பட்டு .. .. .. | 45 | 5,70,525 | 44 | 7,78,835 | 46 | 7,63,587 |
| 2 வட ஆற்காடு .. .. .. | 86 | 10,26,744 | 79 | 11,85,597 | 54 | 8,70,598 |
| 3 தென் ஆற்காடு .. .. .. | 108 | 12,31,255 | 99 | 15,41,307 | 78 | 12,66,924 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 76 | 5,36,421 | 90 | 19,90,790 | 81 | 19,32,775 |
| 5 புதுக்கோட்டை .. .. .. | 30 | 2,55,523 | 25 | 2,61,133 | 21 | 3,99,363 |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. | 60 | 9,81,816 | 65 | 12,57,780 | 31 | 6,30,358 |
| 7 சேலம் .. .. .. | 49 | 8,08,318 | 53 | 7,96,478 | 40 | 6,85,153 |
| 8 தருமபுரி .. .. .. | 52 | 8,25,435 | 66 | 12,85,858 | 80 | 14,60,494 |
| 9 பெரியார் .. .. .. | 47 | 8,79,264 | 36 | 9,08,720 | 32 | 5,74,883 |
| 10 கோயம்புத்தூர் .. .. .. | 35 | 7,18,301 | 31 | 6,22,155 | 19 | 4,45,424 |
| 11 நீலகிரி .. .. .. | 11 | 1,74,501 | 9 | 4,13,232 | 9 | 3,17,991 |
| 12 மதுரை .. .. .. | 58 | 8,57,000 | 59 | 11,43,000 | 26 | 5,69,000 |
| 13 இராமநாதபுரம் .. .. .. | 73 | 9,51,600 | 60 | 9,65,500 | 82 | 1,29,700 |
| 14 திருநெல்வேலி .. .. .. | 37 | 8,37,390 | 34 | 5,42,645 | 30 | 5,19,258 |
| 15 கன்னியாகுமரி .. .. .. | ஒன்றியப் பள்ளிகள் கிடையாது. | | | | | |
| மொத்தம் .. .. | 767 | 1,16,54,093 | 750 | 1,37,03,030 | 629 | 1,17,29,598 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1978-79 பள்ளிக் கட்டிடங் களின் எண் ணிக்கை. | 1978-79 செலவினத் தொகை. | 1979-80 பள்ளிக் கட்டிடங் களின் எண் ணிக்கை. | 1979-80 செலவினத் தொகை. | 1980-81 பள்ளிக் கட்டிடங் களின் எண் ணிக்கை. | 1980-81 செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1 செங்கல்பட்டு | 64 | 12,81,344 | 73 | 20,14,816 | 117 | 50,05,430 |
| 2 வட ஆற்காடு | 74 | 17,57,302 | 86 | 20,87,322 | 173 | 64,47,897 |
| 3 தென் ஆற்காடு | 74 | 20,31,999 | 105 | 49,46,897 | 158 | 54,57,887 |
| 4 தஞ்சாவூர் | 53 | 16,20,230 | 69 | 24,74,678 | 148 | 51,79,373 |
| 5 புதுக்கோட்டை | 30 | 4,81,920 | 19 | 3,96,860 | 22 | 9,56,010 |
| 6 திருச்சிராப்பள்ளி | 44 | 10,62,113 | 53 | 14,03,350 | 332 | 1,34,32,891 |
| 7 சேலம் | 52 | 9,71,925 | 36 | 9,14,089 | 127 | 58,36,567 |
| 8 தருமபுரி | 108 | 20,21,462 | 135 | 26,94,358 | 188 | 55,92,340 |
| 9 பெரியார் | 29 | 8,13,681 | 41 | 11,63,091 | 88 | 33,84,207 |
| 10 கோயம்புத்தூர் | 30 | 80,05,481 | 36 | 6,41,867 | 16 | 7,40,735 |
| 11 நீலகிரி | 18 | 6,12,550 | 15 | 4,49,150 | 66 | 39,48,537 |
| 12 மதுரை | 31 | 5,63,000 | 46 | 9,24,000 | 166 | 55,72,000 |
| 13 இராமநாதபுரம் | 68 | 17,48,400 | 70 | 26,27,900 | 67 | 48,38,500 |
| 14 திருநெல்வேலி | 30 | 7,24,252 | 34 | 9,60,175 | 51 | 18,98,948 |
| 15 கன்னியாகுமரி | ஒன்றியப் பள்ளிகள் கிடையாது. | | | | | |
| மொத்தம் | 705 | 1,64,95,769 | 818 | 2,36,98,553 | 1,719 | 6,92,11,318 |

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் 136276
N84.69.2;1

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.